# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

**நான்காம் காலாண்டு, 2026**

# தீர்க்கதரிசன

# *வரம்*


**1** சிருஷ்டிகர் பேசுகிறார் (செப்டம்பர் 26—அக்டோபர் 2)........ **5**

**2** ஒரு தீர்க்கதரிசியின் அழைப்பு (அக்டோபர் 3—9) ........ **13**

**3** பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் (அக்டோபர் 10-16) ........ **21**

**4** புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் (அக்டோபர் 17-23)........ **29**

**5** வெளிப்படுத்தலும் தேவ ஏவுதலும் (அக்டோபர் 24-30) ........ **37**

**6** தீர்க்கதரிசன எழுத்துகள் (அக்டோபர் 31 — நவம்பர் 6) ........ **45**

**7** இப்போதும் கேளுங்கள்! (நவம்பர் 7-13)........ **53**

**8** தீர்க்கதரிசனப் புத்தகங்களை விளக்குதல் (நவம்பர் 14-20) ........ **61**

**9** தீர்க்கதரிசிகளைச் சோதித்தறிதல் (நவம்பர் 21-27)........ **69**

**10** தீர்க்கதரிசன அதிகாரமும் பொருத்தமும் (நவம்பர் 28 - டிசம்பர் 4) ........ **77**

**11** மிகமுக்கியத் தருணங்களில் தீர்க்கதரிசன வெளிப்பாடு (டிசம்பர் 5-11)........ **85**

**12** கடைசிக்காலத் தீர்க்கதரிசன வெளிப்பாடுகள் (டிசம்பர் 12-18) ........ **93**

**13** தீர்க்கதரிசன வார்த்தையிலிருந்து ஆசீர்வாதங்கள் (டிசம்பர் 19-25) ........ **101**



பாட ஆசிரியர்

**ஒய்ட் எஸ்டேட் அலுவலகத்தின் ஊழியக்குழு**

தமிழாக்கம்: *மார்சல் ஐசக், எஸ்றா டேவிட்*



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை - 600 048**

# தீர்க்கதரிசன வரம்



மொழியைக் கற்றுக்கொள்வதில் குழந்தைகளுக்குள்ள ஆச்சரியமான திறனைப்பற்றி நரம்பியல் விஞ்ஞானிகள் தற்போது புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர். தமிழ் வார்த்தைகளை அல்லது உலகில் பேசப்படும் 7,000 க்கும் மேற்பட்ட பிற மொழிகளின் வார்த்தைகளை உருவாக்குகிற ஒலிகளை ஆறுமாதக் குழந்தையால் புரிந்துகொள்ள முடியும். அந்தச் சமயத்தில் இரண்டாவது மொழியை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினால், அதையும் எளிதாகக் கற்றுக்கொள்வார்கள். இந்தக் காலக்கட்டத்தில் திறக்கிற விசித்திரமான ஒரு மனத்திறன், குழந்தைகள் பிறக்கும்போது உணருகிற 800 வெவ்வேறு ஒலிகளிலிருந்து, ஒரு தாய்மொழியை உருவாக்குகிற சுமார் 40 ஒலிகளை மட்டும் பிரித்தறிய உதவுகிறது. ஆனால் இதில் ஒரு நிபந்தனை உள்ளது: குழந்தைகளுடன் யாராவது பேசவேண்டும். இதை பிறந்த குழந்தைகளுக்கான ‘குரல் பயிற்சி’ என்று அழைக்கலாம்.

தேவன் நம்மிடம் பேச விரும்புகிறார்; இல்லையென்றால், பேச்சைப் புரிந்துகொள்கிற, மொழியைக் கற்றுக்கொள்ளுகிற இந்த அற்புதமான திறனோடு தேவன் ஏன் நம்மைப் படைக்கவேண்டும்? எபிரெயர் 1:1,2இல் வேதாகமம் சொல்வதை வாசியுங்கள். பாவத்தினால் ஆதாம், ஏவாளுடன் தகவல் தொடர்பு முறிந்தபோது, அத்தம்பதியர் அப்படியே அழிந்துபோகட்டுமென அவர் விட்டுவிடவில்லை. அவர்கள் இருவரையும் தேடி வந்தார்; ஆதாமிடம் அவர், ‘நீ எங்கே இருக்கிறாய்?’ என்று கேட்டார். ஆதி 3:9. உலகத்தைப் பாவத்திலிருந்து இரட்சிப்பதற்கு வரவிருந்த ஒருவரின் பிறப்பைப்பற்றித் தீர்க்கதரிசனம் சொன்னார். ஆதி 3:15. அந்தத் தீர்க்கதரிசனம் உருவானதுமுதலே, விழுகைக்குப் பிறகு ஏதேனில் அது சொல்லப்பட்டது முதலே, அது இயேசுவை உயர்த்திக்காட்டி, பாவிகளின் ஒரே நம்பிக்கையாக அவர்களை அவரிடம் வழிநடத்தியுள்ளது.

இந்தக் காலாண்டில் தீர்க்கதரிசன வரம்பற்றிப் படிப்போம்; இது, மனிதர்கள் பாவத்தில் விழுந்து அவருடன் முகமுகமாகப் பேசமுடியாமல் போனபோது, தம் சித்தத்தையும் வழியையும் அவர்களுக்குத் தெரிவிக்க தேவன் தம் ஞானத்தால் கண்டுபிடித்த ஒரு வழியாகும். ஆவியானவருடைய இந்த விசேஷித்த வரம் 1கொரி 12; 1கொரி 14; எபே 4; ரோமர் 12 ஆகியவற்றில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையும் மற்ற அனைத்து ஆவிக்குரிய வரங்களையும் வழங்குகிற மாபெரும் அருளாளர் பரிசுத்த ஆவியானவர்; அவர், ‘தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்’ 1கொரி 12:11. தேவனோடு நம் உறவு மீண்டும் தொடங்கவும் புதுப்பிக்கப்படவும், விழுகைக்குப் பிறகு ஏதேனில் தேவன் செய்தபடியே, ஆவிக்குரிய வரம்பெற்ற தேவ தூதுவர்கள் தேவனுடைய செய்திகளை அறிவித்திருக்கிறார்கள்.

*தேவன் எவ்வாறு தீர்க்கதரிசிகளை அழைக்கிறார், அவர்களது நிஜத்தன்மையை நாம் எவ்வாறு சோதித்தறியலாம் என்று பார்ப்போம். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கும் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை-வேற்றுமைகளையும் அறிந்து, அவர்களது வாழ்க்கையில் தேவ வெளிப்பாடும், ஏவுதலும் செயல்பட்டதையும் புரிந்துகொள்வோம். சில தீர்க்கதரிசிகள் பேசினார்கள், சிலர் எழுதினார்கள்; மற்றவர்கள் இரண்டையும் செய்தார்கள். அவற்றையும், தேவன் தம் செய்திகளை வழங்கிய பிற வழிகளையும், அவை உணர்த்தும் கருத்துகளையும், தீர்க்கதரிசிகள் வழங்கிய செய்திகளுக்குக் கீழ்ப்படிவதின் ஆசீர்வாதங்களையும் ஆராய்வோம்.*

*தீர்க்கதரிசன வரத்தை ஐந்து முக்கிய நோக்கங்களுக்காக, தேவன் பயன்படுத்துகிறார்: 1) விழுந்துபோன மனிதர்களுக்குத் தம்மையும், தம் சத்தியத்தையும், தம் சித்தத்தையும் வெளிப்படுத்துவதற்கு; 2) முக்கியமான நிகழ்வுகள்குறித்த நுண்ணறிவையும் ஆலோசனையையும் வழங்குவதற்கு; (3) கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையை ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்துவதற்கு; (4) அவரைப் பின்பற்றுபவர்களுக்கு ஆவிக்குரிய ஊக்கமளிப்பதற்கு; (5) பாவிகளை விழிப்படையச் செய்து அவர்களை மனந்திரும்புதலுக்கு அழைப்பதற்கு. இறுதியாக, '*தீர்க்கதரிசனத்தின் ஆவி*' கடைசிக் காலத்திலுள்ள தேவனுடைய மீதியான திருச்சபையின் இரண்டு அடையாளங்களில் ஒன்றாகும். வெளி 12:17; 19:10.*

*தொலைந்துபோனவர்களைப் பாதுகாப்பாகப் பரலோகத்திற்கு வழிநடத்துவதில் தேவன் மிகத்தீவிரமாக இருப்பதால்தான், கடைசி நாட்களுக்காகவும் அவர் தீர்க்கதரிசன வரத்தை வழங்கியுள்ளார். யோவேல் 2:28–31. செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் இணை நிறுவனரான எலன் ஜி. ஒய்ட் அவர்களிடம், இந்த நவீன காலத்தில் தீர்க்கதரிசன வரம் வெளிப்பட்டதை அச்சபையினர் நம்புகிறார்கள், அதற்கு சரியான காரணமும் உண்டு.*

*இதனால்தான், வேதவசனங்களிலுள்ள தீர்க்கதரிசன வரத்தை நாம் ஆராய்வதுடன் சேர்த்து, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எலன் ஜி. ஒய்ட் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டது சம்பந்தப்பட்ட விஷயங்களையும் ஆராய்வோம். ஒரு திருச்சபையாக, நமக்கு இந்த அற்புதமான வரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதை நாம் எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்தலாம்? ஆம், நாம் பிறந்ததுமுதலே, மற்றவர்கள் பேசுவதைக் கேட்பதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளோம். அப்படியிருக்க, தேவனுடைய தீர்க்கதரிசிகள் நமக்குக் கூறுவதைக் கேட்பது எவ்வளவு முக்கியமானது!*

**இந்தக் காலாண்டில் தீர்க்கதரிசன வரம்பற்றிப் படிப்போம்; இது, தம் சித்தத்தையும் வழியையும் மனிதர்களுக்குத் தெரிவிக்க தேவன் தம் ஞானத்தால் கண்டுபிடித்த ஒரு வழியாகும்.**

இந்தப் பெரியோர் ஓய்வுநாள் பள்ளி வேதாகம ஆராய்ச்சி வழிகாட்டியானது, மேரிலாந்தின் சில்வர் ஸ்பிரிங் நகரில் உள்ள ஒய்ட் எஸ்டேட் அலுவலகத்தின் ஊழியக்குழுவினால் தயாரிக்கப்பட்டது. எலன் ஒய்ட்டின் தீர்க்கதரிசன ஊழியம் மற்றும் எழுத்துக்களை உலகம் முழுவதும் பகிர்ந்துவருகிற, எலன் ஜி. ஒய்ட் எஸ்டேட் நிறுவனமானது இயேசு கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் மேன்மைப்படுத்துவதில் செவந்த் –டே அட்வென்டிஸ்ட் சபையின் ஊழியத்திற்கு ஆதரவாக உள்ளது.

# மனன வசனங்கள்

1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். எபி 1:1,2.

2 பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். ஏசாயா 6:8.

3 யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான். 2நாளாகமம் 20:20.

4 வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. 1கொரி 12:4-6.

5 சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். வெளிப்படுத்தல் 1:1,2.

6 தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. ரோமர் 15:4.

7 இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. 1கொரிந்தியர் 10:11.

8 மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். லூக்கா 24:27.

9 பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனாலுண் டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். 1யோவான் 4:1.

10 தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இரு புறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத் தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. எபிரெயர் 4:12.

11 கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். ஆமோஸ் 3:7.

12 அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். யோவேல் 2:28,29.

13 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. 2தீமோத்தேயு 3:16,17.

பாடம் 1 செப்டம்பர் 26—அக்டோபர் 2



# சிருஷ்டிகர் பேசுகிறார்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 1:27,28; 3:1–8; லூக் 15:11–32; ஆதி 3:14–24; யாத் 19:16–22; யோவான் 10:27–30.

**மனன வசனம்:** பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். எபிரெயர் 1:1,2.

தூரத்து இடங்களில் இருக்கிற நம் நண்பர்களையும் உறவினர்களையும் நாம் இருக்கிற இடத்திலேயே பார்ப்பதை மின்னியல் தொழில்நுட்பம் சாத்தியமாக்கியுள்ளது. இது நல்லதுதான். இருந்தாலும், நேரில் சந்திப்பதில்தான் எவ்வளவு மகிழ்ச்சி! நாம் ஒன்று கூடி, கட்டிப்பிடித்து, நேருக்குநேர் பேசும்போது அதிக இதமான ஓர் உணர்வு உண்டாகிறது.

மனிதர்கள் தங்கள் சிருஷ்டிகருடன் நேருக்குநேர் உறவுகொள்ளப் படைக்கப்பட்டவர்கள் என்பதை இந்த வாரம் பார்ப்போம். ஆனாலும், பாவம் நீண்ட காலத்திற்கு முன்பே இந்த நெருக்கமான தொடர்பை அழித்துவிட்டது. தமது அன்பிற்குரிய சிருஷ்டிகளான நம்முடன் அந்தத் தொடர்பை மீண்டும் ஏற்படுத்த, நம்மிடம் பேசுவதற்கான வழிகளை தேவன் ஏற்படுத்தியுள்ளார். மனிதர்களுடன் தொடர்புகொள்ள தேவன் தெரிந்துகொண்ட பிரபலமான வழிதான் அவரது பேச்சாளர்களான தீர்க்கதரிசிகள்; அவர்கள் அவருடைய செய்தியை நமக்கு அறிவிக்கிறார்கள். பல தீர்க்கதரிசிகள் தாங்கள் பேசினவற்றை எழுதிவைத்துள்ளார்கள், சிலர் எழுதவில்லை.

பாவத்தினால் நம்மில் சிதைக்கப்பட்ட தேவசாயலை நமக்குள் மீண்டும் புதுப்பிப்பதே தேவனுடைய தலையாயத் திட்டம். இதுவே இரட்சிப்பின் திட்டம்: அதாவது நம்மை மீண்டும் புதியவர்களாக்குவது. 'நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும்' தேவனால் சிருஷ்டிக்கப்படும்போது, இந்த மறுசீரமைப்பு முழுமையடையும். 2பேதுரு 3:13.

அதுவரை, தேவன் நம்மோடு தொடர்ந்து பேசுகிறார்; நம்மிடம் பேசுவதற்குத் தம் தீர்க்கதரிசிகளைத் தொடர்ந்து பயன்படுத்துகிறார்.

*2026, அக்டோபர் 3 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஏதேனில் தகவல்தொடர்பு

ஆதியாகமம் அதிகாரங்கள் 1 உம், 2 உம் படைப்பின் வரலாற்றைக் கூறுகின்றன. தேவன் அழகான ஓர் உலகத்தைப் படைத்து, அதில் படைப்பின் மகுடமாக ஆதாமையும் ஏவாளையும் வைத்தார். பூமியிலுள்ள மற்ற அனைத்து உயிரினங்களிலிருந்தும் மனிதர்கள் வேறுபட்டிருந்தார்கள்; ஏனெனில், அவர்கள் 'தேவனுடையசாயலாகப்'படைக்கப்பட்டார்கள். ஆதி1:27. மனிதர்களைப்பற்றி மட்டுமே இவ்வாறு சொல்லப்படுகிறது, பறவைகளையும், பிற விலங்குகளையும் பற்றியோ இவ்வாறு சொல்லப்படவில்லை. அதற்கேற்ப, அவர்கள் அனைத்து அம்சங்களிலும் பரிபூரணமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம், அன்பை அதன் அனைத்து வடிவங்களிலும் அனுபவித்திருக்கலாம்; தேவனோடு நெருங்கிய உறவில் நடந்திருக்கலாம்.

மேலும், 'மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல' என்பதால், ஆதாமுக்காக ஏவாளை தேவன் படைத்தார். ஆதி 2:18-23. எனவே, மனிதர்கள் ஆரம்பத்திலிருந்தே சமூக ஜீவிகளாகவே படைக்கப்பட்டனர். மனிதர்கள்மத்தியில் காணப்படுகிற பரஸ்பரத் தொடர்பானது உடல்-மன நலனிற்கு பல நன்மைகளைத் தருவதாகவும், அதேவேளையில் தனிமையானது மனிதர்களைக் கொல்வதாகவும் சமூகவியலாளர்கள் கூறுகிறார்கள். அதனால்தான், ஏவாள் படைக்கப்பட்டதுமே ஆதாம், 'இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்' என்று வியந்து கூறினார். ஆதி 2:23. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணப் பந்தத்தில் இணைந்து உருவாக்கும் குடும்ப அமைப்பே, மனிதர்கள் எல்லோரும் முழுமையான உறவையும் தெய்வீகத் தொடர்பையும் அனுபவிப்பதற்கு தேவன் வழங்கிய முதல் சமுதாய ஏற்பாடாகும். அதனால்தான் ஆரம்பத்தில் தேவன் உண்டாக்கின குடும்பம் சம்பந்தப் பட்ட அடிப்படைகளைச் சிதைப்பதே சாத்தானின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்துவருகிறது.

**ஏதேன் தோட்டத்தில் தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையே எத்தகைய தகவல்தொடர்பு நிலவியது? ஆதி 1:27, 28; 2:15-17; 3:9.**

ஆதாமும் ஏவாளும் தேவனுடன் நேருக்குநேர் பழகுகிற பாக்கியத்தைப் பெற்றிருந்தனர். அவர்களுக்கு அறிவுத்திறன் இருந்ததால், தேவனைச் சந்திக்கவும் அவருடைய அறிவுரைகளைக் கேட்கவும் முடிந்தது. தேவனுடைய அற்புதமான தோட்டத்தின் உக்கிராணக்காரர்களாக, அங்கிருந்த தாவரங்களையும் விலங்கினங்களையும் பராமரித்தபோது, அறிவிலும் திறமையிலும் வளர்ந்தனர். ஒவ்வொரு நாளும் 'பகலின் குளிர்ச்சியான வேளையில்' தேவனுடன் விசேஷமாக நேரம் செலவிட்டனர். ஆதி 3:8. குறிப்பாக, தேவனுடைய சிருஷ்டிப்புச் செயலின் இன்றியமையாத அங்கமான ஓய்வுநாளானது தேவனும் அவரது பிள்ளைகளும் பேசுவதற்கென்றே நியமிக்கப்பட்ட பிரத்தியேகமான நேரமாக இருந்தது. ஆதி 2:2,3; யாத் 20:8-11. அந்நாளில், நம் முதல் பெற்றோர்கள் தேவனுடைய அன்பையும் பராமரிப்பையும் தனித்துவமான ஒரு வழியில் அனுபவித்தனர்.

---

**ஏதேன் தோட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழித்து வாழ்கிற நமக்கு, பாவத்திற்கு முன் அங்கு எப்படி இருந்திருக்கும் என்று கற்பனைசெய்து பார்ப்பது கடினம். ஆனால், தற்போதும் கூட, இயற்கையுலகம் தேவனுடைய ஆதிப் படைப்பை எவ்வாறு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது?**

# தேவனிடமிருந்து ஒளிந்துகொள்ளுதல்

தேவன் அன்பாகவே இருக்கிறார். 1யோவான் 4:8. எனவே அவர் மனிதர்களை 'இயந்திரங்களாகப்' படைக்கவில்லை. அன்பு என்றாலே, தேர்வுசெய்கிற உரிமை இருக்கவேண்டும். எனவே ஆதாமும் ஏவாளும் அன்புசெலுத்துகிற திறனைப் பெற்றிருப்பதற்கு, சுயாதீனச் சித்தத்துடன் அவர்களைப் படைக்க வேண்டியிருந்தது. சுயாதீனச் சித்தம் இல்லையெனில், அவர்களால் உண்மையான அன்பை வெளிப்படுத்தியிருக்க முடியாது. இவ்வாறு, ஆதாமும் ஏவாளும் தங்கள் சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படியவோ கீழ்ப்படியாமல் இருக்கவோ சுதந்திரம் பெற்றிருந்தனர். தெரிந்துகொள்கிற உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததை நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்கிற கட்டளையில் அறியமுடிகிறது. ஆதி 2:15-17. புசிப்பதற்கு அவர்களுக்குச் சுதந்திரம் இல்லாதிருந்தால், அதைப் புசிக்கவேண்டாம் என்று அவர்களை எச்சரிக்கவேண்டிய அவசியம் என்ன?

'நம்முடைய முதல் பெற்றோர் குற்றமற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாகப் படைக்கப்பட்டிருந்தாலும், தவறே செய்ய வாய்ப்பில்லாத நிலையில் வைக்கப்படவில்லை. தேவன் அவர்களை ஒழுக்கச்சுதந்திரம் உள்ளவர்களாக, தம் ஞானத்தையும், அன்பான குணத்தையும் முற்றிலும் உணர்ந்து, கீழ்ப்படிய அல்லது கீழ்ப்படியாமல் இருக்க, முழு உரிமையுடையவர்களாக உருவாக்கினார். அவர்கள் தேவனோடும் பரிசுத்த தூதர்களோடும் ஐக்கியமாக இருந்திருக்க வேண்டும்.... தெரிந்துகொள்ளும் சுதந்திரம் இல்லையெனில், அவர்களுடைய கீழ்ப்படிதல் தானாக வராமல், கட்டாயத்தால் வந்திருக்கும்.'

**ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறியபிறகு, ஏன் தங்கள் சிருஷ்டிகரிடமிருந்து ஒளிந்துகொள்ள முயன்றார்கள்? ஆதி 3:1-8; எரே 23:24; 4:13.**

ஆதாமும் ஏவாளும் விழுந்துபோன பரிதாபமான காட்சியை ஆதி 3 சித்திரிக்கிறது. சர்ப்பமும் ஏவாளும் பேசிக்கொண்டபிறகு, நம் முதல் பெற்றோர்கள் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கத் தூண்டப்பட்டார்கள். அதைப் புசிக்கவேண்டாம் என்று தேவன் தடைசெய்திருந்தார். இன்பமான அனுபவங்கள் கிடைக்குமென உணர்வுததும்பின வார்த்தை ஜாலங்களால் சாத்தான் பேச, ஏவாள் நம்பிவிட்டாள்; பிறகு, ஆதாமிடமும் தேவனுடைய கட்டளையை மீறச் சொல்லுகிறாள். அந்த விருட்சம் 'புசிப்புக்கு நல்லதும்', 'பார்வைக்கு இன்பமும்', 'புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதுமாக' இருந்ததாக எண்ணினாள். ஆதி 3:6. 'நன்மை தீமை அறிந்து, தேவர்களைப்போல் இருப்பீர்கள்' எனும் சாத்தானின் வார்த்தை, மனதிலிருந்து நீங்க மறுத்தது. ஆதி 3:5.

உண்மையை மறைத்து, சாத்தான் பேசினான். கீழ்ப்படியாமையால் ஏற்படவிருந்த விளைவுகளைச் சொல்லாமல் மறைத்தான். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதுமே, அவர்களது கண்கள் 'திறக்கப்பட்டன'; தாங்கள் 'நிர்வாணிகளாக' இருப்பதைக் கண்டார்கள். தேவ 'சாயலை' பிரதிபலித்த அவரது 'வஸ்திரமாகிய' மகிமையும் ஒளியும் நீங்கிவிட்டது. சங் 104:1,2. தேவன் அவர்களுக்கு வழங்கியிருந்த அந்த உடுப்பு அதன் பிறகு அவர்கள்மேல் இல்லை. அதனால்தான், தங்கள் சிருஷ்டிகரிடமிருந்து ஒளிந்தார்கள்; ஆனால், தேவனிடமிருந்து ஒளிந்துகொள்வது சாத்தியமா? பாவம் நம்மைக் குற்ற உணர்ச்சிக்குள்ளாக்குகிறது, அதனால்தான் தேவ சமுகத்தைவிட்டு ஓட விரும்புகிறோம்.

---

**நீங்கள் பாவம் செய்த பிறகு, வெட்கமடைந்து, தேவனிடமிருந்து ஒளிந்துகொள்ள முயன்ற உங்களுடைய சொந்த அனுபவம் என்ன?**

# தேவன் மனிதர்களைத் தேடிவருகிறார்

விழுந்துபோன தமது பிள்ளைகளைத் தேடிச்செல்வதற்கு தேவன்தாம் முதலடி எடுத்துவைக்கிறார். ஆதி 3:9,10. அவர்கள் சிந்திக்கவேண்டும் என்பதற்காகவே, 'நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்கிறார், மற்றப்படி, ஆதாமும் ஏவாளும் என்ன செய்தார்கள், எங்கு இருக்கிறார்கள் என்பது தேவனுக்குத் தெரியும். ஆனால், அவருக்கும் முதல் மனித தம்பதியினருக்கும் இடையே இருந்த வழக்கமான தொடர்பை பாவம் துண்டித்தது. தமது பிள்ளைகளுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்துவதும், அவர்களைச் சந்திப்பதும், விரக்தியான அந்த நிலையில் அவர்களுக்கு நம்பிக்கையை அளிப்பதுமே தேவனுடைய உடனடி நடவடிக்கையாக இருந்தது. ஆதி 3:9 இல் வருகிற 'கூப்பிட்டார்' என்கிற வார்த்தைக்கான எபிரெயச் சொல் '*காரா*'; தேவன் தமது மக்களுடன் தொடர்பை ஏற்படுத்த அழைப்பதை விவரிக்கவே இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

**ஆதி 3:9,10 இல் நடந்ததை, லூக் 15:11-32 இன் உவமை எவ்வாறு பிரதி பலிக்கிறது?**

தேவன் தமது பிள்ளைகளை நிபந்தனையின்றி நேசிப்பது, ஆதாம்- ஏவாளை அவர் தேடிச்சென்றதில் தெரிகிறது. தேவன் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை. லூக் 15. நாம் ஒளிந்துகொள்ளும்போதுகூட, நம்மோடு மீண்டும் உறவை ஏற்படுத்த அதிகபட்ச முயற்சிகளை மேற்கொள்கிறார். இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்பு, இயேசுவை பேதுரு மூன்று முறை மறுதலித்தபோது, கிறிஸ்து 'திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார்'. லூக் 22:61. எதுவும் பேசாமல் வெறும் பார்வையிலேயே பேதுருவிடம் 'பேசினார்'. தவறிழைத்த தமது நண்பனை தாம் தேடுவதை உணர்த்தினார்.

ஆதாம்- ஏவாளுக்கு இடையே இருந்த உறவையும் பாவம் சட்டென மாற்றியது! ஆதி 3:11-13. அவரவர் செய்த பாவத்தை அறிக்கையிடுவதற்குப் பதிலாக, மற்றவர்மீது குற்றஞ்சாட்டத் தொடங்கினர். ஏவாளை ஆதாம் குற்றஞ் சாட்டினதன்மூலம், தேவனை மறைமுகமாகக் குற்றஞ்சாட்டினார். ஏனென்றால், அவரே அவளை அவனுக்குக் கொடுத்திருந்தார். அவன், 'என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்' என்றான். ஆதி. 3:12. இதற்கிடையில், ஏவாளோ தான் கீழ்ப்படியாததற்கு சர்ப்பத்தைக் குற்றஞ்சாட்டினாள். 'சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன்' என்று சப்பைக்கட்டுக் கட்டினாள். ஆதி 3:13. அவர்கள் இருவரில் எவருமே, தாங்கள் செய்த பாவத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஆறாயிரம் ஆண்டுகள் கடந்தும், இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?

பாவமானது மனுக்குலம் முழுவதையும் பாதித்துள்ளது. நன்மை செய்ய விரும்பியும், அதற்கு நேர்மாறாகச் செய்ய நேரிடுகிற வேதனையான நிலையில் நாம் இருப்பதாக பவுல் கூறுகிறார். ரோமர் 7:15-24. 'நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக் கிறதையே செய்கிறேன்'. ரோமர் 7:15. இதை அனுபவிக்காதவர் உண்டா? செய்யக்கூடாது என்று தெரிந்திருப்பதைச் செய்கிற உடைந்துபோன நிலையில்தான் அனைவரும் இருக்கிறோம். நம் ஒரே நம்பிக்கை, 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்க் கிடைக்கும் விடுதலையே'. ரோமர் 7:25. இதனால்தான், நம்மை இயேசுவிடம் வழிநடத்த தேவன் நம்மைத் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறார்; இயேசு ஒருவரால்மட்டுமே நம்மை தமது சாயலாக மாற்றவும், பாவத்தினால் ஏற்படும் அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றவும் முடியும்.

# தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுதல்

ஆதாம்-ஏவாளின் பாவத்தால் ஏற்பட்ட மிக மோசமான விளைவுகளில் ஒன்று தேவனை விட்டுப் பிரிந்ததாகும். அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர், அதன்பிறகு அவர்களால் தேவனுடன் முகமுகமாகப் பேசமுடியவில்லை. மனிதர்களுக்கு நேரிட்ட வேதனையான இந்த நிலையைப் பற்றி ஏசாயா 59:2 இல் ஏசாயா தீர்க்கதரிசி எழுதியிருக்கிறார். உண்மையில், ஆதாமும் ஏவாளும் இன்னும் தேவனுடைய பிள்ளைகளாகத்தான் இருந்தனர். ஆனாலும், பாவத்தின் விளைவைத் தவிர்க்கமுடியவில்லை; அதனால் ஏதேனை விட்டு வெளியேறவேண்டியிருந்தது. அவர்களின் கீழ்ப்படியாமைக்குப் பிறகு எதுவும் முன்போல் இருக்கவில்லை.

**பாவம் மனுக்குலத்தைப் பல வழிகளில் மாற்றியுள்ளது. ஆதி 3:14-24. ஆனால் தேவனோடுள்ள நம் தொடர்பை பாவம் எவ்வாறு மாற்றியுள்ளது? யாத் 19:16-22.**

நம்மால் கற்பனை செய்து பார்க்கமுடியாத வழிகளில் பாவம் மனித வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டது. நமக்குத் தெரிந்ததெல்லாம் பாவம்நிறைந்த இந்த உலகம்மட்டுமே. பாவத்தின் காரணமாக, பூமி 'சபிக்கப்பட்டு', அது 'முள்ளுகளையும் குறுக்குகளையும்' முளைப்பிக்க இருந்தது. மனிதர்கள் அதன்பிறகு வேதனையை அனுபவிக்கவும், தங்களுக்குத் தேவையான உணவைப் பெற 'வேர்வை சிந்தவும்', இறுதியாக மரணமடைந்து மண்ணுக்குத் திரும்பவும் வேண்டியதாயிற்று. பாவத்தின் நினைவுச்சின்னங்கள் அனைத்திலும், மரணமே இன்றும் மிகவும் ஆற்றல்மிக்கதாக இருக்கிறது. அதேநேரத்தில், பாவத்தின் காரணமாக தேவனோடுள்ள முகமுகமான தொடர்பையும் இழந்துவிட்டோம். ஆனாலும், பாவத்தின் பேரழிவுகளை முறியடிப்பதற்கான ஒரு தீர்வை தேவன் வாக்குத்தத்தமாகச் சொன்னார். நமது முதல் பெற்றோர் தேவனை நேரடியாகப் பார்க்கவோ, அவரோடு பேசவோ முடியாமல் போனாலும், அப்போதைக்கும் எதிர்காலத்திற்குமான நம்பிக்கையோடு ஏதேனைவிட்டு வெளியேறினர். தேவனே முன்முயற்சி எடுத்து, தம் மீட்புத்திட்டத்தை விளக்கினார்.

'முதல் சுவிசேஷ வாக்குத்தத்தம்' என்று அழைக்கப்படுகிற ஆதி 3:15 இல், பாவத்தின் மத்தியில், அவர்களுக்கும் நமக்கும் நம்பிக்கையூட்டுகிற செய்தியைச் சொன்னார். வரவிருந்த ஒரு மீட்பர்குறித்த அந்த வாக்குத்தத்தத்தில், பாவத்திற்கு எதிரான பகைகுறித்தும், மனிதகுலத்தின் எதிர்கால இரட்சிப்பிற்கான நம்பிக்கைகுறித்தும் வாக்களிக்கப்பட்டது. ஆதாமும் ஏவாளும் தோட்டத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்பு தேவன் அவர்களுக்கு ஆடை அணிவித்து, அவர்களது எதிர்கால மீட்பை அடையாளமாகச் சுட்டிக்காட்டினார். இயேசு வந்து மரித்து, உயிர்த்தெழுவதன்மூலம், தேவனோடுள்ள உறவு மீண்டும் நிலைநிறுத்தப்பட இருந்தது. யோவான் 14:1-3. அதாவது, ஏதேன் தோட்டத்திலேயே, பாவம் நுழைந்த உடனேயே, பாவப்பிரச்சனைக்குத் தீர்வு உண்டு என்கிற நம்பிக்கையும் வாக்குத்தத்தமும் மனிதர்களுக்கு வழங்கப்பட்டது. பாவம் தோன்றிய அந்தக் கணமே, இரட்சகர்குறித்த வாக்குத்தத்தமும் கொடுக்கப்பட்டது.

**தவறான ஒன்றைச் செய்தபிறகு நீங்கள் எதை உணர்ந்தீர்கள் - குற்ற உணர்வா, அவமானமா, சுய வெறுப்பா? அதன் விளைவுகள் என்ன? தேவன்மீது விசுவாசம் வைப்பதும், நற்செய்தியின் வாக்குத்தத்தமும், உங்கள் விசுவாசத்தை முற்றிலும் கைவிடாதபடி எவ்வாறு பாதுகாத்தது?**

# தேவனுடைய செய்தித்தொடர்பாளர்கள்

**பாவம் உலகிற்குள் நுழைந்தபிறகு, மனிதர்களிடம் தேவன் பேசின விதம்பற்றி பின்வரும் வசனங்கள் வெளிப்படுத்துவது என்ன? எபி 1:1,2; ரோம 1:19,20; எண் 12:6; 2தீமோ 3:16,17; யோவான் 14:7–9; யோவான் 10:27–30.**

பாவத்தின் மத்தியிலும், விழுந்துபோன மனிதர்களுடன் பல வழிகளில் தொடர்புகொள்ள தேவன் திட்டம் வைத்திருந்தார். தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிற வழிகளில் ஒன்று சிருஷ்டிப்பு. தேவனுடைய அற்புதமான செய்கைகளை இயற்கை மிகவல்லமையாக வெளிப்படுத்துகிறது. நம் பிரபஞ்சத்தின் அதிசயங்களும், ஏன் மிகவும் 'சாதாரணமான' உயிரினங்களின் சிக்கலான அமைப்பும்கூட விஞ்ஞானிகளுக்குப் பிரமிப்பை உண்டாக்குகிறது. ஆனாலும், இயற்கையானது பாவத்தால் விழுந்துபோனதின் விளைவுகளையும் காட்டுகிறது; உயிருள்ள ஒவ்வொன்றின் மரணமும் இதற்கு மிகச்சிறந்த உதாரணம்.

மனிதர்களுடன் பேசுவதற்கு தேவன் தெரிந்துகொண்ட மற்றொரு வழி தீர்க்கதரிசிகள்; இவர்கள் தேவனால் அவரது செய்தித்தொடர்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். உதாரணமாக, நோவா, ஆபிரகாம், மோசே, தானியேல் போன்றோருடன் தேவன் பேசி, தம்முடைய மக்களுக்கான தமது சித்தத்தை வெளிப்படுத்தினார். தேவனுடைய தீர்க்கதரிசனச் செய்திகள், தாம் தம் பிள்ளைகளை மறக்கவில்லை என்பதையும், இன்னும் அவர்களுடனேயே இருப்பதையும் நினைவூட்டுவதற்குக் கொடுக்கப்பட்டவை. இந்தத் தீர்க்கதரிசிகளில் சிலர் எழுதியவை நமக்கு வேதாகமமாகக் கிடைத்திருந்தாலும், சிலர் எழுதியவை கிடைக்கவில்லை.

ஆனாலும், தீர்க்கதரிசிகள் சொன்ன பல செய்திகள், வேதாகமத்தின்மூலமாகவே தெரிவிக்கப்பட்டுள்ளன. 2 தீமோ 3:16,17. வேதாகமம் என்பது தேவனைப்பற்றிய ஒரு வெளிப்பாடாகும். அவரது வார்த்தைகளிலிருந்துதான் அவர் யார் என்பதை அறிகிறோம்; அவரது மாறாத, இடைவிடாத அன்பைக் காண்கிறோம்; மேலும் நாம் வாழவேண்டிய விதம்குறித்து அவரது வழிநடத்துதலையும் கண்டடைகிறோம்.

நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்குச் சென்றுகொண்டிருக்கிறோம்? இவற்றை வேதாகமத்தின்மூலமாகவே புரிந்துகொள்கிறோம். நம் வாழ்விற்கான தேவநோக்கம்குறித்தும் அதிலிருந்தே அறிகிறோம்.

ஆனால், இயேசு கிறிஸ்துவே தேவன் நம்முடன் தொடர்புகொண்ட விதத்திலேயே மிகச்சிறந்தவழி; அவர் வேதாகமத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம்-ஏவாளைத் தேவன் தேடிச்சென்றதுபோல, கிறிஸ்துவும் 'இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே' வந்தார். லூக்கா 19:10. 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்று இயேசு சொன்னார். யோவான் 14:9. ஏதேனில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதியை கிறிஸ்து தம் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல்மூலம் நிறைவேற்றினார். நாம் அவர் மூலமாக நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவர் வந்து, நமக்குப் பதிலாக மரித்தார்.

இயேசு பரலோகத்திற்குச் சென்றபிறகு, பரிசுத்த ஆவியானவர் நம்மைச் 'சகல சத்தியத்திற்குள்ளும்' தொடர்ந்து வழிநடத்துகிறார், 'வரப்போகிற காரியங்களை' நமக்கு அறிவிக்கிறார். யோவான் 16:13.

---

**இயேசுவும், அவரது அன்பும், அவரது குணமும், அவரது தியாகபலியும் பிதாவாகிய தேவன் உண்மையில் எப்படிப்பட்டவர் என்பதை நமக்கு வெளிப்படுத்துகின்றன? இவைமூலம் எவ்வளவு பெரிய ஆறுதலைப் பெறுகிறீர்கள்?**

# எலன் ஜி. ஒய்ட்

வேதாகமக் காலத்தில் மட்டும்தான் தேவன் தொடர்புகொண்டார் என்பதில்லை. வரும் வாரங்களில் நாம் படிக்கவிருப்பதுபோல, மனிதர்களுடன் தேவன் தொடர்ந்து பேசுகிறார்; கிறிஸ்து மீண்டும் வரும் வரை நவீன வழிகளில் தம் செய்திகளை அறிவித்துக்கொண்டே இருப்பார். எலன் கௌல்ட் ஹார்மன் ஒய்ட் என்பவரும், அவரது இரட்டைச் சகோதரியான எலிசபெத்தும் 1827 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று மெய்ன் மாகாணத்தில் உள்ள கோர் ஹாம் என்ற இடத்தில் பிறந்தனர். ராபர்ட்—யூனிஸ் ஹார்மன் தம்பதியருக்குப் பிறந்த எட்டுக் குழந்தைகளில் இவர்கள்தாம் இளையவர்கள். சில வருடங்கள் கழித்து, இக்குடும்பத்தினர் மெய்னில் உள்ள போர்ட்லண்ட் நகரத்திற்கு இடம்பெயர்ந்தார்கள்; தொப்பி தயாரிக்கும் தனது தொழிலை அங்கு விரிவுபடுத்த ராபர்ட் ஹார்மன் விரும்பினார். எலனுக்கு ஒன்பது வயதாக இருந்தபோது ஏற்பட்ட ஒரு காயம் அவரை உடல்ரீதியாகவும், உணர்ச்சிரீதியாகவும், சமூக ரீதியாகவும் பாதித்தது. அவர் பள்ளியிலிருந்து தனது வீட்டிற்கு வந்துகொண்டிருந்த போது, அவருடைய வகுப்புத் தோழி ஒருத்தி கோபத்தில் வீசிய கல் அவரது முகத்தைத் தாக்கியது; இதனால் எலன் பல வாரங்கள் அரைமயக்க நிலையிலேயே இருந்தார். இந்த விபத்தால் அவரது பள்ளிப்படிப்பு சட்டென முடிவுக்கு வந்ததுடன், வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட இன்னல்களுக்கும் ஆளானார். முகத்தில் ஏற்பட்ட காயங்கள் தனது தோற்றத்தை மாற்றிவிட்டதாக எலன் நினைத்ததால், அவரது சமூகத் தொடர்புகளும் குறைந்தன.

நிச்சயமற்ற இந்தச் சூழ்நிலையில்தான், இளம்பெண்ணான எலன் ஹார்மன் தனது ஆவிக்குரிய எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். தேவனை நினைத்துப் பயந்தார்; தான் பரலோகத்திற்குத் தகுதியற்றவர் என்று யோசித்தார். இயேசுவின் இரண்டாம் வருகை மிகவிரைவில் இருக்கும் என்கிற மில்லரின் கோட்பாட்டை ஹார்மன் குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டபோது, இத்தகையப் பய உணர்வுகள் மேலும் தீவிரமடைந்தன. 1842 ஆம் ஆண்டில் மெதடிஸ்ட் சபையில் முழுக்கு ஞானஸ்நானம்பெற்ற பிறகும், தேவ அன்பிற்கு, தான் தகுதியானவள் என்று எலன் நினைக்கவில்லை. தான் 'நித்தியமாகத் தொலைந்து போனதாகவே' நினைத்தார். *(Life Sketches of Ellen G. White, P. 29; PP. 20-31).*

வேதனைமிக்க இந்த எண்ணங்களுக்கு மத்தியில், இளம் எலன் இரண்டு கனவுகள் கண்டார்; அவை தேவனைப்பற்றி அவர் நினைத்திருந்ததை மாற்றத் தொடங்கின. ஆனால், மெதடிஸ்ட் போதகரான லேவி ஸ்டாக்மேனைச் சந்திக்கும்வரை தேவனுடைய அன்பையும் கிருபையையும் அவர் முழுமையாகப் புரிந்துகொள்ளவோ உணரவோ இல்லை. விரக்தியான நிலையின்மத்தியில் தேவன் அவரிடம் பேசியதுபோல இருந்தது. அவர் சொல்கிறார்: 'விசுவாசம் இப்போது என் இதயத்தை ஆட்கொண்டது, தேவன்மீது விவரிக்கமுடியாத அன்பை உணர்ந்தேன். என் பாவங்கள் மன்னிக்கப்பட்டதாக ஆவியானவர் சாட்சியிட்டதை அறிந்தேன். பிதாவைப்பற்றிய எனது கருத்துகள் மாறின. மனிதர்களைக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்படியக் கட்டாயப்படுத்துகிற கடுமையான ஒரு கொடுங்கோலராக தேவனைப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, இப்போது அன்பான, கனிவான ஒரு அப்பாவாகப் பார்த்தேன். என் இதயம் அவர்பால் ஆழமான, தீவிரமான அன்பால் ஈர்க்கப்பட்டது". எலன் ஒய்ட் 'மரித்தோரின் நிலை' பற்றியக் கோட்பாட்டையும் புரிந்துகொண்டார். மேலும் நித்தியமாக எரிகிற நரகம் ஒன்று இல்லை என்பதையும் உணர்ந்தார். தேவனையும் அவரது அன்பையும் புரிந்துகொண்டது அவரது அணுகுமுறையை முற்றிலும் மாற்றியது. தனது வாழ்நாளின் இறுதிவரை ஊழியம் செய்தார்.

# போலந்தில் அட்வென்ட்டிஸ்ட் இயக்கம்

1888 ஆம் ஆண்டில், போலந்து பிரிந்துகிடந்தது. அதன் மக்கள் அந்நிய ஆட்சியின்கீழ் அவதிப்பட்டு வந்தனர். அப்போது, ஒரு புதிய ஆவிக்குரிய ஒளிச்சுடர் தோன்றியது. அது சிறிய, அமைதியான, பெரும் நம்பிக்கையூட்டுகிற ஒளியாக இருந்தது. அந்த வருடத்தில், போலந்தில் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் முதல் விசுவாசியான ஹெர்மன் ஸ்குபோவீக், கிரிமியாவிலிருந்து வோல்ஹினியாவில் உள்ள ஜார்னோவ்கா என்கிற இடத்திற்கு இடம்பெயர்ந்தார்; இதுவே போலந்து நிலப்பகுதியில் அமைந்த முதல் அட்வென்டிஸ்ட் சபையாக உருவெடுத்தது.

இந்த எளிய ஆரம்பங்களிலிருந்து, அட்வென்டிஸ்ட் செய்தி பரவத் தொடங்கியது. 1893 இல், ஆரம்பத்தில் போலந்தில் சத்தியத்தை ஏற்றுக்கொண்ட கரோல் ஃபெண்டல் மற்றும் ஜோசப் ஸ்லோட்ஜின்ஸ்கி ஆகிய இருவர் ஜார்னோவ்காவிலிருந்து லோட்ஸ் நகரத்திற்குப் பயணம் செய்தனர். அங்கு, அவர்கள் லாக் என்ற பெயருடைய ஒரு பாப்டிஸ்ட் குடும்பத்தினருடன் விசுவாசத்தைப் பகிர்ந்தனர். லாக் குடும்பத்தினர் அட்வென்டிஸ்ட் செய்தியை ஏற்றுக்கொண்டு, தங்கள் வீட்டிலேயே ஓய்வுநாள் ஆராதனையை நடத்த அனுமதித்தனர். மதம்சம்பந்தப்பட்ட புதிய கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள அது எளிதான ஒரு காலமாக இருக்கவில்லை. போலந்தின் அரசியல் மற்றும் மதச் சூழ்நிலைகள், பாரம்பரிய எண்ணத்தால் நிறைந்திருந்ததால், மதம்பற்றி புதிதாகப் பேசினவர்களைச் சந்தேகக் கண்ணோட்டத்தால் பார்த்தார்கள். இருப்பினும், லோட்ஸ் நகரின் மையப்பகுதியில், பல இன்னல்களுக்கும் நிச்சயமற்ற நிலைகளுக்கும் மத்தியில், வீட்டுக்கூட்டங்கள் மூலம் அட்வென்டிஸ்ட் செய்தி வேரூன்றியது. 1895 ஆம் ஆண்டில், ரஷ்யப் போதகரான ஹென்றிச் லோப்சாக் நடத்திய பொதுக் கூட்டங்களின் உதவியால் லோட்ஸ் நகரில் ஒரு புதிய சபை உருவானது; அவரே அந்த நகரத்தின் முதல் அட்வென்டிஸ்ட் உறுப்பினர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

ஜெர்மனியைச் சேர்ந்த ஹெர்பர்ட் ஷ்மிட்ஸ் என்கிற போதகர், போலந்து மொழி தெரியாதபோதிலும், வார்சா நகரில் பிரசங்கம்பண்ண ஏவப்பட்டார். மொழித் தடையால் அவர் பின்வாங்காமல், ஜெர்மன் மக்களைத் தேடி வீடு வீடாகச் சென்றார். மக்கள் அவரை வரவேற்றபோது, அட்வென்டிஸ்ட் விசுவாசத்தை அவர்களுக்கு விளக்கினார். அவரது செய்தியைக் கேட்டவர்கள் ஒரு சிலராக, பெரும்பாலும் ஜெர்மன் மொழி பேசுபவர்களாகவும் இருந்தபோதிலும், இந்த விசுவாச விதை வளர்ந்தது. சில மாதங்களில், நாட்டின் தலைநகரில் ஒரு சபை நிறுவப்பட்டது; அங்குக் காலப்போக்கில் போலந்து மொழியிலும் ஆராதனைகள் நடத்தப்பட்டன. போலந்தில் ஏற்பட்ட இந்த வளர்ச்சிது 1912 ஆம் ஆண்டிற்குள் போலந்து மிஷன் உருவாக்கப்பட வழிவகுத்தது; ஷ்மிட்ஸ் இந்த மிஷனின் முதல் தலைவரானார். அதே ஆண்டில், மொராவியன் சைலேசிய மிஷனும் ஒழுங்கமைக்கப்பட்டு, பெல்ஸ்கோ–பியாலா, சீசின் மற்றும் ஸ்கோட்சோவ் போன்ற தென் போலந்து பகுதிகளில் ஊழியம் பரவியது. பல தலைமுறை போலந்து அட்வென்டிஸ்ட் போதகர்கள் உருவாவதற்கான அடித்தளத்தை இந்த மிஷன் அமைத்தது.

முதலாம் உலகப்போரின் பேரழிவிற்கு மத்தியிலும், அட்வென்டிஸ்ட் செய்தி தொடர்ந்து பரவியது. 1921 ஆம் ஆண்டில், போலந்தில் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் யூனியன் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது. அப்போது 1,080 உறுப்பினர்கள் இருந்தார்கள், ஒருங்கிணைக்கப்பட்ட கான்ஃபரன்ஸுகள் உருவாயின, அதன் மூலம் சபை மீண்டும் கட்டப்படவும் விரிவடையவும் ஏதுவானது. இதனைத் தொடர்ந்து சுவிசேஷக் கூட்டங்களும், புத்தக ஊழியங்களும், பள்ளிகளும் தொடங்கப்பட்டன.

ஆனால், இவை எல்லாவற்றிலும் அந்த ஆரம்பக்கால மிஷனரிகளின் வாழ்க்கைதான் மிகவும் குறிப்பிடத்தக்கது. அவர்கள்தாம் வீடுவீடாகச் சென்று கதவுகளைத் தட்டி, வீடுகளில் பிரசங்கித்து, ரகசியமாகப் புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த சாதாரண முன்னோடிகள். அட்வென்டிஸ்ட் ஊழியத்தின் நூற்றாண்டு விழா 1988 இல் போலந்தில் கொண்டாடப்பட்டபோது, லாக் குடும்பத்தினரின் வீட்டில் கூடிவந்த அச்சிறிய குழு, துடிப்பான தேசிய அளவிலான ஒரு சபையாக வளர்ந்திருந்தது.

# ஒரு தீர்க்கதரிசியின் அழைப்பு



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 15:6; கலா 3:6–9; 1இராஜா 18:19–39; ஏசா 53; தானி 2:46–48; மாற்கு 1:2–5; மத் 11:1–6.

**மனன வசனம்:** பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். ஏசாயா 6:8.

வேதாகமக் காலத்தில், தேவ மக்களின் வரலாற்றில் தீர்க்கதரிசிகள் முக்கியப் பங்கு வகித்தனர். மக்கள் மத்தியில், முக்கியமான பொறுப்புகளை ஏற்றிருந்தனர். ஆனாலும், ஒரு தீர்க்கதரிசியாக அழைக்கப்பட்டவரின் வாழ்க்கை எளிதாக இல்லை; மாறாக துக்கம், நிராகரிப்பு, தவறான புரிதல், ஏமாற்றம் ஆகியவற்றால் நிறைந்திருந்தது.

தேவனுடைய தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டதும், அதை பெரும்பாலும் உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் ஆச்சரியம் ஏதுமில்லை. தீர்க்கதரிசிகளின் செய்திகளை அன்போடு வரவேற்க வேண்டிய மக்களே அவர்களைக் கடுமையாக எதிர்த்தனர். தேவனுடைய தீர்க்கதரிசிகள் புறக்கணிக்கப்பட்டனர், கேலி செய்யப்பட்டனர், அடிக்கப்பட்டனர், சிறையில் அடைக்கப்பட்டனர். வேறு சிலர் கல்லெறியப்பட்டனர், காட்டு விலங்குகளைப்போல வேட்டையாடப்பட்டனர். பலர் இரத்தச்சாட்சிகளாக மரித்தனர்.

இன்று, வன்முறை, பேராசை, ஒழுக்கக்கேடு, சுரண்டல், சாத்தானியச் செல்வாக்குகள் நிறைந்த ஒரு தலைமுறையில், தீர்க்கதரிசனச் சத்தம் பெரும்பாலும் நிராகரிக்கப்படுகிறது; அல்லது வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகிறது. தேவனுடைய தீர்க்கதரிசிகளின் குரலுக்குச் செவிசாய்க்கவும், தீர்க்கதரிசிகள் மூலம் நமக்கு வழங்கப்படுகிற நம்பிக்கையை அறிவிக்கிற தூதுவர்களாக இருக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம். ஏதேன் தோட்டத்தில் மனிதன் விழுந்த பிறகு, மனிதர்களுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்த தேவன் முயற்சியெடுத்தாரெனக் கடந்தவாரம் பார்த்தோம். இந்த வாரம், விழுந்துபோன இந்த உலகத்திற்கு, தம் செய்திகளை அறிவித்து, தம் மக்களை மீண்டும் சீரமைக்க, வரலாற்றின் சில முக்கியக் காலக்கட்டங்களில் தேவன் தீர்க்கதரிசிகளை அழைத்த விதம்பற்றி ஆராய்வோம்.

***2026, அக்டோபர் 10 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# ஆபிரகாம், உடன்படிக்கைக் காப்பாளர்

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை, தேவனுடைய கிருபைக்கு இணங்கி, அவரது அழைப்பை ஏற்று, கீழ்ப்படிதலுடன் வாழ்ந்த உண்மையுள்ள மீதமான ஒரு கூட்டத்தாரை தேவன் எப்போதும் வைத்திருந்தார். எரே 31:7,31-34. உதாரணத்திற்கு, பாபேல் கோபுர நிகழ்வால் மக்கள் சிதறிப்போனார்கள்; பல ஆண்டுகள் கழித்து, ஆபிரகாம் என்றழைக்கப்பட்ட ஆபிராமை அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல, வருங்காலத் தலைமுறையினர் அனைவருக்கும் உடன்படிக்கைக்கும் விசுவாசத்திற்கும் எடுத்துக்காட்டாக இருக்க தேவன் தெரிந்தெடுத்தார். விசுவாசத்துரோகம், ஒழுக்கக்கேடான சூழல்கள் மத்தியில், ஆபிரகாம் தேவனுடைய அழைப்பிற்கு உண்மையுள்ளவராக இருந்தார். ஆதி 12:1-9.

ஆபிரகாமிடம் தேவன் உடன்படிக்கையின் நிபந்தனைகளைத் தெரிவித்ததுடன், கிறிஸ்துவின் பலியால் மனுக்குலத்தின் இரட்சிப்பு நிறைவேறுகிற விதத்தையும் காண்பித்தார். ஆதி 15:6-17. ஆபிரகாமின் விசுவாசத்தைச் சோதிப்பதற்கும், தேவகுமாரன் பலியாகவிருந்ததை விளக்குவதற்கும், ஆபிரகாமிடம் அவன் குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடும்படி தேவன் சொன்னார். ஆதி 22:1-17. விசுவாசிகளின் தகப்பனுக்கு அது மிகவும் வேதனையான சோதனையாக இருந்திருக்கும்! ஆபிர காம் பல காரணங்களைச் சொல்லி, தேவன் நேரடியாகவே கொடுத்த கட்டளையைப் புறக்கணிதிருக்கலாம்; ஆனாலும் உண்மையோடு கீழ்ப்படிந்தார். ஈசாக்கை ஆபிரகாம் கொல்லாதபடி தேவன் தடுத்து, ஈசாக்கிற்குப் பதிலாக ஓர் ஆட்டுக்கடாவை ஆயத்தப்படுத்தினார். வரவிருந்த அழிவைக்குறித்து எச்சரிப்பதற்காகமட்டும் எல்லாத் தீர்க்கதரிசிகளையும் தேவன் அழைக்கவில்லை. ஆனால், எல்லாத் தீர்க்கதரிசிகளுமே, மக்களை மீண்டும் விசுவாசத்திற்குள் கொண்டு வரவும், விசுவாசத்துரோகம், ஏழை எளியோரை ஒடுக்குதல், உடன்படிக்கைக் கட்டளைகளை மீறுதல் ஆகியவற்றுக்கு எதிராக எச்சரிக்கவும் அழைக்கப்பட்டனர்.

மேசியாவில் காணப்படும் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை வெளிப்படுத்துவதே தீர்க்கதரிசிகளின் மிகமுக்கியமான பணியாக இருந்தது. அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பிறகு வாழ்கிற நம்முடைய காலத்தில், வேதாகமத் தீர்க்கதரிசிகளின் நிலையான சாட்சியமும், அவரது ஆவியானவரின் வழிநடத்துதலும், உலகிற்கு வரவிருக்கும் நெருக்கடியை நாம் உணரவும், மற்றவர்களை எச்சரிக்கவும் நம்மை அழைக்கின்றன. ஆனாலும், அந்த எச்சரிப்புச் செய்தியின் மையமாக, இயேசுவுக்கு உண்மையாக வாழ்ந்து, அவரோடு உடன்படிக்கை உறவில் நிலைத்திருப்பவர்களுக்குக் கிடைக்கிற மீட்பின் நற்செய்தி உள்ளது. வெளி 12:17.

**ஆபிரகாம் குறைபாடுள்ள ஒரு மனிதராக இருந்தபோதிலும், அவரது வாழ்க்கையிலும் குணத்திலும் காணப்பட்ட எந்தத் தன்மை அவரை, தேவனுடைய ஊழியத்திற்குத் தகுதியுள்ளவராக்கியது? ஆதி 15:6; கலா 3:6-9; எபி 11:8.**

ஆபிரகாமின் காலத்தில் விக்கிரகாராதனையும் அஞ்ஞானமும் பரவிக்கிடந்ததுபோல, இன்று உலகில் பரவியுள்ள பல போட்டிச் சித்தாந்தங்கள் கிறிஸ்தவத்தை ஒழிக்க அல்லது ஓரங்கட்ட முயல்கின்றன. இத்தகையச் சூழல்களின் மத்தியிலும், மூன்று தூதர்களின் செய்திகளை அறிவிக்கவும், மற்றவர்களோடுள்ள அன்றாடத் தொடர்புகளில் அவருடைய சாயலை உண்மையுடன் பிரதிபலிக்கவும் தேவ மக்கள் அழைக்கப்படுகிறார்கள். வெளி 14:6-12.

---

**'அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்'. ஆதி 15:6. இந்த வசனத்தில் எவ்வாறு சுவிசேஷம்குறித்த வாக்குத்தத்தம் மிக வல்லமையாக வெளிப்பட்டுள்ளது? இதிலிருந்து நீங்கள் என்ன நம்பிக்கையைப் பெறமுடியும்?**

# எலியாவின் செய்தி

**தீர்க்கதரிசன ஊழியத்தின் செயல்பாடுபற்றி 1இராஜா 18:19-39 என்ன சொல்கிறது?**

தேவனுடைய தூதுவராக எலியா அழைக்கப்பட்டிருந்ததை அவரது ஊழிய அழைப்பிலும், அவர் பேசினவிதத்திலும் காணமுடிகிறது. இஸ்ரவேலின் விசுவாசத் துரோகத்தை நிறுத்துவதற்காக, அங்குப் பல ஆண்டுகள் வறட்சி நீடிக்கும் என்கிற செய்தியை ஆகாப் ராஜாவிடம் அறிவிக்கும்படி எலியாவை தேவன் அனுப்பினார். தேவன் தம் ஜனங்களை விக்கிரகாராதனையிலிருந்து விலக்கி, மீண்டும் கீழ்ப்படிதலுக்குள் திருப்புவதற்கு இந்த உபத்திரவத்தைப் பயன்படுத்தினார். தங்கள் துயரத்திற்குத் தீர்க்கதரிசியான எலியாவே காரணம் என்று ராஜாவும் அந்நாட்டு மக்களும் குற்றஞ்சாட்டி, அவரைக் கொல்ல முயன்றனர்.

கர்மேல் பர்வதத்தில், பாகாலின் தீர்க்கதரிசிகளையும், தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகளையும் எலியா எதிர்த்துநின்றார். தேவனுடைய அந்தத் தூதுவர், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவராக, விக்கிரகாராதனையில் மூழ்கியிருந்த இஸ்ரவேலரை நோக்கி, பொய்த்தெய்வங்களை விட்டுவிட்டு கர்த்தரிடம் திரும்புமாறு வேண்டினார். தங்களுடைய தீர்மானங்கள்தாம் தேசிய அளவிலான விசுவாசத் துரோகத்திற்கு வழிநடத்தியிருந்ததை ஜனங்கள் அறிந்தார்கள். தாங்கள் நம்பியிருந்த பொய்த்தெய்வங்களைவிட மிகவும் மேலானவராக எலியா நிரூபித்திருந்த தேவனை மீண்டும் ஏற்றுக்கொள்ள இப்போது தயாராக இருந்தனர். அவர்கள் நம்பியிருந்த பொய்த்தெய்வங்கள் உண்மையில் தெய்வங்களே அல்ல.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன்பாக, எலியாவின் செய்தியை மீண்டும் பிரசங்கிக்கும்படியும், ஜனங்களை அவர்களுடைய 'விக்கிரகங்களை' விட்டு விலகச்செய்து, கர்த்தருடைய மகா நாளில் நிற்பதற்கு ஆயத்தமாக்கும்படியும் தேவன் தம் சபைக்குக் கட்டளையிடுகிறார். தேவன் தாம் தெரிந்துகொண்ட வழிகளின்மூலமாகவே இப்போதும் தம் ஜனங்களோடு தொடர்புகொள்கிறார். அவரது வார்த்தையான வேதாகமும் தீர்க்கதரிசன வரமும் நமக்கு அறிவுரையையும், எச்சரிப்பையும், ஆலோசனையையும், ஆறுதலையும் வழங்குகின்றன.

'நம் மத்தியில் உண்மையான தேவபக்தியின் எழுப்புதல் ஏற்படுவதே நமது தேவைகளில் எல்லாம் மிகவும் பெரிய, அவசரத் தேவையாகும். இதைப் பெற முயலுவதே நமது முதல் வேலையாக இருக்கவேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற ஊக்கமான முயற்சி எடுக்கவேண்டும்; நம்மை ஆசீர்வதிக்க தேவனுக்கு மனமில்லை என்பதால் அல்ல, அதைப் பெற நாம் ஆயத்தமில்லாமல் இருப்பதனாலேயே இந்த முயற்சி தேவைப்படுகிறது'.

**எலியாவின் செய்தி தேவனைப் பின்பற்றுகிறவர்களின் இல்லங்களில் எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது? மல்கியா 4:5,6.**

உண்மையான எழுப்புதல் இருதயத்திலும் இல்லத்திலும்தான் தொடங்குகிறது. குடும்பம் என்பது சபையின் மூலைக்கல்லாகவும், சமுதாயத்தின் இன்றியமையாத அடித்தளமாகவும் இருக்கிறது. இல்லத்தில் ஏற்படும் எழுப்புதலானது சபையிலும், சமுதாயத்திலும், தேசத்திலும் ஒரு பரலோக அன்பைப் பரப்புகிறது. இதுவே கிறிஸ்தவ இல்லம்குறித்த தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. எழுப்புதல் தேவனுடைய ஜனங்களை ஊழியப்பணிகளைச் செய்யவும் தூண்டுகிறது.

---

**இன்று நம்முடைய இல்லங்களிலும், இருதயங்களிலும், சபைகளிலும் எவ்வகையான விக்கிரகங்கள் (ஏதேனும் இருப்பின்) காணப்படுகின்றன?**

# ஏசாயா, சுவிசேஷம் அறிவித்த தீர்க்கதரிசி

பழைய ஏற்பாட்டின் பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவரான ஏசாயா, தேவனிடமிருந்து நேரடியாகவே தீர்க்கதரிசன ஊழிய அழைப்பைப் பெற்றார். ஏசா 6:1-8. தேவனுடைய பரிசுத்தத்தையும் மகத்துவத்தையும் உணர்ந்தபோது, தான் முற்றிலும் தகுதியற்றவன் என்று கண்டார். அந்தத் தருணத்தில், சேராபீன்களில் ஒருவன் பரலோகப் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத்தழலை எடுத்து ஏசாயாவிடம் பறந்து வந்து, அவருடைய பாவங்களை 'நிவர்த்தி செய்தான்'. அதன்பிறகு தேவன், 'யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான்?' என்று கேட்டார். 'இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்' என்று ஏசாயா சொன்ன பதிலே நம் பதிலாகவும் இருக்கவேண்டும். ஏசாயா 6:8.

இஸ்ரவேல் வரலாற்றின் ஒரு முக்கியத் தருணத்தில் ஏசாயாவை தேவன் அழைத்தார். அவரிடம் குறைகள் இருந்தபோதிலும், இஸ்ரவேலரையும் அவர்களுடைய தலைவர்களையும் அவர்களது பாவ வழிகளின்நிமித்தம் எச்சரித்தார். ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் முக்கிய வேதப்பகுதிகளாக இடம்பெற்றுள்ளன, அவை தேவனுடைய தன்மை, மனிதர்களின் இயல்பு மற்றும் இரட்சிப்பின் திட்டம்பற்றி ஆழமான கருத்துகளை வழங்குகின்றன. உண்மையில், இயேசுவின் மரணத்தைப்பற்றி மட்டுமல்லாமல், அவரது மரணம் உலகிற்குச் செய்திருப்பதை விவரிக்கிற மிகவல்லமையான தீர்க்கதரிசனம் ஏசாயா 53 இல் உள்ளது.

**ஏசாயா 53 இல், சிலுவை மரணத்திற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட அற்புதமான தீர்க்கதரிசனம், நமக்காகக் கிறிஸ்து மரித்ததை எவ்வாறு மிகவல்லமையாக வெளிப்படுத்தியது? இந்தத் தீர்க்கதரிசனம் தீர்க்கதரிசன வரத்தைப்பற்றி நமக்கு என்ன கற்றுக்கொடுக்கவேண்டும்?**

ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் மேசியா வந்ததின் நோக்கத்தையும் அவரது ஊழியத்தையும் முன்னறிவித்தன. ஏசா 53:3-5. கிறிஸ்து ஏன் 'அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியைப்போல கொண்டுபோகப்பட்டார்' என்பதையும், அவரது பாவநிவாரண பலி எப்படி அவரது மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து இரட்சித்தது என்பதையும் விளக்கின. ஏசா 53:7. கிறிஸ்து நமக்குப் பதிலாக மரித்தது அங்கே மிகத்தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது; மனிதர்கள் அனைவரின் பாவத்திற்கும் செய்யப்பட்ட பாவநிவாரணத்தின் அடித்தளத்தைக் காட்டுகிறது.

உலகம் முழுவதும் பாவத்தில் சிக்கியதும், உலகம் முழுவதின் பாவத்திற்கும் சிலுவை தீர்வாக அமைந்ததும் ஏசா 53:6 இல் சித்திரிக்கப்பட்டுள்ளது. பழைய, புதிய ஏற்பாடுகள் முழுவதிலும், இந்த அதிகாரம்தான் இரட்சிப்பின் திட்டத்தை மிகவும் தெளிவாக, சந்தேகத்திற்கு இடமற்ற சொற்களில் விவரிக்கிறது.

ஆனாலும், ஏசாயாவின் தீர்க்கதரிசன அழைப்பு எளிதானதாக இல்லை. பாவத்தால் மக்கள் அழிய நேரிடும் என்று அவர் கடுமையாக எச்சரித்ததைக் கேலிசெய்தார்கள்; இன்றும்கூட பாவத்தின் விளைவுகளை எச்சரிக்கும்போது பலர் அவ்வாறே செய்கின்றனர். ரோமர் 6:23. ஏசாயாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் அவரது காலத்திற்கும் நம்முடைய காலத்திற்கும் தெளிவான எச்சரிப்பை வழங்குகின்றன. ஏசா 2:4; 5:20. நீதியாக வாழ்ந்து, தங்களைச் சீர்திருத்த மக்கள் மறுத்ததே எருசலேமின் அழிவுக்கு வழிவகுத்தது. கிறிஸ்து திரும்ப வரும்போது, இதே காரணத்தால்தான் பூமியின் துன்மார்க்கர் அழிக்கப்படப் போகிறார்கள்.

---

**ஏசாயா 53 இல், கிறிஸ்து நமக்காகச் செய்திருப்பதாகச் சொல்லப்பட்டுள்ள அனைத்தையும் எழுதுங்கள். கிறிஸ்துவின் மரணம் நமக்குச் செய்திருப்பதுபற்றி தீர்க்கதரிசி விவரிக்கிற விஷயங்களிலிருந்து நாம் எத்தகைய மாபெரும் நம்பிக்கையைப் பெறமுடியும்?**

# தானியேல், உண்மையுள்ள ஞானதிருஷ்டிக்காரர்

தான்சிறுவயதில்கற்றஆரோக்கியநியதிகளுக்குதானியேல்உண்மையாக நின்றார். தானி 1. உண்மையுள்ள வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டு தானியேல். தானி 1:8. அரண்மனையின் ருசியான உணவுகள் வழங்கப்பட்டபோது, ராஜா சாப்பிடுகிற உணவுகளைவிட, தாவர அடிப்படையிலான உணவுகளை உண்பதிலும், தண்ணீரைமட்டுமே குடிப்பதிலும் உறுதியாக இருந்தார். தானி 1:12-16. இது ஒரு சிறிய சோதனைதான்; ஆனால் தானி 6 இல், தனக்கு நேரிட்ட சோதனையில் உண்மையாக இருந்தது அவருடைய உயிருக்கே ஆபத்தானதாக இருந்தது.

**தானியேல் தன்னைச் சுற்றியிருந்த அஞ்ஞான மக்களுக்கு எப்படிப்பட்ட சாட்சியாக இருந்தார்? தானி 2:46-48; 4:18; 5:13,14; தானி 6:25-27.**

தானியேலின் தேவனுடைய வல்லமைபற்றி அந்த அஞ்ஞான மக்கள் கூறின சாட்சியைக் கவனியுங்கள். அந்தச் சம்பவங்கள், முக்கியமான ஒரு நியதியை வெளிப்படுத்துகின்றன: அதாவது, நம்முடைய வாழ்க்கை, உண்மைத்தன்மை, நமக்குள்ளும் நம்மூலமும் செயல்படுகிற தேவனுடைய வல்லமையின்மூலம், மற்றவர்கள் பரலோகத்தின் தேவனைப்பற்றி அறிந்துகொள்ளமுடியும், அறிந்துகொள்ளவேண்டும். மேலும் அவரே 'தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவருமாய்' இருக்கிறார் என்பதை அறியவேண்டும். மேலும், தானியேலின் தீர்க்கதரிசனங்களில், இயேசுவின் இரண்டாம் வருகையில் நிறைவேறப்போகிற நியாயத்தீர்ப்பைப்பற்றிய கருத்துகளே மையப்பொருளாக உள்ளன; அந்த நியாயத்தீர்ப்பு தேவனுடைய இறுதிவெற்றியைச் சுட்டிக்காட்டுகிறது. எனவே, 'தேவனே என் நியாயாதிபதி' என்று அர்த்தமுடைய தானியேலின் பெயரும் அதற்குப் பொருத்தமாக உள்ளது. தானியேலின் தீர்க்கதரிசனங்கள் இன்றைக்கும் பொருத்தமானவை; ஆராய்ந்து படிப்பதற்குத் தகுதியானவை. வாழ்க்கையின் 'சிறு' விஷயங்களில்கூட விழிப்புடன் இருந்து, தேவனுடைய கட்டளைகளுக்குக்கீழ்ப்படியவேண்டுமென தானியேலின் தீர்க்கதரிசனங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. தானியேல் ஒரு தீர்க்கதரிசியாக, தேசங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும், அவை தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதன் விளைவு களையும் முன்னறிவித்தார். அவரது தீர்க்கதரிசனங்களில், தேவன் தம் திட்டத்தையும், தம் ராஜ்யத்தின் இறுதி வெற்றியையும் வெளிப்படுத்தினார். தானி 7:13,14.

உதாரணமாக, கிறிஸ்துவின் காலத்திற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர் தானி 2 எழுதப்பட்டது. நான்கு பெரிய உலகப் பேரரசுகளின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் தானியேல் மிகத்துல்லியமாக முன்னறிவித்தார்; சிலையின் பாதங்களும் கால்விரல்களும் சுட்டிக்காட்டின நம்முடைய காலம்வரை அத்தீர்க்கதரிசனம் சொல்கிறது. இன்றைய ஐரோப்பாவைப்பற்றி தானி 2:43 எவ்வளவு அற்புதமான கணித்துள்ளது; அரசக் குடும்பங்களுக்கு இடையில் திருமணங்களும், ஒற்றுமைக்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டாலும், தனித்தனிச் சட்டங்கள், பழக்கவழக்கங்கள், மரபுகளுடன் தனித்தனி நாடுகளாகவே அக்கண்டம் நீடிக்கிறது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குச்சில ஆண்டுகளுக்கு முன்புகூட, எந்தவொரு உளவு அமைப்பும் அந்த வீழ்ச்சியை முன்கூட்டியே கணிக்காதபோது, தானியேலின் இந்தக் கணிப்பு தேவனுடைய தீர்க்கதரிசிகளை நம்புவதற்கு நமக்கு மிகவல்லமையான காரணங்களைத் தருகிறது.

---

**தானியேல் 2 இல் சொல்லப்பட்ட ராஜ்யங்கள் முன்னறிவிக்கப்பட்டபடியே தோன்றி மறைந்தன. இதற்கு அடுத்ததாக தேவனுடைய நித்திய ராஜ்யம் வரவிருப்பதாக அத்தீர்க்கதரிசனம் கூறுகிறது. தானி 2:44. அதை நாம் எவ்வளவு தூரம் நம்பவேண்டும்?**

# யோவான் ஸ்நானன், ஜனங்களை ஆயத்தப்படுத்துதல்

**யோவான் ஸ்நானனுடைய ஊழியத்தின் நோக்கம் என்ன? மாற்கு 1:2–5.**

யோவான் ஸ்நானனின் வருகை ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்ததாக மாற்கு சுவிசேஷம் தெரிவிக்கிறது. ஏசாயா 40:3. யோவான் சிறுபிராயம் முதல் வாலிபப் பருவம் வரை, தேவனுக்கு உண்மையுள்ளவராக வளர்ந்தார். வனாந்தரத்தில் யோவானின் குரலைக் கேட்ட சாத்தான், மனுக்குலத்தின்மீதான தன் ஆதிக்கம் பறிபோகுமோ என்று பயந்தான். எலன் ஒய்ட், யுகங்களின் வாஞ்சை, பக். 224. யோவான் பேசியதைக் கேட்டவர்களின் துன்மார்க்கம் வெளியரங்கமானதால், சாத்தான் நடுங்கினான். இஸ்ரவேலின்மீதான தனது பிடி தளர்ந்துவிடுமோ என்று அஞ்சினான். உண்மையான வாழ்க்கை, மேசியாமீதான நம்பிக்கை ஆகியவற்றிலிருந்து யோவான் ஸ்நானனைப் பின்வாங்கச் செய்ய முயன்றும் தோற்றுப்போனான்.

**யோவான் சிறையில் இருந்தபோது, அவரது விசுவாசத்தை இயேசு எவ்வாறு உறுதிப்படுத்தினார் என்ன? மத்தேயு 11:1–6.**

சாத்தானால் இயேசுவைப் பாவத்தில் விழவைக்கமுடியாமல், வனாந்தரத்தில் அவரிடம் தோற்றதால் ஆத்திரமடைந்தான். அதனால் தன் தந்திரத்தை மாற்றி, இயேசுவின் உறவினரான யோவானைச் சிறையில் அடைக்கச் செய்தான். இயேசுவை அவனால் பாவத்தில் விழச்செய்ய முடியாவிட்டாலும், யோவான் சிறையில் அடைக்கப்பட்டது அவரை மிகவும் காயப்படுத்தியது. யோவானை மனரீதியாக உடைக்கவும், அதே நேரத்தில் இரட்சகரின் இருதயத்தைப் பாரப்படுத்தவும் சாத்தான் கையாண்ட வழி இதுவாகும். ஆனால் யோவானை ஊக்கப்படுத்துகிற வகையில் இயேசு செய்தியனுப்பினார். தான் மோசமான சூழலில் இருந்த நிலையில், இயேசு மிகவும் வல்லமையுள்ளவராக இருந்தும், சிறையிலிருந்து தன்னை விடுவிக்காததின் காரணம் தனக்குப் புரியாவிட்டாலும், யோவான் மரணம் வரையிலும் உண்மை உள்ளவராகவே நிலைத்திருந்தார்.

பூர்வகாலத் தீர்க்கதரிசிகளைப்போலவே, நாமும் மனந்திரும்புதல், விசுவாசம், கிறிஸ்துவின் நிறைவான நீதி ஆகியவற்றை அறிவிக்க அழைக்கப்பட்டுள்ளோம். வெளி 14:6-12. யோவான் ஸ்நானனுக்குச் செய்ததுபோலவே, நம் வாழ்விற்கான தேவநோக்கத்தை நாம் சந்தேகிக்கும்படியாக, நிச்சயமற்ற சூழ்நிலைகளை, சாத்தான் பயன்படுத்தலாம். நம் வாழ்வில் தேவன் நம்மை வழிநடத்திய விதத்தை மறவாதிருந்தால், நாம் சோர்ந்துபோக வேண்டியதில்லை; குறிப்பாக, ஒரு துன்மார்க்க ஸ்திரீயின் செயல்களாலும், யோசிக்கத் திறனற்ற ஒரு மனிதனாலும் சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் கொல்லப்பட்ட யோவானுக்கு நடந்ததுபோல, சூழ்நிலைகள் நமக்குச் சாதகமாக இல்லாமல் எது நடந்தாலும் நாம் சோர்ந்துபோகக்கூடாது. மனிதர்கள் நமக்கு என்ன செய்தாலும், நாம் தேவனிடம் விசுவாசத்தோடு செல்லலாம், அவர் நமக்குப் பதிலளிப்பார். தம்முடைய சித்தத்தைச் செய்ய, நமக்கு வல்லமை கொடுப்பதாக அவர் வாக்குரைத்துள்ளார். அப் 1:8. கிறிஸ்தவ நியதிகளை மறுத்து, கிறிஸ்தவமே இல்லையென்று சொல்லுகிற இன்றைய உலகில், எல்லா சூழ்நிலைகளிலும், கிறிஸ்துவுக்கு உண்மையான சாட்சிகளாக இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

---

**சிறையிலிருந்த யோவானைப்போல, மோசமான காரியங்கள் உங்களுக்கு நடப்பதற்கான காரணங்களை புரிந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்திருக்கிறீர்களா? தேவன்மீது தொடர்ந்து விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் இருப்பதற்கு என்ன செய்தீர்கள்?**

# தீர்க்கதரிசன ஊழியத்திற்கான அழைப்பு

குறிப்பிட்ட காலங்களில், சிறப்பு நோக்கங்களுக்காகத் தீர்க்கதரிசிகளை, தேவன் அழைக்கிறார். அந்தந்தக் காலகட்டத்திற்குத் தேவையான செய்திகள் அவர்களுக்குச் சொல்லப்பட்டன. இந்தச் சூழலில் எலன் ஜி. ஒய்ட் நவீன காலத்தில் தீர்க்கதரிசன வரம் வெளிப்பட்ட ஒரு நபர் என்றும், அவர் வேதாகமத்தில் புத்தகம் எதுவும் எழுதியிராத ஒரு தீர்க்கதரிசியாகச் செயல்பட்டார் என்றும் செவந்த்–டே அட்வெண்டிஸ்ட்டுகள் நம்புகிறார்கள். இதைக் குறித்து வரும் பாடங்களில் பார்ப்போம். தானி 8:14 ம் வசனத்தை அடிப்படையாகக் கொண்டு, இயேசு வரப்போவதாக மில்லர் இயக்க அட்வெண்டிஸ்ட்டுகள் எதிர்பார்த்த சில வாரங்களுக்குப் பிறகு, டிசம்பர் 1844 இல் எலன் ஹார்மன் முதன்முதலாக அழைப்பைப் பெற்றார்.

குறிப்பிட்ட தேதியில்தான் கிறிஸ்து வருவாரென வில்லியம் மில்லர் காலம் குறிக்கவே இல்லை. ஆனாலும், அவரைப் பின்பற்றினவர்கள் 1844 ஆம் வருடம், அக்டோபர் 22 இல் கிறிஸ்து பூமிக்குத் திரும்பி வருவாரென முடிவுசெய்தனர். வேதாகமக் கால பாவநிவாரண நாளை வைத்து இவ்வாறு கணக்கிட்டனர். வட அமெரிக்காவிலும் உலகின் பிற பகுதிகளிலும் இதை நம்பின ஆயிரக்கணக்கான மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். சீக்கிரமே பரலோகத்திலுள்ள தங்கள் இரட்சகருடன் சேரப்போவதாக நம்பினார்கள். மில்லரும் கூட, எதிர்பார்க்கப்பட்ட வருகை நெருங்கியபோது மிகுந்த உற்சாகமும் ஆர்வமும் அடைந்தார்.

ஆனால் கிறிஸ்து வரவில்லை. இதனால் மில்லர் இயக்க விசுவாசிகள் 'மாபெரும் ஏமாற்றத்தை' அடைந்தனர். இது வரலாற்றுரீதியாக மிகுந்த வேதனை ஏற்படுத்திய நிகழ்வுகளில் ஒன்றாக அமைந்தது.

இந்தச் சூழலில்தான் எலன் ஹார்மனுக்கு முதல் தரிசனத்தை தேவன் கொடுத்தார். தம் பிள்ளைகளின் தவறான புரிதலுக்கு மத்தியிலும், தேவன் இன்னும் அவர்களோடு இருப்பதை அறிவித்து, ஊக்கமூட்டுவதற்கு அத்தரிசனம் கொடுக்கப்பட்டது. பூமியிலிருந்து பரலோக எருசலேமை நோக்கிச் செல்லுகிற ஒரு பாதை அத்தரிசனத்தில் காட்டப்பட்டது. அந்தப் பாதையில் அட்வெண்ட் விசுவாசிகள் பரிசுத்த நகரத்தை நோக்கிப் பயணத்தினர். மேலும், 'தங்களுக்கு முன்பாக நடந்து, தங்களை அந்நகரத்திற்கு வழிநடத்திச் சென்ற இயேசுவையே நோக்கிப் பார்த்தபோது, அவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள்'.

அந்தத் தரிசனம் ஒரு நற்செய்தியாக இருந்தது. அந்த மாபெரும் ஏமாற்ற அனுபவத்திலிருந்து ஒரு புதிய இயக்கத்தை உருவாக்க தேவன் உதவினார். இயேசு இன்னும் அவர்களோடுதான் இருந்தார். அவர் மீண்டும் வரவிருந்தார். அவர் இன்னும் அவர்களை இரட்சிப்பின் பாதையில் வழிநடத்திக்கொண்டிருந்தார். அவர்கள் தங்கள் கண்களை அவர்மீது 'பதிய வைத்திருப்பது' போதுமானதாக இருந்தது.

இவ்வாறாக, 17 வயது இளம் பெண்ணான எலன் ஜி. ஹார்மன் தனது தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார். அவருடைய பாதை, குறிப்பாக ஆரம்பக் காலத்தில் எளிதானதாக இருக்கவில்லை. உண்மையிலேயே அந்த வரம் தனக்குக் கொடுக்கப்பட்டதை அவர் படிப்படியாக ஏற்றுக்கொண்டாலும், தேவனுடைய தூதுவராக இருக்க எலன் ஜி. ஒய்ட் பயந்தார். தேவனுடைய தீர்க்கதரிசியாக இருப்பது ஒருபோதும் எளிதானதாகவோ பெருமைக்குரியதாகவோ இருந்ததில்லை. அப்படியிருக்க, தேவனுடைய அழைப்பிற்கு அவர் தன்னை அர்ப்பணிப்பாரா? பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் விசேஷித்த பணிகள் மற்றும் சவால்களைப்பற்றி அடுத்த வாரம் பார்ப்போம். அவற்றில் சில, நாம் அடுத்த வெள்ளிக்கிழமை பார்க்க விருப்பதுபோல, எலன் ஜி. ஒய்ட்டின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் பிரதிபலித்தன.

# மாற்றமடைந்த போதை மருந்து வியாபாரி

**மிஷன் பதிப்பாளர்**

மத்தேயு மற்றும் மார்ட்டின் என்பவர்கள் மாரேக் என்பவரின் மிகச்சிறந்த நண்பர்கள். பள்ளியில் அடிதடி நிகழ்ந்தால், பதின்பருவ இளைஞர்களான மத்தேயு, மார்ட்டின், மாரேக் ஆகிய மூவர்கள்தாம் காரணமாக இருப்பார்கள். இன்று, மத்தேயு இறந்துவிட்டார்; மார்ட்டின் ஏழு ஆண்டுகள் சிறையில் கழித்தார்; மாரேக் போதைப்பொருள் வியாபாரியாக இருந்து, இப்போது போலந்திலுள்ள செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் தலைவர்களில் ஒருவராகச் சேவைசெய்து வருகிறார். என்ன நடந்தது?

மாரேக் தெற்குப் போலந்தில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் வளர்ந்தார். அவருக்கு 18 வயதாக இருந்தபோது, அவருடைய காதலி அவரை விட்டுப் பிரிந்து சென்றதால் உடைந்து போனார். அவர், 'தேவனே, அவள் எனக்கு மீண்டும் வேண்டும்' என்றும், பின்பு, 'தேவனே, நான் இனிமேல் உயிரோடு இருக்க விரும்பவில்லை' என்று ஜெபித்தார். எதுவும் நடக்கவில்லை. மாரேக் ஒரு நாத்திகரானார். போதைப்பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

இரண்டு ஆண்டுகள் கடந்தன. புத்தாண்டு இரவன்று மாரேக், தனது பாட்டியைப் பார்க்க முடிவுசெய்தார். அன்று இரவு, தனது பாட்டியின் வீட்டில் இருந்த இயேசுவின் படத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். 'நான் தேவனை நம்பாவிட்டாலும், இயேசு என்பவர் உண்மையாகவே வாழ்ந்த ஒருவர்' என்று நினைத்தார். சில நாட்களுக்குப் பிறகு, மாரேக் ஒரு பெண்ணைச் சந்தித்தார். அவள் சீட்டுக்கட்டுகளைக் கலைத்துப்போட்டு, உலகம் அழியப்போவதாக எச்சரித்தாள். இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த மாரேக், உலகம் எப்போது அழியும் என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண், சரியாக இன்னும் ஓராண்டில் அழியும் என்று கூறினார்.

உலகம் அழியப்போகிற விதத்தை அறிந்துகொள்கிற ஆசையில், மாரேக் வெளிப்படுத்துதல் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினார், பின்னர் சுவிசேஷப் புத்தகங்களை வாசித்தவர், மனிதர்கள் மகிழ்ச்சியாகவும் நித்தியமாகவும் வாழக்கூடிய ஒரு ராஜ்யத்தை இயேசு வைத்திருப்பதை அறிந்து ஆச்சரியப்பட்டார். ஒரு நாள் இரவு, 'சைன்ஸ் ஆஃப் தி டைம்ஸ்' என்ற பெயருடைய ஒரு புத்தகக் கடை யைக் கண்டார். மறுநாள், அந்தப் புத்தகக் கடைக்குச் சென்று, "உங்களிடம் நோஸ்ட்ரடாமஸ் பற்றிய புத்தகங்கள் ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டார். அங்கிருந்த பெண்மணி, "இல்லை, ஆனால் உங்களுக்குத் தீர்க்கதரிசனங்களில் ஆர்வம் இருந்தால், எங்களிடம் மாபெரும் போராட்டம் புத்தகம் உள்ளது" என்று கூறினார். எலன் ஒய்ட் எழுதிய அந்தப் புத்தகத்தை வாசித்து சிலிர்த்துப்போனார். அதில் இருந்த அனைத்தையும் வேதாகமத்திலும் இணையத்திலும் இருமுறை சரிபார்த்தார்.

ஒரு நாள் இரவு, அவர் படுக்கையில் படுத்து 'மாபெரும் போராட்டம்' புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தபோது, 'இந்தப் புத்தகத்தை வாசிப்பதன் மூலம் எனக்கு ஏதாவது புதிய தகவல் கிடைத்திருக்கிறதா?' என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டார். அந்தக் கணத்தில், அவரது தலைக்கு மேலே இருந்த விளக்கு சிமிட்டத் தொடங்கியது. அது வழக்கத்திற்கு மாறாக இருந்ததால், மாரேக் பதற்றமடைந்தார். திடீரென்று, ஜன்னலில் தனது உருவம் தெரிவதைக் கவனித்தார். அவரது தலையும், அதற்கு நேர் மேலே இருந்த அந்த விளக்கும்மட்டுமே அவருக்குத் தெரிந்தன. அப்போது அந்த விளக்கு சிமிட்டுவதை நிறுத்திவிட்டு, மீண்டும் பிரகாசமாக எரிந்தது. 'தேவனே, நீர் உண்மையிலேயே இருப்பதால், நான் உமக்குச் சேவை செய்ய விரும்பு கிறேன்' என்று கூறினார்.

பாடம் 3 அக்டோபர் 10-16



# பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாக் 5:17,18; 1இராஜா 19:1–16; 22:1–14; யாத் 15:20; 2இராஜா 22:11–14; எரே 14:1–15.

**மனன வசனம்:** யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான். 2நாளாகமம் 20:20.

ஜிபிஎஸ் எனப்படும் உலகளாவிய இடங்காட்டி அமைப்பானது, பயணிகள் தாங்கள் இருக்கிற இடத்தையும், போகிற இடத்தையும் அறிந்துகொள்ள உதவுகிறது, வழியில் ஆபத்துகள் இருந்தால் எச்சரிக்கிறது. பரலோகத்திற்குப் பயணம்செய்கிற ஆவிக்குரிய பயணிகளுக்கும் இப்போதும் எதிர்காலத்திலும் ஒரு பரலோக 'இடங்காட்டி அமைப்பு' மூலம் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. கடந்த காலங்களில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் ஊழியத்தை இதற்கான ஒரு வழியாக தேவன் பயன்படுத்தினார். பத்துக்கும் மேற்பட்ட தீர்க்கதரிசிகள் கதைகள், ஆலோசனைகள், தீர்க்கதரிசனங்கள், கவிதைகள் மற்றும் பாடல்கள்மூலம் தேவனுடைய செய்திகளை மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

தீர்க்கதரிசிகளைப்பற்றி பழைய ஏற்பாடு சொல்வதை இந்த வாரம் ஆராய்வோம்; தேவனுடைய ஊழியர்கள் சிலரிடம் வெளிப்பட்ட தீர்க்கதரிசன வரத்தை நாம் புரிந்துகொள்வதற்கு இந்த விளக்கங்கள் நமக்கு உதவுகின்றன.

இவர்கள் நம்மைப்போல பயம், கோபம், அதைரியம் போன்றவற்றிற்கு ஆளாகக்கூடிய பலவீனமான மனிதர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு வாழ்க்கை எளிதாக இருக்கவில்லை, நம் எல்லாரையும்போன்றே சவால்களும் கஷ்டங்களும் நிறைந்திருந்தன.

அப்படியானால், தேவனால் பிரத்தியேகமாக அழைக்கப்பட்ட அந்த ஊழியர்களில் சிலரைப்பற்றி ஆராய்வதன்மூலம் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

*2026, அக்டோபர் 17 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தீர்க்கதரிசிகளின் மனிததன்மை

தீவிரமான எதிர்ப்புக்கு மத்தியிலும், இஸ்ரவேலில் மிகப்பெரிய ஒரு பணியைச் செய்வதற்கு, தீர்க்கதரிசியான எலியாவை தேவன் பயன்படுத்தினதைக் கடந்தவாரம் பார்த்தோம். அவர்மூலம் கர்த்தர் செய்த காரியம் நம்ப முடியாததாக இருந்தது. பின்னர் என்ன?

**யாக் 5:17,18 இல் தீர்க்கதரிசியான எலியாபற்றி யாக்கோபு சொல்வதைச் சிந்தியுங்கள். எலியா 'நம்மைப்போலவே பாடுள்ள மனுஷன்' என்று அவர் கூறுவதன் அர்த்தம் என்ன?**

---

கர்மேல் மலையில் எலியாவுக்குப் பிரம்மாண்டமான ஒரு வெற்றி கிடைத்திருந்தது. 1இராஜா 18; தேவன் அவர்மூலமாக வல்லமையான வழியில் செயல்பட்டார், மேலும் பழைய ஏற்பாட்டு வரலாற்றிலேயே பிரமிக்கத்தக்க அற்புதங்களில் ஒன்று அங்கே நிகழ்ந்தது: எலியா சொன்னதுமே, வானத்திலிருந்து நிஜமாகவே அக்கினி இறங்கி வந்தது. 1இராஜா 18:38 அத்தகைய ஓர் அற்புதம் நடந்தபிறகு, அந்த தேவ மனிதன் அளவற்ற மகிழ்ச்சியடைந்திருப்பார் என்று நினைத்திருப்பீர்கள்.

**தேவனுடைய தீர்க்கதரிசியின் உணர்வுநிலைபற்றி 1இராஜா 19:1–16 சொல்வது என்ன?**

'போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல' என்று சொன்னார். 1இராஜா 19:4. மன அழுத்தப் பாதிப்புள்ள ஒருவர்தான் இவ்வாறு பேசுவார். காரணம் என்ன? கர்மேல் மலை நிகழ்வைத் தொடர்ந்து சூழ்நிலை எளிதாக இருந்திருக்காது, ஆனாலும், அங்கு வேறு ஒன்றும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

அதைப் புரிந்துகொள்ள இந்த வசனம் உதவலாம், 'சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்' 1இராஜா 19:10. தனது ஊழியத்தில் தோல்விகள் ஏற்பட்டதாகக் கருதி, அவர் புலம்புவதுபோல் தெரிகிறது. தனது அற்புதமான முயற்சிகளுக்குப் பிறகும் விசுவாசத்துரோகம் நீடித்ததால், தானே தனி ஆளாக அந்த அலையைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும் என்பதுபோல நினைக்கிறார். அந்தத் தேவனுடைய மனிதனுடைய மனிததன்மையையும் பலவீனத்தையும்தான் நாம் பார்க்க முடிகிறது. அதாவது, எலியா 'நம்மைப்போல பாடுள்ள' ஒரு மனிதனாக இருந்தார்.

---

**உங்கள் வாழ்க்கையிலும் முயற்சிகளிலும் சில சமயங்களில் 'தோல்வி' அடைந்தது போன்ற உணர்வு ஏன் உண்டாகிறது? அதைரியம் ஏற்படாமல் இருக்க எந்த வேதாகம வாக்குத்தத்தங்களை நீங்கள் உரிமை கொண்டாடலாம்?**

# மெய்த் தீர்க்கதரிசிகளை அடையாளங்காணுதல்

ஆரம்பக்கால இஸ்ரவேலின் வரலாற்றில், கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. உபா 18:20. எனவே, தம்முடைய மெய்யான தீர்க்கதரிசிகள் யார் என்பதற்கான வழிகாட்டுதலை தேவன் தம் மக்களுக்குக் கொடுக்காமல் இல்லை.

தேவனுடைய வெளிப்பாடுகளையும் ஏவுதலையும் பெற்ற உண்மையான தீர்க்கதரிசிகள் தேவனுடைய செய்திகளை உண்மையோடும் உத்தமத்தோடும் துல்லியமாக அறிவித்தார்கள்; சில சமயங்களில் இது அதிகாரத்தில் இருந்தவர்களுக்குப் பிடிக்காதபோதிலும், அவர்கள் அதைச் செய்தார்கள்.

**உண்மையுள்ள தீர்க்கதரிசிகள் செயல்பட்ட விதம்பற்றி 1இராஜா 22:1-14 என்ன சொல்கிறது?**

ஒரு தீர்க்கதரிசியைப்பற்றி ஒரு ராஜா, 'நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக்குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன்' என்று கூறுகிறார். 1இராஜா 22:8. இது அந்த ராஜாவைப்பற்றிச் சொல்வதைவிட, அந்தத் தீர்க்கதரிசியைப்பற்றி அதிகமாகச் சொல்கிறது. ராஜாவாக இருந்தாலும், உண்மையைப் பேசப் பயப்படாத ஒரு மனிதராக இருந்தது தெளிவாகிறது; ராஜாவின் அதிருப்திக்கு தான் ஆளாகக்கூடும் என்பதை அறிந்தே உண்மையைப் பேசினார்.

தனக்கு வெளிப்படுத்தப்பட்ட உண்மையை 400 கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எதிராக தனியாளாக மிகாயா சொன்னார். பொல்லாத ராஜாவாகிய ஆகாபையும் அவனது மனைவி யேசபேலையும் திருப்திப்படுத்த, கர்த்தரிடமிருந்து வந்த எதிர்மறையான செய்திகளை மாற்றிச் சொல்லவேண்டிய கட்டாயத்தில் இருந்தபோதிலும், அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா இல்லையா என்றெல்லாம் கவலைப்படாமல் தேவனுடைய சத்தியத்தை அப்படியே மிகாயா அறிவித்தார். 1இராஜா 22;13,14.

**தேவனுடைய உண்மையுள்ள தீர்க்கதரிசிகளை மற்றவர்கள் கருதின விதம்பற்றி 1சாமு 9:3-14 வசனங்கள் என்ன சொல்கின்றன?**

வேதாகமத்தில் தீர்க்கதரிசிகளின் வாழ்க்கைத் தரத்தைக் காட்டுகிற ஏராளமான உதாரணங்கள் உள்ளன. இங்கு, காணாமல்போன தன் கழுதைகளைத் தேடுவதற்கு சவுலை அவருடைய தகப்பனாகிய கீஸ் அனுப்புகிறார். சவுலுடன் சென்ற வேலைக்காரன், 'இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் மதிப்பானவர்' என்று கூறினான். 1சாமு 9:6. இங்கே சாமுவேல் தீர்க்கதரிசியைக் குறித்துச் சொல்லப்படுவது, தேவனுடைய தீர்க்கதரிசிகளிடம் எதிர்பார்க்கப்படும் குணாதிசயங்களைக் காட்டுகிறது. உண்மையான தீர்க்கதரிசிகள் தேவனுடைய குணாதிசயத்தை எடுத்துக்காட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'தேவனுடைய மனுஷர்கள்' என்று வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது. அதே நேரத்தில், 'தேவனுடைய மனுஷர்களில்' சிலர் தீர்க்கதரிசிகளாக இருந்தாலும், அவர்கள் குறையே இல்லாத மனிதர்கள் என்று அர்த்தமல்ல.

---

**'தேவனுடைய மனுஷர்களில்' மிகவும் மதிக்கப்படுகிறவர்களில், குறையே இல்லாத யாரையாவது அறிந்திருக்கிறீர்களா?**

# தீர்க்கதரிசிகளின் பணிகள்

**ராஜாக்கள், ஆசாரியர்கள் சம்பந்தமாக தீர்க்கதரிசிகள் எத்தகைய விதத்தில் பணி யாற்றினார்கள்? 1சாமுவேல் 8:4–22; லேவியராகமம் 8:10–13.**

ராஜாக்களுடன் இணக்கமான அனுபவங்களும், கசப்பான அனுபவங் களும் தீர்க்கதரிசிகளுக்கு ஏற்பட்டன. இஸ்ரவேலர்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டார்கள். 1சாமு 8:4-22. 'சகல ஜாதிகளுக்குள்ளும் இருக் கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு ராஜா வேண்டும்'. 1சாமு 8:5. தங்களைச் சுற்றியுள்ளவர்களைப்போல் தாங்களும் மாறவேண்டும் என்கிற ஆசை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தேவமக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இது, வருத்தமான ஓர் உண்மை. தங்களுடைய கோரிக்கையால் உண்டாகவிருந்த விளைவுகளை அவர்கள் அறிந்திருக்கவில்லை; தேவன் தமது தீர்க்கதரிசி மூல மாக முன்கூட்டியே எச்சரித்திருந்த போதிலும், அவர்கள் அதைப் பொருட்படுத்த வில்லை. 1சாமு 8:11-18. எச்சரித்தாலும்கூட, அவர்கள் ஆசைப்பட்டபடியே இஸ்ரவேலின் முதல் ராஜாவை சாமுவேல் அபிஷேகம்செய்தார். அவர் வேதாகம வரலாற்றில் சவுல் ராஜா என்று அழைக்கப்படுகிறார்.

இஸ்ரவேல்-யூதா ராஜாக்களின் ஆட்சிமுறையையும், அதன் தரத்தையும் 1,2 இராஜாக்கள், 1,2 நாளாகமம் புத்தகங்கள் பதிவு செய்துள்ளன. தேவனுடைய பார்வையில் நன்மைசெய்த ராஜாக்களின் எண்ணிக்கையைவிட தீமைசெய்த ராஜாக்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. தேவனுடைய கட்டளை களுக்குக் கீழ்ப்படியாமல் இருந்த ராஜாக்களை மீண்டும் நல்வழிப்படுத்துவது தீர்க்கதரிசிகளின் முக்கியப் பணிகளில் ஒன்றாக இருந்தது. அதன் விளைவாக, இந்தத் தீர்க்க தரிசிகள் பல அச்சுறுத்தல்களைச் சந்தித்தனர்; தேவனை விட்டு மக்களை வழி விலக்கிய அரசர்களால் சிலர் துன்புறுத்தப்பட்டு, கொலை செய்ய வும்பட்டனர். 1இராஜா 18:4-19; 2நாளா 24:20-22

ஆசாரியர்களுக்கும் தீர்க்கதரிசிகள் ஊழியம்செய்தனர். தேவனுடைய தீர்க்கதரிசியான மோசே, ஆரோனையும் அவனுடைய குமாரர்களையும் இஸ்ர வேலின் முதல் ஆசாரியர்களாக அபிஷேகம்செய்தார். லேவி 8:10-13. சில சமயங்களில் தீர்க்கதரிசிகள்மூலமாக ஆசாரியர்களை, தேவன் கண்டித்துப் பேசி னார். ஓசியா 6:9; மல்கியா 2:1-3. ஏலியின் குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிப்பு இதற்கு ஓர் உதாரணம்; தீய நடத்தைகளுக்காக அவர்கள் கடிந்துகொள் ளப்பட்டனர். 1சாமு 2:27-36. சிறப்பான சிலாக்கியங்களைப் பெற்றிருந்தவர்களின் சீர்கேடுகளுக்கு எதிராகக் கொடுக்கப்பட்ட கடுமையான கண்டனங்கள் இவை.

மக்களுக்குப் போதிக்கிற ஆசிரியர்களாகவும் தீர்க்கதரிசிகள் இருந்தனர். 2நாளா 34. ஆசாரியர்களுக்கும், ராஜாக்களுக்கும், ஒட்டுமொத்தத் தேசத்திற்கும் தேவனுடைய செய்திகளை எடுத்துச் சொன்னார்கள். எரே 5:31; எசே 22:26. தீர்க்கதரிசிகள் தங்களைச் சுற்றியிருந்த பிற தேசத்தாருக்கும், அவர்களுக்கான தேவனுடைய திட்டத்தைக் கூறினார்கள். ஏசா 60:1-3; 62:1,2. தீர்க்கதரிசிகள் தேவன் தங்களுக்குக் கொடுத்த செய்திகளை உண்மையுடன் தெரிவித்தார்கள். சில சமயங்களில் அவற்றை எழுதிப் பாதுகாக்கும்படி அவர்களுக்கு தேவன் கட்டளையிட்டார். 2நாளா 13:22. தீர்க்கதரிசிகள் எல்லோரும் ஆண்களோ, பெண்களோ அவர்கள் மனித இயல்போடும், அதன் அனைத்துப் பலவீனங் களோடும் இருந்தாலும், ஜெபிக்கிறவர்களாக, தேவ வார்த்தையின்படி நடக்கிற வர்களாக, தேவனுக்கும் அவரது மக்களுக்கும் சேவைசெய்கிறவர்களாகக் காணப்பட்டார்கள். எரே 42:4; 2இராஜா 22:15-17.

# பெண் தீர்க்கதரிசிகள்

**தீர்க்கதரிசனப் பணிபற்றி பின்வரும் வேதப்பகுதிகள் கூடுதலாகச் சொல்கிற கருத்து என்ன? யாத் 15:20; நியா 4:4; 2இராஜா 22:14; நெகே 6:14.**

---

பெண்களையும் தீர்க்கதரிசிகளாக தேவன் அழைத்ததற்கு வேதாகமத்தில் ஏராளமான சான்றுகள் உள்ளன. இவர்களைச் சுட்டிக்காட்ட **நெவியா** எனும் எபிரெய வார்த்தை வருகிறது. யாத் 15:20. மேலும், இதற்கான கிரேக்க வார்த்தை **புரொபெடிஸ்.** லூக் 2:36. ஜனங்களுக்கு முன்பாக அனுப்பப்பட்டவர்களாக மோசேயோடும் ஆரோனோடும் மிரியாமும் மீகா 6:4 இல் பட்டியலிடப்பட்டுள்ளார். இஸ்ரவேலர்கள் செங்கடலைக் கடந்தபோது வெற்றிக்கீதம் பாடிய மிரியாம், ஒரு பெண் தீர்க்கதரிசியாகச் சுட்டிக்காட்டப்படுகிறார். யாத் 15:20,21. ஆனாலும், இந்தத் தீர்க்கதரிசினியும், சக ஆண் தீர்க்கதரிசிகளைப்போல, குறைபாடுகள் உள்ளவராகவே இருந்தார். மோசேயிடமும் அவரது எத்தியோப்பிய மனைவியிடமும் அவர் அவமரியாதையுடன் நடந்துகொண்டது ஓர் உதாரணம். இந்தச் செயல்களுக்கு தண்டனையும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. எண் 12:1-10.

இஸ்ரவேலில் நியாயாதிபதியாகப் பணியாற்றிய தெபொராளும் தீர்க்கதரிசினியின் பணியைச் செய்தார். நியா 4:1-4.

தேவனிடமிருந்து தெபொராள் வெளிப்பாட்டைப் பெற்றதற்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. நியா 4:4-9, 14-22. தேவன் தலையிட்டதை அங்கீகரித்து, வெற்றிக்கீதம் பாடினார், நியா 5:2-31; அது வரலாற்றின் அக்காலக்கட்டத்தில் அத்தேசத்திற்கு இறையியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

**யோசியா ராஜாவின் மனுஷர்கள் உல்தாளிடம் ஏன் சென்றார்கள்? 2இராஜா 22:11-14. தேசத்தில் அவர் ஆற்றின முக்கியமான பங்கைப்பற்றி இது என்ன கூறுகிறது?**

'தீர்க்கதரிசினியானவள்' என்று அழைக்கப்பட்ட உல்தாளிடம், யோசியா ராஜாவின் ஆலோசனைக் குழுவின் உயர்மட்ட அதிகாரிகள் சென்று ஆலோசனை கேட்டனர். 2இராஜா 22:14; 2நாளா 34:22. 'நியாயப்பிரமாணப் புஸ்தகத்தின்' வார்த்தைகளை ராஜாவிடம் வாசித்துக் காட்டிய பிறகு அவர்கள் இவ்வாறு செய்தனர், 2இராஜா 22:8. இது உபாகமப் புத்தகமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. அதைக் கேட்ட ராஜா தன் 'வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான்'. 2இராஜா 22:11. அது மிகவும் தீவிரமான ஒரு விஷயம்தான், ராஜாவும் அதைத் தீவிரமாக எடுத்துக்கொண்டார்; அதனால்தான் அவருடைய மனுஷர்கள் நேராக உல்தாளிடத்திற்குச் சென்றனர். யூதாவிற்கு வரவிருந்த நியாயத்தீர்ப்புக்குறித்து தேவனிடமிருந்து அவள் செய்தியைப் பெற்றிருந்தாள். உல்தாள் சொன்ன தீர்க்கதரிசனச் செய்திகளின் விளைவாகவே யோசியா சீர்திருத்தங்களைச் செய்தார். அதனால், தேவனுடைய ஜனங்கள்மேல் வரவிருந்த நியாயத்தீர்ப்பைத் தடுக்கமுடிந்தது.

---

**ஆண் தீர்க்கதரிசிகளும் பெண் தீர்க்கதரிசிகளும் தேவனால் அழைக்கப்பட்டாலும், அவர்களும் கிருபை தேவைப்பட்ட பாவிகளாகவே இருந்தனர். இவர்களுடைய அனுபவங்களிலிருந்து நீங்கள் என்ன நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடிகிறது?**

# கள்ளத்தீர்க்கதரிசிகள்

தேவன் எதைச் செய்தாலும், சாத்தான் அதற்குப் போலிகளை உருவாக்குகிறான். தீர்க்கதரிசிகளின் விஷயத்திலும் அப்படிதான். இஸ்ரவேல் ஜனங்களும் உண்மையான தீர்க்கதரிசிகளையும், கள்ளத்தீர்க்கதரிசிகளையும் எதிர்கொண்டார்கள். அவர்களுக்கு இடையேயான வித்தியாசத்தை அறிந்துகொள்வதே முக்கியமாக இருந்தது.

**எரேமியா 14:1-15 இல் நடக்கிற சம்பவம் என்ன, 'தீர்க்கதரிசிகள்' என்று பொய்யாய்ப் பேசினவர்களைக்குறித்து தேவன் சொல்லியது என்ன?**

எரே 14 இல், யூதாவிற்கு நேரிடவிருந்த நியாயத்தீர்ப்பைக்குறித்து எரேமியாவிடம் தேவன் செய்திசொன்னார்; யுத்தம், பஞ்சம், கொள்ளைநோய் ஆகியவற்றின் வடிவில் அந்த நியாயத்தீர்ப்புச் சம்பவிக்கவிருந்தது. எரேமியாவின் செய்திக்கு முரணாக அக்காலத்தில் இருந்த கள்ளத்தீர்க்கதரிசிகள் பேசினார்கள். எரேமியா அவர்களைப்பற்றி எரே 14:14 இல் மிகத்தெளிவாக விவரிக்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் சீர்கேடானவர்கள். ஏனென்றால், அவர்கள் வணங்குகிற பொய்த் 'தெய்வங்கள்'தாம் அவர்கள் சொல்கிற தீர்க்கதரிசனங்களுக்குக் காரணம். எரே 23:13,14. 'நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை' என்று தேவன் எச்சரிக்கிறார். எரே 14:14. அவர்கள் 'தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறவர்கள்'. எரே 23:26. 'தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே எடுத்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களுக்கு' எதிராக தீர்க்கதரிசனம் சொல்லும்படி எசேக்கியேலுக்குக் கட்டளையிடப்பட்டது. எசே 13:2.

எல்லாரும் விரும்புகிற கருத்துகளின்படி கள்ளத்தீர்க்கதரிசிகள் நடக்கிறார்கள். இதன் அடிப்படையில்தான், 1இராஜா 22 இல், ஆகாப் ராஜாவின் கட்டளையின்படி 400 'தீர்க்கதரிசிகள்' மொத்தமாகக் கூடிவந்தார்கள். 1இராஜா 22:6. அவர்கள் அனைவரும் ராமோத் கீலேயாத்திற்கு விரோதமாக யுத்தம்செய்யுமாறு ஏகமனதோடு ராஜாவுக்கு ஆலோசனை கூறினார்கள். அஷேராவின் தீர்க்கதரிசிகள் சொன்ன அந்தத் தீர்க்கதரிசன ஆலோசனையைக் கேட்டபிறகு, யூதாவின் ராஜாவான யோசபாத்திடம் ஆகாப் ஆலோசனைநடத்தினான். யுத்தத்திற்குச் செல்வதா வேண்டாமா என்று தீர்க்கதரிசியான மிகாயாவிடம் ஆலோசனை கேட்குமாறு ஆகாபிடம் யோசபாத் வற்புறுத்தினார். 'மிகாயாவை அழைக்கப் போன ஆள் அவனுடன் பேசி: இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும் என்றான்'. 1இராஜாக்கள் 22:13. பொய்சொல்லும்படி மிகாயாவுக்கு உண்டான அழுத்தமானது தோப்புவிக்கிரகக் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு உண்டான அழுத்தத்தைப்போலவே இருந்திருக்கலாம்; ஆனால் எல்லாரும் விரும்புகிறபடி நடக்க மிகாயா விரும்பவில்லை. அதற்குப் பதிலாக, தான் என்ன பேசவேண்டும் என்று தேவன் தன் னிடம் சொல்வதற்காக அவர் காத்திருந்தார். 1இராஜா 22:14.

---

**தீர்க்கதரிசியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், பிறர் விரும்புகிறபடி நடக்கப் பார்ப்பது எளிதானது. நம்முடைய கலாச்சாரம் மிகவும் சீர்கெட்டு இருப்பதால், இவ்வாறு செய்வது எப்போதும் நல்லதாக இருக்காது, ஏன்?**

# பூரணம் இல்லை; ஆனால் விருப்பம் உண்டு

தேவனுடைய தூதுவராக இருப்பது ஒருபோதும் எளிதானதில்லை என்பதை பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் வாழ்க்கை தெளிவுபடுத்துகிறது. வேதாகமத் தீர்க்கதரிசிகளுக்கு உண்டான அதே கலக்கங்கள் எலன் ஜி. ஒய்ட் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றன. தேவனுடைய அழைப்பைப் பெற்றபோது அவர் இளம் வயதினராக, வெட்கப்படுபவராக, உடல் பெலவீனராக இருந்தார் என்று கடந்த வெள்ளிக்கிழமையில் பார்த்தோம். இரண்டாவது தரிசனம் அவரது அழைப்பை உறுதிப்படுத்தியபோதிலும், எலன் ஹார்மன் தேவனுடைய அழைப்பைக்குறித்து தொடர்ந்து பயத்திலேயே இருந்தார்; அவர் எழுதியதாவது:

'இது நடந்து சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு, கர்த்தர் எனக்கு மற்றொரு தரிசனத்தைக் கொடுத்து, நான் கடந்து செல்லவேண்டிய சோதனைகளையும், அவர் எனக்கு வெளிப்படுத்தியவற்றை நான் மற்றவர்களிடம் சென்று சொல்லவேண்டியதையும் காண்பித்தார்; எனக்கு உண்டாகவிருந்த மிகப்பெரிய எதிர்ப்புகளையும், ஆத்தும வியாகுலத்தையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்ததை எனக்குக் காண்பித்தார். இந்தத் தரிசனம் என்னை மிகவும் கலக்கமடையச்செய்தது. என் உடல்நிலை மிகவும் பலவீனமாக இருந்தது, அப்போது எனக்குப் பதினேழு வயதுதான் ஆகியிருந்தது. இந்தப் பாரம் வேறு யாராவது ஒருவர்மீது வைக்கப்பட நான் ஊக்கமாக ஜெபித்தேன். ஆனால் எனக்குக் கிடைத்த ஒரே வெளிச்சம், "நான் உனக்கு வெளிப்படுத்தியதை மற்றவர்களுக்குத் தெரிவி" என்பது மட்டுமே. அவ்வாறு அறிவிப்பதற்காக வெளியே செல்வதற்கு எனக்கு மனமே இல்லை. இயல்பாகவே எனக்குள் நம்பிக்கைக் குறைவு இருந்தது... அதைவிட கல்லறையே நன்றாக இருக்கும்போல நினைத்தேன். நான் சுமக்கவேண்டிய பொறுப்புகளைக் காட்டிலும் மரணமே மேலானதாகத் தோன்றியது'.

தனது அழைப்பை ஏற்றுக்கொள்வதைவிட எலன் ஹார்மன் மரணத்தை மேலானதாகக் கருதினதைக் கவனித்தீர்களா? அதிகமாக ஜெபித்து, சக விசுவாசிகளின் ஊக்கத்தைப் பெற்றபிறகு, அவர் அதற்கு உடன்பட்டு, தனது வாழ்நாளின் மீதமுள்ள பகுதியை 'அவருடைய கட்டளைக்குக்' கீழ்ப்படிய அர்ப்பணித்தார். உருவாகவிருந்த செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபைக்கு அதிகச் செல்வாக்குமிக்க ஒரு குரலாக, ஓர் அடையாளக் குரலாக எலன் மாறினார். ஆனாலும், எலன் ஹார்மன் ஒரு மனிதரே; அவரிடம் தனிப்பட்ட தவறுகளும், உடல்ரீதியான சோதனைகளும், குடும்பச் சவால்களும், உறவுச்சிக்கல்களும் காணப்பட்டன. ஆனாலும் அவருடைய இந்த மனித பலவீனங்களுக்குமத்தியிலும், ஒரு பெரிய பாடம் நமக்கு உள்ளது: தமக்குச்சேவைசெய்யமனமுள்ள, பூரணமற்றமனிதர்களையேதேவன்தெரிந்துகொள்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் கீழ், எலன் ஜி. ஒய்ட்டின் தீர்க்கதரிசன ஊழியம் விசுவாசிகளை ஊக்கப்படுத்தியது, வேதாகமச் சத்தியங்களுக்கு வழிநடத்தியது. 1860 ஆம் ஆண்டிற்குள், செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் வளர்ச்சியிலும், மூன்று தூதர்களின் செய்திகளை உலகிற்குப் பிரசங்கிக்கும் அதன் ஊழியத்திலும் அவர் முக்கியப் பங்காற்றினார். தேவன் இந்த விசுவாசிகளை வழிநடத்தி, 1863 இல் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையை முறையாக ஒழுங்கமைக்கச் செய்தார். அவரது ஊழியத்தின் மிக முக்கியமான பங்களிப்பு, தோராயமாக 100,000 பக்கங்கள் வருகிற அவரது எழுத்துகளே ஆகும். ஆவியின் ஏவுதலால் எலன் ஜி. ஒய்ட் எழுதினவை உலகம்முழுவதும் தொடர்ந்து பேசிவருகின்றன.

# அட்வெண்டிஸ்ட் தலைவருக்கு...

**மிஷன் பதிப்பாளர்**

போலந்தில் மாபெரும் போராட்டம் புத்தகத்தை வாசித்தபோது மாரேக்கின் வாழ்க்கை மாறத் தொடங்கியது. ஏழாம் நாள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க முடிவு செய்தார். புகைப்பழக் கத்தை நிறுத்த அவரால் முடியவில்லை. ஒரு சனிக்கிழமையன்று, புகைப்பிடிப்பதை நிறுத்துவதற்கான ஐந்து நாள் வகுப்பு நடைபெறுவதாக செவந்த்–டே அட்வெண்டிஸ்ட் சபை யினர் ஒட்டியிருந்த ஒரு சுவரொட்டியைப் பார்த்தார்.

மாரேக் நேரடியாகவே சபைக்குச் சென்றார். அது ஒரு சனிக்கிழமை மதியம் இரண்டு மணி; பொதுவாக அந்நேரத்தில் ஆராதனை முடிந்து அனைவரும் சென்றிருப்பார்கள். ஆனால் அன்றைக்குப் புத்தக ஊழியர்கள் சிலர் அங்கு இருந்ததால், அவர்கள் மாரேக்கை அடுத்த ஓய்வுநாள் நாள் காலையில் மீண்டும் வரும்படி சொன்னார்கள். மாரேக் அடுத்த ஓய்வுநாளில் வந்தார், பிரசங்கம் அவருக்குப் பிடித்திருந்தது. சபை மக்களின் அன்பு அவரை ஆச்சரியப்படுத்தியது. அடுத்த ஓய்வுநாளில் அருகிலுள்ள ஒரு நகரத்தில் இளைஞர்கள் பெரிய அளவில் கூடவிருப்பதாகக் கூறி, அதில் கலந்துகொள்ளுமாறு அழைத்தனர்.

அடுத்த ஓய்வுநாள் காலையில், அட்வெண்டிஸ்ட்டுகள் தன்னை அழைத்துச் செல்வ தற்காக மாரேக் காத்திருந்தபோது, இரண்டு குரல்கள் தன்னிடம் பேசுவதை உணர்ந்தார். ஒரு குரல், 'வெளியே சென்று, இந்த நல்ல வானிலையை அனுபவிக்கலாமே' என்றது. மற் றொரு குரலோ, 'இங்கேயே இரு, ஏனெனில் நீ இந்தக் கூட்டத்திற்குச் செல்வது மிகவும் முக்கியம்' என்று வலியுறுத்தியது. அட்வெண்டிஸ்ட்டுகள் வந்து அவரை அந்தக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆராதனை மாரேக்கிற்குப் பிடித்திருந்தது. லண்டனைச் சேர்ந்த பிரிட்டிஷ் போதகரான அந்தப் பிரசங்கியார், மதியம் வரை பேசினார். பின்னர் அவர், "இப் போது நான் பிரசங்கத்தை முடிக்கவேண்டும், ஆனால் இயேசு தேவைப்படுகிற யாரோ ஒருவர் இங்கே இருப்பதை உணருகிறேன்" என்றார். 'என்னைப்பற்றி இவரிடம் யார் சொன்னது?' என்று மாரேக் நினைத்தார்.

பின்னர் அந்தப் போதகர் தனது சொந்த சாட்சியைப் பகிர்ந்து கொண்டார். அவர் ஒரு பக்திவிருத்தியுள்ள குடும்பத்தில் பிறந்தவர், ஆனால் சபையை விட்டு விலகிச் சென்றிருந் தார். அவரது சபையாரும், ஏன் அவரது தாயாரும்கூட அவருக்காக ஜெபிப்பதை நிறுத்தி விட்டனர். "பின்னர் நான் இயேசுவைச் சந்தித்தேன். நான் இருந்த தாழ்வான நிலையிலிருந்து அவர் என்னை மேலே தூக்கினார், இப்போது அவருடைய வல்லமையைப்பற்றி உங்களிடம் சாட்சியாகச் சொல்கிறேன். அவரால் உங்கள் வாழ்க்கையையும் மாற்றமுடியும். இயேசு உங்கள் வாழ்க்கையை மாற்றவிரும்பினால், முன்னால் வாருங்கள்" என்று கூறினார். மாரேக் கூட்டத்தில் இருந்த 1,000 பேரைப் பார்த்து தயங்கி, நடுங்கினார். ஆனால், போதகர் சொன்ன அடுத்த வார்த்தைகள் மாரேக்கின் சந்தேகங்களைப் போக்கின.

மாரேக் எழுந்து நின்றார். அவரால் அதற்குமேல் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அவர் முன்னால் சென்றார். போதகர் ஜெபித்தபோது, மாரேக் முதல்முறையாக இரட்சிப்பின் திட்டத் தைப் புரிந்துகொண்டார். அவர் அழத் தொடங்கினார். ஆனாலும் மிகுந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைந்தார். இன்று, மாரேக்கிற்கு எந்த வருத்தமும் இல்லை. அவர் போலந்தில் ஒரு சபையின் தலைவராகப் பணியாற்றி வருவதுடன், தனது விசுவாசத்தைத் தொடர்ந்து பகிர்ந்து வருகிறார்.

பாடம் 4 அக்டோபர் 17-23



# புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மத் 16:13–16; எபே 2:20; வெளி 22:6; லூக் 2:36–38; அப் 21:9; எபே 6:10–18.

**மனன வசனம்:** வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. 1கொரி 12:4–6.

அப்பா வண்டி ஓட்டிக்கொண்டிருந்தார், மகன் தன் அப்பாவின் காரைப்போல எத்தனைக் கார்கள் செல்கிறதென எண்ணிக்கொண்டிருந்தான். அப்போது அப்பா ஒரு காரைச் சுட்டிக்காட்டி, ‘‘மகனே, அது என் முதல் காரைப்போல இருக்கிறது!’’ என்று ஆச்சரியத்துடன் கூறினார். வீட்டிற்கு வந்ததும், அப்பா தனது முதல் காரின் உரிமையாளர் கையேட்டையும், தற்போதைய காரின் கையேட்டையும் எடுத்து வந்தார். மகனுக்கு ஒவ்வொரு வாகனத்தின் அம்சங்களையும் கவனமாகக் காண்பித்து, அவற்றில் எவையெல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன, எவையெல்லாம் மாறுபடுகின்றன என்பதை விளக்கிக் கூறினார். ஆனாலும், இரு கார்களின் எஞ்சின்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, ஒரே மாதிரியாக இருந்தன. பல அம்சங்கள் மாறியிருந்தன, ஆனால் எஞ்சின் மாறவில்லை.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசிகள்மூலமாக தேவன் பேசினார்; அவர்களுடைய செய்திகளில் தொடர்ச்சியும் இணக்கமும் காணப்படுகிறது; அது, அவர்களை ஏவிய ஆதாரமாகிய அல்லது ‘எஞ்சினாகிய’ பரிசுத்த ஆவியானவர் அன்றும் இன்றும் மாறாமல் இருப்பதைக் காட்டுகிறது. பரிசுத்த ஆவியானவர் எப்போதும் உண்மையான தீர்க்கதரிசிகளுக்குத் தீர்க்கதரிசன வரத்தைக் கொடுத்து, அவர்களைப் பலப்படுத்துகிறார். எபிரெயர் புத்தகம் தெளிவாக விளக்குவதுபோல, கிறிஸ்துவையே தீர்க்கதரிசிகளின் செய்திகளின் மையமாக வைக்கிறார். எபி. 1:1-3.

இந்த வாரம் புதிய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசன வரத்தைப்பற்றி ஆராய்வோம்; தீர்க்கதரிசிகளாகச் செயல்பட்டவர்களையும், அவர்கள் செய்தவற்றையும், அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் உள்ள ஒற்றுமை- வேற்றுமைகளையும், கள்ளத்தீர்க்கதரிசிகளால் ஏற்படும் ஆபத்துகளையும் பார்ப்போம்.

*2026, அக்டோபர் 24 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தீர்க்கதரிசியாக இயேசு

‘உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக’ என்று மோசே முன்னறிவித்தார். உபா 18:15. அந்தத் தீர்க்கதரிசி யார்? வேதாகமமே அதைத் தெளிவுபடுத்துகிறது: அந்தத் தீர்க்கதரிசி இயேசுவே. ‘மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக என்றான்’. அப் 3:22; யோவான் 6:14.

**தீர்க்கதரிசியாக இயேசு என்ன பங்காற்றினார்? இயேசுவின் காலத்தில் இந்தக் கேள்விக்கான பதிலை எவ்வாறு காணமுடிகிறது? மத் 16:13-16; மாற்கு 8:27-29; லூக்கா 9:18-20.**

கிறிஸ்து எனும் மேசியாவாகிய இயேசுவைத்தாம் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் அனைவரும் சுட்டிக்காட்டினார்கள். மேசியாகுறித்த அந்தத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாக இயேசு இருக்கிறாரென புதிய ஏற்பாடு சொல்கிறது. லூக் 24:13-35 இல், மேசியத் தீர்க்கதரிசனங்கள் சுட்டிக்காட்டிய நபர் தாமே என்று அவர் வெளிப்படுத்துகிறார்.

வார்த்தைபற்றி யோவான் 1:1-5 இல் சொல்லப்படுகிற விளக்கம், எந்தவொரு மனிதனுக்கோ மனித தீர்க்கதரிசிக்கோ பொருந்தாது. சிருஷ்டிகரே அந்த வார்த்தை என்று அடையாளம் காட்டப்படுகிறது; ஏனெனில் ‘சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.’ யோவான் 1:3. அதாவது, சிருஷ்டிக்கப்பட்ட அனைத்தையும் அவரே உண்டாக்கினார்; அது 93 பில்லியன் ஒளியாண்டுகள் அகலம் கொண்டதாக தற்போது மதிப்பிடப்பட்டுள்ள ஒட்டுமொத்தப் பிரபஞ்சத்தையும் உள்ளடக்கியதாகும்.

ஆதி 1 இல் ‘தேவன் என்றார்’ என்று வருகிற இடங்களில் எல்லாம், அதைப் பேசியது இயேசுவே. ‘வெளிச்சம் உண்டாகக்கடவது’ என்று சொன்னவரே ‘மனுஷருக்கு ஒளியாயிருந்தார்’. ஆதி 1:3; யோவான் 1:4. இரட்சிப்பின் திட்டத்தின் மூலமாக, அவர் பூமியின் இருளை அகற்றிக்கொண்டிருந்தார். யோவான் 1:4,5.

தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் நிச்சயமுள்ளவை; உறுதியானவை. அவற்றுக்குச் செவிகொடுத்தால், அவை ‘பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்’ போலிருக்கும். 2பேதுரு 1:19. தீர்க்கதரிசன ஒளியின் ஆதாரம் இயேசுவே; அவர் ‘விடிவெள்ளியானவர்’. தமது நித்திய ராஜ்யத்தை அவர் கொண்டுவரும்வரை, பாவமுள்ள நம்முடைய உலகத்திற்கு தீர்க்கதரிசனம் தொடர்ந்து ஒளியைத் தரும். அதுவரை, கிறிஸ்து தம்முடைய வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதலின்மூலமாக நம் அனைவருக்கும் நித்திய ஜீவனை அளிக்கிறார். அதை நாம் ஏற்றுக்கொள்கிறோமா இல்லையா என்பதுமட்டுமே இப்போதுள்ள ஒரே கேள்வி.

**சிருஷ்டிகராகிய இயேசுவே உங்களுடைய பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்தவர் என்கிற உண்மையை ஆழமாகச் சிந்தியுங்கள். யோவான் 1:1-3. இந்த ஆச்சரியமான உண்மை, நம்மீது தேவன் நிஜமாகவே அன்பு வைத்திருப்பதுபற்றி என்ன சொல்கிறது?**

# அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும்

தீர்க்கதரிசிகள்-அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தைப் புதிய ஏற்பாடு சுட்டிக்காட்டுகிறது. அப்போஸ்தலர்கள் என்பவர்கள் தேவனால் 'அனுப்பப் பட்ட தூதுவர்கள்'; **'அப்போஸ்டலோஸ்'** எனும் கிரேக்க வார்த்தை இதை விளக்கு கிறது. சுவிசேஷப் புத்தகங்கள் முழுவதும், 'அப்போஸ்தலன்' என்கிற வார்த்தை 12 சீடர்களைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகள் இந்தக் கருத்தை ஆதரிக்கின்றன; கிறிஸ்துவின் ஆரம்பகாலச் சீடர்கள்தவிர மற்றவர்களும் அப் போஸ்தலர்களாக இருந்திருக்கிறார்கள்.

தனது நிருபங்களில் தன்னை ஓர் அப்போஸ்தலன் என்று 12 முறை பவுல் குறிப்பிடுகிறார். ரோமர் 1:1,2 இல், தனது அப்போஸ்தல அழைப்பையும், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பிரசங்கித்த செய்திகளையே பிரசங்கிக்க, தான் அழைக்கப்பட்டதையும் குறிப்பிடுகிறார் (சமகால மொழிபெயர்ப்பு). தன்னை புறஜாதிகளுக்கான அப்போஸ்தலன் என்று பவுல் குறிப்பிடுகிறார். ரோமர் 11:13. அவர் 'தேவனுடைய சித்தத்தினாலே' நியமிக்கப்பட்டார். 1கொரி 1:1.

தகப்பனிடமிருந்து மகனுக்கு என்று வம்சாவளிரீதியாக ஆசாரியப்பணி வழங்கப்பட்டது; ஆனால், தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும் தேவன் தமது சித்தத்தின்படியே நியமித்தார். பவுலின் அப்போஸ்தலத்துவம் குறித்துச் சர்ச்சை உண்டானபோது, அவர் தனது அழைப்பை நியாயப்படுத்திப் பேசினார். 1கொரி 9:1,2. சபையின் அஸ்திவாரமாகிய கிறிஸ்துவின் ஊழியத்தின்மேல் தனது அப்போஸ்தலத்துவம் கட்டப்பட்டிருப்பதாகக் கருதினார். எபே 2:20. அப்போஸ் தலர்களும் தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றவர்கள் என்பதால், தீர்க்கதரிசி களைப்போல, தேவ ஏவுதலைப் பெற்றுச் செயல்பட்டார்கள். எபே 3:1-5.

2பேதுரு 3:1,2 இல், தீர்க்கதரிசிகள் முக்கியமான செய்திகளை அறிவித்தார் கள் என்றும், இப்போது அப்போஸ்தலர்களும் அதே அதிகாரத்தைப் பெற்றிருக் கிறார்கள் என்றும் பேதுரு குறிப்பிடுகிறார். பழைய புதிய ஏற்பாட்டுக் காலங் களைச் சுட்டிக்காட்டி இந்த வசனங்கள் பேசுகின்றன. தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய தூதுவர்களாக இருந்தார்கள்; அப்போஸ் தலர்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய தூதுவர்களாக இருந்தார்கள் என்பதுபோலத் தெரிந்தாலும், அப்போஸ்தலர்களாக அல்லாமல் தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருந்த வேறு நபர்களும் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத் தில் தீர்க்கதரிசன வரம் அப்போஸ்தலர்களுக்குமட்டும் வழங்கப்படவில்லை. தீர்க்கதரிசிகள் அனைவரும் அப்போஸ்தலர்களாக இருக்கவில்லை. அப் 15:32.

**கிறிஸ்துசம்பந்தமாகவும், சபைசம்பந்தமாகவும் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசி களும் எவ்வாறு செயல்படுகிறார்கள்? எபே 2:20; 3:5.**

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் இயேசுவே மையமாக வைத்து எழுதி னார்கள். அவரது வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பிரதான ஆசாரிய ஊழி யம் அவரது வருகை ஆகியவற்றை முக்கியப்படுத் தினார்கள்.

**இயேசுவைப்பற்றியும், அவரது வாழ்க்கை-கிரியைகள்பற்றியும் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசி களும் சொன்ன செய்திகள் வேதாகமத்தில்மட்டுமே அதிகாரப்பூர்வமாகப் பதிவுசெய்யப்பட் டுள்ளன. இயேசுவையும் அவரது மரணத்தையும்பற்றி நாம் நம்புகிற அனைத்திற்கும், வேதாகமம் மட்டுமே இறுதி அதிகாரமாக இருக்கவேண்டியதைப்பற்றி இந்த உண்மை என்ன கூறுகிறது?**

# புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் பணிகள்

**புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் பங்குபற்றி 1கொரி 14:3; எபே 4:11-13; வெளி 22:6 என்ன கூறுகின்றன?**

மேலுள்ள வசனங்களில், புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்பற்றிச் சில விபரங்கள் சொல்லப்பட்டாலும், அவர்கள் செய்த அனைத்தும் விவரிக்கப்படவில்லை. ஆனாலும், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் செய்தவற்றையே பெரும்பாலும் இவர்களும் செய்தார்கள், இவ்வாறு தீர்க்கதரிசன வரம் தொடர்ந்து இயங்கி வந்தது தெரிகிறது.

1கொரி 12:10 இல், பிற ஆவிக்குரிய வரங்களில் தீர்க்கதரிசன வரமும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1கொரி 12:27,28 இல், கிறிஸ்துவின் சரீரத்தை உருவகமாக வைத்துப் பேசும்போது, அப்போஸ்தலர்களுக்கு அடுத்ததாகத் தீர்க்கதரிசிகள் குறிப்பிடப்படுகிறார்கள். அப்போஸ்தலர்களும் தேவனிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றார்கள். 1கொரி 14:3.

1கொரி 12 இல் உள்ளதுபோல, எபேசி 4:11-13 வசனங்களும் ஆவிக்குரிய வரங்களைப் பட்டியலிடுகின்றன. அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் மத்தியில் தீர்க்கதரிசிகளும் குறிப்பிடப்படுகிறார்கள். எபே 4:13. 'நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்' இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எபே 4:11,12. ஆனால், இயேசுவே அவர்களுடைய செய்தியின் மையமாக இருந்ததை எல்லா இடங்களிலும் காணமுடிகிறது.

யூதா, சீலா எனும் இரண்டு தீர்க்கதரிசிகளைப்பற்றி அப்போஸ்தலர் புத்தகம் பேசுகிறது இவர்கள் இருவரும் வேதாகமத்தில் எந்தவொரு புத்தகத்தையும் எழுதவில்லை. இவர்கள் 'அநேக வார்த்தைகளினாலே சகோதரருக்குப் புத்தி சொல்லி, அவர்களைத் திடப்படுத்தினார்கள்'. அப் 15:32. ஆம், சில நேரங்களில் தீர்க்கதரிசிகள் கடுமையான எச்சரிப்புகளைத் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள்; இருந்தாலும்கூட, சூழ்நிலையைப் பொறுத்து, குறிப்பாகச் சோதனையான காலங்களில், அவர்கள் ஊக்கமளிக்கும் வார்த்தைகளையும் பேசுகிறார்கள். ஊக்கம் தேவைப்பட்டவர்களுக்கு அவை மிகுந்த பயனுள்ளவையாக இருந்தன; ஏனெனில், நம்பிக்கையும் வாக்குறுதியும் அந்த வார்த்தைகளில் அடங்கியிருந்தன.

தீர்க்கதரிசனப் பணியில் ஆறுதலான வார்த்தைகளைப் பேசுவதும் அடங்கும். 1கொரி 14:31. இக்கட்டும் உபத்திரவமுமான காலக்கட்டங்களில், தீர்க்கதரிசன வரமானது ஊக்கமும் நம்பிக்கையும் கொடுக்கிற ஓர் ஆதாரமாக இருந்துள்ளது. இயேசு 'பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவன்' என்றும், அவருடைய 'வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள்' என்றும் வெளி 22:6 கூறுகிறது. தேவனுடைய ஊழியர்கள் தேவனுக்காகப் பேசும்போது, அவர்கள் பேசுவதெல்லாம் 'உண்மையும் சத்தியமுமாக' இருக்கும். எதையுமே நம்பமுடியாத ஓர் உலகில், கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் கூறுவதை, குறிப்பாக இறுதி அதிகாரமும், உன்னத அதிகாரமும் பெற்ற அவரது வார்த்தை சொல்வதை நம்பலாம்.

# பெண் தீர்க்கதரிசிகளும் வாலிப உதவிப் போதகர்களும்

**பெண் தீர்க்கதரிசிகளைப்பற்றி லூக் 2:36-38; அப் 21:9 ஆகிய வசனங்கள் என்ன கூறுகின்றன?**

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தேவன் ஆண்களையும் பெண்களையும் தமது தூதுவர்களாக அழைத்தார். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும், பெண் தீர்க்கதரிசிகள் தூதுவர்களாக இருந்ததற்கான தெளிவான சான்றுகள் உள்ளன. புதிய ஏற்பாட்டில் முதன்முதலில் அன்னாள் என்பவர் 'தீர்க்கதரிசி' என்று அழைக்கப்படுகிறார். அவர் அதை முழுநேர ஊழியமாகச் செய்து, 'இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து ... கர்த்தரைப் புகழ்ந்து ... அவரைக் குறித்துப் பேசினாள்'. லூக் 2:37,38.

'தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள்' பிலிப்புக்கு இருந்ததாக அப் 21:9 கூறுகிறது. யூசிபியஸ் போன்ற புதிய ஏற்பாட்டு வரலாற்றாசிரியர்கள், அவர்கள் எங்கு வாழ்ந்தார்கள், பின்னர் எங்கு அடக்கம் செய்யப்பட்டார்கள் என்பதைக் குறிப்பிடும் பிற்கால நூல்களைக் கண்டறிந்துள்ளனர். எப்படி இருந்தாலும், தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருந்த பெண்கள் என்ன தீர்க்கதரிசனம் சொன்னார்கள், எவ்வளவு தூரம் ஊழியம் செய்தார்கள் என்பது துல்லியமாகத் தெரியவில்லை. ஆனாலும், தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருந்த இந்தப் பெண்களைப்பற்றி நாம் அறிந்த ஒரு விஷயம் என்னவென்றால், இவர்களுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் எதுவும் வேதாகமத்திற்குள் இடம் பெறவில்லை. அதாவது, பலரைப் போலவே, இவர்களும் ஏதாவது வேதாகமப் பகுதியை எழுதாத தீர்க்கதரிசிகளாக இருந்தனர்; இவர்கள் உண்மையான தீர்க்கதரிசிகளாக இருந்தாலும், இவர்களுடைய வார்த்தைகளோ, எழுத்துகளோ வேதாகமப் புத்தகங்களில் இடம்பெறவில்லை.

பெண் தீர்க்கதரிசிகள் தவிர, இளம் போதகர்களும் அப்போஸ்தலர்களுடன் சேர்ந்து பணியாற்றினர். அப்போஸ்தலர்கள் ஊழியத்திற்காக இளம் தலைவர்களைப் பயிற்றுவித்தனர். உதாரணமாக, தீமோத்தேயுவை, பவுல் 'விசுவாசத்தில் உத்தம குமாரன்' என்று அழைத்தார். 1தீமோ 1:2; 4:12. தீமோத்தேயுவுக்குப் போதக ஊழியத்தின் அடிப்படைகளை, பவுல் கற்றுக்கொடுத்தார். அவரது அழைப்பைக்குறித்து, 'குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம்பண்ணும்படி, இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்' என்று கூறுகிறார். 1தீமோ 1:18.

தீத்துவை 'பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்து' என்று பவுல் அறிமுகப்படுத்துகிறார். தீத்து 1:1. கிரேத்தா தீவிலிருந்த சபை சவால்மிக்கதாக இருந்தது; அந்தச் சபையின் விசுவாசிகளை வழிநடத்த தலைவர்களை நியமிக்கும் பணியை தீத்துவிடம் பவுல் ஒப்படைத்தார். அந்த முக்கியப் பொறுப்பைக் கையாளவேண்டிய விதம் குறித்த ஆவிக்குரிய ஆலோசனைகளை இளம் தீத்துவுக்கு வழங்கினார். தீத்து 2:15.

---

**இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என நாம் அனைவரும் தேவனுடைய பணியில் ஏதாவது பங்காற்றலாம். உங்களது பங்கு என்ன? நீங்கள் இன்னும் அதிகமாக என்ன செய்யலாம்?**

# புதிய ஏற்பாட்டில் கள்ளத்தீர்க்கதரிசிகள்

**மத் 24:23,24 இல், இயேசு என்ன எச்சரிக்கை கொடுக்கிறார்? இந்த எச்சரிக்கையை நாம் ஏன் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும்?**

---

'கள்ளக் கிறிஸ்துகளும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்' என்று இயேசு இதைவிட தெளிவாகக் கூறியிருக்கமுடியாது. மத் 24:24.

அந்த வஞ்சகங்கள் நிச்சயமாக நாம் நம்புகிற அளவுக்கு இருக்கவேண்டும், அதனால்தான் எச்சரிக்கிறார்; 'பெரிய அடையாளங்களும் அற்புதங்களும்'கூட அதில் இடம்பெறலாம். மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் எவ்வளவுதான் நம்பும்படியாகத் தோன்றினாலும், அவை மட்டுமே தேவனுடைய கிரியைகளுக்கு அத்தாட்சி அல்ல. நம்முடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட எதிரிகள் இருக்கிறார்கள். 'மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு' என்று பவுல் எச்சரிக்கிறார். எபே 6:12. இந்த வல்லமைகள் கள்ளத் தீர்க்கதரிசிகள்மூலமாகவே செயல்படுகின்றன.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஒன்றும் புதியவர்கள் அல்லர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றி புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது. லூக் 6:26. கள்ளத் தீர்க்கதரிசிகள் 'ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு' வரும் 'பட்சிக்கிற ஓநாய்கள்' என்று புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது. மத் 7:15. மேலும், 'அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்' என்றும் சொல்லுகிறது. மத் 7:16.

வஞ்சிப்பதே அவர்களுடைய முக்கியமான வேலை. மத் 7:17-20. 'அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்' என்றும், 'கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பார்கள்' என்றும் இயேசு தாமே சொன்னார். மத் 24:11; 24:24; மாற்கு 13:22; 1யோவான் 4:1.

**எந்தவொரு வஞ்சகத்திலிருந்தும் நாம் நம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம்? எபே 6:10-18.**

---

ஆவிக்குரியரீதியாகவும், இறையியல்ரீதியாகவும் நாம் வழிதவறிப் போகாமல், நம்மைப் பாதுகாப்பதற்கு விசுவாசத்தோடு வாழ்வதும், 'நீதியென்னும் மார்க்கவசத்தைத்' தரிப்பதும், 'சத்தியம்' என்னும் கச்சையைக் கட்டிக்கொள்வதும், அத்தோடு ஜெபத்தின்மூலம் பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிவதும், அவருடைய வார்த்தையில் வேரூன்றியிருப்பதுமே வழியாகும்.

---

**உலகம் முழுவதையும் அழித்துக்கொண்டிருக்கும் அனைத்து வஞ்சகங்களுக்கும் எதிராக உங்களைப் பாதுகாத்துக்கொள்ள நீங்கள் என்ன செய்யலாம்?**

# இயேசுவையும் அவருடைய வார்த்தையையும் மையமாக வைத்தல்

தேவன் குறிப்பிட்ட காலங்களில் தீர்க்கதரிசிகளை அழைத்து, அவர்களுக்கு முக்கிய மான பணிகளைக் கொடுத்தார். தேவனைப்பற்றி அறிந்துகொள்ளவும், அவருடன் உண்மை யான உறவுவைக்கவும் மக்களுக்கு உதவுவதே அவர்களின் முதன்மைப் பணியாக இருந்தது. இதுதான் எலன் ஜி. ஒய்ட் அவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்தது. அவரது ஊழியத்தில் இரண்டு முக்கியப் பணிகள் இடம்பெற்றன: மக்களை இயேசுவிடம் வழிநடத்துவது மற்றும் அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்தை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவது.

எலன் ஒய்ட தன் வாழ்நாள் முழுவதும் இயேசுவின்மீது அன்புடன் வாழ்ந்தார், தேவனு டைய அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பினார். 'யுகங்களின் போராட்டம்' என்கிற அவரது புகழ்பெற்ற ஐந்து புத்தகத் தொடரானது 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்கிற வார்த்தைகளுடன் தொடங்குகிறது, முடிகிறது. அவரது மிகவும் பிரபலமான 'கிறிஸ்து விடம் செல்லும் வழி' எனும் புத்தகத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்: 'கிருபையில் நாம் வளரு வதும், நம் மகிழ்ச்சியும், நம்முடைய பயனுள்ள தன்மையும், இவை அனைத்தும் கிறிஸ்துவுடன் நாம் இணைந்திருப்பதைச் சார்ந்துள்ளன. தினமும், ஒவ்வொரு மணிநேரமும் அவருடன் ஐக்கியம் கொள்வதன் மூலமும், அவரில் நிலைத்திருப்பதன் மூலமும் நாம் கிருபையில் வளர வேண்டும். அவர் நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவர் மட்டுமல்லர், அதை முடிக்கிற வருமாய் இருக்கிறார்'. கிறிஸ்துவிடம் செல்லும் வழி, பக்கம் 69.

1890 களில், 'யுகங்களின் வாஞ்சை' என்ற புத்தகத்தை எழுதிக்கொண்டிருந்தபோது, அவர் தனது நாட்குறிப்பில் இவ்வாறு எழுதினார்: 'கிறிஸ்துவின் வாழ்க்கையைப்பற்றி எழுதும் போது நான் ஆழமான உணர்வுகளுக்கு ஆளாகிறேன். நான் எப்படி சுவாசிக்கவேண்டும் என்பதையே மறந்துவிடுகிறேன். கிறிஸ்து நம்முடைய உலகில் அனுபவித்த பாடுகளைப்பற்றி நான் நினைக்கும்போது எனக்குள் ஏற்படும் தீவிரமான உணர்வுகளை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'.

எலன் ஒய்ட் ஊழியத்தின் இரண்டாவது மையப்புள்ளியாக வேதாகமம் இருந்தது. 'பெரிய வெளிச்சமாகிய' வேதாகமத்தைநோக்கி மக்களை வழிநடத்துகிற ஒரு 'சிறிய வெளிச் சமே' தன்னுடைய எழுத்துகளெனக் கருதினார். தேவன் தமது அன்பான குணத்தையும் இரட்சிப்பின் திட்டத்தையும் வெளிப்படுத்தியுள்ள வேதவசனங்களை வாசிக்குமாறு எப் போதும் மக்களை ஊக்குவித்தார். தனது ஊழியத்தின் ஆரம்பத்திலேயே இதைக் குறிப்பிட் டுள்ளார்: 'அன்பான வாசகரே, தேவனுடைய வார்த்தையே உங்கள் விசுவாசத்திற்கும் நடை முறைக்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டுமெனப் பரிந்துரைக்கிறேன்'.

'நீங்கள் உங்கள் வேதாகமங்களை ஆராயவேண்டும் என்றே கர்த்தர் விரும்புகிறார். தமது வார்த்தைக்குப் பதிலாக எந்தவொரு கூடுதல் வெளிச்சத்தையும் அவர் கொடுக்க வில்லை. அவருடைய வார்த்தையை உட்கொண்டு, அது ஜீரணமாகும்போது, அது ஆத்துமா வின் உயிர் இரத்தம்போல மாறுகிறது. அப்போது இருளிலே பிரகாசிக்கிற வெளிச்சத்தைப் போல நற்கிரியைகள் நம்மில் காணப்படும்'.

கிறிஸ்து அருளுகிற தீர்க்கதரிசனப் பொறுப்பைப் பெற்றிருப்பதாக நம்புகிற அனை வரும் 'கிறிஸ்து போதித்தவற்றையே போதிக்கவேண்டும். அவர் நேரடியாகப் பேசியவற்றை மட்டுமல்ல, பழைய ஏற்பாட்டின் சகல தீர்க்கதரிசிகள், போதகர்கள் மூலமாகப் பேசியவற்றை யும் போதிக்கவேண்டும். மனித போதனைகளுக்கு இங்கே இடமில்லை.'

இயேசுவையும் வேதவசனங்களையும் எலன் ஜி. ஒய்ட் தனது கிறிஸ்தவ அனுபவத்தின் மையமாக வைத்திருந்தார். அடுத்த வெள்ளிக்கிழமை, வெளிப்படுத்துதலைப்பற்றியும், தேவ ஏவுதலைப்பற்றியதுமான அவரது கருத்துக்களை நாம் ஆராய்வோம்.

# பெர்டாவுக்கான ஒரு பள்ளி

**மிஷன் பதிப்பாளர்**

போலந்தில் முதல் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபை பள்ளி திறக்கப்பட்டதைக் கேள்விப்பட்டபோது பெர்டா மிகவும் உற்சாகமடைந்தாள். அவர் ஆசிரியையாகப் பணியாற்றத் தகுதியுடையவர், வேலை தேடிக்கொண்டிருந்தார். ஆனால் அந்த அட்வென்டிஸ்ட் பள்ளி போலந்தின் தலைநகரான வார்சாவுக்கு அருகில் அமைந்திருந்தது, அது கிராகோவிலிருந்த அவருடைய வீட்டிற்கு மிகத் தொலைவில் இருந்தது. அந்த வேலையில் சேர வாய்ப்பில்லை என்று நினைத்து வருந்தினார். பிறகு எதிர்பாராதவிதமாக அவரது தோழி ஒருவர், செவந்த் –டே அட்வென்டிஸ்ட் பள்ளியைப்பற்றிப் அவரிடம் பேசத் தொடங்கினார், ஆனால் அந்தப் பள்ளி வெகுதொலைவில் இருக்கக்கூடும் என்று பெர்டா நினைத்தார்.

கிராகோவிலேயே வேலை தேடுவதே நல்லதெனத் தோன்றியது. அதன் பிறகு, மற்றொரு நண்பர் அவரிடம் அந்த அட்வென்டிஸ்ட் பள்ளியைப்பற்றிப் பேசினார். "இந்த அட்வென்டிஸ்ட் பள்ளியைப்பற்றிக் கேள்விப்பட்டேன், ஆசிரியைப் பணிக்கு அங்கு நீ விண்ணப்பிக்கலாமே!" என்று கூறினார். இரண்டாவது நண்பரும் அந்தப் பள்ளியைப்பற்றிப் பேசியதால், அங்கு ஆசிரியைப் பணி செய்ய தேவன் தன்னை உணர்த்துகிறாரோ என்று பெர்டா யோசித்தார். 'தேவனே, நான் என்ன செய்யவேண்டும்?' என்று ஜெபித்தார்.

ஆசிரியைப் பணிக்காக இரண்டு இடங்களில் விண்ணப்பிக்க பெர்டா முடிவு செய்தார்: ஒன்று, கிராகோவில் உள்ள அரசுப் பள்ளியில், மற்றொன்று வார்சாவுக்கு வெளியே உள்ள செவந்த்–டே அட்வென்டிஸ்ட் பள்ளியில். 'எனது விண்ணப்பத்திற்கு முதலில் எங்கிருந்து பதில் வருகிறதோ அந்தப் பள்ளிக்கு நான் செல்வேன்' என்று ஜெபித்தார்.

அட்வென்டிஸ்ட் பள்ளியிலிருந்துதான் பதில் வந்தது, நேர்காணலுக்கு வருமாறு பெர்டாவை அழைத்திருந்தார்கள். அதன்பிறகு பெர்டா கவலைப்பட ஆரம்பித்தார். அவருக்கு ஜேக்கப் என்ற 16 வயது மகன் இருந்தான். கிராகோவிலிருந்த பள்ளியில் அவன் படித்தான், அங்குதான் அவனுக்கு நண்பர்கள் இருந்தார்கள். வேறொரு இடத்திற்கு மாற அவன் சம்மதிப்பானா? பெர்டா மீண்டும் ஜெபித்தார். ஜேக்கப் தன் உறவினர் ஒருவருடைய வீட்டில் தங்கி, கிராகோவிலேயே இருக்கவும் அல்லது தன்னுடன் அந்தப் புதிய பள்ளிக்கு வரவும் அவனே தீர்மானிப்பதற்கு அனுமதித்தார்.

ஜேக்கப் சற்றும் தயங்கவில்லை. "அம்மா, நாம் இருவரும் சேர்ந்தே அந்த இடத்திற்கு மாறிச்செல்வோம், நான் உங்களுடனேயே இருக்க விரும்புகிறேன்" என்று சொன்னான்.

பெர்டாவுக்கு ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தான் செல்லவேண்டிய வழியைத் தன் மகன் மூலம் தேவன் உணர்த்துவதாக உணர்ந்தார்.

அந்த வேலையில் சேர்ந்தார். இன்று, வார்சாவுக்கு வெளியே அமைந்துள்ள அட்வென்டிஸ்ட் சபையின் இறையியல் கல்லூரி வளாகத்தில் இயங்கிவரும் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் தொடக்கப்பள்ளியின் முதல்வராக பெர்டா இருக்கிறார். தேவன்தான் தன்னை இந்தப்பள்ளிக்கு வழிநடத்தினார் என்பதில் அவளுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. அவர் சரியான முடிவை எடுத்ததாக அவருடைய மகனும் உறுதியாக நம்புகிறான். கிராகோவில் தனக்கு அட்வென்டிஸ்ட் நண்பர்கள் யாரும் இல்லை என்றும், அங்கே சபை செயல்பாடுகளில் தனக்கு ஆர்வமில்லாமல் இருந்தது என்றும் கூறினான். ஆனால் இப்போது அவன் சபையில் ஆர்வமாகச் செயல்பட்டு வருகிறான்.



# வெளிப்படுத்தலும் தேவ ஏவுதலும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** எபி 1:1,2; 2தீமோ 3:15–17; 2பேதுரு 1:18–21; வெளி 17:14;1:19; எசேக் 4:1–8.

**மனன வசனம்:** சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். வெளிப்படுத்தல் 1:1,2.

இயேசுவுக்கு மிகநெருக்கமான பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் யோவான் அப்போஸ்தலனும் ஒருவர். லூக் 8:51; மத் 17:1; 26:36,37. கிறிஸ்து பரலோகம் சென்ற பிறகும், அவர் எருசலேமில் தொடர்ந்து ஊழியம்செய்தார். ஆனாலும், கி.பி. 70இல் அந்நகரம் அழிக்கப்படுவதற்கு முன்பு, ஆசியா மைனரில் இருந்த சபைகளைக் கண்காணிப்பதற்காக அவர் எபேசுவுக்குச் சென்றார். ரோமப் பேரரசர் டொமிஷியன் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தின சமயத்தில், ஏஜியன் கடலிலிருந்த பத்மு தீவுக்கு அந்த அப்போஸ்தலன் நாடுகடத்தப்பட்டார்.

பத்மு தீவில், யோவான் விசேஷித்த தீர்க்கதரிசனச் செய்திகளைப் பெற்றார்; அவை ஆசியா மைனரின் ஏழு சபைகளுக்கு மட்டுமல்ல, அனைத்து யுகங்களிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கும் சொல்லப்பட்டன. வெளி 1:1-3, 9-11. அந்தத் தீர்க்கதரிசனச் செய்தி ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அறிவிக்கப்படுகிறது; அது பின்வருமாறு அமைந்திருந்தது: பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவிடம் சொல்கிறார், அவர் தூதனிடம் சொல்கிறார், அந்தத் தூதன் அப்போஸ்தலனாகிய யோவானிடம் சொல்கிறார், யோவான் வாசகர்களுக்கும் கேட்பவர்களுக்கும் சொல்கிறார். இது, தேவ ஏவுதல் - வெளிப்படுத்துதல் செயல்முறையை அற்புதமாக எடுத்துக்காட்டுகிற ஓர் உதாரணமாகும். இவ்வாறுதான் மனிதர்களுக்கு தமது செய்திகளைத் தெரிவிக்க, தீர்க்கதரிசிகளை தேவன் பயன்படுத்துகிறார்.

இந்தவாரப் பாடம் பன்முகத்தன்மை கொண்ட வெளிப்படுத்துதல் - ஏவுதல் செயல்முறையைக் குறிப்பாக ஆராய்கிறது; விசேஷமாக, வாய்மொழியாகவும், எழுத்துப்பூர்வமாகவும், நாடக வடிவிலும் மனிதர்களுக்கு தேவன் தமது செய்தியை தெரிவித்ததுபற்றிப் பார்ப்போம்.

*2026, அக்டோபர் 31 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# பொது வெளிப்பாடும் விசேஷித்த வெளிப்பாடும்

**நம்மோடு பேசுவதற்கு தேவன் ஏன் அதிகம் ஆர்வம் காட்டுகிறார்? இயேசுவின் மூலமாகவும் தீர்க்கதரிசிகள்மூலமாகவும் நமக்கு என்ன சொல்கிறார்? எபி 1:1,2.**

அண்டசராசரங்களைப் படைத்தவர் நம்மிடம் பேசுவதற்கு என்ன இருக்கிறது? ஏன் நம்மோடு தொடர்புகொள்கிறார்? நாம் பாவ உலகத்தில் விழுந்துபோன மனிதர்களாக இருப்பதும், மரணத்திற்கும், வேதனைக்கும், சோதனைகளுக்கும் ஆளாகி இருப்பதும்தான் காரணம். எனவே, நாம் ஏன் இந்த நிலையில் இருக்கிறோம்? சூழ்நிலைகள் ஏன் இவ்வளவு மோசமாக இருக்கின்றன? இதையெல்லாம் தாண்டி, அவர் நம்மீது வைத்துள்ள அன்பில் நமக்குள்ள நம்பிக்கை என்ன? இவற்றை நாம் அறிந்துகொள்ள தேவன் நம்மோடு பேசுகிறார்.

தேவனுடைய பொது வெளிப்பாட்டை இயற்கை உலகில் காணலாம், அது தேவனுடைய எல்லையற்ற வல்லமையையும், அக்கறைமிக்க அன்பையும் மிக அழகாக எடுத்துரைக்கிறது. சங்கீதம் 19:1. ரோமர் 1:20.

நம் அறிவுக்கெட்டாத தேவனுடைய குணமாக்கும் செயல்முறையைச் சிந்தித்தாலும் பிரமிப்பூட்டுகிறது. குணப்படுத்தும் செயல்முறைகளில் வெளிப்படும் தேவனுடைய மறுசீரமைப்பு ஆற்றல் ஆச்சரியத்திற்குரியது! 'தேவனுடைய குணப்படுத்தும் வல்லமை இயற்கை முழுவதும் பரவியிருக்கிறது. ஒரு மரம் வெட்டப்பட்டால், அல்லது ஒரு மனிதன் காயமடைந்தால் அல்லது அவனது எலும்பு முறிந்தால், இயற்கை உடனடியாக அந்தக் காயத்தை சரிசெய்யத் தொடங்குகிறது. அந்தத் தேவை ஏற்படுவதற்கு முன்பே, குணப்படுத்தும் ஆற்றல்கள் தயாராக இருக்கின்றன; ஒரு பகுதி காயமடைந்த உடனே, அதை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரும் பணியில் அனைத்து ஆற்றல்களும் முழுமையாக ஈடுபடுகின்றன' – எலன் ஜி. ஒய்ட், கல்வி. 113.

இயற்கை உலகம் அழகுமிக்கதாக, நமக்கு அறிவூட்டுவதாக இருந்தாலும், அது தேவனுடைய வல்லமையையும் அன்பையும் மட்டுமல்லாமல், தீமை என்று ஒன்று இருப்பதையும் வெளிப்படுத்துகிறது. ஆதி 3:14-19; மத் 13:24-30. இருமுகத்தன்மை கொண்ட இந்தச் செய்தியை, தேவனுடைய விசேஷித்த வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் மட்டுமே சரியாகப் புரிந்துகொள்ள முடியும்; அதாவது, தேவ வார்த்தையாக வந்த இயேசு கிறிஸ்துவிலும், அவரைப்பற்றிச் சாட்சி பகிருகிற தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்திலும்மட்டுமே இதை அறியமுடியும். யோவான் 5:39. எல்லாக் காலங்களிலுமுள்ள எல்லா மனிதர்களும் தேவன் சொல்லியுள்ள செய்திகள், ஆவியின் ஏவுதலால் பதிவுசெய்யப்பட்டுள்ள புத்தகமே வேதாகமம். அச்செய்திகள் உலகத்தின் சிருஷ்டிப்பு, அதன் வேதனையான விழுகை, தேவனுடைய ஆச்சரியமான இரட்சிப்பின் திட்டம், பூமி இறுதியாகப் புதுப்பிக்கப்படுவது ஆகியவைபற்றி கூறுகின்றன. சில வேதாகமச் சம்பவங்கள் சுருக்கமாக ஒரு குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்துவதாக இருந்தாலும், அவை எப்போதும் நம்பகமானவை, ஏனென்றால் அது தேவன் நம்முடன் பேசுகிற செய்தியாகும். 2தீமோ 3:16; 2பேதுரு 1:19-21.

---

**சிருஷ்டிகரின் வல்லமையையும் அன்பையும் இயற்கை சுட்டிக்காட்டினாலும், எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமம் ஏன் நமக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது? இயற்கைமட்டுமே சொல்லமுடியாத எந்தெந்த விஷயங்களை தேவனுடைய வார்த்தை நமக்குக் கூறுகிறது?**

# தேவ ஏவுதலின் செயல்முறை

வேதாகமம் மட்டுமல்ல, பல புத்தகங்களும் எழுத்துகளும் பல யுகங்களைக் கடந்து நம்மிடம் வந்து சேர்ந்துள்ளன. ஆனாலும், நாம் வேதாகமத்தை மட்டுமே தேவனுடைய வார்த்தையாகக் கருதுகிறோம். மற்ற எழுத்துகளிலிருந்து இதை வேறுபடுத்துவது என்ன?

**2தீமோ 3:15-17; யாக் 1:17 ஆகிய வசனங்களில் உள்ள முக்கியச் செய்தி என்ன?**

---

வேதாகமம் முழுவதும் தேவனால் உண்டானவை. 2தீமோ 3:16; 2பேதுரு 1:20,21. வேதாகம விரிவுரையாளர் ஒருவர் பின்வருமாறு விளக்குகிறார்: ''ஒவ்வொரு தனிப்பட்ட வேதப்பகுதியும் 'உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது' என்று கூறுவதைக் காட்டிலும், வேதவாக்கியங்கள் முழுவதையும் மனதில் வைத்து, வேதாகமம் முழுவதும் இந்த வழிகளில் பயனுள்ளதாக இருக்கிறது என்றே பவுல் சொல்வதாகத் தெரிகிறது''.

ஆனால், வேதாகமம் உருவாவதற்குக் காரணமாயிருந்த தேவ ஏவுதலின் செயல்முறையை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்? தீர்க்கதரிசன ஏவுதல் என்பது, தேவனுடைய செய்திகளை நம்பகமான முறையில் தெரிவிப்பதற்காக, உண்மையான தீர்க்கதரிசிகளுக்குப் பரிசுத்த ஆவியானவர் வழங்கும் வழிநடத்துதல். செய்திகளைப் பெறுகிற செயல்முறையில் மட்டுமல்லாமல், அதைக் கேட்கிறவர்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கிற செயல்முறையிலும் அந்த வழிநடத்துதல் வழங்கப்படுகிறது.

தரிசனங்கள்-சொப்பனங்கள்மூலமாக தேவன் செய்திகளைத் தெரிவித்தார். எண் 12:6; ஏசா 6:1,8. நேரில் கண்ட சாட்சிகளையும், ஆவியானவரால் ஏவப்பட்ட வரலாற்று ஆராய்ச்சிகளையும், மனதில் உணர்த்தப்பட்ட தெய்வீக வெளிப்பாடுகளையும் தேவன் பயன்படுத்தினார். 1யோவான் 1:1-3; லூக் 1:1-3; 2பேதுரு 1:21. பரிசுத்த ஆவியானவர் எந்த வழியில் வெளிப்படுத்தியிருந்தாலும், தீர்க்கதரிசிகளுக்கும் வேதாகம எழுத்தாளர்களுக்கும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளும்படி அகநிலை சார்ந்த செய்திகள் அல்ல, புறநிலை சார்ந்த உண்மைச் செய்திகளே வழங்கப்பட்டன. அதாவது, அந்தச் செய்திகளை தேவனுடைய தூதுவர்கள் தங்களுடைய சொந்த வார்த்தைகளில் விவரித்தபோதிலும், அவற்றை அவர்கள் மாற்றவோ எந்த வகையிலும் திரிக்கவோ கூடாது என்பதில் தேவன் உறுதியாக இருந்தார்.

தீர்க்கதரிசனச் செய்திகளை வாசகர்கள் அல்லது கேட்பவர்களுக்கு வாய்மொழியாகவோ, எழுத்து வடிவத்திலோ, நாடக வடிவிலோகூடத் தெரிவிக்கலாம். 2பேதுரு 1:19-21; யோவான் 20:30,31; எசேக் 4:1-8

---

**வேதாகமம் எவ்வாறு ஏவுதலால் எழுதப்பட்டது? இந்த ஏவுதல் செயல் முறை எவ்வாறு செயல்படுகிறது? இதுபற்றி பல கேள்விகள் இன்னும் நீடித்தாலும், அது எழுதப்பட்ட விதம்குறித்து நம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தாலும், தேவனுடைய ஏவுதலால் எழுதப்பட்ட வார்த்தையாக வேதாகமத்தை நம்புவது ஏன் முக்கியமானது?**

# வாய்மொழிச் செய்திகள்

**தேவனுடைய தீர்க்கதரிசிகள் வாய்மொழியாகச் சொன்ன செய்திகளும்கூட, எழுதப்பட்ட செய்திகளைப்போல தேவஆவியால் ஏவப்பட்டவையாக, நம்பகமானவையாக இருந்ததற்கு என்ன நிச்சயம் இருக்கிறது? 2பேதுரு 1:18–21.**

விழுகைக்கு முன்னரும் பின்னரும் ஆதாம்-ஏவாளுடன் தேவன் பேசினார். ஆதி 2:16,17; ஆதி 3:9-19 இரண்டு சந்தர்ப்பங்களிலும், அவர் பேசினவைகளை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டனர். சீனாய் மலையிலும், இயேசுவின் ஞானஸ்நானத்தின் போதும், அவர் மறுரூபமடைந்த சமயத்திலும் அவர் தெள்ளத்தெளிவாகப் பேசினார். யாத் 20:1-20; மத் 3:17; 17:5. மற்றவர்கள் நம்மிடம் பேசும்போது அர்த்தம் புரியாமல் இருக்க வாய்ப்புள்ளது. ஆனால், தேவன் ஒருவரிடம் பேசும்போது, அங்கே தவறான தகவல்தொடர்போ ஏமாற்று வேலையோ இருக்காது.

'தேவன் மோசேயை நோக்கி: நான் யேகோவா' என்று சொன்னார். யாத் 6:2. தேவன் தங்களிடம் பேசின சத்தத்தை தாங்கள் கேட்டதாக வேதாகம எழுத்தாளர்கள் பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஏசாயா, எரேமியா, மற்றும் எசேக்கியேல் போன்றோர் அதற்கு உதாரணம். ஏசா 8:1,11; எரே 1:4,9,11; எசே 3:16; 6:1. இதையும், இதுபோன்ற பிற கூற்றுகளையும் நம்ப மறுத்தால், அது தீர்க்கதரிசிகளின் நேர்மையையும் வேதாகம நம்பகத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்குவதில்தான் முடியும்.

தேவன் தம் தீர்க்கதரிசிகளிடம் அவர்கள் தெளிவாகப் புரியக்கூடிய வார்த்தைகளில் பேசியதுபோல, தீர்க்கதரிசிகளும் தாங்கள் செய்தி சொன்ன மக்களிடம் பேசினார்கள். உதாரணமாக, நோவா தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசி, உண்மையோடு 'நீதியைப் பிரசங்கித்தவர்'. 2பேதுரு 2:5. அவர் வேதாகமத்தின் எந்தப் பகுதியையும் எழுதவில்லை, ஆனால் தன் காலத்து மக்களுக்கு, தேவ செய்தியை வாய்மொழியாகச் சொன்னார்; வேதாகமத்தில் எழுதியுள்ள தீர்க்கதரிசிகளின் செய்திகளைப்போல அவரது செய்தியும் ஆவியினால் ஏவப்பட்டவையே.

நாத்தான், எலியா, எலிசா யோவான் ஸ்நானன் உட்பட பல தீர்க்கதரிசிகள் வேதாகமத்தின் எந்தவொரு பகுதியையும் எழுதவில்லை; மாறாக, வாய்மொழியாகப் பேசியவாறு செய்தியைச் சொன்னார்கள்.

இயேசுகிறிஸ்து தமது பூலோக ஊழியத்தின்போது 'விரலினால் தரையிலே எழுதினார்' என்று சுவிசேஷப் புத்தகங்கள் குறிப்பிடுகின்றன. யோவான் 8:6. அவ்வளவுதான். இயேசு வேறு எதையும் எழுதியதாக நமக்கு எந்தப் பதிவும் இல்லை. ஆனால் அவர் 'அதிகாரமுடையவராய்' வாய்மொழியாகப் போதித்துப் பிரசங்கித்தார் மத் 7:29. அவரது போதனையைக் கேட்ட சிலர், 'அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை' என்றும் ஒப்புக்கொண்டனர். யோவான் 7:40,46. இயேசு முக்கியமாக தேவனுடைய செய்திகளை வாய்மொழியாகவே தெரிவித்தார். அவர் வேதாகமத்தில் எந்தப் புத்தகத்தையும் எழுதவில்லை என்பதற்காக, அவரது செய்திகள் எவ்வகையிலும் அதிகாரம் குறைந்ததாக, கீழ்ப்படியத்தேவையற்றதாக மாறிவிடவில்லை.

---

**வேதாகமத்தில் தங்கள் எழுத்துகள் இடம்பெறாத தீர்க்கதரிசிகளும் தேவனுக்கு இருந்தனர் என்பது எவ்வளவு ஆச்சரியமானது! இவ்வாறு வேதாகமத்தில் இடம்பெறாத தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளும் ஏன் அதிகாரம் உடையவை?**

# எழுதப்பட்ட செய்திகள்

புகழ்பெற்ற சில பேச்சுகள் மக்களுடைய வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, வரலாற்றின் போக்கையே மாற்றியுள்ளன. அந்தப் பேச்சுகள் பதிவு செய்யப்படாமல் இருந்திருந்தால், காலப்போக்கில் மறைந்திருக்கும்; அல்லது திரிக்கப்பட்டிருக்கும். எனவே, வாய்மொழியாகப் பேசப்பட்ட வார்த்தகளை நிரந்தரமாக நிலைக்கச் செய்ய அதை எழுதிவைப்பது உதவுகிறது; மேலும், காலம் காலமாக அந்தச் செய்தி கடந்துசெல்லவும் உதவுகிறது.

இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறி, அமலேக்கியர்களைத் தோற்கடித்த சில காலத்திலேயே, ‘இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுது’ என்று மோசேயிடம் தேவன் கட்டளையிட்டார். யாத் 17:14. வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள், சங்கீதம் 90 மற்றும் யோபு ஆகியவற்றை எழுதிய மோசே உள்ளிட்ட தீர்க்கதரிசிகளை பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தி, வேதாகமத்தின் புத்தகங்களை எழுதவைத்தார், அவைதாம் தற்போது வேதாகமத்தின் 66 புத்தகங்களாக உள்ளன.

**தாம் சொன்ன செய்திகளை எழுதி வைக்கும்படி தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளிடம் கேட்டதற்கான சில காரணங்கள் யாவை? யாத் 17:14; யோவான் 20:30, 31; 1கொரி 10:11; வெளி 1:19.**

வேதாகமப் புத்தகங்களில் அந்தந்த எழுத்தாளர்களின் இலக்கிய நடையும் மொழித்திறனும் வெளிப்படும். அடுத்த வாரப் பாடத்தில் நாம் படிக்கவிருப்பது போல, ஒவ்வொரு ஆசிரியரின் தனித்துவ நுணுக்கங்களும் மாறுபட்ட நடைகளும் அவர்களின் செய்திகளின் மதிப்பைக் குறைப்பதில்லை; ஏனெனில் தேவ ஏவுதலில் எந்தப் ‘பாகுபாடும்’ இல்லை. வேதாகமத்தின் சில பகுதிகள் மற்றப் பகுதிகளைவிட இன்று நம் வாழ்க்கைக்கும் விசுவாசத்திற்கும் மிகவும் பொருத்தமானதாக, பொருந்தக்கூடியதாக உள்ளன. அதற்காக, வேதாகமத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியைவிட அதிக ஏவுதலால் எழுதப்பட்டது என்பது உண்மையல்ல.

சில நேரங்களில் வேதாகம எழுத்தாளர்கள், தேவ ஏவுதலால் வாய்மொழியாகச் சொன்ன செய்திகளை, பின்னர் தாங்களாகவோ தங்களுக்கு நம்பிக்கையான ஒருவர்மூலமாகவோ பதிவுசெய்தனர். உபாகமம் புத்தகத்தில், மோசே தான் மரிப்பதற்கு முன்பு இஸ்ரவேலர்களிடம் பேசின கடைசி வார்த்தைகளைப் பதிவு செய்துள்ளார். இயேசு தமது பூலோக ஊழியத்தின்போது போதித்த, பிரசங்கித்த பல செய்திகளை நான்கு நற்செய்தி நூல்களும் பதிவுசெய்துள்ளன.

ஆனால், தேவ ஏவுதலால் எழுதப்படாத சில ஆதாரங்களிலிருந்தும், ஏன் சாத்தானின் வார்த்தைகளைக்கூட சில இடங்களில் தீர்க்கதரிசிகள் பதிவுசெய்திருக்கிறார்கள். அப் 17:28; 1கொரி 15:33; தீத்து 1:12. ஆதி 3:1-5; மத் 4:1-11.

பிற மனிதர்களின் உணர்வுகளையும் ஆசைகளையும் தீர்க்கதரிசிகள் பதிவு செய்துள்ள அதே வேளையில், தங்களுடைய சொந்த மனுஷீகரீதியிலான எதிர்வினைகளையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தானி 8:27; வெளி 22:8,9. மேலும், நாம் பின்பற்றவேண்டிய பல நல்ல உதாரணங்களையும், அதே சமயம் நாம் தவிர்க்கவேண்டிய பல கெட்ட உதாரணங்களையும் வேதாகமம் விவரிக்கிறது. 1கொரி 10:1-11. மொழிப்பிழையே இல்லாமல் வேதாகமம் எழுதப்படவில்லை என்றாலும், காலத்தால் அழியாத பிழையற்ற செய்தி அதில் உள்ளது.

# நாடகம், அடையாளங்கள், உவமைகள்

வேதாகமத்தில் வெவ்வேறு வகையான சொல் ஓவியங்களும் உருவகங்களும் உள்ளன. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் முற்பிதாக்கள் கட்டின பலிபீடங்கள், மோசேயின் ஆசரிப்புக்கூடாரம், எருசலேம் தேவாலயம் ஆகியவற்றில் நடைபெற்ற பலிமுறைகள் சிலுவையில் கிறிஸ்து பாவநிவாரணமாகப் பலியாக இருந்ததையும் அவரது பரலோக ஆசாரியத்துவ ஊழியத்தையும் விளக்கிய ஒரு சித்திர விளக்கம். எபி 8:1-6.

தானியேலின் தீர்க்கதரிசனங்களில், ஒரு பெரிய சிலையின் வெவ்வேறு பாகங்களும், பல்வேறு மிருகங்களும் கொம்புகளும், இரண்டு ராஜாக்களும் உலகின் ராஜ்யங்களையும் வல்லமைகளையும் சுட்டிக்காட்டுகிற அடையாளங்கள். தானி 2:31-45; தானி 7 மற்றும் 8; தானி 11. இதுபோன்ற சித்திரிப்புகள் வெளிப்படுத்தல் புத்தகத்திலும் உள்ளன; 13 ஆம் அதிகாரத்தில் வரும் இரண்டு மிருகங்கள் இதற்கு உதாரணம்.

இயேசுவும் தமது போதனைகளில் தம்மை ஜீவ அப்பம், உலகத்தின் ஒளி, மெய்யான திராட்சச்செடி என்று குறிப்பிட்டார். யோவான் 6:35,41-58; 8:12; 9:5; 15:1-8. மேலும் விதைப்பவனின் உவமை உள்ளிட்ட பல உவமைகளின்மூலமாக, இயேசு தமது ராஜ்யத்தின் தன்மையையும் வளர்ச்சியையும் விளக்கினார். மத் 13:1-9, 18-23 மத் 13:24-52 முதலியன.

**தேவன் வாய்மொழியாக மட்டுமல்லாமல், நாடகவடிவிலும் தம் செய்திகள் சிலவற்றைத் தெரிவித்ததற்குக் காரணம் என்ன? எசே 4:1–8.**

எசே 4:1-8 இல் ஒரு தெளிவான நாடகச் சித்திரிப்பு உள்ளது; அங்கே தீர்க்கதரிசியிடம் தேவன் எருசலேமின் ஒரு சிறிய மாதிரியை உருவாக்கச் சொன்னார். மேலும், இஸ்ரவேல் வம்சத்தாரைக் குறிக்கும்படி முதலில் 390 நாட்கள் இடது பக்கமாகவும், பின்னர் யூதா வம்சத்தாரைக் குறிக்கும்படி 40 நாட்கள் வலதுபக்கமாகவும் படுத்துக் கொள்ளும்படி கூறினார். விபசாரப் பெண்ணாகிய கோமேரைத் திருமணம் செய்யும்படி ஓசியாவுக்கு தேவன் கட்டளையிட்ட நிகழ்வானது மற்றுமொரு காட்சிப்படம் ஆகும்; இஸ்ரவேலர்கள் தேவனுக்குச் செய்த ஆவிக்குரிய துரோகத்தைச் சுட்டிக்காட்ட அதைப் பயன்படுத்தினார். ஓசியா 1:2-9.

எசேக்கியேல், ஓசியா தீர்க்கதரிசிகளின் இத்தகைய அனுபவங்கள் இன்று நமக்கு மிகவும் அதிர்ச்சியளிக்கலாம். நமக்கு மட்டுமல்ல, அன்றைய மக்களுக்கும் அது அதிர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கமே. தீர்க்கதரிசிகளின் எச்சரிக்கைகள் பகிரங்கமாக நிராகரிக்கப்பட்ட ஒரு காலத்தில், ஜனங்களை மெய்யான மனந்திரும்புதலுக்கு வழிநடத்தும்படி, அவர்களது உண்மையான நிலையை உணர்த்துவதற்கு, தேவன் தம் இரக்கத்தால் அப்படிச் செய்தார். 2நாளா 36:15-21. தேவனுடைய எச்சரிக்கையைத் தாங்கள் எவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை அந்த நாடகச் சித்திரிப்புகள் அவர்களுக்குக் காட்டியிருக்கவேண்டும்.

---

**உதாரணமாக, நாம் லவோதிக்கேயா சபையின் நிலையில் இருப்பதை நமக்கு எச்சரிப்பதற்கு, இன்று ஒருவர் என்ன மாதிரியான நாடகச் சித்திரிப்பைச் செய்யலாம்? வெளி 3:14–18.**

# வெளிப்படுத்தல் மற்றும் தேவஏவுதல்குறித்து எலன் ஜி. ஒய்ட்

எலன் ஜி. ஒய்ட் தேவனுடைய ஏவுதலைப் பெற்றவரென செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகள் நம்புகிறார்கள். ஒரு மெய்த் தீர்க்கதரிசிக்குத் தேவையான அடிப்படை நியதிகள் அவரது எழுத்துகள், வாழ்க்கை, ஊழியங்களில் காணப்பட்டன. வேதாகமத் தீர்க்கதரிசிகள் பெற்றிருந்த அதே அளவிலான ஏவுதலைப் பெற்றிருந்தார், ஆனாலும் தனது எழுத்துகளை ஒருபோதும் வேதாகமத்திற்கு நிகராகக் கருதவில்லை. மாறாக, எலன் ஜி. ஒய்ட் எப்போதும் வேதாகமத்தையே உயர்த்தினார். ஆனாலும் தேவன் தனக்கு வெளிப்படுத்தின தீர்க்கதரிசன வெளிப்பாடுகளையும், தனக்குள் நிகழ்ந்த ஏவுதலின் செயல்முறையையும் அவர் எவ்வாறு புரிந்துகொண்டார்? முதலாவது, எலன் ஜி. ஒய்ட் எப்போதும் வேதாகமத்தையே தேவனுடைய அதிகாரப்பூர்வமான, பிழையற்ற வெளிப்பாடாகக் கருதினார். விழுந்துபோன மனிதர்களுக்கு தேவனுடைய சத்தியத்தையும், அவரது இரட்சிப்பின் திட்டத்தையும் வேதாகமம் வெளிப்படுத்துகிறது. அந்தச் செயல்முறையில்தான், தமது செய்திகளை மனிதர்களுக்கு அறிவிக்க தீர்க்கதரிசிகளை தேவன் பயன்படுத்துகிறாரெனப் பார்த்தோம்.

இரண்டாவது, தேவஏவுதலின் செயல்முறை, தேவனுடைய செயல்பாடுகளையும், மனிதர்களுடைய செயல்பாடுகளையும் உள்ளடக்கியது என்பதை எலன் ஜி. ஒய்ட் உணர்ந்திருந்தார். தேவன் தமது செய்திகளைத் தெரிவித்தார், பிறகு தேவன் தன்னிடம் சொன்ன செய்திகளை அந்தத் தீர்க்கதரிசி தனது சொந்த வார்த்தைகளால் மக்களுக்குத் தெரிவித்தார். எலன் ஜி. ஒய்ட் இதைப்பற்றி இப்படிக் கூறுகிறார்: 'வேதாகமத்தின் வார்த்தைகள் ஏவுதலால் கொடுக்கப்படவில்லை; அதை எழுதிய மனிதர்களே ஏவப்பட்டார்கள். மனிதனின் வார்த்தைகளிலோ, அவன் அதைத் தெரிவிக்கிற விதங்களிலோ ஏவுதல் செயல்படுவதில்லை; மாறாக, அந்த மனிதன்மீதுதான் செயல்படுகிறது; பிறகு, பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கின்கீழ் அவனுக்குள் எண்ணங்கள் உருவாகிறது. தேவனுடைய சிந்தையும் சித்தமும் மனித சிந்தையோடும் சித்தத்தோடும் இணைகின்றன; இதனால் மனிதனின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தையாக மாறுகின்றன'.

தரிசனங்களை, தீர்க்கதரிசனங்கள் பொறுத்தவரை, தேவ வெளிப்பாடும், மனித அனுபவமும் சேர்ந்து 'ஏவுதலின் சிந்தையாக' வெளிப்பட்டதாக எலன் ஒய்ட் புரிந்துகொண்டார். 'வேதாகமம் மனிதர்களின் வார்த்தைகளில் எழுதப்பட்டது, ஆனால், தேவ சத்தியங்கள் அடங்கியது, எனவே இது, தெய்வீகமும் மனிததன்மையும் இணைந்த ஒன்று.' தமது செய்திகளைத்தமது தூதுவரின் மனதில்புரியவைப்பதற்கு, தேவன் பலவழிகளைப்பயன்படுத்தினார். தீர்க்கதரிசியின் புலன்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத் தும்படி காட்சி விளக்கங்கள், வார்த்தைகள் மற்றும் சிந்தைகள் ஆகியவைமூலம் பேசினார். எலன் ஜி. ஒய்ட் அவர்களின் அனுபவமும் வேதாகம எழுத்தாளர்களின் அனுபவத்தைப் போன்றதாகவே இருந்தது.

மூன்றாவதாக, மனுஷீக ரீதியிலான தன் அனுபவங்கள் மற்றும் தொடர்புகள் அனைத்துமே ஏவுதலால் உண்டானவை அல்ல என்பதைக் குறிப்பிட்டார். 'அனுதின விவகாரங்களைப் பற்றிப் பேசவேண்டிய நேரங்களும் உண்டு. அன்றன்றைக்குச் செய்யவேண்டியவற்றைச் சிந்திக்கவேண்டும், தேவையான கடிதங்களை எழுதவேண்டும், பணியாளர்கள் ஒருவருக்கொருவர் தகவல் பரிமாற்றம் செய்யவேண்டும். அத்தகைய வார்த்தைகளும் தகவல்களும் தேவ ஆவியானவரின் விசேஷித்த ஏவுதலினால் கொடுக்கப்படுபவை அல்ல' என்று குறிப்பிட்டார். அவரது எழுத்துகளையும் அனுபவங்களையும், குறிப்பாக மற்றவர்களுக்கு அவர் எழுதின கடிதங்களையும் நாட்குறிப்புகளையும் வாசிக்கும்போதும் அர்த்தம்காணும்போதும் இந்த வேறுபாட்டைப்புரிந்துகொள்வது முக்கியம். நாம் தீவிரமான நிலைப்பாடுகளை எடுப்பதைத் தவிர்க்கவும், அவரது ஆலோசனைகளைப் புரிதலோடு, விவேகமாக வாசிக்கவும் இது உதவுகிறது.

# விரக்தியான போய், நம்பிக்கையான நிலை

ஜனவரி 1906 இன் கடுமையான குளிர்காலத்தில், ஸ்லோவேனியாக்காவைச் சேர்ந்த அல்பின் மோச்னிக் என்கிற இளைஞர், ஜெர்மனியின் பிரேமர்ஹேவனில் இருந்த ஒரு பாலத்தின் மேல் தற்கொலை செய்வதற்காக நின்றுகொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த ஒருவர், அவரைக் காப்பாற்றி, காலணிசெய்கிற தொழில் செய்த இரண்டு அட்வென்டிஸ்ட் குடும்பத்தினரிடம் வழிநடத்தினார். அக்குடும்பத்தினர் தென்கிழக்கு ஐரோப்பாவின் எதிர்காலத்தையே மாற்றவிருந்தது அப்போது அவர்களுக்குத் தெரியாது.

ஷீஃபர்ஸ், பனாஸ் எனும் அந்த இரு குடும்பங்களுடன் மோச்னிக் குடியேறினார். அவர்களின் அமைதியான சாட்சி அவருடைய இருதயத்தைத் தொட்டது. 1906, மார்ச் மாதம் அவர் ஞானஸ்நானம் பெற்றார். இது முன்னாள் யூகோஸ்லாவியாவின் அட்வென்டிஸ்ட் சபையை வடிவமைக்கவிருந்த ஓர் ஊழியத்தின் தொடக்கமாக அமைந்தது. ஸ்லோவேனியாவின் முதல் அட்வென்டிஸ்ட் தான்தான் என்பதை அறியாத மோச்னிக், ஞானஸ்நானம் பெற்ற சில நாட்களிலேயே, ஃப்ரீடென்சாவில் நடைபெற்ற ஜெர்மன் யூனியன் கான்ஃபரன்ஸில் கலந்துகொண்டார். தன் நாட்டு மக்களுக்கு ஊழியம் செய்யும்படி ஜான் எஃப். ஹியூனர்கார்ட் என்பவரிடம் பெற்ற ஊக்கத்தினால், ஃப்ரீடென்சா பள்ளியில் சேர்ந்தார்; அங்கு ஊழியத்தின் மீதான வாஞ்சை பெருகியது. அவர் செர்போ–குரோஷிய மொழியில் ஓய்வுநாள் பள்ளிப் பாடங்களை மொழிபெயர்க்கவும் விநியோகிக்கவும் தொடங்கினார்.

1908 இல், தனது படிப்பை முடித்த பிறகு, அவர் போதகர் ராபர்ட் ஷிலிங்கருடன் குரோஷியாவுக்குச் சென்றார். மொழித் தடைகள் மற்றும் சட்டரீதியான தடங்கல்கள் இருந்தபோதிலும், சாக்ரெப் மற்றும் ஸ்ப்ளிட் ஆகிய இடங்களில் மோச்னிக் நற்செய்தியைப் பகிர்ந்துகொண்டார். பின்னர், அப்போது குரோஷியாவின் ஒரு பகுதியாக இருந்த ஸ்ரெம் பகுதிக்குக் குடியேறியவர், செர்பியாவிற்குள்ளும் சென்று, பிரசங்கித்து புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்; இதற்காக அவர் பலமுறை சிறைவாசத்தையும் அனுபவிக்க நேர்ந்தது.

முதலாம் உலகப் போரின்போது, இராணுவச் சேவை செய்தார், கடுமையான உடல்நலப் பாதிப்புகளை எதிர்கொண்டார், தனது குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்க வேண்டிய துயரத்திற்கு ஆளானார். நோய்வாய்ப்பட்டுக் குணமடைந்து வந்த காலத்திலும்கூட, செர்போ–குரோஷிய மொழியில் முதல் அட்வென்டிஸ்ட் பாமாலைப் பாடல்களை உருவாக்கினார்; அதில் 120 பாடல்களை அவரே இயற்றினார்.

இறுதியாக, அல்பினுடைய ஊழியம் பலன் தந்தது: அவர் சபைக்குப் புத்துயிர் ஊட்டினார், புதிய தலைவர்களை உருவாக்கினார், மேலும் 1925 ஆம் ஆண்டில் யூகோஸ்லாவிய யூனியன் கான்ஃபரன்ஸின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, அரசியல் சூழ்நிலை தனக்கு எதிராக இருந்தபோதிலும், அட்வென்டிஸ்ட் விசுவாசத்தை பொதுவெளியில் மோச்னிக் சாட்சியிட்டார். 1925 இல் அவர் எழுதிய ‘அட்வென்ட்டிசம்’ என்கிற புத்தகம், சபையின் விசுவாசக் கோட்பாடுகளை அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்தியதுடன், சபைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தைப் பெற்றுத் தரவும் உதவியது. அவர் மொழிபெயர்ப்புப் பணிகளை முன்னின்று வழிநடத்தியதோடு, சபை வெளியிட்ட ‘கிளாஸ்னிக்’ என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். மேலும், 1931 ஆம் ஆண்டில் போதகர்களுக்கான ஒரு பள்ளியையும் அவர் நிறுவினார்.

## பாடம் 6 அக்டோபர் 31 – நவம்பர் 6



# தீர்க்கதரிசன எழுத்துகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** வெளி 17:14; ஏசா 13:1; எரே 36:17,18; ரோமர் 16:22; லூக் 1:1–4; யூதா 14,15; 2கொரி 4:7.

**மனன வசனம்:** தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. ரோமர் 15:4.

தேவன்தாமே இயற்றிய ஒரு பாடலை நீங்கள் கற்றுக்கொள்ள விரும்புவீர்களா? உபாகமம் 32 இல், தேவனுடைய வழிகாட்டலின்படி மோசே அந்தப் பாடல் வரிகளை எழுதினார். உபா 31:19-22. தீர்க்கதரிசன எழுத்துகள் என்றதும், பொதுவாகப் பாடல்கள் நமக்கு நினைவுக்கு வருவதில்லை; ஆனாலும், பல சங்கீதங்கள் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டவை. ஒருவேளை அவற்றின் வரிகளை ஒவ்வொன்றாக தேவன் சொல்லாமல் இருந்திருக்கலாம்.

தேவனுடைய செய்திகளைத் தீர்க்கதரிசிகள் தெரிவித்த மூன்று முக்கிய வழிகளை வேதாகமம் விவரிக்கிறது: (1) வாய்மொழியாக (2) எழுத்துவழியாக (3) அடையாளச் செயல்கள் அல்லது நாடகச் செயல்கள்மூலமாக. தேவன் தம் தூதுவர்களான தீர்க்கதரிசிகளிடம் சொன்ன செய்திகளை அவர்கள் பிரசங்கித்தார்கள், பேசினார்கள். அந்த வார்த்தைகள் தேவ வார்த்தையாக வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தீர்க்கதரிசன எழுத்துகள் பல்வேறு எழுத்து நடைகளிலும், இலக்கிய நடைகளிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன; வருணனைகள், வரலாறு, கவிதை, புலம்பல், கடிதங்கள் ஆகிய நடைகள் ஒரு சில உதாரணங்கள். தேவன் தெரிந்துகொண்ட ஆண்களும் பெண்களும், பரிசுத்த ஆவியானவர் ஏவின செய்திகளை, மனித வார்த்தைகளில் எழுதினார்கள். இந்த வாரம் அவர்களின் எழுத்துகளையும், இலக்கிய உதவியாளர்களை அவர்கள் பயன்படுத்தியதையும், சவாலான வேதப்பகுதிகளை ஆராயும்போது நினைவில் கொள்ளவேண்டிய விஷயங்களையும் பார்ப்போம்.

*2026, நவம்பர் 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# எழுதும்படியான அழைப்பு

ஆரம்பத்தில் தம்முடைய செய்திகளை மனிதர்களுக்கு நேரடியாகவே தேவன் பேசிச் சொன்னார்; அதாவது, காதில் கேட்கும்படி பேசினார்; கனவுகள் மூலமாகப் பேசினார்; தூதர்கள்மூலமாகப் பேசினார். ஆனாலும் தாம் பேசினதை ஒரு 'புத்தகத்தில்' எழுதும்படி அவர் முதன்முதலாகக் கட்டளையிட்டதை மோசேயின் காலத்தில்தான் வேதாகமம் பதிவுசெய்கிறது.

**எழுதும்படியாகக் கொடுக்கப்பட்ட கட்டளை வேதாகமத்தில் முதன்முதலாக எங்கு வருகிறது? யாத் 17:14.**

தமது மக்களுக்கு தாம் சொன்ன செய்திகளைப் பாதுகாத்து வைக்கும்படி, தம்முடைய தூதுவர்களுக்கு தேவன் கட்டளையிட்ட பல உதாரணங்களைப் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம். மோசேயைப்போலவே, எரேமியாவிடமும், 'நீ ஒரு புஸ்தகச்சுருளை எடுத்து, யோசியாவின் நாட்களிலே நான் உன்னுடனே பேசின நாள் முதற்கொண்டு இந்நாள்மட்டும் இஸ்ரவேலைக்குறித்தும், யூதாவைக் குறித்தும், சகல ஜாதிகளைக்குறித்தும் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுது' என்று கூறினார். எரேமியா 36:2.

தீர்க்கதரிசனங்களை எழுதவேண்டியதற்கான காரணமும் அவருக்குக் கூறப்பட்டது. 'யூதாவின் குடும்பத்தார், அவரவர் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பும்படியாகவும், தங்கள் அக்கிரமத்தையும் தங்கள் பாவத்தையும் நான் மன்னிக்கும்படியாகவும், தங்களுக்கு நான் செய்ய நினைத்திருக்கிற தீங்குகளைக்குறித்து ஒருவேளை அவர்கள் கேட்பார்கள் என்றார்'. எரே 36:3. வருங்காலத்தைப்பற்றி அறிகிற ஆர்வத்தைத் தூண்டுவதற்காக அல்ல, மக்களை இரட்சிப்பிற்கு நேராக வழிநடத்தவே தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டன.

தேவனுடைய தூதுவர்கள் பல்வேறு சூழ்நிலைகளின் மத்தியில் எழுதினார்கள். வனாந்தரத்தில் இருந்தபோது, வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களை மோசே எழுதினார். சவுல் தன்னைத் துரத்திக் கொண்டிருந்தபோது சங்கீதங்களில் பலவற்றை தாவீது இயற்றினார். சங் 52; 54; 57; 59. பாபிலோன், மேதிய-பெர்சிய அரண்மனைகளில் பணியாற்றியபோது தனக்கு உண்டான தரிசனங்களை தானியேல் எழுதினார். இதற்கு நேர்மாறாக, தான் சிறைச்சாலையில் இருந்தபோது, எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன் நிருபங்களை பவுல் எழுதினார், மேலும் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்தபோது, வெளிப்படுத்தின விசேஷத்தை யோவான் எழுதினார். தேவனுடைய தூதுவர்கள் எழுதும்படி ஏவப்பட்டபோது, சூழ்நிலைகள் எவ்வாறாக இருந்தாலும் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் பலப்படுத்தப்பட்டார்கள் என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இயேசுவின் போதனைகள் அனைத்தும், பொக்கிஷமான அந்தச் சத்தியங்களை ஒப்படைக்க தேவன் தேர்ந்தெடுத்த நபர்களின்மூலமாக, எழுத்துவடிவில் நமக்குக் கிடைத்துள்ளன. தமது தூதர்கள் தெய்வீகச் செய்திகளை உண்மையோடு பதிவுசெய்து பாதுகாப்பார்கள் என்று தேவன் வைத்திருந்த நம்பிக்கையை இது காட்டுகிறது.

**மூலப்பிரதிகள் இப்போது இல்லாததால், வேதாகமத்தை நாம் நம்பமுடியாது என்று கூறுபவருக்கு நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? அது ஏன் உண்மையில் ஒரு பலவீனமான வாதம்?**

# இலக்கிய வகைகளும் நடைகளும்

தேவனால் ஏவப்பட்ட தூதுவர்கள் பல்வகை எழுத்து நடைகளை வேதாக மத்தில் பயன்படுத்தியுள்ளார்கள். சில பகுதிகள் நாட்குறிப்பைப்போல எழுதப் பட்டுள்ளன. எண் 33:1-49. தானியேல், சகரியா, யோவான் ஆகிய புத்தகங் களில்வெளிப்படுத்தினவிசேஷ எழுத்து நடை காணப்படுகிறது; பிரமாண்டமான அடையாளங்கள், பிரபஞ்ச அளவிலான கருத்துகள், பரலோக ஜீவிகள்குறித்த வருணனைகள் போன்றவை அங்கே இடம்பெற்றுள்ளன.

**ஏசாயா 13:1 இல், ஏசாயா சொல்கிற செய்தியை வேதாகமம் எவ்வாறு குறிப்பிடு கிறது?**

தீர்க்கதரிசிகள் பெற்ற தரிசனங்கள் சில சமயங்களில் 'இறை வாக்குகள்' (ஏசாயா 13:1, சமகால மொழிபெயர்ப்பு) என்று அழைக்கப்படுகின்றன. தேவன் பேசிச் சொல்லியவை அல்லது தேவன் கொடுத்த வெளிப்பாடுகள் என்று அர்த் தம். (பவர் மொழிபெயர்ப்பில் இந்த வார்த்தை 'பாரம்' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது). இவற்றில் பல கவிதை வடிவில், பெரும்பாலும் 'இணைநடை' அமைப்புடன் எழுதப்பட்டுள்ளன. இணைநடை என்பது, தொடர்ந்து வரும் வரி கள் அதற்கு முந்தைய வரிகளை மீண்டும் வலியுறுத்தும்; அல்லது வேறு வார்த் தைகளில் சுட்டிக்காட்டும். உதாரணமாக: 'தன்னை உண்டாக்கினவரையே நோக் குவான், அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரையே நோக்கிக்கொண்டிருக் கும்'. ஏசாயா 17:8. இதில் 'உண்டாக்கினவர்', 'பரிசுத்தர்' ஆகிய வார்த்தைகள் ஒன்றுக்கொன்று இணையாக அமைந்துள்ளன; ஒவ்வொரு வார்த்தையும் மற் றொன்றைப்பற்றிய கூடுதல் தகவல்களைச் சொல்கிறது.

உருவகங்கள், அடையாளங்கள், உயர்வுநவிற்சி அணி (மிகைப்படுத்தல்) போன்ற பொதுவான இலக்கிய உத்திகளையும் தீர்க்கதரிசிகள் பயன்படுத்தி யுள்ளனர். அவர்கள் சொன்ன செய்திகளை நாம் சிறப்பாகப் புரிந்துகொண்டு, நம் வாழ்வில் பயன்படுத்துவதற்கு, அவர்கள் எந்த வகையான எழுத்து நடை யைக் கையாண்டார்கள் என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும்.

வேதவசனங்களில் அடிக்கடி காணப்படும் மற்றொரு இலக்கிய நடை 'உடன்படிக்கை வழக்கு' சம்பந்தப்பட்டதாகும். உதாரணமாக, எரே 2:4-9 இல், தேவ மக்கள் தங்களுடைய உடன்படிக்கைக் கடமைகளை மீறியதற்காக, அவர் கள்மீது தேவனுக்குள்ள சட்டப்பூர்வமான புகாரை எரேமியா முன்வைக்கிறார். நீதிமன்ற காட்சிகளைப் பயன்படுத்தி, தேவனை ஓர் அரசு வழக்கறிஞராகச் சித் திரித்து, தமது தீர்ப்புக்கான காரணங்களை அவர் சொல்வதாகக் காட்டுகிறார்.

தீர்க்கதரிசன எழுத்துகள், வரலாறு, பாடல், உவமைகளும் வேதாகமத்தில் உள்ளன. எரேமியாவிடம் சொன்ன செய்திகளையெல்லாம் ஒரு புத்தகமாக எழு தும்படி கூறப்பட்டது. எரே 36:2; அதே நேரத்தில் புதிய ஏற்பாட்டில், பெரும்பகுதி தனிநபர்களுக்கோ சமுதாயத்திற்கோ எழுதப்பட்ட கடிதங்களாக அமைந்துள் ளன. ஒரு வகையான தகவல்தொடர்பு நடைக்கு மற்றொன்றைவிட அதிக அதி காரம் இருப்பதாக வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. பவுலின் நிருபங்களைப் பண்டைய தீர்க்கதரிசிகளின் எழுத்துகள் அளவிற்கு மதிக்கவேண்டும்; ஏனெ னில் தான் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டதற்கான தெளிவான சான்று களைத் தனது நிருபங்களில் பவுல் விவரிக்கிறார். 1கொரி 7:10, 12, 40.

---

**சில வேத ஆராய்ச்சிகளில், வேதவசனங்களின் தெய்வீகத் தன்மைக்கு மதிப்பளிக்காமல், அங் குள்ள மனித கூறுகளைமட்டுமே அதிகமாய் வலியுறுத்துகின்றனர். இது ஏன் நிச்சயமாக ஆவிக் குரிய அழிவுக்கு வழிநடத்தும்?**

# இலக்கிய உதவியாளர்கள்

**வேதாகம எழுத்தாளர்கள் இலக்கிய உதவியாளர்களைப் பயன்படுத்தியதைப்பற்றி எரே 36:17,18; ரோமர் 16:22 ஆகிய வசனங்கள் என்ன சொல்கின்றன?**

எரேமியாவே தனது செய்திகளை எழுதியிருக்கமுடியும், அதற்குப் பதிலாக, தனது தீர்க்கதரிசனங்களை உண்மையுடன் பதிவுசெய்யவும், அவற்றைத் தேசத்தின் தலைவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் நம்பகமான நகலெழுத்தாளரைப் பயன்படுத்தினார். தேவனுடைய செய்திகளைத் தெரிவிக்க இலக்கிய உதவியாளர்களைத் தீர்க்கதரிசிகள் பயன்படுத்தியதற்கு வேதாகமத்தில் எரேமியாமட்டுமே உதாரணம் அல்லர்.

புதிய ஏற்பாட்டில், 'இந்த நிருபத்தை எழுதின நான்' என்று தெர்தியு கூறினாலும், பவுல் சொல்ல விரும்பியதைமட்டுமே எழுதினார் என்பது ரோமர் புத்தகத்தின் தொடக்கத்திலிருந்தே தெளிவாகிறது. ரோமர் 16:22. பவுலின் எழுத்தராக அல்லது செயலாளராக தெர்தியு செயல்பட்டார்; அதாவது பவுலின் வார்த்தைகளை எழுத்து வடிவில் கொண்டு வந்த இலக்கிய உதவியாளராக இருந்தார்.

இவ்வாறு செய்வதை பவுல் வழக்கமாக வைத்திருந்தார். கொலோசெயர், தெசலோனிக்கேயருக்கு தான் எழுதிய நிருபங்களின் முடிவில், தன் 'கையினால் எழுதி' வாழ்த்துவதாக ஒரு கருத்தைக் குறிப்பிடுகிறார். கொலோ 4:18; 2தெச 3:17. இது அந்த முழு நிருபத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது. உதவியாளரை வைத்து அவர் நிருபங்களை எழுதியிருக்கிறார். எனவே, அந்தநிருபத்தில்உள்ளவை அவரது எழுத்துகள்தானா, அவரே எழுதவில்லையா போன்ற சந்தேகத்தை எழுப்பக்கூடும் என்பதால், தனது நிருபத்தின் உண்மைத் தன்மையில் எந்தச் சந்தேகமும் எழக்கூடாது என்பதற்காக அதன் இறுதியில் தனது சொந்தக் கையெழுத்தில் ஒரு குறிப்பைக் கொடுத்தார்.

பவுலின்நிருபங்களில்வெவ்வேறுஇலக்கியநடைகள்காணப்படுவதற்கு, அவர் இலக்கிய உதவியாளர்களைப் பயன்படுத்தியதே காரணம் என்று பல விளக்கவுரையாளர்கள் கூறுகின்றனர். பேதுருவும்கூட தன் இரண்டு நிருபங்களையும் இதேபோல எழுதியிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது: '2பேதுருவின் மொழி நடையானது முதலாவது நிருபத்திலிருந்து வேறுபடுகிறது; எனவே, ஒரு நிருபத்தை கிரேக்க மொழியில் எழுதுவதற்கு எழுத்தரின் உதவியை பேதுரு பயன்படுத்தி இருக்க சாத்தியம் உள்ளது. கிரேக்க மொழியை நன்கு அறிந்த பவுலே செயலாளர்களைப் பயன்படுத்தியிருந்தால், அரமேய்க் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட பேதுரு அவ்வாறு பயன்படுத்தியிருப்பார் என்பதும், அவர்களது வார்த்தைகளே அவரது கிரேக்க நிருபங்களின் வார்த்தை அமைப்பில் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதும் தர்க்கரீதியில் சரியானதே.'

தேவ தூதுவர்கள் தெரிவிக்க விரும்பிய கருத்துகளும், அவற்றின் பொருளும் மாறவில்லை, ஆனால் அவர்கள் பயன்படுத்திய உதவியாளர்களின் இலக்கியத் திறன்களைப் பொறுத்து நிருபங்களின் வார்த்தை நடைகளும் வாக்கிய அமைப்பும் அமைந்திருக்கலாம். அவர்களது சிந்தைகளை ஆவியானவர் ஏவினார்; ஆனால் அந்தச் சிந்தைகளை வெளிப்படுத்தப் பயன்பட்ட வார்த்தைகளை ஏவியிருக்க அவசியமில்லை.

# இலக்கிய ஆதாரங்கள்

சாலொமோன் பதிவு செய்துள்ள நீதிமொழிகள் அனைத்தும் அவரே உருவாக்கியவை அல்ல என்பதை பிரசங்கி 12:9,10 காட்டுகிறது: 'மேலும், பிரசங்கி ஞானவானாயிருந்தபடியால், அவன் ஜனத்துக்கு அறிவைப் போதித்து, கவனமாய்க் கேட்டாராய்ந்து, அநேகம் நீதிமொழிகளைச் சேர்த்து எழுதினான். இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க பிரசங்கி வகை தேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள்'. தேவனுடைய தூண்டுதலால், பல பழமொழிகளைத் 'தேடிக் கண்டுபிடித்தார்'; 'ஏற்கத்தக்க வார்த்தைகளைக்' கண்டறிய முயன்றார். மேலும், நீதிமொழிகள் 31 இல் வரும் குணவதியான பெண்ணைப்பற்றிய விளக்கமும், சாலொமோனால் அல்ல, முன்பின் சொல்லப்படாத லேமுவேல் ராஜா என்பவரின் தாயாரால் கூறப்பட்டதாகும். நீதி 31:1. எகிப்திய இலக்கியங்களின் தாக்கமும் நீதிமொழிகள் புத்தகத்தில் உள்ளன.

அதேபோல், தேவ ஏவுதலைப் பெற்ற பழைய ஏற்பாட்டின் வரலாற்று ஆசிரியர்கள், தேவ மக்களின் வரலாற்றை உண்மையுடன் விவரிக்க, ஆவணக் காப்பகங்கள், பிற வரலாற்றுப் பதிவுகளிலிருந்து விபரம் சேகரித்துள்ளார்கள்.

**தேவ ஏவுதலைப் பெற்ற எழுத்தாளர்கள் சில சமயங்களில் வேதாகமம் அல்லாத பிற ஆதாரங்களைப் பயன்படுத்தினதுபற்றி 1இராஜா 11:41; லூக் 1:1-4; யூதா 14,15 ஆகிய வசனங்கள் என்ன சொல்கின்றன?**

தங்களது பதிவுகளை ஆவணப்படுத்த வரலாற்றுப் பதிவுகளைச் சார்ந்திருந்த வேதாகம எழுத்தாளர்களில் எஸ்றாவும் நெகேமியாவும் அடங்குவர். எருசலேம், பெர்சியா தொடர்பான நிருபங்களையும் அரசக்கட்டளைகளின் பிரதிகளையும் எஸ்றா சேகரித்துள்ளார். எஸ்றா 4-7. நெகேமியா தான் கண்டு பிடித்த வம்சவரலாற்றுப் பதிவுகளை தன் எழுத்துகளில் சேர்த்திருப்பதைக் கூறுகிறார். நெகே 7:5-72. இதே நியதி புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது: 'மனிதர்களின் மனத்திறன்களின் செயல்பாட்டிற்கு ஏற்றபடி தேவ ஏவுதல் செயல்படுகிறது என்பதும், மனிதமனத்தின் செயல்பாட்டை அது புறக்கணிப்பதில்லை என்பதும் லூக்காவின் அனுபவத்திலிருந்து தெளிவாகிறது. இங்கே, தேவ ஏவுதலைப் பெற்ற அந்த எழுத்தாளர், கிறிஸ்துவின் வாழ்க்கையைப்பற்றிக் கிடைத்த வாய்மொழிகளையும், எழுத்துப்பூர்வமான ஆதாரங்களையும் கவனமாகப் படிப்பதற்கும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களைத் தொடர்ச்சியான ஒரு விவரமாக இணைப்பதற்கும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார்'.

வேதாகமத்தில் இடம்பெறாத, பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையே எழுதப்பட்ட யூதப் படைப்பான 1ஏனோக் 1:9 இலிருந்து யூதா மேற்கோள் காட்டுவதுபோல் தோன்றுகிறது. பவுலும் கிரேக்கத் தத்துவஞானிகளின் பெயர்களைக் குறிப்பிடாமல் அவர்கள் சொன்னவற்றை மேற்கோள் காட்டியுள்ளார். அப் 17:28; தீத்து 1:12.

---

**தரிசனங்கள், சொப்பனங்கள் போன்ற நேரடியான வெளிப்பாடுகள்மூலம் வேதாகம எழுத்தாளர்கள் பெரும்பாலும் வழிநடத்தப்பட்ட போதிலும், பிற ஆதாரங்களிலிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்கும் பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஏவியிருக்கிறார். இது ஏன் நாம் நினைவில் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான நியதி?**

# தெய்வீகச் செய்தியும் மனித குறைபாடுகளும்

**2கொரி 4:7 இல் தேவனுடைய பொக்கிஷம்பற்றி பவுல் என்ன கூறுகிறார்?**

---

பெலவீனர்களாகிய மனிதர்களில் தேவனுடைய வல்லமை விளங்கும்படிக்கு தேவனுடைய பொக்கிஷம் 'மண்பாண்டங்களில்' (மனிதர்களில்) ஒப்படைக்கப்பட்டிருப்பதாக எழுதுகிறார். மோசே, எலியா, தாவீது, யோனா, பேதுரு போன்ற தேவனுடைய மனிதர்கள் தனிப்பட்ட வாழ்வில் தோல்விகளைச் சந்திக்காதபடிக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் பாதுகாக்கப்படவில்லை என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது; எனவே, அவர்களுடைய எழுத்துகளிலும் தவறான புரிதல்களும் தகவல்தொடர்பு குறைபாடுகளும் உள்ளன.

'கிறிஸ்துவில் தெய்வீகதன்மையும் மனிததன்மையும் சேர்ந்து வெளிப்பட்டதுபோல, வேதாகமத்திலும் காணப்படுகிறது. வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள் யாவும் ''தேவ ஆவியின் ஏவுதலால் அருளப்பட்டுள்ளன''; ஆனாலும், அவை மனிதர்களின் வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டு, மனித தேவைகளுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன'. - எலன் ஜி. ஒய்ட், *Testimonies for the Church, vol. 5, p. 747.*

2கொரிந்தியர் 4:7 இல் பவுல் எழுதியதுபோல, சத்தியமாகிய பொக்கிஷங்களைத் தெரிவிப்பதற்கு தேவன் தம் தூதுவர்களை அழைப்பதால், அவர்களுடைய மனிததன்மை மறைந்து போய்விடுவதில்லை. மேலும், இன்று நாம் புரிந்துகொள்ளவும் விளக்கவும் சிரமப்படுகிற அறிக்கைகளை தம் தூதுவர்கள் எழுதியபோது அல்லது கூறியபோது பரிசுத்த ஆவியானவர் தடுக்கவில்லை. அத்தகைய வசனங்கள் ஒரு சிலவாகவே இருந்தாலும், நம்முடைய மிகவும் குறுகிய மனப்பான்மையால்தான் புரியமுடியாமல் தடுமாறுகிறோம். வேதாகமத்தை நம்புகிற கிறிஸ்தவர்களாகிய நாம், தேவ வார்த்தை நமக்குப் புரிகிற அளவுக்கு அதை நம்ப நம்மை முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும்; மேலும், நமக்குப் புரியாத விஷயங்கள் இருந்தாலும், கர்த்தரை முழுமையாக நம்பவேண்டும்.

பிற்காலத்தில் நகலெடுத்தவர்களின் கவனக்குறைபாடுகளாலோ, ஏவுதலைப்பெற்ற ஆசிரியர்கள் பயன்படுத்திய முரண்பட்ட மூலஆவணங்களாலோ சில முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கலாம். சிக்கலான வசனங்களை ஆராயும்போது, எழுத்தாளரின் வார்த்தைகளின் அர்த்தம் முழுவதுமாகப் புரிகிறதா, இன்னும் ஆழமாக ஆராய்ந்தால் பதில் கிடைக்குமா என்று சிந்திக்கவேண்டும்.

தவறாகவும் முரண்பாடாகவும் தெரிகிற ஒவ்வொன்றுக்கும் நம்மால் பதில் காணமுடியாவிட்டாலும், சொல்லப்படுகிற செய்தியின் சாராம்சத்தை எந்த வகையிலும் அது பாதிப்பதில்லை. தேவ தூதுவர்களிடம் குறைபாடுகள் இருந்தபோதிலும், வேதாகமத்தின் தெய்வீகச்சத்தியங்கள் உண்மையுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளன; அதை நாம் முழுமையாக நம்பலாம்.

---

**தேவன் தம்முடைய தூதுவர்களாக பாவமற்ற தூதர்களைத் தெரிந்துகொள்ளாமல், பிழைகளுள்ள மனிதர்களைப் பயன்படுத்தத் தெரிந்துகொண்டது ஏன்?**

# எலன் ஜி. ஒய்ட் அவர்களின் எழுத்துகள்

வேதாகமத்தின் தேவ தூதுவர்களைப்பற்றி இந்த வாரம் நாம் படித்த பல விஷயங்கள் எலன் ஜி ஒய்ட்டின் அனுபவத்திற்கும் எழுத்துகளுக்கும் பொருந்தும். வெளிப்படுத்தப்பட்ட விஷயங்களை எழுதும்படி அவரும்கூட தெய்வீக கட்டளையைப் பெற்றார்.

அதுபற்றி 1909 ஆம் வருடத்தில் எலன் ஜி. ஒய்ட் இவ்வாறு எழுதினார்: 'எனது உயிரையே பறிக்கவிருந்த அந்த விபத்தின் காரணமாக, நான் உடல்நலம் குன்றி எழுத முடியாத நிலையில் இருந்தேன். ஆனால் ஓர் இரவில் கர்த்தருடைய தூதன் என் படுக்கையருகே வந்து, "நான் உனக்குத் தெரிவிக்கிற விஷயங்களை நீ எழுதி வைக்கவேண்டும்" என்று சொன்னார். நான், "என்னால் எழுதமுடியாது" என்றேன். மீண்டும், "நான் உனக்குத் தெரிவிக்கிற விஷயங்களை எழுது" என்று கட்டளை கொடுக்கப்பட்டது. முயற்சி செய்து பார்ப்போம் என்று நினைத்து, மேஜையிலிருந்து ஒரு மடிப் பலகையை எடுத்து எழுதத் தொடங்கினேன், வார்த்தைகளை என்னால் எளிதாக எழுதமுடிகிறதைக் கண்டேன்.'

தேவஏவுதலைப் பெற்ற வேதாகம எழுத்தாளர்களைப்போல, எலன் ஜி. ஒய்ட்டும் இலக்கிய உதவியாளர்களைப்பயன்படுத்தினார். பதிப்பாளர்கள் செய்யவேண்டிய பணிகளை அவரது செயலாளர்கள் செய்தனர்; அதாவது, தங்களது சொந்தக் கருத்துகளை நுழைக்காமல், ஆசிரியரின் செய்திகளைத் தெளிவாக வெளிப்படுத்துவதே செயலாளர்களின் பணி. அவர்கள் மறைமுக எழுத்தாளர்களோ இணை ஆசிரியர்களோ அல்லர். எலன் ஜி. ஒய்ட் அவர்களே கையால் எழுதின அல்லது வாய்மொழியாகச் சொன்ன உள்ளடக்கங்களை வைத்தே அவர்கள் பணியாற்றினார்கள்.

எலன் ஜி. ஒய்ட்டும் தனது செய்திகளை தெளிவாகத் தெரியப்படுத்த பிற இலக்கிய ஆதாரங்களிலிருந்து சில பகுதிகளை தனது எழுத்துகளில் மேற்கோள் காட்டியும் மாற்றியமைத்தும் பயன்படுத்தியுள்ளார். தான் பயன்படுத்திய சில புத்தகங்களை தனது வாசகர்களுக்கும் அவர் பரிந்துரைத்துள்ளார், அதன் மூலம், அந்த ஆசிரியர்களுக்குத் தெரியாமல் பயன்படுத்துவதோ, அவர்களுக்கு அநீதி இழைப்பதோ அவரது நோக்கமல்ல என்பது தெளிவாகிறது; மாறாக, தான் வெளிப்படுத்த விரும்பிய சத்தியங்களை எடுத்துரைக்க, அவர்களுடைய எழுத்துகளில் பொருத்தமான விஷயங்கள் இருந்ததை அவர் கண்டார்.

முரண்பாடுகள், துல்லியமின்மைபற்றி என்ன? 'வழுவாமையைப் பொறுத்தவரை, என் எழுத்துகள் பிழையற்றவை என்று நான் ஒருபோதும் கோரவில்லை; தேவன் மட்டுமே பிழையற்றவர்' என்று எழுதினார். புரிந்துகொள்ளக் கடினமான, மற்ற எழுத்துகளுடன் இசைந்து போகாத சில கூற்றுகள் அவரது எழுத்துகளில் காணப்படலாம். எலன் ஒய்ட்டின் தேவ அழைப்பானது, அவரது மனித தன்மையை மறைத்துவிடவில்லை. நம் அனைவரையும்போலவே, எலன் ஒய்ட்டும் வளர்ந்து முதிர்ச்சியடைந்தார்; அந்த வளர்ச்சியும் முதிர்ச்சியும் அவரது எழுத்துகளில் வெளிப்படுகின்றன.

நாம் ஏற்கனவே பார்த்த, மீண்டும் நினைவுகூரவேண்டிய விஷயம் என்னவென்றால், தான் எழுதிய ஒவ்வொரு வார்த்தையும் நேரடியாகப் பரலோகத்திலிருந்து வந்தது என்று கருதினவர்களை அவர் திருத்தினார். 'அனுதின விவகாரங்களைப்பற்றிச் சில நேரங்களில் பேசவேண்டியதிருக்கும். அன்றன்றைக்குச் செய்யவேண்டிய விஷயங்கள் மனதில் ஓடும், அன்றன்றைக்குத் தேவையான கடிதங்களை எழுதவேண்டும், தகவல்களைப் பணியாளர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறவேண்டியதிருக்கும். அத்தகைய வார்த்தைகளும் தகவல்களும் தேவ ஆவியானவரின் விசேஷித்த ஏவுதலினால் கொடுக்கப்படுபவை அல்ல.

# தேவனுக்கே முதலிடம்: பகுதி 1

**ஜினா வாலன்**

ஏழு வயதிலேயே தனது விசுவாசத்திற்காக உறுதியாக நிற்கவேண்டிய சூழல் நவாமுக்கு ஏற்பட்டது. யூகோஸ்லாவியாவில், சனிக்கிழமைகளில் கட்டாயம் பள்ளிக்குச் செல்லவேண்டியிருந்தது. சிறுவனாக இருந்தபோதிலும், ஓய்வுநாளில் பள்ளிக்குச் செல்வதில்லை என்று நவாம் உறுதியாக இருந்தான். தொடர்ந்து இரண்டு சனிக்கிழமைகள் பள்ளிக்குச் செல்லாததால், முதலாம் வகுப்பு படித்துவந்த அந்தச் சிறுவனை விசாரிக்க ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டு, விசாரணை நடத்தினார்கள்.

அந்தக் குழுவைச் சேர்ந்த ஐந்து அதிகாரிகள் அவனது வகுப்பறைக்கு வந்து, நவாமைத் தவிர வகுப்பில் இருந்த மற்ற அனைவரையும் வெளியே அனுப்பினர். பள்ளியின் இயக்குனர், இரண்டு ஆசிரியர்கள், சீருடை அணிந்த இரண்டு காவல் அதிகாரிகள் (அவர்களில் ஒருவர் ரகசியக் காவல்துறையின் பிராந்திய இயக்குநர்) ஆகியோரை அந்த ஏழு வயதுச் சிறுவன் தனியனாக துணிச்சலுடன் எதிர்கொண்டான்.

"நீ ஏன் சனிக்கிழமைகளில் பள்ளிக்கு வருவதில்லை?" என்று விசாரிப்பவர் கேட்டார். "ஏனென்றால் நான் தேவனை நம்புகிறேன், அவரது பிரமாணத்தின் நான்காவது கற்பனையின்படி, அவருடைய ஓய்வுநாளில் நான் பள்ளியில் இருக்கக்கூடாது. அதனால்தான் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் பள்ளிக்கு வராமல் ஆலயத்தில் இருக்கிறேன்" என்று பதிலளித்தான்.

"உன்னைப் பள்ளியிலிருந்து நீக்குவோம், அதன்பின் படிப்பதற்கான வாய்ப்பே உனக்குக் கிடைக்காது!" என்று அந்த மனிதர் முறைத்துப் பார்த்தபடி சொன்னார். "அப்படியிருந்தாலும் நான் ஆலயத்தில்தான் இருப்பேன், ஏனென்றால் என் வாழ்க்கையில் தேவனுக்கே முதலிடம்" என்று நவாம் உடனடியாகப் பதிலளித்தான். "அப்படியானால், உங்கள் ஆலயத்தில் என்ன செய்வீர்கள்?" என்று விசாரிப்பவர் கேட்டார். "நாங்கள் வேதாகமத்தை வாசிப்போம், பாடல்களைப் பாடுவோம், ஜெபம் செய்வோம்" என்றான். "எங்களுக்கு ஒரு பாடலைப் பாடிக்காட்டு!" என்று அந்த அக்குழுவினர் சொன்னார்கள். உடனே, நவாம் ஒரு கீர்த்தனையைப்பாடிவிட்டு, தனக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், அரசாங்கத்திற்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்தினான், மேலும் அந்த விசாரணைக்குழுவைச் சரியாகவும், நேர்மையாகவும் வழிநடத்தும்படியும் ஜெபித்தான்.

அவன் ஜெபித்தபின், பள்ளிக்குச் செல்லவேண்டாம் என்று அவனது தந்தை அவனிடம் கூறினாரா என்று நவாமிடம் கேட்டார்கள். "இல்லை" என்று நவாம் உள்ளபடி பதிலளித்தான். ஒருவேளை அவன் 'ஆம்' என்று சொல்லியிருந்தால், அவனது தந்தை உடனடியாகச் சிறைக்குச் சென்றிருப்பார். தன் மகன் விசாரிக்கப்படலாம் என்பதை அறிந்திருந்ததால், நவாமின் தந்தை அவனிடம் பள்ளிக்குச் செல்லவேண்டாம் என்று ஒருபோதும் கூறியிருக்கவில்லை. அந்த விசாரணைக் குழு சில நிமிடங்கள் அமைதியாக இருந்தது. பின்னர் திடீரென்று நவாமிடம், "உன்னைப்பள்ளியில் வைப்பார்களா இல்லையா என்பது உனக்குத் தெரிவிக்கப்படும்" என்று சொன்னார்கள். விசாரணைக் குழுவிடமிருந்து எந்தவொரு உத்தரவும் வரவில்லை, எனவே ஓய்வுநாட்களைத் தவிர மற்ற நாட்களில் நவாம் தொடர்ந்து பள்ளிக்குச் சென்றான். ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதில் அவன் உறுதியாக இருந்ததால், ஆரம்பக் கல்வியை முடித்த பிறகு, கல்வியைத் தொடர அனுமதிக்கப்படவில்லை. எனவே, தனது 15வது வயதில் தன் தந்தையுடன் சேர்ந்து அவர்களின் பண்ணையில் முழுநேரமாக வேலைசெய்யத் தொடங்கினான். ஆனால், தேவன் நவாமிற்கு வேறு திட்டங்களை வைத்திருந்தார்.



# இப்போதும் கேளுங்கள்!

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** எண் 13:26–30; எரே 36:20–26; 2நாளா 36:15,16; மத் 23:30–35; 1கொரி 10:6–12.

**மனன வசனம்:** இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. 1கொரிந்தியர் 10:11.

ஒருவரது அனுபவங்கள், கருத்துகள், தேவைகள், வரம்புகள், நம்பிக்கைகள் போன்றவற்றை தன்னுடைய 'சத்தியமாகப்' பேசும்படி சிலர் ஊக்குவிக்கப்படுகிறார்கள். அத்தகையச் 'சத்தியம்' செல்லுபடியானது என்றும், அதை அடக்கக்கூடாது என்றும் கருதப்படுகிறது. ஆனாலும், இந்தச் 'சத்தியங்களில்' சில, மெய்யான சத்தியமாகிய இயேசு கிறிஸ்துவோடும், எழுதப்பட்ட அவரது வார்த்தையோடும் முரண்படும்போது என்ன நடக்கிறது?

சிலர் வேதாகமச் சத்தியங்களை ஏற்றுக்கொண்டு, தங்களின் தவறுகளிலிருந்து மனந்திரும்புகிறார்கள்; மற்றவர்களோ, தங்களுடைய பொய்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறார்கள். சிலர் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து தங்களது நடத்தையை மாற்றிக்கொள்கிறார்கள்; மற்றவர்கள் அதற்கு எதிராகக் கலகம் செய்கிறார்கள். இவ்வாறுதான் மனுக்குலத்தின் வரலாறு இருந்து வருகிறது.

மக்கள் கேட்க விரும்பாத செய்திகளை அறிவிக்கவே வேதாகமத் தீர்க்கதரிசிகள் பெரும்பாலும் அழைக்கப்பட்டார்கள். அதன் விளைவாகப் பலர் விமர்சிக்கப்பட்டனர், சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டனர், கொலைமிரட்டலுக்கு ஆளாகினர்; கொல்லப்பட்டனர். எபி 11:32-38. இவற்றிற்கு மத்தியிலும், தேவனுடைய தீர்க்கதரிசிகள் தங்கள் செய்திகளை உண்மையோடு அறிவித்தார்கள்; ஏனெனில், தேவனுடைய தீர்க்கதரிசன வழிகாட்டுதலை அவர்கள் ஒரு விருப்பத்தேர்வாகக் கருதவில்லை. தேவனுடைய மக்களின் உயிரைக் காக்கிற அறிவுரையாக அதைப் பார்த்தார்கள். எனவே, தங்களுக்குத் தனிப்பட்ட இழப்புகள் ஏற்பட்டாலும், அந்தச் செய்திகளைத் தீர்க்கதரிசிகள் அறிவித்தார்கள்.

*2026, நவம்பர் 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவ தூதுவர்மேல் கோபம்

பல ஜாதியான மக்களை வனாந்தரத்தின் வழியாக வாக்குத்தத்தத் தேசத்திற்கு வழிநடத்திச்சென்றதில் பல வேதனைகளையும் மகிழ்ச்சிகளையும் அனுபவித்தவர் தேவன் தெரிந்துகொண்ட தலைவரான மோசே.

**எண் 14:4-11 இல் என்ன நடக்கிறது? ஜனங்கள் ஏன் மோசேமீதும், ஆரோன்மீதும் கோபங்கொண்டார்கள்?**

---

இந்த வசனங்களை நன்றாக ஆராய்ந்தால், இஸ்ரவேல் புத்திரர் தேவனை நம்பாததால் தேவன்மீது கோபமடைந்தது தெரிகிறது. தேவனுடைய பிரதிநிதிகளாக மோசேயும் ஆரோனும் இருந்தார்கள்; அதனால் அவர்கள்மீதும் தங்கள் கோபத்தைக் காட்டினார்கள். மனம், உடல் பாதுகாப்பு போன்றவை எல்லா மனிதர்களும் விரும்புகிறவை. இதில் உடல்நலனுக்கோ மனநலனுக்கோ அச்சுறுத்தல் ஏற்படும்போது, அல்லது அச்சுறுத்தலாகத் தெரியும்போது, கடுங்கோபமுண்டாகலாம்; அல்லது பகுத்தறிவில்லாமல்கூட நடந்துகொள்ளலாம்.

**இஸ்ரவேலர் ஏன் அவ்வளவு பயந்தார்கள்? எண் 13:26-30. காலேப் அவர்களை எவ்வாறு ஊக்கப்படுத்தினார்?**

---

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரிப்பதில் தங்களுக்கு முன்னிருந்த சவால்களைக்குறித்து இஸ்ரவேலர்கள் பயந்தது நியாயம்தான், 'ஆனால் மனிதர்களின் இருதயங்களில் அவிசுவாசம் குடிபுகும்போது, சாத்தானுடைய கட்டுப்பாட்டில் தங்களை வைக்கிறார்கள்; அவன் அவர்களை எவ்வளவு தூரம் வழிவிலக்குவான் என்று யாராலும் சொல்லமுடியாது.' — எலன் ஜி. ஒய்ட், கோத்திரப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், பக். 389. தலைவராகிய மோசேக்குத் தீர்வுகாணமுடியாத ஒரு தருணம்போல அது காணப்பட்டது. ஜனங்களுடைய பயம் விரைவில் ஆரோனுக்கும் மோசேக்கும் எதிரான கோபமாகவும், தேவனுக்கு எதிரான பகிரங்கமான கலகமாகவும் உருவெடுத்தது. தேவன் தெரிந்துகொண்ட தீர்க்கதரிசியும் தலைவருமான மோசேக்குப் பதிலாகப் புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்க மக்கள் முயன்றபோது, யோசுவாவும் காலேபும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தங்கள் பயங்களுக்கு மத்தியிலும் தேவனை நம்பும்படி ஜனங்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். உபா 34:10-12; எண் 14:4 "கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்தத் தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை என்றார்கள்'. எண் 14:8,9.

---

**எல்லாமே நன்றாக நடக்கும்போது தேவனை நம்புவது எளிது, அல்லவா? பேரழிவு ஏற்படும்போது நம்பமுடியுமா? தேவனை நம்புவதால் அசௌகரியமோ சிரமமோ உண்டாகுமென்றால் நம்பமுடியுமா? அப்போதெல்லாம் எவ்வளவு தூரம் அவரை நம்புகிறீர்கள்?**

# செய்தியை அழித்தல்: பகுதி 1

**எரேமியா 36:20–26 இல், அரசவையில் என்ன நடக்கிறது, தீர்க்கதரிசன எச்சரிப்பைக் கேட்டதும் தலைவர்கள் செய்தது என்ன?**

யூதா ராஜ்யத்திற்கு அழிவு நெருங்கியிருந்த சமயத்தில், எரேமியாமூலம் தேவன் தீர்க்கதரிசனம் உரைத்தார். யூதாவின்மீது தமக்கிருந்த அதிருப்தியைக் குறித்தும், பாபிலோன் அவர்களை வென்று, அங்கிருந்தவர்களைச் சிறைபிடித்து நாடுகடத்திச் செல்லவிருந்ததுகுறித்தும் பல ஆண்டுகளாக எரேமியாமூலமாக தேவன் அவர்களை எச்சரித்து வந்தார். எரே 6:8-19; எரே 26. கர்த்தர் அவர்களை இரட்சிக்கவே விரும்பினார், அதற்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டியிருந்தது.

யூதாவின் பாவங்கள் அநேகமாகவும், பகிரங்கமாகவும், மாறாதவையாகவும் இருந்தன. எரேமியாவின் காலத்தில் விக்கிரகாராதனை, பிள்ளை பலி, விபச்சாரம், கொடுங்கோன்மை ஆகியவை சாதாரணமாகக் காணப்பட்டன; ஆனால் தீர்க்கதரிசி எச்சரித்தார், வேண்டிக்கொண்டார். அவர்கள் அவற்றுக்குச் செவிசாய்க்கவில்லை. எரேமியாவின் தீர்க்கதரிசன ஊழியம் நிறைவடைகிற சமயத்தில், வழிவிலகிப்போன தமது பிள்ளைகளை இன்னும் அதிகத் தீவிரத்துடன் தேவன் வேண்டிக்கொண்டார், ஆனாலும் அவர்களை மீட்பதே அவரது நோக்கமாக இருந்தது. உதாரணமாக, எரே 32 இல், ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி, அதைப் பத்திரம் போடுமாறு எரேமியாவிடம் தேவன் கூறுகிறார், ‘ஏனெனில் இனி இந்தத் தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.’ எரே 32:15. அவர்கள் மனந்திரும்பவும் சீர்திருந்தவும் இறுதியான ஒரு வேண்டுகோளை எரேமியாவிடம் தேவன் எழுதச் சொன்னதுபோல அது இருந்தது; தேவனுடைய அன்பே அதற்குக் காரணம். அந்தச் செய்திக்கு யோயாக்கீம் அளித்த பதிலோ தேவனையும், அவரது செய்தியையும், அவரது தூதுவரையும் அவமதிப்பதாகவே இருந்தது.

**யோயாக்கீமின் அந்தத் துணிகரமான செயலுக்கு, தேவன் எவ்வாறு பதிலளித்தார்? எரேமியா 36:27-31.**

தேவனுடைய செய்திகளையோ, அவருடைய தூதுவர்களையோ நிராகரித்தால் அல்லது அழித்துவிட்டால், அந்தச் செய்தியே மறைந்துவிடும் என்று நம்புகிற போக்கு, சில நேரங்களில் காணப்படுகிறது. தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தைக்குச் செவிகொடுக்க விருப்பமில்லாவிட்டால், தேவன் நமக்காக வைத்திருக்கிற செய்தியை அது அழித்துவிடாது. நம்முடைய அறியாமையாலோ கலகத்தாலோ அவ்வாறு அவமதிப்பது, நமக்கும் நமது குடும்பங்களுக்கும் ஏற்படவிருக்கும் தீங்கை மேலும் தீவிரப்படுத்தவே செய்யும். யோயாக்கீம் ராஜாவின் முடிவுகுறித்து எரேமியா சொன்ன தீர்க்கதரிசனமானது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு கடுமையான எச்சரிப்பாகும். எரே 36:30,31. அதாவது, தேவனுடைய எச்சரிப்புகளை நாம் அலட்சியப்படுத்தினால் அது நமக்குத்தான் ஆபத்து, ஏனெனில் நமது பாவத்தின் விளைவுகளை நாமே அறுவடை செய்வோம்.

---

**மக்கள் துணிகரமாக எதிர்த்தாலும்கூட, தேவன் தம் ஜனங்களை அணுகுவதற்குத் தொடர்ந்து முயற்சித்தார். அவரது அன்பான குணம்குறித்து இது என்ன சொல்கிறது?**

# செய்தியை அழித்தல்: பகுதி 2

தீர்க்கதரிசனச் செய்திக்கு மனிதர்கள் பல்வேறு எதிர்வினைகளைக் காட்டலாம். மோசேயின் அனுபவத்தில், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்தபோது எதிரிகளால் ஆபத்து உண்டாகுமெனப் பயந்து, மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக இஸ்ரவேல் புத்திரர் பகிரங்கமாகக் கலகம் செய்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு, யோயாக்கீம் ராஜா தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தையை அழித்துவிடும்படி, தேவனுடைய செய்தியைத் தீயில் போட்டு எரித்தான். இவை அரிதாக நிகழ்ந்த சம்பவங்கள் அல்ல. முற்கால இஸ்ரவேல் -யூதாவின் வரலாற்றை எடுத்துக்கொண்டால், சில சமயங்களைத் தவிர, தீர்க்கதரிசிகளை நிராகரிக்கிற நிலையே காணப்பட்டது.

**தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள்மூலம் அனுப்பின செய்திகளுக்கு யூதா தேசத்தார் என்ன எதிர்வினையாற்றினார்கள்? 2நாளா 36:15,16. யூதாவின் இந்த நடத்தைக்கு இறுதியில் தேவனுடைய எதிர்வினை என்ன?**

யோசியா, யோவாகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன், சிதேக்கியா ஆகிய ராஜாக்களின் ஆட்சிக்காலத்தில் எரேமியா தீர்க்கதரிசன ஊழியம்செய்தார். பாபிலோனிலிருந்து நேபுகாத்நேச்சார் யூதாமீது படையெடுத்து வந்தார். 21 வயதான சிதேக்கியா அரியணை ஏறியபோது, எரேமியா சொன்ன தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட நிறைவேறும் தறுவாயில் இருந்தன. 2நாளா 36:11. அவன் ‘தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; அவன் கர்த்தருடைய வாக்கை உரைத்த எரேமியா என்கிற தீர்க்கதரிசிக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தவில்லை’. 2நாளா 36:12.

எரேமியாவின் தீர்க்கதரிசன வரம் விவரிக்கப்பட்டுள்ள விதத்தைக் கவனியுங்கள். தேவனுடைய வாயிலிருந்து பிறந்த வாக்கை அவர் பேசினாராம். ஆனாலும், தீர்க்கதரிசிக்கு முன்பாக சிதேக்கியா தன்னைத் தாழ்த்தவில்லை. நம்மைப் போன்ற பாவமுள்ள ஒரு மனிதனாக இருந்த எரேமியாதான் கர்த்தருடைய பிரதிநிதியாக இருந்தார்; அவர் கர்த்தரின் சார்பாகப் பேசினார்.

இதேபோல் பணியாற்றிய பலரில் எரேமியாவும் ஒருவர். ‘ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று’ தேவன் விரும்பினார். 2பேதுரு 3:9. அதனால், பல நூற்றாண்டுகளாகத் தம் மக்களிடத்தில் தீர்க்கதரிசிகளை அனுப்பிக்கொண்டிருந்தார். யாத் 3:15; சங் 105:26; மல் 3:1; ஏசா 6:8; எரே 25:4; மத் 11:13; லூக் 11:49 போன்ற வசனங்கள். வழிவிலகிச்செல்கிற தம் மக்களைத் தேடவும், அவர்கள் மனந்திரும்பினால் அவர்களுக்கு இரட்சிப்பின் வாக்குத்தத்தங்களை அளிக்கவும் இடைவிடாது முயலுகிற தேவனைப்பற்றிய செய்திதான் பண்டைய இஸ்ரவேல்-யூதாவின் வரலாறு,

ஆனால், யூதாவுடைய வரலாற்றின் அந்த இறுதிக்கட்டத்தில், எரேமியாவின் தீர்க்கதரிசனக்குரல்மூலம் யூதாவுக்கு வழிகாட்டுதலையும் ஆறுதலையும் கொடுத்து, தேவன் அருளிய கிருபைக்குத் தாழ்மையோடும், விசுவாசத்தோடும், மனந்திரும்புதலோடும் அவர்கள் இணங்காமல், கேலியும் கிண்டலும் பரியாசமும் செய்தார்கள்.

---

**அவர்கள் தேவனுடைய தூதுவர்களைப் பரியாசம்பண்ணி, தேவனுடைய வார்த்தைகளை அசட்டை செய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை இகழ்ந்தார்கள். இன்று அதுபோன்ற எதையும் நாம் செய்யமாட்டோம்தானே? அல்லது செய்வோமா?**

# மாய்மாலம்

கடந்த காலத்தில் மற்றவர்கள் செய்த காரியங்களைப் பார்த்து, 'நான்மட்டும் அந்த இடத்தில் இருந்திருந்தால், அவர்கள் செய்ததை ஒருபோதும் செய்திருக்க மாட்டேன்!' என்று எப்போதாவது நினைத்ததுண்டா? ஆனால், உள்ளபடியே நம்மை ஆராய்ந்து பார்த்தால், மற்றவர்கள் செய்த அதே காரியங்களை நாம் அப்படியே செய்யாமல் இருந்திருக்கலாம், ஆனால் அதேபோன்ற வழிகளில் நாமும் நடந்துவருவது புரியும்; நாம் செய்வதைத் தெரிந்தே கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு, அதே தவறுகளைத் திரும்பத்திரும்பச் செய்கிறோம். இந்த நியதியைத்தான் இயேசு பின்வருமாறு கூறினார்: 'மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்' மத்தேயு 7:5.

**மத்தேயு 23:30-35 இல், இயேசு சுட்டிக்காட்டுகிற முக்கியமான, வேதனையான கருத்து என்ன? அவருடைய வார்த்தைகளில் நமக்குள்ள எச்சரிப்பு என்ன?**

---

பரிசேயர்களின் நடத்தையை இயேசு வெறுத்தது தெரிகிறது. ஏனென்றால், தங்களை மாற்றிக்கொள்ள மறுத்தார்கள், அதனால் தங்கள் மாய்மாலத்தை மேலும் தீவிரமாக்கினார்கள். பரிசேயர்களின் அத்தகைய பக்தியைக் கண்டு இயேசு சலித்துப்போயிருந்தார். அந்த ஆவிக்குரிய தலைவர்கள் நீண்ட அங்கிகளை அணிந்துகொண்டு அலைந்தார்கள், ஆனால், உள்ளுக்குள் செத்தவர்களின் எலும்புகளால் நிறைந்த, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளைப்போல இருந்தார்கள். மத் 23:27,28. அவர்களுடைய பாவங்களைச் சுட்டிக்காட்டியபோதும், அவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்கு இயேசு மீண்டும் மீண்டும் வாய்ப்பளித்தபோதும், அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கைசெய்யவோ விட்டுவிடவோ இல்லை.

அதனால்தான் அவர்களை எதிர்கொண்டபோது, 'மாயக்காரரே!' என்று இயேசு அழைத்தார். 'மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ!' என்றார். மத் 23:14,15,23,25,27.

தாங்கள் பேசுவது ஒன்றும், செய்வது ஒன்றுமாக வாழ்ந்தார்கள். தீர்க்கதரிசிகளிடமும் அவ்வாறே நடந்தார்கள். உதாரணமாக, தீர்க்கதரிசிகளின் கல்லறைகளை அழகுபடுத்துவதால் தங்கள் விசுவாசத்தின்படி வாழ்வதாக நினைத்தார்கள்; ஆனால், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டு மனந்திரும்புவது போன்ற முக்கியமான காரியங்களைச் செய்ய மறுத்துவிட்டார்கள். அதற்குப் பதிலாக, தீர்க்கதரிசிகள் பெற்றிருந்த அதிகாரத்தையும் அனுதாபத்தையும் பெற ஆசைப்பட்டார்கள்; அவர்களுடைய செய்திகளின் கருத்தையோ ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. தேவனுடைய ஊழியர்களின் கல்லறைகளையும் குகைக்கல்லறைகளையும் மெருகூட்டியதை வைத்து, தேவனுடைய அந்தத் தூதுவர்களின் இரத்தத்தை தாங்கள் ஒருபோதும் சிந்தியிருக்க மாட்டோம் என்று தங்களுக்குள் நியாயப்படுத்திக் கொண்டார்கள். ஆனால், அதே நேரத்தில்தான் ஒரு தீர்க்கதரிசியைவிட மிகவும் மேலான ஒருவரை - மேசியாவையே கொலை செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

---

**வெளிப்புறத்தில் பக்தி உள்ளவர்கள்போல நடித்துக்கொண்டு, உள்ளத்திலோ கலகம், பேராசை, வெறுப்பு நிறைந்திருக்கிற அதே தவற்றை நாமும் செய்யாமல் இருக்க என்ன செய்யலாம்?**

# நம்முடைய எச்சரிப்புக்காக

பழைய ஏற்பாட்டின் இந்தச் சம்பவங்களையெல்லாம் வாசிக்கும்போது, நமக்கு வேதனையும் வருத்தமும் உண்டாகலாம், ஆனால் ஒரு நல்ல நோக்கத்திற்காகவே இவை எழுதப்பட்டுள்ளன; நாம் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யும்போது, என்ன நடக்கும் என்பதை இவைகளிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

**தீர்க்கதரிசிகள் வேதாகமத்தில் எழுதியிருப்பவற்றை எழுதும்படி தேவன் ஏவியதற்கான நோக்கம்பற்றி பவுல் என்ன சொல்கிறார்? 1கொரி 10:6-12.**

பவுல் இந்த வசனங்களில், பண்டைய இஸ்ரவேலின் வரலாற்றை இன்றைய சபைக்குப் பொருத்திப் பேசுகிறார்; இயேசுவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்ட நாமும் இப்போது அந்தச் சபையின் ஓர் அங்கமாக இருக்கிறோம். கலா 6:14-16. மனிதர்கள் தேவனோடு பெற்ற கடந்த கால அனுபவங்களின் பதிவுகளை, அவை நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும், நாம் அலட்சியப்படுத்தவோ குறைத்து மதிப்பிடவோ கூடாது என்பதை பவுல் தெளிவுபடுத்துகிறார். 'அவர்கள் (நம் முன்னோர்கள்) இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு' உதாரணங்களாக எழுதப்பட்டவை என்று தேவனே ஏவுதலால் சொல்லியிருப்பதால், அவை முக்கியமானவை. 1கொரி 10:6. அதாவது, கடந்த காலம் என்பது பெரும்பாலும் எதிர்காலத்திற்கான ஒரு முன்னுரை. நிகழ்காலத்தில் நடப்பவைகளுக்கும், எதிர்காலத்தில் நடக்க இருப்பவைகளுக்கும் பின்னணி என்னவென்பதை கடந்தகாலத்திலிருந்து அறியலாம்.

அதாவது, தேவன் தம் தீர்க்கதரிசிகள்மூலம் நமக்குச் சொல்லியுள்ள தீர்க்கதரிசனச் செய்திகளுக்கும் வேதாகமத்தின் எச்சரிப்புகளுக்கும் நாம் செவிகொடுத்தால், கடந்தகாலத் தலைமுறையினர் செய்த அதே தவறுகளை நாமும் செய்ய வேண்டிய கட்டாயம் உண்டாகாது. நாம் செவிகொடுத்து, கற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்தால், நம் வாழ்க்கை நிலவரப்படும்; நாம் புத்திமான்களாய் வாழ்வோம். 2 நாளா 20:20. வீடுகளும், கார்களும், நல்ல உடைகளும், பிற உலகப் பொருட்களும் இருப்பதைத்தான் ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்று சிலர் நினைக்கிறார்கள். நம் தேவைகளை எல்லாம் தாம் பார்த்துக்கொள்வதாக, தேவன் வாக்குரைக்கிறார், அதேநேரத்தில் உலகப்பிரகாரமாக ஆசீர்வாதமாக வாழ்வதைப்போலவே நம் ஆத்துமாக்களும் செழித்திருப்பதையே விரும்புகிறார். 3யோவான் 2. ஆனால், தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே கிறிஸ்தவ வாழ்க்கையில் உண்மையான, நிலைத்திருக்கக்கூடிய ஆவிக்குரிய நிறைவைப் பெறுவோம்.

தேவன் வீணான வார்த்தைகளைப் பேசுவதில்லை. அவர் பேசினால், அவை நித்தியமான வார்த்தைகளாக இருக்கின்றன. அவற்றின் வல்லமையும் ஆற்றலும் நித்தியமானவை. ஏசா 40:8. அவை 'உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி' கொடுக்கப்பட்டுள்ளன. 1கொரி 10:11. அன்றைய காலத்திற்கே அது உண்மையாக இருந்தால், இன்று வாழுகிற நமக்கும் அந்த வார்த்தைகள் எவ்வளவு அதிகமாகப் பொருந்தும்?

---

**கலகம், அவநம்பிக்கைபற்றிய சம்பவங்களை வேதாகமத்தில் நீங்கள் வாசிக்கும்போது, அது போன்ற தவறுகளை நீங்களும் செய்யாமல் தவிர்ப்பதற்கு அவற்றிலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது?**

# எலன் ஒய்ட் செய்திகளைப் பெறுதலும் அறிவித்தலும்

எலன் ஜி. ஒய்ட்டின் பேரனும், எலன் ஜி. ஒய்ட் எஸ்டேட்டின் முன்னாள் இயக்குனருமான ஆர்தர் ஒய்ட், தன் பாட்டி தன் வாழ்நாளில் நூற்றுக்கணக்கான தரிசனங்களையும் தீர்க்கதரிசனக் கனவுகளையும் பெற்றதாகச் சொல்கிறார். அந்தத் தரிசனங்கள் சில நிமிடங்களோ பல மணிநேரங்களோ வரை நீடித்துள்ளன; சில சமயங்களில் திரளான மக்களும் சாட்சியாக அவற்றை நேரில் கண்டனர். சில தருணங்களில், அவரைச் சந்தேகித்தவர்களும்கூட பொது வெளிப்பாடுகளின்போது அவரைப் பரிசோதித்துப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

வேதாகமத் தீர்க்கதரிசிகளைப்போல, எலன் ஜி. ஒய்ட்டும் தரிசனத்தில் இருந்தபோது இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளை அனுபவித்தார். 1868 ஆம் ஆண்டில், தரிசனத்தின்போது எலன் ஒய்ட் இருந்த நிலைபற்றி ஜேம்ஸ் ஒய்ட் விரிவாக விளக்கினார். அவர் 'தன்னைச் சுற்றி நடக்கும் எதையும் கொஞ்சமும் அறியாத உணர்வற்ற நிலையில்' இருந்தார்; அவர் சுவாசிக்கவில்லை; அவருடைய தசைகள் 'விறைப்பாகவும்' அவருடைய 'மூட்டுகள் அசையாமலும்' மாறின; அவரது அசைவுகளும் செய்கைகளும் 'சுதந்தரமாக, நளினமாக' இருந்தன; அவரது கண்கள் திறந்தே இருந்தன. தரிசனத்திலிருந்து வெளிவந்த பிறகு சிறிது நேரத்தில் அவரால் பார்க்கமுடியாது, ஆனாலும் அவரது பார்வைத்திறன் பாதிக்கப்படவில்லை. எலன் ஒய்ட் அவர்களே எதிர்பார்க்காத சமயங்களில் அந்தத் தரிசனங்கள் கிடைத்ததால், அவர் எப்போது அல்லது எவ்வளவு நேரம் தரிசனத்தில் இருப்பார் என்பதை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தச் செய்திகளுக்கு மக்களின் எதிர்வினைகளும் வேதாகமக் காலத்தைப் போல, மாறுபட்டதாகவே இருந்தன. சிலர் தேவனுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டனர்; மற்றவர்கள் நிராகரித்தனர். 'தம்முடைய மக்களின் தவற்றை உணர்த்துகிறவளாக, தேவன் என்னை நியமித்துள்ளார்; மேலும், இந்தப் பாரமான சுமையை அவர் என்மேல் சுமத்தியிருப்பதால், இந்தச் செய்தி யாரிடம் கொடுக்கப்படுகிறதோ, அவர்கள் அதற்கு என்ன எதிர்வினையாற்றினாலும் அவர்களே அதற்குப் பொறுப்பாவார்கள். விரும்பத்தகாத இந்தக் கடினமான வேலையை நானாகத் தேர்ந்தெடுக்கவில்லை. இது எனக்கு மனிதர்களின் தயவையோ புகழையோ தேடித்தருகிற வேலை அல்ல. என் மீட்பரின் நாமத்திலும் பலத்திலும் என்னால் இயன்றதை நான் செய்வேன். மனிதர்கள் அதைக் கேட்டாலும் சரி, கேட்காமல் போனாலும் சரி, தேவ ஆவியானவர் கட்டளையிடுகிறபடியே நான் எச்சரிப்பேன், ஆலோசனை கூறுவேன், கடிந்துகொள்வேன், ஊக்குவிப்பேன்'.

அவருடைய தீர்க்கதரிசனச் செய்திகளை நிராகரித்தவர்களில் பலர் ... தங்களுடைய சொந்த அவிசுவாசம் அல்லது எலன் ஜி. ஒய்ட் மீதான தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாகவே நிராகரித்தனர். தனது தீர்க்கதரிசன வரத்தைப்பற்றிச் சந்தேகம் எழுப்பியவர்களிடம் எலன் ஜி. ஒய்ட் மிகவும் கனிவோடு நடந்துகொண்டார். உண்மையில், 'அவர்கள் தங்களுடைய நிலையைக் கண்டறிந்து, இந்த வரத்திற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ தங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வரை, மிகுந்த பொறுமையோடும் சகோதர அன்போடும்' நடத்தவேண்டும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

தேவன் தனக்கு வெளிப்படுத்திய செய்திகளே, தனது தீர்க்கதரிசன வரத்திற்கான உண்மையான அத்தாட்சி என்பதில் எலன் ஜி. ஒய்ட் உறுதியாக இருந்தார். உண்மையோடு சத்தியத்தைத் தேடுகிறவர்கள், தன்னுடைய வரம் உண்மையானது, நம்பகமானது என்பதை அறிந்துகொள்வார்கள் என்று நம்பினார். அவ்வாறு சத்தியத்தைத் தேடுகிறவர்களைச் சிறப்பான புரிதலுக்கு, தேவன் வழிநடத்துவார் என்று நம்பினார்; அதே வேளையில், 'நம்முடைய விசுவாசத்தை சத்தியத்தின் பக்கமாக நிலைநிறுத்துவதற்குப் போதுமான ஆதாரங்களை' தேவன் நமக்குக் கொடுத்திருப்பதாகவும் எழுதியுள்ளார்.

# தேவனுக்கே முதலிடம்: பகுதி 2

**ஜினா வாலன்**

தன்னுடைய நாட்டிலேயே ஒரு செவந்த்–டே அட்வெண்டிஸ்ட் மேல்நிலைப்பள்ளியும் கல்லூரியும் தொடங்கப்படவிருந்த செய்தியை நவாம் கேள்விப்பட்டான். "யுகோஸ்லாவியா யூனியனைச் சேர்ந்த ஒரு சகோதரர் எங்கள் சபைக்கு வந்து, ஓர் அட்வெண்டிஸ்ட் பள்ளி புதிதாக ஆரம்பிக்கப்பட இருப்பதாகக் கூறினார். நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்"!

மாருஷேவெக் என்ற இடத்தில் உள்ள அந்தப் பள்ளி 1969 ஆம் ஆண்டில் 45 மாணவர்களுடன் தொடங்கப்பட்டது. "இந்தப் பள்ளி அமைந்தது ஓர் அற்புதம்தான்!" நாங்கள்தான் முதல் தலைமுறை மாணவர்கள், அந்தச் சோதனை முயற்சி எடுக்கப்பட்ட தலைமுறையின் மாணவர்கள். அங்குள்ள ஊழியர்கள் எலன் ஜி. ஒய்ட் எழுதிய 'கல்வி' என்ற புத்தகத்தை வாசித்தார்கள்; எங்களுக்கு அங்கு மிகச்சிறந்த கல்வி கிடைத்தது"! அக்காலத்தில் அந்தப் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் இல்லாததால், ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியிலும் அரசாங்கத்தால் நடத்தப்படும் 17 பாடங்களுக்கான தேர்வுகளையும் மாணவர்கள் எழுதி, தேர்ச்சிப் பெறவேண்டியிருந்தது. "அது கடினமான பயிற்சியாக இருந்தது. ஆனால் நான்காம் ஆண்டின் இறுதியில், அரசுப் பள்ளி மாணவர்களைவிட நாங்கள் அதிக மதிப்பெண்களைப் பெற்றிருந்தோம்! அன்றைய யுகோஸ்லாவியாவிலேயே எங்களுடைய பள்ளிதான் மிகச்சிறந்த பள்ளியாகக் கருதப்பட்டது" என்று நவாம் நினைவுகூருகிறார்.

படிப்பை முடித்த பிறகு, ஜாக்ரெப் நகரில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பிரெஞ்சு மற்றும் லத்தீன் மொழிகளைப் பயின்றார். படிப்பை முடித்தவுடன், நவாமுக்கு இரண்டு வேலை வாய்ப்புகள் கிடைத்தன; ஒன்று, கம்யூனிஸ்ட் அரசாங்கத்திடமிருந்து வந்த பலரும் விரும்பக்கூடிய ஓர் அரசியல் பதவி; மற்றொன்று, மாருஷேவெக்கில் இருந்த அட்வெண்டிஸ்ட் பள்ளியில் ஆசிரியர் பணி. அரசாங்க அதிகாரிகளிடம் பேசிய நவாம், "நான் ஓர் அட்வெண்டிஸ்ட் என்பது உங்களுக்குத் தெரியும். நான் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஆராதனைக்குச் செல்வேன். அப்படியிருக்க ஏன் என்னை இந்தப் பதவிக்கு அழைக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு, "ஏனென்றால் எங்களுக்கு அரசியலில் நேர்மையான மனிதர்கள் தேவை; அவர்கள் கிடைப்பது அரிது! கொள்கைகளுடன் வாழும் மனிதர்கள் எங்களுக்குத் தேவை!" என்று ஆச்சரியமளிக்கிறபதிலைச் சொன்னார்கள். "நன்றி, ஆனால் நான் மாருஷேவெக்கில் உள்ள பள்ளியில் ஆசிரியர் வேலையை ஏற்றுக்கொண்டுவிட்டேன்" என்றார்.

"என் மாணவர்கள் தேவனையும் இரட்சிப்பையும்தான் முதலில் கற்றுக்கொள்ள விரும்பினேன்" என்றார்.

2017 ஆம் ஆண்டின், பதின்மூன்றாம் ஓய்வுநாள் காணிக்கையானது குரோஷியாவில் உள்ள மாருஷேவெக் அட்வெண்டிஸ்ட் மேல்நிலைப்பள்ளியில் ஒரு விடுதியைக் கட்டுவதற்கு உதவியது. இந்தக் காலாண்டில், உங்களுடைய பதின்மூன்றாம் ஓய்வுநாள் காணிக்கை தலைநகரமான சாகிரேப்பில் ஒரு புதிய செவந்த்–டே அட்வெண்டிஸ்ட் ஆலயத்தைக் கட்டுவதற்கு உதவும். 2020 ஆம் ஆண்டில் அடுத்தடுத்து ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கங்களால் இடிந்துபோன, சாகிரேப்பின் மிகப்பெரிய மற்றும் பழமையான ஓர் அட்வெண்டிஸ்ட் ஆலயத்திற்குப் பதிலாக இந்தப் புதிய தேவாலயம் கட்டப்படவிருக்கிறது. இந்தப் புதிய ஆலயக் கட்டடம், ஆராதனை நடத்தவும், பிற சபை செயல்பாடுகளுக்கும் உதவுவதுடன், ஜாக்ரெப் நகர மக்களுக்கு ஒரு நல்வாழ்க்கை மையமாகவும் விளங்கும்.

**பாடம் 8** **நவம்பர் 14-20**



# தீர்க்கதரிசனப் புத்தகங்களை விளக்குதல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மத் 5:17–48; 1கொரி 16:20; மத் 4:1–11; லூக் 10:25–28; லூக் 24:25–27, 44–49.

**மனன வசனம்:** மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். லூக்கா 24:27.

இயேசுவின் சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் பிறகு, மிகுந்த சோர்வுடன் இருந்த இரண்டு சீடர்களுக்கு அவர் தரிசனமானார்; 'அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்' என்று அவர்கள் இருவருமே சொன்னார்கள். லூக்கா 24:21. ரோமர்களின் ஆதிக்கத்திலிருந்து யூதர்களை விடுவிக்கிற ஒரு மேசியாவை அந்தச் சீடர்கள் எதிர்பார்த்தார்கள். பழைய ஏற்பாட்டின் மேசியாவைக்குறித்த தீர்க்கதரிசனங்களை ஒருதலைப் பட்சமாகவும், சுயநல நோக்கத்தோடும் புரிந்துகொண்டதால் இந்தத் தவறான எதிர்பார்ப்பும், அதனால் ஏமாற்றமும் உண்டானது.

இயேசு விசாலமான கண்ணோட்டத்தில் வேதவாக்கியங்களை விளக்கி, அந்த இரண்டு சீடர்களின் தவறான புரிதலையும் போக்கினார். லூக் 24:25-27. வேதவாக்கியங்களை கிறிஸ்து விளக்கியபோது, அது அவர்களின் கண்களைத் திறந்தது; அவர்களின் இருதயங்கள் தங்களுக்குள்ளே கொழுந்துவிட்டு எரியும்படிச் செய்தது. லூக் 24:31,32. பிறகு, எருசலேமில் கூடியிருந்த பெருந்திரளான சீடர்களுக்கும் இயேசு காட்சியளித்தார், 'வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்தார்'. லூக் 24:45; 24:33,36,44-49.

தீர்க்கதரிசன எழுத்துகளைச் சரியாகப் புரிந்துகொள்ளும்போது ஏற்படும் நேர்மறையான விளைவுகளை இந்த அனுபவங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தீர்க்கதரிசனங்களைத் தவறாகப் புரிந்துகொள்வது ஆவிக்குரிய பேரழிவிற்கு வழிவகுக்கும்.

*2026, நவம்பர் 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# வேதாகமம் தனக்குத்தானே விளக்கமளிக்கிறது

வேதவசனங்களுக்கு விளக்கம் காண்பதில் நமது அனுமானங்கள் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வேதாகமத்தை வெறும் பண்டைய ஆவணங்களின் தொகுப்பாகமட்டுமே கருதுபவர்கள் அதன் புத்தகங்களுக்கு இடையே இசைவைக் காணமுடியாது. ஆனால், 'வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; அவை பிரயோஜனமுள்ளவைகள்' என்கிற அடிப்படைநியதியைநம்பினால்,அதிலுள்ளஇசைவைப்புரிந்துகொள்ளமுடியும், வேதாகமம் தனக்குத்தானே விளக்கமளிக்கவும் அனுமதிக்லாம். 2தீமோ 3:16.

**மத்தேயு 5:17-48 இல் குறிப்பிடப்படுகிற பழைய ஏற்பாட்டின் போதனைகளுக்கு இயேசு எவ்வாறு விளக்கமளித்தார்?**

மத்தேயு 5:17-48 ஐ மேலோட்டமாக வாசித்தால், பழைய ஏற்பாட்டின் போதனைகளுக்குப்பதிலாகப்புதியபோதனைகளைஇயேசுவழங்கியதுபோலத் தோன்றும். ஆனால், அங்கு இயேசு பழைய ஏற்பாட்டின் ஆழமான, ஆவிக்குரிய பரிமாணங்களை வெளிப்படுத்துகிறார். புதிய உடன்படிக்கையின்படி, தேவ பிரமாணம் அவரது பிள்ளைகளின் உள்ளங்களில் வைக்கப்பட்டு, அவர்களுடைய இருதயங்களில் எழுதப்படும் என்கிற எரே 31:31-33 இன் வாக்குத்தத்தத்தை இவ்வாறு அவர் நிறைவேற்றிக்கொண்டிருந்தார். எபி 8:8-10; 10:16.

சில நேரங்களில், குறிப்பிட்ட ஒரு வேதப்பகுதிக்கு, அது இடம்பெற்றுள்ள அதே புத்தகத்திலேயே விளக்கம் வழங்கப்பட்டிருக்கும். உதாரணத்திற்கு, தானி 2 ஆம் அதிகாரத்தில், நேபுகாத்நேச்சார் ராஜா கண்ட சொப்பனமும், அதைத் தொடர்ந்து அந்தச் சொப்பனத்திற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. தானி 2:31-35; 2:36-45. அதேபோல, மத் 13 ம் அதிகாரத்தில், விதைக்கிறவனுடைய உவமையும், அதைத் தொடர்ந்து, அதற்கான விளக்கமும் வருகிறது. மத் 13:1-9; 13:18-23. சில சமயங்களில், ஒரு செய்திக்கான விளக்கத்தைப் பிற்காலத் தீர்க்கதரிசி ஒருவர் வழங்குவார். உதாரணமாக, எரே 25:11,12; எரே 29:10 இல் முன்னறிவிக்கப்பட்ட 70 ஆண்டுக்கால தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை 2 நாளா 36:22,23 உறுதிப்படுத்துகிறது. ஆனாலும், பழைய ஏற்பாட்டில் நிழலாட்டமாகச் சொல்லப்பட்ட பல காரியங்கள் கிறிஸ்துவில் நிறைவேறின. மேலும், பல பழைய ஏற்பாட்டுப் பகுதிகளுக்குப் புதிய ஏற்பாட்டில் விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

'பழைய ஏற்பாடானது உருவகங்களாலும் அடையாளங்களாலும் அமைந்த சுவிசேஷப் புத்தகமாகும். புதிய ஏற்பாடு அதன் சாராம்சமாகும். ஒன்று மற்றொன்றைப்போலவே இன்றியமையாதது' - எலன் ஜி. ஒய்ட், *Selected Messages, book 2, p. 104.* உண்மையில், பழைய ஏற்பாட்டிற்கு தேவ ஏவுதலால் கொடுக்கப்பட்ட விளக்கவுரையே புதிய ஏற்பாடு.

---

**நாம் வேதாகமத்தை ஆராயும்போது நம்முடைய அனுமானங்களுக்கு இடமளிக்காமல் இருப்பது ஏன் முக்கியம்? வேதாகமத்தை, தேவனுடைய வார்த்தையாக நம்பவேண்டும் என்பதும், அது நம்மை நியாயந்தீர்க்க வேண்டுமேதவிர நாம் அதை நியாயந்தீர்க்கக் கூடாது என்பதுமே நம்முடைய மிகமுக்கியமான அனுமானமாக இருக்கவேண்டும். ஏன்?**

# வரலாற்று-கலாச்சாரப் பின்னணி

**ஏசா 65:17–20 இல், புதிய வானத்திலும் புதிய பூமியிலும் ஒரு வாலிபன் 'நூறு வயது சென்றவனாய் மரிப்பான்' என்று சொல்லப்படுவதின் அர்த்தம் என்ன? ஏசா 65:20.**

ஏசா 65:20 ஐ அதன் வரலாற்றுப் பின்னணி அறியாமல் வாசித்தால், புதிய வானத்திலும் புதிய பூமியிலும் மரணமும் பாவிகளும் தொடர்ந்து இருப்பது போன்ற எண்ணம் ஏற்பட்டுவிடும். அது மரித்த நீதிமான்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்றும், மரணமும் துக்கமும் இறுதியாக இல்லாமல் ஒழிந்துவிடும் என்றும் அப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களுக்கு முரணாக இருக்கும். ஏசா 26:19; 25:8; 65:19.

ஏசா 65:20 இல், அடையாளப்பூர்வமாக அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. நூறு வயதுள்ள வாலிபன் யாராவது உண்டா? மாறாக, ஏசா 65:17-20 ஐ அதன் வரலாற்றுப் பின்னணியை அறிந்து வாசிக்கும்போது, உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு உண்மையுடன் இருந்தால் இஸ்ரவேல் தேசம் பெறவிருந்த ஆசீர்வாதத்தை அந்த வசனம் கவிதை நயத்துடன் சுட்டிக்காட்டுவதை அறிந்துகொள்ளலாம். உபா 28. சீக்கிரத்தில் நிகழவிருந்த சம்பவங்களை பிற்காலச் சம்பவங்களோடு இணைத்து மத்தேயு 24 இல் இயேசு கூறியதுபோல, ஏசாயாவும் அப்போது நிகழவிருந்த சம்பவங்கள் எல்லாம் புதிய வானம் புதிய பூமியில் நடக்கப்போகிறவைகளுக்கு ஒரு முன்னோடியாக இருப்பதை இங்கே காட்டுகிறார்.

ஏசாயா புத்தகத்தில், புது சிருஷ்டிப்பானது, முற்றிலும் எதிர்காலத்தில் நிகழக்கூடிய ஒன்றாகக் காட்டப்படவில்லை. தேவனுடைய மகிமையான மீட்பின் கிரியையாலும், பாவமன்னிப்பாலும், அது இங்கேயே நிகழ்கிறது. தற்போது மெய்யான இஸ்ரவேலராக வாழ்கிறவரில், தேவன் மரணத்தை முறியடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த வசனம் அறிவிக்கிறது. நீண்ட ஆயுளையும், குழந்தை மரணங்கள் ஒழிக்கப்படுவதையும்பற்றிச் சொல்கிற வாக்குத்தத்தங்கள் இந்தக் கருத்தையே வெளிப்படுத்துகின்றன. ஏசா 65:20. இவை அனைத்தும் இறுதியில் நிகழவிருப்பதை முன்கூட்டியே சுட்டிக்காட்டின.

**இன்றைய நம்முடைய காலத்திலும் கலாச்சாரத்திலும் 1கொரி 16:20 இன்படி எவ்வாறு நாம் செய்யமுடியும்?**

புதிய ஏற்பாட்டுக் கால கிரேக்கக் கலாச்சாரத்தில், உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் வாழ்த்தும்போது முத்தமிட்டுக் கொள்வார்கள். கிறிஸ்தவ விசுவாசிகள் இத்தகைய இதமான பாசத்துடன் ஒவரையொருவர் வாழ்த்தும்படி பவுல் கூறுகிறார். ரோமர் 16:16, 1கொரி 16:20; 2கொரி 13:12; 1தெச 5:26. அன்றையச் சூழலில், விசுவாசிகளை அவ்வாறு அன்போடு வாழ்த்தி வரவேற்பதும், அவர்களை, தேவ குடும்பத்தின் ஒரு பகுதியாக உணரச்செய்வதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வேதாகம நியதிதான். சில கலாச்சாரங்களில் முத்தமிடுவது பொருத்தமற்றதாக இருக்கும்; அதற்குப் பதிலாக கைகுலுக்குதல், அரவணைத்தல், தலைதாழ்த்தி வரவேற்றல் போன்றவை கலாச்சாரரீதியாக ஏற்கும்படியாக இருக்கும். கலாச்சாரம் என்னவாக இருந்தாலும், சபைக்கூட்டங்களில் மக்கள் மனதில், அவர்கள் நம் குடும்பத்தினரில் ஒருவர், அன்புக்குரியவர் என்கிற உணர்வை உண்டாக்குமாறு பவுல் நம்மை ஊக்குவிக்கிறார்.

# இலக்கியப் பின்னணி

ஒரு நபரைப்பற்றி பிரபலமான ஒரு போதகர் கூறும் கதை இது: கடுமையான பிரச்சனைகளில் சிக்கியிருந்த ஒருவன், தனக்கான தேவசித்தத்தை அறிய விரும்பினான். வேதாகமத்தில் கண்ணை மூடிக்கொண்டு ஒரு வசனத்தைத் தொட்டான்; அது, 'அப்பொழுது அவன் (யூதாஸ்) புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்' என்று கூறும் மத் 27:5ம் வசனம் வந்தது. அதிர்ச்சியடைந்தவன், தனக்கு ஊக்கமளிக்கிற ஒரு வசனத்தைக் கண்டறியும்படி, அதேபோல மீண்டும் செய்தான்; இந்த முறை வந்தது லூக்கா 10:37: 'அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்'. இவை இரண்டுமே வேதாகம வசனங்கள்தான்; ஆனால் அவற்றின் பின்னணியைப் புரிந்துகொள்ளவேண்டும்.

பெரும்பாலான வேதாகம வசனங்களுக்கு அவற்றின் இலக்கியப் பின்னணியை அறியாமல் அர்த்தம் காண்பதால், தவறாக அர்த்தம் காண நேரிடுகிறது. வேதவசனங்களுக்கு செயற்கையான விளக்கங்களை அளிக்க வழிவகுக்கிறது.

**சொல்லப்பட்ட பின்னணிக்கு மாறாக, தேவ வார்த்தையைத் திரித்து, சாத்தான் எவ்வாறு பேசினான்? ஆதி 3:1–5; மத் 4:1–11.**

வேதாகமச் செய்தியை சிலர் உண்மையோடு அணுகினாலும், தங்கள் அறியாமையால் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். மற்றவர்களோ, மேலே குறிப்பிட்டுள்ள வேதப்பகுதிகளில் இரண்டு சந்தர்ப்பங்களில் சாத்தான் செய்ததுபோல, வேண்டுமென்றே அதைத் திரிக்கிறார்கள். நோக்கம் எதுவாக இருந்தாலும், அதன் முடிவு எப்போதும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏதேன் தோட்டத்தில், மனித பாஷையில் பேசத்தெரிந்த, கவரக்கூடிய, ஆர்வத்தைத் தூண்டுகிற ஒரு பாம்புபோல ஏவாளுக்குமுன் சாத்தான் தோன்றினான். ஆதி. 3:1-5; வெளி 12:9. தேவனுடைய வார்த்தை சொல்லப்பட்டிருந்த பின்னணியை மறைத்து, எல்லா மரத்தின் கனிகளுக்கும் அது பொருந்துமோ என்று கேட்டு, பின்னர் தனது சொந்த, வஞ்சகமான விளக்கத்தைச் சொன்னான்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்திற்கு வழிநடத்தியபோது (மத் 4:1-11; லூக் 4:1-13), 'அந்தச் சோதனையின் வனாந்தரத்தில் கிறிஸ்துவை வஞ்சிப்பதற்கு சாத்தான் ஒளியின் தூதனாக வந்தான்'. எலன் ஜி. ஒய்ட், *The Advent Review and Sabbath Herald, December 18, 1888.* கிறிஸ்துவுடன் அவன் பேசிய போது, தங்களை வேண்டுமென்றே ஆபத்தான சூழ்நிலைகளுக்கு ஆளாக்குபவர்களையும் தேவன் பாதுகாப்பார் என்பதுபோல சங்கீதம் 91:11,12 வசனங்களை சாத்தான் தவறாக மேற்கோள் காட்டினான். ஏதேன் தோட்டத்திலும் வனாந்தரத்திலும் ஏற்பட்ட சோதனையின் அனுபவங்கள், மாபெரும் போராட்டம் ஒன்று நடைபெறுவதை உறுதிப்படுத்துகின்றன. தேவனுடைய பேசப்பட்ட, எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு விளக்கமளிப்பதிலும் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது. வேதாகம வசனங்களை அவற்றின் பின்னணிகளை மனதில் வைத்து விளக்கம் காண்பது முக்கியம் என்பதை அவை நமக்கு உணர்த்தவேண்டும்.

---

**நமது கருத்துகள் எவ்வளவுதான் சரியானவையாக இருந்தாலும், அவற்றை நிரூபிப்பதற்காக வசனங்களுக்கு அவற்றின் பின்னணியைவிட்டு அர்த்தங்காண்கிற சோதனைக்கு நாம் ஏன் ஆளாகக்கூடாது?**

# வேதப்பகுதியின் அர்த்தம்

எல்லாக்கிறிஸ்தவர்களும் வேதாகமத்தை நன்கு ஆராய்ந்து, புரிந்துகொள்ள வேண்டும். அனைவருமே புரிந்துகொள்ளும் அளவுக்கு இரட்சிப்பின் வழி வேதாகமத்தில் தெளிவாக உள்ளது, அதே நேரத்தில் அறிவாளிகளின் சிந்தனைக்கும் தொடர்ந்து சவால் விடும் அளவுக்கு ஆழமாகவும் சிக்கலாகவும் இருக்கிறது. இரட்சிப்பைக் குறித்த அறிவானது, தோண்ட தோண்ட வற்றாத பொக்கிஷமாக வேதாகமத்தில் உள்ளது.

**லூக்கா 10:25–28 வசனங்களை வாசியுங்கள். வேதாகமத்திற்கு எந்த விளக்கமும் தேவையில்லை என்று சிலர் கூறுகிறார்கள். அது உண்மை என்றால், இயேசு அந்த நியாயசாஸ்திரியிடம், 'நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன?' என்று ஏன் கேட்கவேண்டும்? லூக்கா 10:26.**

---

ஒரு வேதப்பகுதியின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள, முதலில் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவேண்டும். பிறகு, அதனுடன் தொடர்புடைய இலக்கியப் பின்னணியையும், ஒட்டுமொத்த வேதாகமப் பின்னணியையும், வரலாற்று - கலாச்சாரப் பின்னணியையும் இயன்றவரை ஆராயவேண்டும். இறுதியாக, நமது முடிவுகள் வேதவசனங்களின் ஒட்டுமொத்தப் போதனைகளுடன் முழுமையாக ஒத்துப்போகவேண்டும். நான்கு சுவிசேஷப் புத்தகங்களில் பெரும்பாலும் காணப்படுவதுபோல, இணையான வேதப்பகுதிகளை ஒப்பிட்டுப் பார்ப்பது நமது புரிதலை மேலும் ஆழமாக்கும்.

**மத் 5:43–48 ஐ லூக் 6:27–36 உடன் ஒப்பிட்டுகள். மத்தேயு 5:43–48 இன் பின்னணியும், அதன் இணைப்பகுதியான லூக் 6:36 வசனமும், மத்தேயு 5:48 இல் உள்ள 'பூரணம்' என்கிற வார்த்தையின் அர்த்தத்தைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள எப்படி உதவுகின்றன?**

வேதவசனங்களுக்கு உண்மையான விளக்கத்தைக் காண்பதற்கு, முழுமையான ஆராய்ச்சியும் தாழ்மையும் தேவை. நம்மில் எவரும் சத்தியத்தை முழுவதுமாகப் புரிந்திருப்பதில்லை; நாம் அனைவருமே கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்.

ஆரோக்கியமான உபதேசத்தைப்பெற நாம் தொடர்ந்து பிராயசப்பட வேண்டும். 2தீமோ 4:1-5. நமக்குப் புரிகிற, தெளிவான விஷயங்களில் கவனம் செலுத்தி, அதை அடிப்படையாக வைத்து, நமது புரிதலை வளர்க்கவேண்டும். இது, காலப்போக்கில், இப்போது தெளிவாகத் தெரியாத பல விஷயங்களைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும். பரலோகத்திற்குச் செல்லும்வரை, பதிலளிக்கப்படாத சில கேள்விகள் எப்போதும் இருக்கவே செய்யும்.

---

**உங்களுக்குப் புரியாமல் பெரும் கவலையளித்து வந்த, பின்னர் விளக்கம்கிடைத்த ஒரு ஒரு விஷயத்தை நினைத்துப் பாருங்கள். தேவனுடைய வார்த்தையில் இப்போது உங்களுக்குப் புரியாமல் இருக்கும் விஷயங்களில் தொடர்ந்து அவரை நம்புவதற்கு அந்த அனுபவம் எவ்வாறு உதவ வேண்டும்?**

# வேதாகம விளக்கம்

இரண்டு முக்கிய நோக்கங்களை அடிப்படையாக வைத்து வேதாகமத்தை ஆராயவேண்டும். ஒன்று, தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி; மற்றொன்று, இயேசுவோடு இரட்சிப்பின் உறவிற்குள் மற்றவர்களை வழிநடத்துவது. உண்மையான கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியானவரால் 'சகல சத்தியத்திற்குள்ளும்' வழிநடத்தப்படுகிறான், 'தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும்' பிழைக்கிறான், அவர் நமக்குக் கட்டளையிட்ட 'யாவற்றையும்' மற்றவர்களுக்கு உபதேசிக்கிறான். யோவான் 16:13; மத் 4:4; 28:20.

**பின்வரும் வசனங்களில் வேதவாக்கியங்களுக்கு, கிறிஸ்து கொடுத்த விளக்கத்திலிருந்து நாம் என்ன அறியலாம்? லூக் 4:16-30; லூக் 24:25-27,44-49.**

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் 'வழியும், சத்தியமும், ஜீவனுமாய்' இருக்கிறார். யோவான் 14:6. அப்படியிருந்தும், வேதவாக்கியங்களை அடிப்படையாக வைத்தே அவர் பிரசங்கித்தார். உதாரணமாக, மாற்கு 1:14,15 இவ்வாறு கூறுகிறது: 'யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்' என்று கூறினார். மாற்கு 1:14,15. இந்தக் 'காலம்' தானி 9:24-27 இல் சொல்லப்படுகிற காலமாகும். மத் 5-7 இன் மலைப்பிரசங்கத்தில், அவர் யாத் 20:13,14 ஐ மேற்கோள் காட்டினார். மத் 5:21,27. லூக்கா 4 இல், அவர் ஏசாயா 61:1,2 ஐ மேற்கோள் காட்டினார். இயேசு முற்றிலும் வேதாகமத்தை அடிப்படையாக வைத்தே பிரசங்கித்தார்.

அப் 8 இல், அந்த எத்தியோப்பிய மந்திரி 'பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்தான்'. அப் 8:27. எனவே, அவன் யூத மார்க்கத்தையும், அதன் சடங்குகள் சிலவற்றையும் ஓரளவிற்கு அறிந்திருப்பான். அவனிடம் ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தின் ஒரு பிரதியும்கூட இருந்தது; வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயத்தில், அதை ஆர்வத்துடன் வாசித்துக்கொண்டிருந்தான். ஆனாலும், பாவத்தைச் சுமக்கிற தாசனைப்பற்றிய தீர்க்கதரிசனத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை, எனவே யாராவது தனக்கு விளக்கினால் நன்றாக இருக்குமென நினைத்தான். இந்த அனுபவம் நமக்குச் சில முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறது. முதலாவதாக, ஒரு வேதப்பகுதியை வெறுமனே வாசிப்பதுமட்டுமே அந்தப் பகுதியை ஆழமாகப் புரிந்துகொள்ள உதவாது. இரண்டாவது, வேதாகமத்தை ஆராயும்போது, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளலாம்; கற்றுக்கொள்ள வேண்டும். மூன்றாவது, சரியான, உண்மையான வேதாகமச் செய்திகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய தனிப்பட்ட கடமை நமக்கு உள்ளது. ஏசாயா புத்தகத்தையும், பிற பழைய ஏற்பாட்டுப் பகுதிகளையும் பிலிப்பு விளக்கிக்கூறியபோது, அந்த எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றார். அப் 8:35-39; ஒப்பிடவும்: சங் 51:12. நாமும்கூட இதே நோக்கத்துடன் வேதவாக்கியங்களை ஆராயவேண்டும். யோவான் 17:17.

---

**சில நேரங்களில் வேதப்பகுதிகளைப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவி தேவைப்பட்டாலும், எதை நம்புகிறோம் என்பதில் நம் மனதில் எப்போதும் உறுதியான நிச்சயம் இருக்கவேண்டும். ஏன்?**

# எலன் ஜி. ஒய்ட் அவர்களின் எழுத்துகளை வாசித்தல்

எலன் ஜி. ஒய்ட் அவர்களின் எழுத்துகளை எவ்வாறு வாசிக்கவேண்டும்? அவரது எழுத்துகளைச் சரியாகப் புரிந்துகொண்டு, நம் வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கான சில வழிகாட்டுதல்கள் இதோ: முதலாவதாக, சந்தேக மனப்பான்மையோடு வாசிக்காமல், ஜெப சிந்தையோடும், நேர்மறையான அணுகுமுறையோடும், திறந்த மனதோடும் ஆரம்பிக்கவேண்டும். நாம் கேட்கிற, வாசிக்கிற, பார்க்கிற அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் காட்டுகிற கண்ணாடிபோன்றது நம் மனநிலை. பரிசுத்த ஆவியானவர் நம் சிந்தனையை வழிநடத்த வேண்டும். ‘உங்களுடைய சொந்தக் கருத்துகளை நியாயப்படுத்த வேதவாக்கியங்களை ஆராய்ந்தால், நீங்கள் ஒருபோதும் சத்தியத்தைக் கண்டடையமாட்டீர்கள். கர்த்தர் என்ன சொல்கிறார் என்பதைக் கற்றுக்கொள்வதற்காக ஆராயுங்கள்’ என்று எலன்ஒய்ட் சொல்கிறார். அவரது எழுத்துகளை வாசிப்பதற்கும் இது பொருந்தும்.

இரண்டாவது, வாசிக்கிற பகுதியின் பின்னணியைக் கருத்தில்கொள்ளுங்கள். எலன். ஜி. ஒய்ட் அவர்களின் எழுத்துகளை வாசிக்கும்போது, ஓர் அறிக்கையை அல்லது பத்தியை அதன் அசல் வரலாற்று அல்லது இலக்கியப் பின்னணியிலிருந்து பிரித்து அர்த்தங்காண மக்கள் முயலுகிறார்கள். எலன் ஜி. ஒய்ட் அவர்கள், ‘காலமும் இடமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்’ என்று எழுதியுள்ளார். இவ்வாறு பின்னணியைக் கருத்தில் கொள்ளாமல் அர்த்தங்காண்பது, சபை உறுப்பினர்கள் சிலருக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியது; இன்றும் ஏற்படுத்தி வருகிறது. மூன்றாவதாக, நியதிகளை மனதில்வைத்து ஆராயவேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் எலன் ஜி. ஒய்ட் வலியுறுத்துகிற முக்கியக் கருத்து (அல்லது கருத்துகள்) என்ன? உதாரணமாக, 1894 ஆம் ஆண்டில், மிச்சிகனில் உள்ள பேட்டில் கிரீக்கின் சபை உறுப்பினர்களுக்கு எலன் ஒய்ட் அவர்கள் எழுதிய கடிதத்தில், மிதிவண்டிகள் வாங்குவதைக் கண்டித்திருந்தார். (பார்க்கவும்: சபைக்கான சாட்சிகள், தொகுதி 8, பக். 50–53). பணம் உட்பட தேவன் கொடுத்துள்ள வளங்களைச் சரியாக நிர்வகிக்கவேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தவே அவ்வாறு சொன்னார். (அக்காலத்தில் மிதிவண்டிகள் மிகவும் விலை உயர்ந்ததாக இருந்தன). நான்காவதாக, ஒரு குறிப்பிட்ட தலைப்பைப்பற்றி எலன் ஜி. ஒய்ட் எழுதியுள்ள எல்லாவற்றையும் படியுங்கள். புரியாத வரிகளை, அந்தத் தலைப்பு சம்பந்தமாக அவர் போதித்துள்ளவற்றின் பின்னணியில் ஆராயுங்கள். தனது எழுத்துகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைக்குறித்து தான் வாழ்ந்த சமயத்திலேயே எலன் ஒய்ட் வருந்தினார்: ‘சகோதரி ஒய்ட்டிடமிருந்து வந்த செய்தி என்று சொல்லப்படுகிற பல விஷயங்கள், சகோதரி ஒய்ட்டைத் தவறாகச் சித்திரிக்கவும், அவரது கருத்திற்கு உடன்படாத விஷயங்களுக்கு அவரே ஆதரவாகப் பேசியிருப்பதாகக் காட்டுவதற்கும் பயன்படுகின்றன’.

இறுதியாக, அதை எலன் ஜி. ஒய்ட் அவர்கள்தான் கூறினாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எலன் ஜி. ஒய்ட் அவர்கள் சொன்னதாக தவறாகக் கூறப்படுகிற பல கருத்துகள் உலா வருகின்றன. நாம் வாசிப்பது எலன் ஒய்ட் சொன்னதுதானா என்பதை உறுதிப்படுத்த பாதுகாப்பான வழி, அதன் மூல ஆதாரத்தைத் தேடுவதாகும். எலன் ஜி. ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன எழுத்துகள் மூலம் நமக்கு ஓர் அற்புதமான வரம் வழங்கப்பட்டுள்ளது. அவை தவறாகச் சித்திரிக்கப்படுவதும், தவறாகப் பயன்படுத்தப்படுவதும் மிகுந்த வேதனைக்குரியது.

# சுடரை ஏற்றுதல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபை மிகப் பெரிய இழப்புகளைச் சந்தித்தது: ஆரம்பகால முன்னோடிகள் காலமானார்கள், உபதேசரீதி யான கருத்து வேறுபாடுகள் ஒற்றுமையை அச்சுறுத்தின, சபையின் நிறுவனக் கட்டடங்கள் தீ விபத்துகளால் நாசமாயின. ஆனாலும், இத்தகைய கொந்தளிப்பான நிலையால், செய் தியை முன்னோக்கி எடுத்துச் செல்ல புதிய தலைமுறைத் தலைவர்கள் உருவானார்கள். அவர்களில் எல்மர் எல்ஸ்வொர்த் ஆண்ட்ரோஸ் என்பவரும் ஒருவர்.

1868 இல் மினசோட்டாவில் பிறந்த ஆண்ட்ரோஸ், வசதியாக, அரசியல் புகழுடன் வாழ ஆசைப்பட்டார், வக்கீல் படிப்பைப் படிக்கவும் நினைத்தார். ஆனால், சுவிசேஷ ஊழியத்தில் சேரும்படி தேவன் அழைத்தபோது, அவரது திட்டங்கள் தடைபட்டன. உலக ஆசைகளைத் துறந்து, ஓர் ஊழியராகப் பணியாற்றத் தீர்மானித்தார். மேலும், 1899 இல் இங்கிலாந்திற்கு அட்வென்ட்டிஸ்ட் செய்தியைக் கொண்டு செல்கிற துணிச்சலான ஒரு பணியை ஏற்றுக் கொண்டார். ஆண்ட்ரோஸூம் அவரது மனைவி சோபியும் விசுவாசத்துடன் முன்வந்து, மிகுந்த நம்பிக்கையோடு லிவர்பூலை வந்தடைந்தனர். அந்த நம்பிக்கை விரைவில் பலன் தந்தது. லிவர்பூலில், சுமார் 40 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு புதிய சபையைத் துவங்க ஆண்ட்ரோஸ் உதவினார். 1900 ஆம் ஆண்டு வசந்த காலத்திற்குள், மிட்லாண்ட்ஸ் பகுதி யிலும், அதன்பின் விரைவில் பர்மிங்காமிலும் அவர் பிரசங்கித்து வந்தார். ஜூலை மாத இறு திக்குள், 16 பேர் புதிதாக ஓய்வுநாளை ஆசரிக்கத் துவங்கினார்கள், மக்களின் ஆர்வமும் அதிகரித்தது. அக்டோபர் மாதத்தில், பிரிட்டனில் வானிலை கடினமாக இருந்தாலும், அடிப் படை வசதிகள் இல்லாத சூழ்நிலையிலும், ஆண்ட்ரோஸ் மிகுந்த மகிழ்ச்சியோடு இவ்வாறு சொன்னார்: “சுமார் முப்பது பேர் ஓய்வுநாளை ஆசரிப்பதாக வாக்குக் கொடுத்துள்ளனர். . . . சத்தியத்தை இவ்வளவு ஆர்வத்துடன் ஏற்கிற மக்களை இதற்கு முன்பு பார்த்ததே இல்லை. உண்மையாகவே தூதர்கள் எங்களுக்கு முன்பாக வழியை ஆயத்தம் செய்திருக்கிறார்கள்”.

1902 இல், வட இங்கிலாந்து கான்ஃபரன்ஸின் தலைவராக ஆண்ட்ரோஸ் நியமிக்கப்பட்டார். அவரது தலைமையின்கீழ், வட இங்கிலாந்தில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்தது, மேலும் சபைகளின் எண்ணிக்கை ஆறிலிருந்து பதினேழாக உயர்ந்தது.

1905 ஆம் ஆண்டில், அவர் பிரிட்டிஷ் யூனியன் கான்ஃபரன்ஸின் தலைவராக நியமிக் கப்பட்டார். 1907 இல் ஸ்டான்பரோ பார்க் தலைமையகத்தை நிறுவினார். மேலும், மிஷனரி ஊழியம் தொடர்ந்து நடைபெறுவதற்கு அவசியமான பதிப்பகம், கல்வி மற்றும் மருத்துவப் பணி சார்ந்த நிறுவனங்களை உருவாக்குவதற்கும் ஆதரவளித்தார்.

1908 இல், நோய் பாதிப்பு காரணமாக அவரது குடும்பத்தினர் அமெரிக்காவிற்குத் திரும்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, இருப்பினும் இங்கிலாந்தில் ஆண்ட்ரோஸ் ஏற்படுத் திய தாக்கம் நிலைத்து நின்றது. எல்மர் இ. ஆண்ட்ரோஸ் வெறும் நிர்வாகி அல்லர், ஊழியச் சிந்தையுள்ள ஒரு முன்னோடியாக விளங்கினார். இங்கிலாந்தில் அவர் கழித்த ஆண்டுகள், விசுவாசம், தியாகம் மற்றும் தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றின் வல்லமைக்குச் சான் றாகத் திகழ்கின்றன. அவர் மூலமாக, அட்வென்டிஸ்ட் சுடர் பிரிட்டனின் கரைகளில் பிரகாச மாக எரிந்தது, அது இன்றும் தொடர்ந்து பிரகாசித்து வருகிறது.



# தீர்க்கதரிசிகளைச் சோதித்தறிதல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** தானி 10:7–19; உபா 13:1–5; ஏசா 8:20; யோவான் 11:25; அப் 15:36–39; எரே 28:9, 15–17.

**மனன வசனம்:** பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனாலுண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். 1யோவான் 4:1.

பூமியிலுள்ள மிகவும் மதிப்புமிக்க ரத்தினக் கற்களில் உண்மையான வைரமும் ஒன்று. பார்ப்பதற்கு வைரத்தைப்போலவே இருக்கிற, ஆனால் மதிப்பேதும் இல்லாத பல பொருட்களை உருவாக்கமுடியும். அப்படியானால், ஒரு வைரம் உண்மையானதா அல்லது போலியானதா என்பதை எவ்வாறு கண்டறியலாம்? அதற்கு மிகச்சிறந்த வழி அதைச் சோதித்துப்பார்ப்பதுதான். சில சோதனைகளைச் சில எளிய கருவிகளைக் கொண்டு வீட்டிலேயே செய்யமுடியும். மற்ற சோதனைகளுக்குத் தொழில்முறை நிபுணத்துவம் தேவைப்படும். பெரும்பாலும் தனியொரு சோதனை முழுமையான முடிவைத் தருவதில்லை, ஆனால் பல சோதனைகளில் தேறினால், அது உண்மையான வைரம் என்று உறுதியாக நம்பலாம்.

வைரமானது பூமியிலுள்ள மிக வலிமையான பொருட்களில் ஒன்றாகும். வைரத்தின் வலிமைக்கு ஒரு முக்கியக் காரணம், கடுமையான எல்லா வெப்பநிலை மாற்றங்களையும் தாங்குகிற திறன் அதற்கு இருப்பதாகும். ஒரு வைரத்தைச் சோதிப்பதற்கு, அதை ஏதாவது ஒரு வழியில் சூடாக்கி, பின்னர் குளிர்ந்த நீரில் போடவேண்டும். உண்மையான வைரம் சேதமடையாது; ஆனால் போலி வைரம் உடைந்து நொறுங்க அதிக வாய்ப்புள்ளது!

தீர்க்கதரிசன வரம் எந்த ஒரு வைரத்தையும்விட மிகவும் மதிப்புமிக்கது; ஆனாலும் இந்த வரம் தங்களுக்கு இருப்பதாகக் கூறுபவர்களின் வார்த்தைகளை உண்மை என்று நாம் நம்பிவிடமுடியாது. அந்தக் கூற்று கண்டிப்பாகச் சோதிக்கப்படவேண்டும். இந்த வாரம், வேதாகமத் தீர்க்கதரிசிகள், உண்மையாக அந்த வரத்தைப் பெற்றிருந்ததைக் காட்டுகிற வேதாகம நியதிகளை ஆராய்வோம்.

*2026, நவம்பர் 28 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தெய்வீக வல்லமையின் பங்கு

எகிப்திலிருந்து வந்துகொண்டிருந்த மக்களிடம், அவர்கள் மத்தியில் தீர்க்க தரிசன வரம் பெற்றிருந்தவர்களைப்பற்றி தேவன் பேசுகையில், 'என் வார்த்தை களைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த் தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்' என்று சொன்னார். எண் 12:6.

தீர்க்கதரிசனச் செய்தியையும் அழைப்பையும் கொடுப்பது தேவன்; அது ஒருவருடைய மனதில் எழும்புகிற வெறும் உணர்வோ, கருத்தோ அல்ல. ஒரு தீர்க்கதரிசி, பெரும்பாலும் தீர்க்கதரிசனச் சொப்பனங்கள் அல்லது தரிசனங்கள் மூலம் தேவனிடமிருந்து நேரடியாக தகவலைப் பெறுகிறார். தானி 8:1; ஏசா 1:1; அப் 9:10 போன்றவை. அப்போது உடலளவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் நிகழலாம்.

**தானியேல் தீர்க்கதரிசி தரிசனத்தில் இருந்தபோது அவரிடம் ஏற்பட்ட உடல் ரீதியான சில மாற்றங்களைப் பட்டியலிடவும். தானி 10:7-19.**

---

தானியேல் தரிசனத்திற்குள் சென்றதும், அவருக்குப் பெலனில்லாமல் போயிற்று. பின்னர் அந்த அனுபவத்தால் நீடித்த நேரம் அவர் தேவனையே சார்ந் திருந்தார். அவருடன் இருந்தவர்கள் தரிசனத்தைக் காணவில்லை என்றாலும், தெய்வீக பிரசன்னம் மிகவல்லமையாக இருந்ததால் அவர்கள் பீதியடைந்து ஓடி ஒளிந்துகொண்டனர். ஆனாலும், தீர்க்கதரிசனச் செய்தியில் தீர்க்கதரிசி முழுக் கவனம் செலுத்தவே உடல்ரீதியான நிகழ்வுகளை தேவன் பயன்படுத்துகிறார்.

**தீர்க்கதரிசன வரத்தைப்பற்றி உபாகமம் 13:1-5 என்ன சொல்கிறது?**

---

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமை ஒருவரில் செயல்படலாம், ஆனாலும் தேவ ஏவுதலால்தான் அவருக்கு அது நிகழ்வதாக அர்த்தமாகிவிடாது. சாத்தானாலும்கூட இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை வெளிப்படுத்தமுடி யும். தனியொரு ஆதாரம் எதுவும் தீர்க்கதரிசன ஊழியத்தை உறுதிப்படுத்தி விடாது. உடல்ரீதியான நிகழ்வுகளையும் தாண்டி, தீர்க்கதரிசிகள் கண்டிப்பாகச் சோதிக்கப்படவேண்டும். இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகள் உண் மையான தீர்க்கதரிசன வரத்திற்கான சோதனை அல்ல. பூமியில் ஒருவரை, தேவ னுடைய தூதுவராக அங்கீகரிப்பதற்கு, வேதாகமம் சொல்கிற அனைத்துச் சோத னைகளாலும் சோதிக்கவேண்டும். வரலாறு முழுவதும் கள்ளத்தீர்க்கதரிசிகள் தாம் அதிகம் இருந்திருக்கிறார்கள். மத் 7:15.

---

**சில கலாச்சாரங்களில், இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் மற்ற கலாச்சாரங்களைவிட அதிகம் காணப்படுகின்றன. அப்படியென்றால், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்வு உண் மையில் தேவனிடமிருந்து வந்ததுதானா என்பதை அறிய முற்படும்போது ஏன் மிகவும் எச்சரிக் கையாக இருக்கவேண்டும்?**

---

# வேதாகமத்துடன் இணக்கம்

மனிதர்கள் மாற்றி மாற்றிப் பேசலாம், வஞ்சிக்கலாம்; ஆனால் தேவன் பொய் சொல்வதில்லை. எண் 23:19. தீர்க்கதரிசிகள்மூலம் அவர் கொடுக்கிற தீர்க்கதரிசனச் செய்திகளிலும் அந்த மாறாதன்மை வெளிப்படுகிறது. அவர் கொடுக்கிற தீர்க்கதரிசனச் செய்திகளில் அவரது மாறாத உண்மைத்தன்மை காணப்படுகிறது.

**ஏசாயா 8:20 இல் அவர் சொல்கிற முக்கியமான கருத்து என்ன?**

தேவ ஏவுதலால் தான் பேசுவதாக யார் சொன்னாலும், அவரைச் சோதிப்பதற்கான இறுதி அளவுகோல் வேதாகமம்தான். தீர்க்கதரிசிகள் சொல்வதை வேதாகமம் சொல்வதோடு ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களைச் சோதிக்கவேண்டும். ஓர் உண்மையான தீர்க்கதரிசி ஒருபோதும் வேதாகம உண்மைக்கு முரணாகப் பேசவோ, அதைக் குறைத்து மதிப்பிடவோ, அதிலிருந்து கவனத்தைத் திருப்பவோ மாட்டார். அதனால்தான், கள்ளப்போதகர்கள் அல்லது கள்ளத்தீர்க்கதரிசிகளால் வஞ்சிக்கப்படாமல் கர்த்தரைப் பின்பற்ற விரும்புகிறவர்களுக்கு வேதாகம அறிவு மிகவும் அவசியமாகிறது.

பழைய, புதிய ஏற்பாடுகளில், அடுத்தடுத்து வந்த தீர்க்கதரிசிகள் பெரும்பாலும் தங்கள் காலத்திற்கு முன்னர் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனச் செய்திகளைத் தங்களது சொந்த தீர்க்கதரிசன ஊழியத்திற்கான அளவுகோலாக முன்னிறுத்தி, அவற்றைச் சுட்டிக்காட்டினர். பிற்கால வேவதாகமத் தீர்க்கதரிசிகள் தேவனுடைய திட்டங்களையும் இரட்சிப்பின் வழியையும்பற்றிய கூடுதல் விபரங்களை வெளிப்படுத்துகிறார்கள்; ஆனால், ஏற்கனவே தேவன் கொடுத்துள்ள அடிப்படைக் கொள்கைகளுக்கும் கருத்துகளுக்கும் முரணாகப் பேசுவதேயில்லை.

**தேவனைப்பற்றியும், பல நூற்றாண்டுகளாக அவர் கொடுத்துள்ள தீர்க்கதரிசனச் செய்திகளைப்பற்றியும் 2பேதுரு 1:19–21; ரோமர் 15:4; யாக்கோபு 1:17 வசனங்கள் என்ன சொல்கின்றன?**

இரட்சிப்பின் திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கான அடிப்படையை ஆதி 3:15 இல் தேவன் கொடுத்த முதல் தீர்க்கதரிசனத்தில்தானே பழைய ஏற்பாடு வழங்கியுள்ளது. பலிமுறைகள் இத்திட்டத்தை மேலும் விளக்கிக்காட்டின; ஆனால் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் வருகை, வாழ்க்கை, தியாகமரணம்பற்றிய விவரங்கள் பிற்காலத்தீர்க்கதரிசனங்களில் படிப்படியாகத் தெளிவுபடுத்தப்பட்டன. மக்கள் எப்போது சத்தியத்தைப் புரிந்துகொள்ளுகிற நிலையில் இருந்தார்களோ, அப்போதுதான் தேவன் சத்தியத்தை வெளிப்படுத்தியதை வேதாகமப்பதிவுகாட்டுகிறது. இது ஒவ்வொரு புதிய தலைமுறையினரும் சத்தியத்தைப்பற்றிய ஆழமான புரிதலைப்பெற வழிவகுக்கிறது. இதுதான், ‘படிப்படியாக வெளிப்படுகிற சத்தியம்’ அல்லது ‘சத்தியத்தின் வெளிப்பாடு’ என்று அழைக்கப்படுகிறது. அதாவது, முந்தைய தலைமுறையினரைவிட பிந்தைய தலை முறையினர் பெரும்பாலும் தேவனுடைய சத்தியத்தைப்பற்றிய ஆழமான புரிதலைப் பெற்றிருப்பார்கள்.

ஆனாலும், முக்கியமான ஒரு கருத்து உள்ளது: சத்தியம்பற்றிய புதிய வெளிப்பாடுகள், தேவன் முன்னரே கொடுத்துள்ள சத்தியத்திற்கு ஒருபோதும் முரணாக இருக்காது.

# கிறிஸ்து மாம்சத்தில் வருதல்

உலகத்தின் பிற முக்கிய மார்க்கங்களைச் சேர்ந்த தீர்க்கதரிசிகளாக இருக்கட்டும்; அல்லது எந்த மார்க்கத்தையும் பின்பற்றாமல், ஆவிக்குரிய உலகத்துடன் தொடர்புள்ளவர்களாக இருக்கட்டும். இயேசு மாம்சத்தில் வந்ததை அவர்கள் நம்பவில்லை என்றால், அவர்களைப் புறக்கணித்துவிடலாம். 1யோவான் 4:1-3. ஒரு நபர் 'மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாவிட்டால்', அவர் 'தேவனால் உண்டானவரல்ல'. 1யோவான் 4:3.

இயேசு ஒரு மனிதர் அல்லர், மனிதனைப்போலக் காட்சியளித்தார் என்று போதித்த கள்ளப்போதகர்களை மனதில் வைத்து யோவான் இந்த வசனங்களை எழுதினார். கள்ளத்தீர்க்கதரிசிகளைச் சோதிப்பதற்கு இதுமட்டும் வழியல்ல. இயேசு இந்தப் பூமியில் உண்மையிலேயே வாழ்ந்த ஒரு நபர் என்று விசுவாசிப்பவர்தான் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கமுடியம் என்று மட்டும் அந்த வசனங்கள் சொல்லவில்லை. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இயேசுவைப்பற்றின இந்த உண்மையை நம்புகிறார்கள். அந்தக் காலத்தில் நிலவிய ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை யோவான் கையாளுகிறார்; யோவானின் அந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகள் அன்றைய குறிப்பிட்ட சூழ்நிலைக்குத் தேவைப்பட்டாலும், பிற்கால சந்ததியினருக்கான முக்கியமான உண்மைகளும் அவற்றில் அடங்கியுள்ளன.

**பின்வரும் வசனங்கள் இயேசுவைப்பற்றி என்ன சொல்கின்றன? யோவான் 3:16; 2கொரி 5:21; யோவான் 11:25; எபி 4:14,15; யோவான் 14:1-3.**

இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்தாலும், அவர் உண்மையிலேயே ஒரு மனிதராக இருந்தார் என்றும் உண்மையான தீர்க்கதரிசிகள் நம்பவேண்டும். மேலும் இயேசுவைப்பற்றிய முழுச் சத்தியத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவரது ஊழியம், பாவமற்ற வாழ்க்கை, பாவநிவாரண மரணம், உயிர்த்தெழுதல், பரலோகத்தில் செய்கிற பிரதான ஆசாரிய ஊழியம், இரண்டாம் வருகை ஆகிய அனைத்தையும் விசுவாசிக்கவேண்டும். ஒரு தீர்க்கதரிசி, இயேசுவையே மையமாகப் போதிக்கவேண்டுமே தவிர, பெயரளவில் அவரைப்பற்றிப் பேசுவது போதாது. ஆண் தீர்க்கதரிசியோ, பெண் தீர்க்கதரிசியோ, அவரது செய்திகள் மக்களை இயேசுவோடு ஓர் இரட்சண்ய உறவுக்குள் வழிநடத்தவேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் பிறக்கிற தீர்க்கதரிசன வார்த்தை தேவனுடைய சுடரொளியாகும்; விடிவெள்ளியாகிய இயேசு நம் இருதயங்களில் உதிக்கும்வரை நம்மில் உள்ள இருளை அது விரட்டுகிறது. மேலும், தீர்க்கதரிசன வரம் நம்மை அவரோடு இணைத்து, அவரைநோக்கியே நம்மை வழிநடத்துகிறது.

இயேசுவை உயர்த்துகிறவர்கள் தங்களுக்கு என்று ஒரு கூட்டத்தை உருவாக்கவோ தங்களை விளம்பரப்படுத்தவோ மாட்டார்கள். அப் 4:12. மக்களிடம் ஆதாயம் தேடாமல், அவர்களுக்குச் சேவைசெய்வார்கள். அதே நேரத்தில், நாளை நாம் பார்க்கப்போவதுபோல, தேவனுடைய தீர்க்கதரிசிகளும் மனிதர்களே; நம்மைப்போலவே சுவிசேஷம் தேவைப்பட்ட பாவிகளே.

---

**முற்றிலும் தேவனாகிய இயேசு, நம்முடைய பாவங்களுக்கான தண்டனையைத் தாமே சுமந்து, நமக்குப் பதிலாக மரித்தார். இதைப் புரிந்துகொள்வது ஏன் நம்முடைய விசுவாசத்திற்கு மையமாக இருக்கிறது? இந்தப் போதனையை மறந்தால் எதை இழப்போம்?**

# நேர்மறையான கனிகள்

மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவச் சபையின் அடித்தளங்களை இயேசு விளக்கினார். மத் 5-7. தீர்க்கதரிசன ஊழியமும் அந்த அடித்தளத்தின் ஒரு பகுதி. ஏனென்றால், 'அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்' என்று கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எதிராக இயேசு எச்சரித்தார். மத்தேயு 7:20. ஒரு கனியின் தரத்தை குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகுதான் மதிப்பிடமுடியும். ஒரு தீர்க்கதரிசியின் குணத்தையும், அவரது செய்திகளால் ஏற்படும் விளைவுகளையும் கவனித்தால் மதிப்பிடலாம்; அந்தத் தீர்க்கதரிசி மற்றவர்களை தேவனிடம் ஈர்க்கிறாரா அல்லது அவரைவிட்டு விலகச்செய்கிறாரா என்பதை அறியலாம்.

**தீர்க்கதரிசிகளைப்பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன? யோனா 1:1-3; அப் 15:36-39; கலா 2:11-14.**

தீர்க்கதரிசியாக இருப்பது ஒருவரைப் பாவமற்றவராகவோ, தனிப்பட்ட முறையில் தவறே செய்யாதவராகவோ மாற்றிவிடுவதில்லை. யோனா, பவுல், பேதுரு போன்றோரிடம் தவறுகளும் குணக்குறைபாடுகளும் இருந்தன. தேவன்மட்டுமே குறையற்றவர்; அவரது தூதுவர்கள் ஒருபோதும் அப்படி இல்லை. நம் எல்லோரையும்போல, தீர்க்கதரிசிகளுக்கும் பலவீனங்கள் உண்டு. ஆனால் தீர்க்கதரிசிகளுடைய வாழ்க்கைமுறை கண்டிப்பாக தேவனுக்குப் பிரியமாக இருக்கவேண்டும். மேலும், தாங்கள் சொல்கிற செய்திக்கு முரணாக வாழ்ந்து, தங்களது ஊழியத்தை தாங்களே பாழாக்கிவிடக் கூடாது. எந்தவொரு தீர்க்கதரிசியும் இயேசுவின் பூரண முன்மாதிரியாக விளங்குவதில்லை, ஆனால் உண்மையான ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய ராஜ்யத்தின் கொள்கைகளுக்கும் வாழ்க்கைமுறைக்கும் தன்னை அர்ப்பணித்திருப்பார். மத் 7:16-20. தன்னை தேவனுடைய தூதுவராகச் சொல்லிக்கொண்டும், தான் அறிவிக்கிற செய்திக்கு முற்றிலும் முரணான வாழ்க்கை வாழுகிற எவரையும் சந்தேகத்துடனேயே பார்க்கவேண்டும்.

தீர்க்கதரிசன அழைப்பு கடினமானதாக இருந்தபோதிலும், பல தீர்க்கதரிசிகள் தங்களது ஊழியத்தின்போது 'நல்ல கனிகளை' வெளிப்படுத்தினார்கள். உதாரணமாக, இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்தின்வழியே மோசே வெற்றிகரமாக வழிநடத்தினார். உபா 34:10-12. நிறுத்தப்பட்டிருந்த இரண்டாவது தேவாலயத்தின் கட்டுமானப்பணியை யூதாவின் குடிகள் மீண்டும் தொடங்குவதற்கு தன் உண்மையான ஊழியத்தால் ஆகாய் ஊக்குவித்தார். ஆகாய் 1:12. ஏசாயாவின் தளராத ஊழியம் நான்கு யூத ராஜாக்களுக்கு வழிகாட்டியாக இருந்தது; கொந்தளிப்பான ஒரு காலத்தில் அவர்களை வழிநடத்தி, மேசியாவை அவர்களுக்குச் சுட்டிக்காட்டியது. ஏசா 39:5,6; 53:4-6. தானியேலின் உருக்கமான பாவ அறிக்கை, எரேமியாவின் கண்ணீர் மல்கிய அர்ப்பணிப்பு ஆகியவையும் மறக்கமுடியாதவை. தானி 9:15; எரே 9:1. தேவனுடைய தீர்க்கதரிசிகள் உபத்திரவத்திற்கும், துன்புறத்தலுக்கும் ஆளானாலும், அவர்மீது எப்போதும் உண்மையான அன்பைக்காட்டினர்; இதுவே கனிவிருத்தியுள்ள ஊழியத்தின் அடையாளம்.

---

**தேவனுடைய மனுஷர்கள் அல்லது மனுஷிகள் தங்களது செயல்களாலோ குணநலன் குறைபாடுகளாலோ எத்தனை முறை உங்களை ஏமாற்றமடையச் செய்திருக்கிறார்கள்? அந்த அனுபவத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட முக்கியமான பாடம் என்ன?**

# நிறைவேறின தீர்க்கதரிசனங்கள்

தீர்க்கதரிசி என்றாலே எதிர்காலத்தைக் கணிப்பவர் என்றுதான் பெரும்பாலும் கருதப்படுகிறது. ஆனால், அது தீர்க்கதரிசியின் பணியில் ஒரு பகுதிமட்டுமே. தீர்க்கதரிசியின் பணி அதைவிட பல அம்சங்களை உள்ளடக்கியது. தீர்க்கதரிசிகள் மக்களை மீண்டும் தேவ வார்த்தையிடம் வழிநடத்துகிறார்கள்; அதோடு ஆலோசனையும் எச்சரிப்பும் ஊக்கமும் வழங்குகிறார்கள்.

**தீர்க்கதரிசிகள் எதிர்காலத்தைப்பற்றி முன்னுரைப்பதால், எதிர்காலத்தை மக்கள் அறிந்து, ஆயத்தப்படுவதற்கு உதவுகிறார்கள். அதுதவிர அவர்கள் அவ்வாறு முன்னுரைக்க என்ன நோக்கம் உண்டு? எரே 28:9,15-17.**

---

முன்னுரைத்தபடியே நிறைவேறுவதும் ஒரு தீர்க்கதரிசியைச் சோதிப்பதற்கான மற்றொரு வழி. ஓர் உண்மையான தீர்க்கதரிசியின் முன்னுரைத்தல்கள் அப்படியே நடக்கவேண்டும்: ‘ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்’. உபா 18:22. இந்தச் சோதனை சவாலானதாக இருக்கலாம்; ஏனெனில் சில தீர்க்கதரிசனங்கள் நிபந்தனைக்குட்பட்டவை. அதாவது, அதற்குரிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், தீர்க்கதரிசி முன்னுரைத்தபடி அவை நடக்காமல் போகலாம்.

நினிவேக்கு எதிராக யோனா கொடுத்த எச்சரிப்புச் செய்தியில் இந்த நியதியைக் காண்கிறோம். ‘இன்னும் நாற்பது நாளைக்குள்ளே நினிவே கவிழ்க்கப்பட்டுப்போகும்’ என்று யோனா மிகச்சுருக்கமாக, நேரடியாகப் பிரசங்கித்தார். யோனா 3:4. ஆனாலும், அவர் கணித்தபடி அது நடக்கவில்லை. ஏன்?

**நிபந்தனைக்குட்பட்ட தீர்க்கதரிசனம்பற்றி இது நமக்கு என்ன கற்பிக்கிறது? எரே 18:7-10.**

நிபந்தனைக்குட்பட்ட தீர்க்கதரிசனங்கள், தேவனுடைய செய்திகளுக்கு மக்கள் எவ்வாறு பதிலளிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அமைகிற தீர்க்கதரிசனங்கள் ஆகும். மக்கள் தங்களின் மனநிலையையும் நடத்தையையும் மாற்றினால், முன்னுரைக்கப்பட்ட நிகழ்வு நடக்காமல் போகலாம். நினிவே மக்கள் யோனாவின் தீர்க்கதரிசனச் செய்திக்கு மனதாரக் கீழ்ப்படிந்து, தங்கள் வழிகளை மாற்றிக்கொண்டார்கள், அதனால் தேவன் அவர்களை அழிக்கவில்லை. யோனா 3:10. நினிவேயின் பிற்காலத் தலைமுறையினர் இந்தத் தீர்க்கதரிசன எச்சரிப்பை மறந்து, மீண்டும் தீயவர்களாக, கொடூரமானவர்களாக மாறிய போது, தேவன் அதை அழித்தார். தேவன் எதிர்காலத்தை அறிந்திருக்கிறார், ஆனால் நாம் அறியோம். நம்முடைய தேர்வுகள்தாம் நம் எதிர்கால எதார்த்தங்களைப் பெரிதும் தீர்மானிக்கின்றன.

---

**நிபந்தனைக்குட்பட்ட தீர்க்கதரிசனம் என்கிற கோட்பாட்டைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியம்? இந்தப் புரிதலால் எவ்வாறு வேதாகமச் சத்தியத்தை இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ளலாம்?**

# ‘ருசித்துப் பாருங்கள்’

செவந்த்–டே அட்வென்டிஸ்ட் இயக்கம் உருவான காலம் முதல் இன்றுவரை, எலன் ஜி. ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன வரத்தை ஏற்றுக்கொள்வதில், வேதாகமத் தீர்க்கதரிசிகள் எதிர்கொண்டதுபோலவே பல சவால்கள் எழுந்திருக்கிறது. டிசம்பர் 1844 இல் எலன் ஜி. ஒய்ட் பெற்ற முதல் தரிசனத்திற்குப் பிறகு, சிலர் அவருடைய தீர்க்கதரிசனக் கூற்றுகளில் கேள்வி எழுப்பினர். இது, பின்னர் செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகள் என்று அழைக்கப்பட்ட, ஓய்வுநாளைக் கடைப்பிடித்துவந்த அட்வென்டிஸ்ட்டுகள் எலன் ஜி. ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன வரத்திற்கு ஆதரவாகப் பேசுவதற்கு வழிவகுத்தது.

முதலாவதாக, காலத்தின் இறுதிவரை தீர்க்கதரிசன வரம் தொடரும் என்பதற்கான இறையியல்ரீதியான நியாயங்களை அவர்கள் முன்வைத்தனர். நவீன காலத்திலும் தீர்க்கதரிசன வரம் வெளிப்படுமென வேதாகமம் வலியுறுத்துவதாக வாதிட்டனர். யோவேல் 2; வெளி 12:17; இன்னும் பிற பிற வேதப்பகுதிகளின் அடிப்படையில், இந்தத் தீர்க்கதரிசன வரம் ‘கடைசிநாட்களில்’ வெளிப்படும் என்றும், அது இறுதிக்காலதேவமக்களின் ‘அடையாளமாக’ மாறும் என்றும் கூறினர். இரண்டாவதாக, எலன் ஜி. ஒயிட் அவர்களின் தீர்க்கதரிசன வரம் விசுவாசிகள்மீது நேர்மறையான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதாக ஆரம்பகால அட்வென்டிஸ்ட்டுகள் குறிப்பிட்டனர். உதாரணமாக, 1840 களின் பிற்பகுதியில் வேதாகமக் கோட்பாடுகளில் விசுவாசிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் நிலவியபோது, அப்போது நடைபெற்ற ஓய்வுநாள் கான்ஃபரன்ஸுகளில் அவர்கள் ஒன்றாகக் கூடுவதற்கு அவரது தீர்க்கதரிசன உட்கருத்துகள் உதவின. அதற்குப்பிந்தைய தசாப்தங்களிலும் அவரது வரம் தொடர்ந்து ‘நல்ல கனிகளைத்’ தந்தது; மேலும் அவரது எழுத்துகள் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் விசுவாச சமூகத்திற்குள் இன்றும் செல்வாக்கு செலுத்திவருகின்றன.

எலன் ஜி. ஒய்ட் அவர்களுக்கு ஆதரவான மூன்றாவது வாதம், அவர் தரிசனங்களைக் கண்டபோது காணப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட அம்சங்களாகும். முன்பு குறிப்பிட்டபடி, அவர் தரிசனத்தில் இருந்தபோது, இயற்கைக்கு அப்பாற்பட்ட அவரிடம் காணப்பட்டன. அதாவது, தனக்கு தெரியாத உண்மைகளையும் சூழ்நிலைகளையும் கூறினார், எதிர்கால நிகழ்வுகளை முன்னுரைத்தார், மனித பெலத்திற்கு அப்பாற்பட்ட பலத்தை வெளிப்படுத்தினார், அவருடைய தரிசன அனுபவங்களின் நேரத்தை அவரால் கட்டுப்படுத்தவோ மாற்றியமைக்கவோ இயலவில்லை, இதுபோன்றவை அதில் அடங்கும்.

இன்று செவந்த்–டே அட்வென்டிஸ்டுகள், எலன் ஜி. ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன வரத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இந்த ஆதாரங்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்த வாதங்கள் சரியானவை என்றாலும், அவரது வரத்திற்கு மிகச்சிறந்த ‘சான்று’, அவருடைய எழுத்துகளை நாம் தனிப்பட்ட முறையில் வாசித்து அனுபவிப்பதே ஆகும். சங்கீதக்காரனாகிய தாவீது சொல்வதுபோல, ‘கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்’. சங் 34:8. அவர் எழுதிய சிறிய ஆனால் மிகவும் புகழ்பெற்ற ‘கிறிஸ்துவிடம் செல்லும் வழி’ எனும் புத்தகத்தை வாசிப்பது, இதைச் சோதிப்பதற்கு மிகச்சிறந்த ஆரம்பமாக இருக்கும். தொடர்ச்சியாக, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை உள்ள மாபெரும்போராட்டத்தின் பின்னணியை விவரிக்கிற ஐந்து பாகங்கள் கொண்ட ‘யுகங்களின் போராட்டம்’ என்ற புத்தகத் தொகுப்பை வாசிக்கலாம்.

# இறுதியில் ஓர் ஊழியர்!

**கிரேஸ் ன்கேஷிமனா**

அப்போது எனக்குப் பதினாறு வயது, ஒரு தன்னார்வலராக வெளிநாட்டில் சேவை செய்வதற்கான வாய்ப்புகளைத் தேடத்தொடங்கினேன். ஆனால் அடுத்த சில ஆண்டுகளுக்கு அது சாத்தியமாக வாய்ப்பில்லை என்பது புரிந்தது. ஆனாலும், அட்வென்டிஸ்ட் தன்னார்வத் தொண்டு இணையதளத்தில், சேவைக்கான அழைப்பு விவரங்களைப் பார்ப்பதும், ஒரு மிஷனரியாக வெளிநாட்டிற்குச் சென்று, ஆசிரியராகப் பணிபுரிய ஆசைப்பட்டேன்.

ஆனால், பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோது, அதைப்பற்றி முற்றிலும் மறந்துவிட்டேன். மிஷனரி முயற்சிகளுக்கு நான் முன்னுரிமை அளிக்கவில்லை. ஆனாலும், இந்தியாவில் ஒரு மாதம் மிஷனரி வேலை செய்வதற்காக, எனது இறுதியாண்டு படிப்பின்போது, சிறு இடைவெளி எடுத்தேன். எனக்கு அங்கு ஓர் அற்புதமான அனுபவம் கிடைத்தது. ஆனாலும், அதை நீண்ட காலத்திற்குச் செய்ய நான் திட்டமிடவில்லை. 22 வயதில், படிப்பு முடித்து, வேலை தேடினபோது, வேலை நேரம்போக ஊழியம் செய்யவும் போதுமான நேரம் இருக்கிற வேலையே உகந்த வேலையாக இருக்கும் என்பதை உணர்ந்தேன். நான் வாழ்ந்த பகுதியில் சேவையில் ஈடுபட ஆர்வமாக இருந்தேன். அட்வென்டிஸ்ட் தன்னார்வ ஊழியச் சேவையில் இருந்தால்தான், அப்படிப்பட்ட பணிகளைச் செய்முடியும் என்பது புரிந்தது.

அட்வென்டிஸ்ட் தன்னார்வ ஊழிய இணையதளத்தில் வாய்ப்புகளைத் தேடினேன், மேலும் மாலாங் அட்வென்டிஸ்ட் அகாடமியில் ஆசிரியர் பணிக்கு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டது. என்னுடைய இருபத்தி மூன்றாவது பிறந்தநாளுக்கு அடுத்த நாள் நான் இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரத்திலிருந்து இந்தோனேசியாவிற்குப் புறப்பட்டேன். எனக்கு நானே கொடுத்துக்கொண்ட மிகச்சிறந்த 'பரிசு' இதுதான் என்பதில் எனக்கு எந்தவொரு சந்தேகமும் இல்லை!

அந்தப் பள்ளியில் அனைத்து மதப்பிரிவுகளையும் நம்பிக்கைகளையும் சேர்ந்த மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மேலும் அப்பள்ளி மாணவர்களின் வாழ்க்கையில் உண்மையிலேயே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. உதாரணமாக, ஞாயிற்றுக்கிழமை ஆராதனை செய்யும் பின்னணியில் இருந்து வந்த எனது மாணவர்களில் ஒருவர், இந்தப் பள்ளியில் பெற்ற அனுபவத்தின் காரணமாக இப்போது செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் ஞானஸ்நானம் பெற்று, உறுப்பினராக உள்ளார். மேலும், மூன்று நாள் நடக்கும் அந்த முகாமில் பல ஆராதனை கூட்டங்கள் நடக்கும் என்று தெரிந்தும், ஒரு முஸ்லிம் மாணவர் பாத்ஃபைண்டர் முகாமில் சேர பதிவு செய்தார், எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எனது சாட்சியத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும், ஆராதனைகளை முன்னின்று நடத்துவதன் மூலமும், மாணவர்களை ஜெபிக்க ஊக்குவிப்பதன் மூலமும் எனது மாணவர்கள் அனைவரின் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் என்னுடைய பங்களிப்பை வழங்கிவருகிறேன்.

இதன் மூலம், என்னைப்பற்றியும் தேவனைப்பற்றியும் நிறைய கற்றுக்கொண்டேன். மாலாங் எப்போதும் எனக்கு ஓர் இரண்டாவது வீடுபோலத் தோன்றும். மிஷனரி வேலையில் உங்களுக்கு ஆர்வம் இருந்தால், அட்வென்டிஸ்ட் தன்னார்வச் சேவைமூலம் விண்ணப்பிக்க உங்களுக்குப் பரிந்துரைக்கிறேன். எதிர்காலத்தில் வரவிருக்கும் சவால்களுக்கு அனைத்து மிஷனரிகளும் தயாராக இருக்கவேண்டுமானால், 'மிஷனரி ஆயத்தப் பயிற்சி'யை அவர்கள் கட்டாயமாக முடித்திருக்கவேண்டும்.

பாடம் **10** நவம்பர் 28 - டிசம்பர் 4



# தீர்க்கதரிசன அதிகாரமும் பொருத்தமும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 4:10–16; லூக் 8:22–25; யோவான் 3:1–10; அப் 16:25–34; 1கொரி 5:1–5; லூக் 7:28.

**மனன வசனம்:** தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இரு புறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. எபிரெயர் 4:12.

கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெற்ற கிழக்கு ஜெர்மனியில் நவம்பர் 9, 1989 அன்று, நேரலைத் தொலைக்காட்சியில் குந்தர் ஷாபோவ்ஸ்கி வெளியிட்ட அறிக்கை, பெர்லின் சுவர் இடிக்கப்படக் காரணமான நிகழ்வாக அமைந்தது. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போது, கிழக்கு ஜெர்மனியின் ஊடகச் செய்தித்தொடர்பாளராகப் பேசிய ஷாபோவ்ஸ்கி, தவறாக ஓர் அறிக்கையைக் கூறிவிட்டார். கிழக்கு ஜெர்மானியர்கள் நீண்ட, கடினமான விசா நடைமுறைகளுக்குப் பிறகு மேற்கு ஐரோப்பாவிற்குச் செல்ல அனுமதிக்கப்படலாம் என்று சொல்வதற்குப் பதிலாக, கிழக்கு ஜெர்மனியர்கள் மேற்கு ஐரோப்பாவிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறிவிட்டார். இந்தக் கொள்கை மாற்றம் எப்போது நடைமுறைக்கு வரும் என்று ஒரு நிருபர் கேட்டபோது, ‘எனக்குத் தெரிந்தவரை, இது தாமதமின்றி உடனடியாக நடைமுறைக்கு வருகிறது’ என்று ஷாபோவ்ஸ்கி கூறினார். அடுத்த சில நிமிடங்களிலேயே, அரசாங்கம் அறிவித்தபடியே தங்களை உள்ளே அனுமதிக்கக் கோரி, எல்லைச் சாவடிகளை நோக்கி மக்கள் திரளத் தொடங்கினர்.

ஒரு நிறுவனத்தின் அல்லது ஒரு நாட்டின் சார்பாகப் பேசுவதற்கு மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. ஆனால், தேவனுக்காகப் பேசுபவர்கள் எந்த அதிகாரத்தால் பேசுகிறார்கள்? வேதாகமத் தீர்க்கதரிசிகள் பெற்றுள்ள அதிகாரத்தையும், வேதாகமத்தில் எந்தவொரு புத்தகத்தையும் எழுதாத தீர்க்கதரிசிகளான நாத்தான், யோவான் ஸ்நானன், எலன் ஜி. ஒய்ட் போன்றவர்களுக்கு ஏதேனும் அதிகாரம் இருந்தால் அது என்ன என்பதையும் இந்த வாரம் ஆராய்வோம்.

***2026, டிசம்பர் 5 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# தேவ அதிகாரத்தின் பிரதிநிதிகள்

உங்களுக்காகப் பேச ஒருவருக்கு அனுமதி வழங்குவதற்கு முன்பு, அவர் நம்பிக்கைக்குரியவராக இருக்க நினைப்பீர்கள் அல்லவா? அந்த ஆணோ பெண்ணோ, உங்களுடைய நிலைப்பாட்டை அறிந்து, அதை உண்மையுடன் வெளிப்படுத்துவது முக்கியம்.

**மோசே ஒரு மேய்ப்பனாகக் கழித்த காலம், தேவனுடைய செய்தித்தொடர்பாளராக மாறுவதற்கு அவரை எவ்வாறு ஆயத்தப்படுத்தியது? யாத் 2:11–15; 3:1–3, 10–13.**

---

மோசேயினுடைய வாழ்க்கையின் முதல் 40 ஆண்டுகள் எகிப்தின் மிகச் சிறந்த கல்வியைக் கற்பதில் கழிந்தன. ஆனால், தேவனுடைய தூதுவராக மாறுவதற்கு அது அவரை ஆயத்தப்படுத்தவில்லை. உலகத்தின் கவனச்சிதறல்கள் ஏதுமின்றி, ஒரு மேய்ப்பனாக அடுத்த 40 ஆண்டுகளை அவர் வனாந்தரத்தில் கழிக்கவேண்டியிருந்தது. ஓர் இளவரசனாக, தான் கற்றிருந்த பல விஷயங்களைப் பல வழிகளில் அவர் மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. இஸ்ரவேலர்களை விடுவிப்பதில் தேவனோடு இணைந்து பணியாற்றுவதற்கு முன்பு யாருக்காக, தான் பேசவேண்டுமோ, அந்தத் தேவனைப்பற்றி மோசே முழுமையாக அறிந்துகொள்ள வேண்டியிருந்தது.

**தேவனுக்கும் மோசேக்கும் இடையே நடந்த உரையாடலில், தீர்க்கதரிசிகள் அழைக்கப்படுகிற விதம்பற்றியும், அவர்களது பணியைப்பற்றியும் என்ன பார்க்கிறோம்? யாத் 4:10–16.**

தேவனைப்போல மோசே செயல்படுமாறும், மோசேயின் வாயாக ஆரோன் செயல்படுமாறும் சொல்லப்பட்டது. யாத் 4:16; 7:1. மோசேயும் ஆரோனும் சேர்ந்து செயல்பட்டதுபோல, தம்முடைய தீர்க்கதரிசிகள் தாம் கொடுக்கிற செய்தியை மிகச்சிறப்பாக அறிவிக்கும்படி அதற்கான வழியைக் கண்டறிய தேவன் உதவுகிறார்.

முன்பு மோசே தோல்வியைச் சந்தித்திருந்தார். சக இஸ்ரவேலன் ஒருவனுக்கு உதவப்போக, அவரது அதிகாரத்தைக்குறித்துக் கேள்வி எழுப்பினார்கள். யாத் 2:14. எனவே, மோசேக்கு இருந்த பயம்பற்றி, தேவனுக்குப் புரிந்திருக்கும். மோசேயின் பயங்களுக்கு தேவன் பொறுமையாகப் பதிலளித்தார். சாக்குப்போக்குச் சொல்வதற்கு எந்தக் காரணமும் இல்லாத அளவுக்குப் பேசினார், ஆனாலும், மோசே அந்த அழைப்புக்கு இணங்க மறுத்தார். அவரது பயம் அவிசுவாசமாக மாறியிருந்தது. அவரது தயக்கம், அவரைப் பயன்படுத்த தேவனுக்குள்ள திறனைக் கேள்விக்குள்ளாக்குவதுபோல இருந்தது. அப்போதுதான், தயக்கம்காட்டிய அந்தத் தீர்க்கதரிசி தகுதியவற்றவராக இருந்தாலும், அவர் செய்யவேண்டியதை தேவன் கட்டளையிட்டார். யாத் 3:14-17.

---

**நீங்கள் ஒரு தீர்க்கதரிசியாக இல்லாமல் இருக்கலாம்; ஆனால் உங்கள் வாழ்நாளில் அவருக்காக என்ன செய்யும்படி தேவன் உங்களை அழைத்திருக்கிறார்? இந்த அழைப்பிற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதற்கான மிகச்சிறந்த வழி எது?**

# இயேசுவின் அதிகாரம்

**இயேசுவின் அதிகாரத்திற்கு என்ன அடிப்படை இருந்தது? அந்த அதிகாரத்திற்கு என்ன ஆதாரம் இருந்தது? மத் 21:23-27; யோவான் 17:2.**

இயேசு போதித்துக் கொண்டிருந்தபோது, ஆசாரியர்கள் அவரிடம் வந்து, அந்த ஊழியத்தைச் செய்ய அவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது என்று வற்புறுத்திக் கேட்டார்கள். இயேசு உள்ளூர்ப் பள்ளிகள் எதிலும் பட்டம் பெறவில்லை; ரபிகளின் பாரம்பரியப் பள்ளிகளிலும் பயிற்சி பெறவில்லை. அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக, பதிலுக்கான வழியை இயேசு காட்டினார்; யோவான் ஸ்நானனின் அதிகாரம் யாரிடமிருந்து வந்ததெனத் தம்மிடம் கேள்வி கேட்டவர்களிடம் திருப்பிக் கேட்டார். அதற்குப் பதிலளிக்க அவர்கள் மறுத்ததால், யோவானின் ஊழியத்திற்கு மகுடமாக இருந்த தேவனுடைய வல்லமையை நிராகரித்தார்கள்; அதுமட்டுமல்ல, யோவானைப்போலவே தேவனால் அனுப்பப்பட்ட இயேசுவின் அதிகாரத்தையும் நிராகரித்தார்கள்.

**இயேசுவின் அதிகாரத்தைப்பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன? மத் 7:28,29; மாற்கு 1:21-27; லூக் 8:22-25; 9:1; யோவான் 5:25-27; 7:38.**

இயேசு மனுக்குலத்தைச் சிருஷ்டித்தவர். யோவான் 1:3. இரட்சகர். ரோமர் 3:24. அந்த வகையில், எல்லா அதிகாரமும் அவருக்குண்டு. அவர் தேவ வார்த்தையாக இருக்கிறார். இயேசு தமது பூலோக வாழ்க்கையிலும் ஊழியத்திலும் வெளிப்படுத்திய தெய்வீக அதிகாரத்தை யாராலும் போலியாகச் செய்யவோ, தாங்களே உருவாக்கவோ முடியாது. இயேசுவின் போதனைகளைக் கேட்டவர்கள் ஆச்சரியமடைந்தார்கள், ஏனென்றால், அதிகாரமுடையவராய் அவர் போதித்தார். மத் 7:29.

இயேசுவிடம் இயற்கைக்கு அப்பாற்பட்ட தீர்க்கதரிசன அதிகாரம் இருந்ததை சுவிசேஷப் புத்தகங்கள் அனைத்தும் பதிவுசெய்துள்ளன. இயேசு மனிதரின் பாவங்களை மன்னித்தார். மாற்கு 2:10,11. பிசாசுகளைத் துரத்தினார். மாற்கு 3:15. மனிதர்களின் இருதயத்தின் நினைவுகளை அறிந்திருந்தார். யோவான் 2:24,25. அவர் மரித்தோரை எழுப்பினார்; நித்திய ஜீவனை அளித்தார். யோவான் 10:28. இயேசு நமது மீட்பராக பூமியில் இருந்தபோது, பிதாவாகிய தேவன் தமக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்தினார். யோவான் 17:2. அவர் எல்லா நேரங்களிலும் பிதாவைச் சார்ந்திருந்து, அவரோடு ஒத்துழைத்துச் செயல்பட்டார். யோவான் 5:19. மேலும், தம்மைப்பற்றிச் சாட்சிகொடுக்கிற குறிப்பிட்ட வேதவாக்கியங்களை அடிக்கடி சுட்டிக்காட்டினார். இயேசுவிடம் முழுமையான அதிகாரம் இருந்தது. மேலும் அந்த அதிகாரத்தைத் தமது சீடர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க முடிந்தது. மாற்கு 6:7. அவர் தேவ வார்த்தையாக இருந்ததால், அவர் சார்பாகப் பேசின தீர்க்கதரிசிகளுக்கும் அவரது சாட்சி கொடுக்கப்பட்டது. வெளி 19:10.

---

**இயேசு இவ்வளவு ஆதாரங்களைக் கொடுத்த பிறகும், சிலர் அவரை நிராகரித்தார்கள். நாம் விசுவாசிப்பதற்கு இத்தனைக் காரணங்கள் இருக்கும்போது, நாமும் அவிசுவாசம் என்னும் அதே வலையில் விழுந்துவிடாதபடி எவ்வாறு கவனமாக இருக்கமுடியும்?**

# வேதாகம அதிகாரம்

தேவனுடைய ஏவுதலின் வெளிப்பாட்டால் பிறந்ததே வேதாகமம். வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகளுக்கு அது பதிலளிக்கிறது; மனுக்குலத்திற்கு தேவன் தம்மை வெளிப்படுத்துகிற அவரது விசேஷித்த வழியாகவும் உள்ளது. மனித வாழ்க்கையின் அர்த்தம், தேவனுடைய குணம், அவர் சித்தம், நம் வாழ்க்கை குறித்த அவருடைய நோக்கம் ஆகியவற்றை வேதவசனங்களின்மூலம் அறிந்து கொள்கிறோம். வேதாகமமானது சத்தியத்தின் பொன்னான அளவுகோல். நம் வாழ்க்கையில் செய்யவேண்டிய தீர்மானங்களை அது அதிகாரத்துடன் பேசுகிறது. அதுவே உலகளாவிய கிறிஸ்தவக்கண்ணோட்டத்தின் அடித்தளம்; வெளிப்படுத்தப்பட்ட அனைத்துச் சத்தியங்களின் அடிப்படை. அதுவே கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கும் நடைமுறைக்குமான விதி.

தேவ வார்த்தையை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் நம் விருப்பம்,; வேதாகமத்தை நிராகரித்த யோயாக்கீம் ராஜா செய்ததுபோல அதை எரிக்கிற அளவுக்கு நாம் செல்லவேண்டியதில்லை. எரே 36:22-27. அதை நம்புவதாகச் சொல்லிக்கொண்டே அதை அலட்சியப்படுத்தினாலே அதை எரிப்பதற்குத்தான் சமம். தேவ வார்த்தையை நாம் ஆராய்ந்து, ஏற்றுக்கொள்ளும்போது, யோசியா ராஜாவைப்போல, நாம் மாற்றமடைந்து, மற்றவர்களை, தேவனிடத்திற்கு வழி நடத்தமுடியும். 2இராஜா 22:10-13. இன்று பலர் வேதவசனங்களில் தவறு உள்ளதா என்று தேடுகிறார்கள்; சிலர் அதைப் பரியாசம் செய்கிறார்கள். வேதாகமம் சமகால ஒழுக்கநெறிகளுக் குப் புறம்பானதென சிலர் கருதுகிறார்கள். இது பொதுவாக அப்படித்தான் இருக் கிறது, மேலும் அப்படித்தான் இருக்கவும் வேண்டும். அது ‘அறிவியல்’ அல்லது கலாச்சாரப் போக்குகளுக்கு முரணாக இருப்பதால் பலர் அதை ஏளனம்செய் கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் வேதாகமத்தை, தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் சீர்திருத்தத்திற்கும் உதவுகிற ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தாமல், குறிப்பிட்ட இறையியல் கோட்பாட்டை ஆதரிப்பதற்குமட்டுமே பயன்படுத்துகிறார்கள். மற்றவர்கள் வேதாகமத்தைத் தங்கள் அன்றாட வாழ்க்கையின் மீது அதற்கு எந்தவொரு வரலாற்று அதிகாரமும் நடைமுறை அதிகாரமும் இல்லாததுபோலப் பேசுகிறார்கள். வேதாகம அதிகாரத்தை மிக எளிதாக நிராகரிக்கிறவழிகளில்ஒன்று, அதைவாசிப்பதற்கும், நம்வாழ்வில்பயன்படுத்துவதற்கும் நேரம் ஒதுக்காமல் இருப்பதாகும்.

**பின்வரும் சூழ்நிலைகளில் பேசப்பட்ட தேவவார்த்தை எப்படிப்பட்ட விளைவை ஏற்படுத்தியது? எரே 38:1-4; யோவான் 3:1-10; அப் 16:25-34..**

முற்காலங்களில், எழுதுபொருட்கள் எளிதில் கிடைக்காது; விலையும் அதிகம். மேலும், பலருக்கு வாசிக்கத்தெரியாது, எனவே தேவனுடைய தீர்க்கதரிசிகள்மூலமாகப் பேசப்பட்ட அவரது வார்த்தை அவசியமானதாக இருந்தது. பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட தேவ வார்த்தை ஆவியானவரின் வல்லமையின்கீழ், பாவத்தை வெளிப்படுத்தவும், சீர்திருத்தத்தையும் புதுவாழ்வையும் கொண்டு வரவும், இருதயத்திற்குள் ஊடுருவக்கூடியதாக இருக்கிறது. நாம் மனந்திரும்பி, கீழ்ப்படியுமாறு அந்த வார்த்தை நம்மை அழைக்கிறது. அப் 5:29; எபி 4:12. அதனால்தான், வேதாகமத்தை நன்றாக அறிந்திருக்க வேண்டிய பலரே அதை நிராகரிக்கிறார்கள். தங்கள் வாழ்க்கையின்மீது அது செலுத்தும் அதிகாரத்தை அவர்கள் விரும்புவதில்லை.

# நிறுவன அதிகாரம்

'கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப் படப்பண்ணினார்; தீர்க்கதரிசியினால் காக்கப்பட்டான்.' ஓசியா 12:13. தேவ மக்களைப் பாதுகாப்பதும் வழிநடத்துவதும் வேதாகம தீர்க்கதரிசிகளின் முக் கியமான, அவசியமான பணியாக இருந்தது.

ஒரு தலைவராக தம் ஜனங்களை வழிநடத்த, தேவன் கையாண்ட வியூகங் களைத் தீர்க்கதரிசிகள் வெளிப்படுத்தினார்கள். நியா 4:4-8; 2நாளா 20:14-17; யாத் 12:1-3; உபா 1:9-16. யுத்தம் போன்ற நெருக்கடிக் காலங்களில், தீர்க்கதரிசி கள்மூலமாக, தம் ஜனங்களுக்கும் அவர்களது தலைவர்களுக்கும் தேவன் வழி காட்டுதலும் ஊக்கமும் நம்பிக்கையும் வழங்கினார்; யகாசியேல், தெபோராள் போன்ற தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலருக்கு பண்டிகைகள் -ஆராதனைகளைக் குறித்து வழிகாட்டுதலை வழங்கினார்கள். யாத் 12:1-3. தேசத்தின் நிர்வாகம் குறித்தும் தீர்க்கதரிசிகளிடம் தேவன் பேசியிருக்கிறார். எனவே, இஸ்ரவேலர் களின் வாழ்க்கையின் எந்தவொரு பகுதியிலும், தேவன் தாம் தெரிந்துகொண்ட தூதுவர்களின்மூலம் வழிநடத்துதலும் ஆலோசனைகளும் வழங்காமல் இல்லை.

**ஆரம்பகால கிறிஸ்தவச் சபை ஒழுங்கமைக்கப்பட்டதிலும், தலைவர்கள் நியமிக் கப்பட்டதிலும் தீர்க்கதரிசன வரம் எவ்வாறு உதவியாக இருந்தது? அப் 6:1-7; 1கொரி 5:1-5,; 1கொரி 7:10-16; தீத்து 1:5.**

செயல்முறைக் கையேடும், கண்ணுக்குத் தெரிகிற ஒரு தலைவரும் இல் லாமல் ஒரு புதிய அமைப்பைத் தொடங்குவது எப்படி இருக்கும்? அத்தகைய அமைப்பு நிச்சயமாக கடுமையான சவால்களை எதிர்கொள்ளும். ஆரம்பகால கிறிஸ்தவச்சபையின் சூழ்நிலையும் ஓரளவுக்கு இப்படித்தான் இருந்தது. இயேசு தம் சீடர்களை இங்கே விட்டுவிட்டு, பரலோகத்திற்குச் சென்றிருந்தார், 'நீங்கள் உலகமெங்கும்போய், ... பிரசங்கியுங்கள்' என்று தெளிவாகக்கட்டளையிட்டிருந் தார். மாற்கு 16:15. பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் தங்கள் பணியைத் தொடங்குவதற்கு உதவக்கூடிய எந்த வொரு தெளிவான நிறுவன அமைப்பும் அங்கு இல்லை.

சபை ஒழுங்கமைக்கப்படவில்லை; ஊழியத்திற்கான கட்டமைப்பு இல்லை; தவறான போதனைகளையும் ஒழுக்கக்கேடுகளையும் கண்டறிந்து கண்டிக்க வேண்டிய அவசியம் இருந்தது, இதுபோன்ற பல சவால்களை ஆரம்பக்காலச் சபை, எதிர்கொண்டது. ஆரம்பகாலச் சபையில் செயல்பட்ட தீர்க்கதரிசன வர மானது சபையைப் பாதுகாப்பதிலும் பராமரிப்பதிலும் ஒரு முக்கியப் பங்காற் றியது. அப் 13:1,2. ஆதிகாலச் சபையானது ஒழுங்கமைக்கப்படவும், அதன் ஊழியம் முன்னோக்கி எடுத்துச்செல்லப்படவும், தீர்க்கதரிசன வரத்தின் உதவி யின்றி, அது உருவாகியிருக்க வாய்ப்பே இல்லையெனத் தெரிகிறது..

---

**'ஒழுங்கமைக்கப்பட்ட மார்க்கம்' என்பதை சிலர் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள். சவால்கள் இருக்கலாம், ஆனால், சபை ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அமைப்பாக இருப்பதன் நன்மைகள் என்ன? நம்மைவிட மிகவும் பெரியதான ஒன்றின் பகுதியாக இருப்பதன்மூலம் நாம் எதைக் கொடுக்கமுடியும்? எதைப் பெறமுடியும்?**

# வேதாகமப் புத்தகங்களை எழுதியுள்ள, எழுதியிராத தீர்க்கதரிசிகள்

**1நாளா 29:30; 2நாளா 9:29 ஆகிய பகுதிகள் குறிப்பிடுகிற சில தீர்க்கதரிசிகளைப் பற்றி என்ன தெரிகிறது?**

நாத்தான், காத், அகியா, இத்தோ போன்ற பல தீர்க்கதரிசிகள் வேதாகமத்தில் தீர்க்கதரிசிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்; ஆனால் அவர்களது புத்தகங்கள் வேதாகமத்தில் இடம்பெறவில்லை.

**வேதாகமப்புத்தகங்களை எழுதியிராத தீர்க்கதரிசிகளின் அதிகாரத்தைப்பற்றி 1இராஜா 11:29-39; லூக் 7:28 ஆகிய வசனங்கள் என்ன சொல்கின்றன?**

சில தீர்க்கதரிசிகளின் செய்திகள் வேதாகமத்தில் சேர்க்கப்படுவதற்கும், மற்றவர்களின் செய்திகள் விடுபடுவதற்கும் தேவன் ஏன் அனுமதித்தார் என்பது தெரியவில்லை; ஆனாலும், வேதாகமத்தில் தங்கள் புத்தகங்கள் இடம்பெறாத தீர்க்கதரிசிகளும் தேவனால் ஏவுதலைப் பெற்றிருந்ததை அறிவோம். தீர்க்கதரிசன வரம் உட்பட ஆவிக்குரிய வரங்கள் யாவும் உலகத்தின் இறுதிவரை தொடரும் என்று வேதாகமம் போதிக்கிறது. 'நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகும்வரை, பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்' வேதாகமக் காலத்திற்குப் பிறகும், தீர்க்கதரிசிகள் தோன்றுவார்கள். எபே 4:12,13. அவர்கள், தங்கள் புத்தகங்கள் வேதாகமத்தில் இடம்பெறாத தீர்க்கதரிசிகள். அவர்கள் 'கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருவதற்கு முன்னே' இருப்பார்கள் என்றும் வேதாகமம் முன்னறிவிக்கிறது. யோவேல் 2:31.

தாவீது விபச்சாரமும் கொலையும் செய்தபிறகு, அவரைக்கண்டிப்பதற்காக நாத்தான் தீர்க்கதரிசியை தேவன் அனுப்பினார். 2சாமு 12:7-14. வேதாகமத்தில் எந்த ஒரு புத்தகத்தையும் நாத்தான் எழுதியிருக்கவில்லை. என்றாலும், நாத்தானுடைய அதிகாரத்தைக்குறித்து தாவீது கேள்வி கேட்கவில்லை; ஏனெனில், தீர்க்கதரிசிகளுடைய அதிகாரமானது அது தேவனால் ஏவப்பட்டனவா என்பதன் அடிப்படையில் அமைந்ததே தவிர, அவை வேதாகமத்தில் சேர்க்கப்பட்டதா என்பதன் அடிப்படையில் இல்லை. ஆனாலும், தங்கள் புத்தகம் வேதாகமத்தில் இடம்பெறாத உண்மையான தீர்க்கதரிசிகள் அனைவரும், குறிப்பாக வேதாகமக்காலத்திற்குப் பின்பு வந்த தீர்க்கதரிசிகளும், மிகமுக்கியமாக எலன் ஜி. ஒய்ட் போன்ற நவீனகாலத் தீர்க்கதரிசியும், தங்களை வேதாகம அதிகாரத்திற்குக்கீழ்ப்பட்டவர்களாகவே கருதினர். அவர்களது செய்திகள் வேதாகமத்தின்மூலம் சோதிக்கப்படவேண்டுமே தவிர, அவை ஒருபோதும் விசுவாசத்திற்கும் கோட்பாட்டிற்கும் ஆதாரமாக விளங்கும் வேதாகமத்திற்கு மாற்றானவை கிடையாது.

---

**'நீங்கள் உங்கள் வேதாகமங்களை ஆராய்ந்து படிப்பதைக் கர்த்தர் விரும்புகிறார். தம்முடைய வார்த்தையின் இடத்தை எடுத்துக்கொள்ள, அவர் வேறு எந்தக் கூடுதல் வெளிச்சத்தையும் கொடுக்கவில்லை. குழம்பின உள்ளங்களை அவருடைய வார்த்தையிடம் கொண்டு சேர்ப்பதற்கே கூடுதல் வெளிச்சம் கொடுக்கப்பட்டுள்ளது; அந்த வார்த்தையை நாம் உட்கொண்டு ஜீரணித்தால், அது ஆத்துமாவின் ஜீவரத்தமாக மாறும்' என்று எலன் ஜி. ஒயிட் எழுதியுள்ளார்.**

# அதிகாரத்துடன் பேசுதல்

தீர்க்கதரிசிகளை, தேவன் தமது தூதர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளதால், அவர்கள் நம்மிடம் அதிகாரத்தோடு, நமக்குப் பொருத்தமான செய்திகளைப் பேசுகிறார்கள். தங்கள் புத்தகங்கள் வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள தீர்க்கதரிசிகள் உண்டு, தங்கள் புத்தகங்கள் வேதாகமத்தில் இடம்பெறாத தீர்க்கதரிசிகள் உண்டு, தங்கள் புத்தகங்கள் வேதாகமத்தில் இடம்பெறாத, ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குப் பிறகான தீர்க்கதரிசிகள் உண்டு. இவர்கள் அனைவரும் தேவனால் ஏவுதலைப் பெற்றார்கள், அவர்களுடைய செய்திகள் தெய்வீக அதிகாரத்தின் முத்திரையைப் பெற்றிருந்தன. தங்கள் புத்தகங்கள் வேதாகமத்தில் இடம்பெறாத, ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குப் பிறகான தீர்க்கதரிசிகளைச் சேர்ந்தவர் எலன் ஒய்ட். இருப்பினும், அவரது எழுத்துகளை வேதாகமத்தின் கூடுதலான ஒரு புத்தகமாகவோ, அதற்குச் சமமானதாகவோ செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகள் கருதுவதில்லை. ஆனாலும், அவரது எழுத்துகள் நமக்குப் பொருத்தமானவை, அதிகாரத்தோடும் பேசுபவை; 'நான் எழுதும் இந்தக் கடிதங்களிலும், நான் அளிக்கும் சாட்சியங்களிலும், கர்த்தர் எனக்குக் காண்பித்தவற்றையே உங்களுக்கு முன்பாக வைக்கிறேன். பத்திரிகையில் வெளியாகும் எந்த ஒரு கட்டுரையையும் என்னுடைய சொந்தக் கருத்துகளைமட்டுமே கொண்டு நான் எழுதுவதில்லை. அவை தேவன் தரிசனத்தின் மூலம் எனக்கு வெளிப்படுத்தியவை; அதாவது, அவருடைய சிங்காசனத்திலிருந்து பிரகாசிக்கின்ற விலைமதிப்பற்ற ஒளிக்கதிர்கள்.'

வேதாகமத்தைபோலவே எலன் ஜி. ஒய்ட்டும் பாவத்தின் யதார்த்தத்தையும், நித்திய ஜீவனின் ஒரே நம்பிக்கையான இயேசுவின் தேவையையும் சுட்டிக்காட்டுகிறார்; இந்த நித்திய ஜீவனானது விசுவாசத்தின் மூலம் உரிமைகோருகிற அனைவருக்கும் கிருபையால் வழங்கப்படுகிறது என்பது அவரது செய்திகளின் மற்றொரு வல்லமையான மையப்பொருளாகும்.

அவரது செய்திகளில் (அல்லது, அவர் மூலமாக தேவன் கொடுத்த செய்திகளில்) நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டத்தைக் காணமுடிகிறது. இந்தப் போராட்டம் பரலோகத்தில் லூசிபரின் விழுகையுடன் தொடங்கி, சாத்தானாகிய அவனும், விழுந்துபோன அவனது தூதர்களும், பாவமும், தீமையும் நித்தியமாக அழிக்கப்படப்போகிற காலம்வரை நீடிக்கிறது. எலன் ஜி. ஒய்ட் அவர்களின் எழுத்துகள் முடிவுகாலத்தின் பின்னணியில், வேதாகமக் கோட்பாடுகளைப்பற்றிய ஆழமான புரிதலை வழங்குகின்றன. உதாரணமாக, சபையையும் அரசாங்கத்தையும் ஒன்றிணைப்பதன் ஆபத்தையும், மதச் சுதந்தரத்தின் முக்கியத்துவத்தையும்குறித்துப் பேசுகிறார்; ஒழுக்கநெறிச் சீரழிவுகுறித்து எச்சரிக்கிறார்; தேவனுடைய பிரமாணத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உயர்த்திக் காட்டுகிறார்; மேலும், 'மிருகத்தின் முத்திரை' பற்றிய நம் புரிதல், நிச்சயமாக அவரது எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டது அல்ல என்றாலும், இறுதி நிகழ்வுகளைப்பற்றிய அற்புதமான ஆழமான பார்வைகளை அவருடைய வார்த்தைகள் நமக்குத் தருகின்றன.

எலன் ஜி. ஒய்ட் அவர்களின் எழுத்துகள் வேதாகமத்தில் இல்லை, ஆனால் பூலோக வரலாற்றின் இறுதி நாட்களில் வாழும் விசுவாசிகளை வழிநடத்த, தேவன் அவரைப் பயன்படுத்தியுள்ளார். அவரது எழுத்துகள் இன்றும் தீர்க்கதரிசன அதிகாரத்தோடும் பொருத்தத்தோடும் பேசுகின்றன.

# எல்சா லூக்கானனின் ஊழியம்

பின்லாந்தின் சொர்தவாலா நகரில் 1916 மே 20 அன்று பிறந்த எல்சா லூக்கானன், வறுமை நிலையில் வளர்ந்தார். தனது 16 வயதில், அட்வென்டிஸ்ட் எழுப்புதல் கூட்டங்களில் கலந்துகொண்டு, ஞானஸ்நானம் பெற்றார். ஓய்வுநாள் ஆசரிப்பின் காரணமாக, சில காலம் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார், வேலையும் போனது. நிராகரிப்பு, இன்னல்களுக்கு மத்தியிலும் உறுதியாக நின்றார்.

தனது 17 வயதில், எல்சா முதல் நபரை கிறிஸ்துவிடம் வழிநடத்தினார். 19 வயதிற்குள், பிரசங்கம் செய்யத் தொடங்கினார். லவ்கா நகருக்கு ஈஸ்டர் சமயத்தில் சென்றிருந்தபோது, தனது முதல் பெரிய பிரசங்கப் பணியை ஆரம்பித்தார்; அங்குள்ள உள்ளூர் மக்கள் அவரைப் பெரிய வெள்ளிக்கிழமை பிரசங்கியாரென அறிவித்தார்கள். ஒரு சபை உறுப்பினரின் ஆதரவோடு, டோய்வோன்லின்னா அட்வென்டிஸ்ட் மிஷன் பள்ளியில் எல்சா சேர்ந்தார். பின்னர், புத்தக ஊழியம் செய்தார், அதன்பிறகு வேதாகம ஊழியராக மாறினார். இரண்டாம் உலகப் போர் துவங்கி, ஆண்கள் அனைவரும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டதால், எல்சாவும் சக விவிலிய ஊழியரான ஐனோ வர்மா லெஹ்டோலுடோவும் ஜோயன்சு, பியெக்சாமாகி, மற்றும் வர்காஸ் போன்ற நகரங்களில் சுவிசேஷக் கூட்டங்களை நடத்தி, பின்லாந்து முழுவதும் சுவிசேஷத்தைக் கொண்டுசென்றனர்.

போர்க்காலப் பஞ்சம், எதிர்ப்புகளுக்குமத்தியிலும், சில சமயங்களில் பொதுக் கூட்டங்களை நடத்த அனுமதி மறுக்கப்பட்ட போதிலும், எல்சா தொடர்ந்து ஊழியம்செய்தார். அவரது கூட்டங்களுக்குப் பெருந்திரளாக மக்கள் வந்தார்கள், மேலும் மனதைத் தொடும் அவரது பிரசங்கங்களும், கிட்டார் இசையோடு அவரது பாடல்களும் பலருடைய இருதயங்களை உலுக்கின. ஜோயன்சு நகரில், அட்வென்டிஸ்ட் சபையின் எண்ணிக்கை இரண்டே ஆண்டுகளில் ஐந்திலிருந்து 150 உறுப்பினர்களாக வளர்ந்தது, ஒரு புதிய சபை உருவானது. விரைவில் மற்ற நகரங்களிலும் பல சபைகள் தோன்றின.

போருக்குப் பிறகு, அவரது தாக்கம் மேலும் விரிவடைந்தது. 1957 இல் ஹெல்சின்கி நகரில், கூட்ட நெரிசலுக்கு மத்தியில் ஒரு நாளைக்கு மூன்று முறை பிரசங்கித்தார், இதன் விளைவாக 80 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். ஐனோவுடன் இணைந்து, வட அமெரிக்காவில் இருந்த பின்லாந்து குடியேற்ற மக்களிடம் சென்று, பிரசங்கித்தார்கள்; பாடல்கள் பாடினார்கள்; ஆடை தைக்கும் தொழில் செய்து, தங்கள் தேவைகளைப் பார்த்துக் கொண்டார்கள்.

பின்லாந்திற்கு எல்சா திரும்பினார், பின்னர் 1960 களின் பிற்பகுதியில், அட்வென்டிஸ்ட் நலச் சங்கத்தைத் தொடங்கி, கிழக்கு ஐரோப்பாவில் ஏழ்மையான பகுதிகள் முழுவதும் பல்லாயிரக்கணக்கில் போர்வைகளையும் ஆடைகளையும் விநியோகித்தார். கஜானி நகரில் ஒரு புதிய சபையையும் நலமையத்தையும் கட்டுவதற்காக அவரும் ஐனோவும் நிதி திரட்டினார்கள், தையல் வேலை செய்து நிதியளித்தார்கள். 'என்னால் பிரசங்கம்மட்டும் செய்ய முடியாது.ஓர் ஆவிக்குரிய தாயாக, என் பிள்ளைகள் தங்குவதற்கு வீடுகளை ஆயத்தம் செய்யவேண்டும்' என்று ஒருமுறை கூறினார். எல்சா லூக்கானன் பின்லாந்து முழுவதும் அதற்கான இடங்களைக் கண்டு, வீடுகளைக் கட்டினார், இரக்கக் குணத்தையும் தடுத்து நிறுத்தமுடியாத சுவிசேஷ வாஞ்சையையும் பாரம்பரியமாக விட்டுச் சென்றார். 1996 இல் எல்சா இறப்பதற்குள், 700 க்கும் மேற்பட்ட மக்களை, கிறிஸ்துவிடம் வழிநடத்தியிருந்தார், மேலும் பல சபைகளை நிறுவ உதவியிருந்தார்.



# மிகமுக்கியத் தருணங்களில் தீர்க்கதரிசன வெளிப்பாடு

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 2பேதுரு 2:5; நியா 4:4–16; 1இராஜா 18:21,38,39; ஏசா 59:1–4; நெகே 9:30; வெளி 1:1–3.

**மனன வசனம்:** கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். ஆமோஸ் 3:7.

விழுகை முதலே மனிதர்கள் பாவ இன்பங்களைத் தேர்ந்தெடுக்க தங்கள் மனதைச் சாய்க்கிறார்களே தவிர, இயேசுவுக்குள்ளான நித்திய ஜீவனைத் தேர்ந்தெடுப்பதில்லை. இந்த வருத்தமான உண்மையை, தேவன் அறிந்திருக்கிறார்; அப்படியிருந்தும், அவர் நம்மை நேசித்து, நம்முடைய இரட்சிப்புக்காகத் தொடர்ந்து கிரியைசெய்கிறார்.

இதனால்தான், வரலாற்றின் முக்கியமான திருப்புமுனைகளில், தேவன் தம் மக்களுக்காகத் தீர்க்கதரிசன ஊழியத்தின் வாயிலாக வியக்கத்தக்க வழிகளில் செயல்பட்டுள்ளார். இருப்பினும், அவருடைய முயற்சிகள் மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்பட்டபோது, அவர் நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரித்துள்ளார்.

ஆண்டவர் தாம் செய்யும் எதையும், தம்முடைய தீர்க்கதரிசிகள்மூலமாக முன்கூட்டியே வெளிப்படுத்துகிறார்; ஆமோஸ் 3:7. மக்கள் மனந்திரும்பினால், அவர் உடனே மன்னிக்கிறார்.

இன்றும் அதே வழியில் நம்மோடு தொடர்ந்து பேசுகிறார். அதனால்தான், கடந்த நூற்றாண்டுகளில் தேவன் தம்முடைய ஜனங்களோடு பேசியதுபோலவே, பூமியின் கடைசி நாட்களிலும் அவர் தம்முடைய ஜனங்களோடு பேசுகிறார்.

இரட்சிப்பு வரலாற்றின் முக்கியத் தருணங்களில், தேவன் தம்முடைய ஜனங்களுக்கும் உலகிற்கும் தம்முடைய சித்தத்தைத் தெளிவுபடுத்த, தீர்க்கதரிசிகளைப் பயன்படுத்தியதுபற்றி இந்த வாரம் ஆராய்வோம். அட்வெண்டிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சியின் முக்கியத் தருணங்களில், எலன் ஜி. ஒய்ட் அவர்கள் செய்த தேவ ஊழியத்தின் பங்களிப்பையும் ஆராய்வோம்.

*2026, டிசம்பர் 12 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# பேரழிவு குறித்த எச்சரிப்பு

தேவன் மனுக்குலத்தை இரட்சிக்க விரும்புகிறார். விழுகைக்குப் பிறகு, ஆதாம்-ஏவாளுடன் உறவுவைக்க விரும்பினார்; பிறகு, பூமியின் குடிகள் 'கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளத்' தொடங்கினார்கள். ஆதி 4:26. தலைமுறைகள் கடந்து செல்லச்செல்ல, தேவனுடன் சஞ்சரிக்கிறவர்களின் எண்ணிக்கை குறைந்தது. தொடர்ந்து தேவனைப் பின்பற்றியவர்கள் அவரது நன்மையைச்சாட்சிபகர்ந்தனர், தங்களைச்சுற்றியிருந்தவர்களின் பாவங்களைக் கண்டித்தனர், அவர்களுடைய செயல்களின் விளைவுகளைக்குறித்து எச்சரித்தனர்.

ஆனாலும், நோவாவின் காலத்தில், பூமியின் குடிகள் மிகவும் பொல்லாதவர்களாக இருந்ததால், தேவன் அவர்களை அழிக்கத் தீர்மானித்தார். ஆதி 6:5-7. பூமியில் வரவிருந்த அழிவைக்குறித்து, கேட்கவிரும்பின யாவருக்கும் நோவா உறுதியாக எச்சரித்தார். 2பேதுரு 2:5. மேலும், நோவாவின் எச்சரிக்கைகளைக் கேட்டு மனந்திரும்பும் யாவரையும் காப்பாற்றுவதற்காக, ஓர் உயிர்காப்புப் படகைச் (பேழையைச்) செய்யும்படி தேவன் அவரை அறிவுறுத்தினார்.

**நோவா எந்த வழிகளில் 'நீதியைப் பிரசங்கித்தவனாக' இருந்தார்? எபி 11:7; 2பேதுரு 2:5; ஆதி 6:9.**

மனிதர்களின் மிகவும் சீர்கேடான நிலையையும், தேவனுடைய ஆச்சரியமான கிருபையின் ஆழத்தையும் சுட்டிக்காட்டுகிற ஓர் உதாரணமாக ஜலப்பிரளய சம்பவம் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் மீண்டும்மீண்டும் வருகிறது. பாவம்செய்கிற சிருஷ்டிக்கு எதிராக தேவன் நியாயத்தீர்ப்பு கொடுப்பதிலும், இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் யாவருக்கும் விடுதலையைக் கொடுப்பதிலும் தேவனுடைய நீதி வெளிப்படுகிறது.

'எங்கும் காணப்பட்ட சீர்கேட்டிற்கு மத்தியிலும், மெத்தூசலா, நோவா, மேலும் பலர் மெய்யான தேவனைப்பற்றிய அறிவை உயிர்ப்புடன் வைத்திருக்கவும், ஒழுக்கக் கேட்டின் அலையைத் தடுக்கவும் பிரயாசப்பட்டார்கள். ஜலப்பிரளயத்திற்கு நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்பு, கர்த்தர் தம்முடைய நோக்கத்தை நோவாவுக்குத் தெரிவித்து, ஒரு பேழையைச் செய்யும்படி அவனுக்குக் கட்டளையிட்டார். பேழையைக் கட்டும்போதே, தேவன் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி பொல்லாதவர்களை அழிக்கவிருந்ததுபற்றி அவன் பிரசங்கிக்க வேண்டியிருந்தது. அந்தச் செய்தியை விசுவாசித்து, மனந்திரும்பி, சீர்திருத்தம்பண்ணி அந்த நிகழ்வுக்குத் தங்களை ஆயத்தப்படுத்தியவர்கள், மன்னிப்பைப் பெற்று இரட்சிக்கப்படவிருந்தார்கள்'. - எலன் ஜி. ஒய்ட்.

நோவாவிடம் தேவன் ஜலப்பிரளயம் வரவிருந்ததைச் சொல்லி, பேழைக்குள் சென்றவர்களைக் காப்பாற்றியது மட்டுமல்லாமல், நோவாவோடும் சகல சிருஷ்டிகளோடும் ஓர் உடன்படிக்கையையும் ஏற்படுத்தினார். இனி ஒருபோதும் உலகத்தை ஜலத்தினால் அழிக்கமாட்டேனென்று வாக்குறுதி அளித்தார். ஆதி 9:8-17. வானவில் தோன்றும் போதெல்லாம் இந்த மீட்பின் வாக்குறுதியும், நம்பிக்கையும் வெளிப்படுகிறது.

---

**அடுத்த முறை நீங்கள் வானவில்லைப் பார்க்கும்போது, அதில் காணப்படும் வாக்குறுதியைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். தேவன் தம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார் என்பதை அறிவது உங்களுக்கு ஏன் ஆறுதலைத் தரவேண்டும்?**

# இஸ்ரவேலில் ஒரு தாய்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை விடுவித்த பிறகு, தேவன் அவர்களுக்கு கானான் தேசத்தைக் கொடுத்தார். அவர்கள் தம்முடைய நியாயப்பிரமாணங்களையும் கட்டளைகளையும் பின்பற்றினால், அவர்களைப் பரிபூரண நன்மைகளால் ஆசீர்வதிப்பதாக வாக்குறுதி அளித்தார். தம்முடன் அவர்கள் செய்த உடன்படிக்கையை மீறினால், துன்பமும் அழிவும் உண்டாகுமென எச்சரித்தார். உபா 27-30. யோசுவா மரித்தபிறகு, இஸ்ரவேலர்கள் உடன்படிக்கையைக் காத்து நடப்பதிலிருந்து பின்வாங்கினார்கள். அதனால் அவர்கள் அண்டை தேசத்தாரால் ஒடுக்கப்பட்டார்கள்; தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். உடனே, 'கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்'. நியா. 2:16. இஸ்ரவேலர்கள் தம்முடன் மீண்டும் தங்கள் உடன்படிக்கையைப் புதுப்பிக்கவும், அவர்களை ஒடுக்குபவர்களுக்கு எதிராக அவர்களுக்குப் பெலன் அளிக்கவும் அவர் தீர்க்கதரிசிகளையும் அனுப்பினார்.

**தெபொராள் இஸ்ரவேலுக்கு எவ்வாறு ஊழியம் செய்தார்? நியா 4:4–16; 5:1–5.**

இஸ்ரவேல்ஜனங்களுக்கும், தேசத்தின்படைத்தளபதியானபாராக்கிற்கும் தேவனுடைய செய்தியை அறிவிக்கிற முக்கியமான தீர்க்கதரிசன ஊழியத்தை தெபொராள்செய்தார். அப்போதுபாராக்படைகளைத்திரட்டிக்கொண்டிருந்தான். 'எழுந்துபோ; கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே; கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்படவில்லையா?' என்று கூறி, பாராக்கிடம் போரைத் தொடங்கச் சொன்னவர் தெபொராள்தான். நியா 4:14. இஸ்ரவேலின் நியாயாதிபதியாக, தெபொராளின் தலைமைத்துவமும், வெற்றிகுறித்த தேவ வாக்குறுதியில் அவருக்கிருந்த விசுவாசமும், இஸ்ரவேலர்கள் தங்கள் எதிரிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு அவர்களைப் பெலப்படுத்தியது. ஒரு போர் தளபதியாக பாராக்கிற்குத் திறமை இருந்தது, ஆரம்பத்தில் தயங்கினாலும் இஸ்ரவேல் இராணுவத்தை வழிநடத்த அவனுக்கு விருப்பமும் இருந்தது; ஆனால், அதுமட்டுமே அந்தப் போரில் வெற்றியைத் தரவில்லை.

தீர்க்கதரிசியான தெபொராள், போர்வீரனான பாராக் ஆகியோரின் வரலாறு உணர்த்தும் முக்கியச் செய்தி இதுதான். அதாவது, பிரம்மாண்டமான ஒரு வெற்றியைக் கொண்டாடுகிற வேளையில், இஸ்ரவேலின் மிக அதிகாரம் படைத்த ஒரு நியாயாதிபதியும், வெற்றிக்கு உதவிய ஒரு தளபதியும் தேவனை மகிமைப்படுத்தும்படி சபையை வழிநடத்தினார்கள். இதுவே உண்மையான ஆவிக்குரிய தலைவர்களின் தன்மையாக இருக்கும்.

இக்கட்டும்ஒடுக்குதலும்நேரிட்டகாலங்களில்தேவன்உண்மையுள்ளவராக இருந்ததற்கு, தெபொராளின் தீர்க்கதரிசன ஊழியம் சான்றாகும். பாராக்கிற்கு தெபொராள்மூலம் தேவன் செய்தி சொன்னபோது, போதுமான படைகளைத் திரட்டமுடியுமா என்பதற்கான சாத்தியக்கூறுகளை தெபொராள் ஆராயவில்லை; அல்லது இஸ்ரவேலர்கள் வெற்றிபெறமுடியாத அளவுக்கு மிகவும் பலவீனமாக இருப்பதாக வாதாடவும் இல்லை. மாறாக, அந்தச் செய்தியை முழுநிச்சயத்தோடு அறிவித்தார்; தேவனை நம்பும்படி பாராக்கை ஊக்குவித்தார்.

**தற்போதைய சூழ்நிலையில், விஷயங்கள் அதிக நம்பிக்கையற்றதாகத் தோன்றினாலும், நாம் எவ்வாறு தேவனை நம்பக் கற்றுக்கொள்ளலாம்?**

# மனந்திரும்புதலுக்கான அழைப்பு

**எப்படிப்பட்ட ஒரு சுழற்சியில் இஸ்ரவேலர்கள் இருந்தார்கள்? நியா 2:16–19.**

---

ஒரு ராஜா வேண்டுமென இஸ்ரவேலர் கேட்டபோது, அரச ஆட்சிமுறை அமுலுக்கு வந்தது. 1சாமு 8. அத்துடன், நியாயாதிபதிகளின் காலம் முடிவுக்கு வந்தது. ஆனால், ராஜாவுக்கும், தேசத்தின் தலைவர்களுக்கும், ஜனங்களுக்கும் ஆலோசனை கூறி தவற்றைத் திருத்தவும், அவர்களைக் கண்டிக்கவும் தீர்க்கதரிசிகள் ஊழியம் செய்யவேண்டியதை இந்த மாற்றம் அதிக அவசியமாக்கியது

ஆகாப்ராஜாவின் ஆட்சியின்போது, நியாயத்தீர்ப்பின் செய்தியோடு எலியாவை தேவன் அனுப்பினார்: இஸ்ரவேலர்கள் 'கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால்' மழை பெய்யாது என்று அறிவித்தார். 1இராஜா 18:18. ஆகாப் மனந்திரும்புவதற்குப் பதிலாக, எலியாவைத் தேடிக் கண்டுபிடித்துக் கொல்ல முயன்றான்; ஆனால் தேவன் அவரைக் காப்பாற்றினார். 1இராஜா 18:10-12. பஞ்சம் உண்டாகி மூன்றாம் வருடத்தில், இறுதியாக ராஜாவை எலியா சந்தித்தபோது, மழை பெய்யாததற்கு எலியாதான் காரணம் என்று ஆகாப் பழிசுமத்தினான்! 1இராஜா 18:17. அதன்பிறகு, தேவனுக்கும் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் இடையே ஒரு இறுதிப் போட்டியை நடத்த வருமாறு இஸ்ரவேலர் அனைவரையும் எலியா கூட்டினார். 1இராஜா 18:19.

**இஸ்ரவேலர்களிடம் எலியா சொன்னதையும், அதற்கு அவர்கள் பதிலளித்தையும் வாசியுங்கள். 1இராஜா 18:21,38,39. அங்கே என்ன நடந்தது?**

வானத்திலிருந்து அக்கினியை தேவன் இறங்கிவரச் செய்ததும், எலியாவின் தீர்க்கதரிசனச் செய்தியும் தேவனுடைய ஜனங்களில் ஆச்சரியமான தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களை மனந்திரும்புதலுக்கு வழிநடத்தின. தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணிப்பதற்கு இஸ்ரவேலர்கள் தயங்கினதுபோலவே, தேவனைச் சிருஷ்டிகராகவும் மீட்பராகவும் அங்கீகரிக்க மறுக்கிற கலாச்சாரங்களில் வாழ்ந்துவருகிறோம். தேவனுக்கு உண்மையாய் இருக்கும்படி மற்றவர்களை அழைக்கிறசாட்சிகளாகநாம்வாழ்வதற்குப்பதிலாக, இஸ்ரவேலர்களைப்போல நம் சொந்த இச்சைகளைப் பின்பற்றி, நம்முடைய அழைப்பைத் தட்டிக்கழிக்கிறோம்.

நம்முடைய சொந்த இச்சைகளைப் பின்பற்றுவது நம்பிக்கையின்மைக்கும், வேதனைக்கும், இறுதியில் மரணத்திற்கும் வழிவகுக்கும் என்று தேவன் எச்சரிக்கிறார். ஆனால், நாம் அவருடைய சத்தத்திற்குச் செவிசாய்த்தால், 'கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்'. ஏசா 58:11.

---

**நம்முடைய மாம்ச சுபாவமானது, நாம் அறியாமலேயே தேவனுக்கு விரோதமாகக் கலகம்செய்ய நம்மைத் தூண்டுகிறது. அந்தச் சுபாவத்திற்கு நாம் அடிமையாகாமல் இருக்க, என்ன மாதிரியான தீர்மானங்களை எடுக்கவேண்டும்?**

# நாடுகடத்தப்பட்ட நிலையில் நம்பிக்கை

‘அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்கமுள்ளவராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத் தம்முடைய ஸ்தானாபதிகளை ஏற்கனெவே அனுப்பினார்.’ 2நாளாகமம் 36:15.

தம்முடைய ஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கவும், எச்சரிக்கவும், அறிவுறுத்தவும் எலியாவுக்குப் பிறகு எண்ணற்ற தீர்க்கதரிசிகளை தேவன் அனுப்பினார். ஆனால் இஸ்ரவேல்-யூதா ராஜ்யங்களை சோதோம்-கொமோராவுடன் தேவன் ஒப்பிடுமளவிற்கு அவர்கள் சீர்கேடு அடைந்திருந்தார்கள். ஏசா 1:9,10. தேவனுடைய ஜனங்களில் பெருமையும் பேராசையும் விக்கிரகாராதனையும் இருந்தன. வேலைக்காரர்களையும், விதவைகளையும், அனாதைகளையும், தங்களிடம் உதவிதேடி வந்த அந்நியர்களையும் ஒடுக்கினார்கள். இஸ்ரவேலின் வீழ்ச்சிக்கு தேவனுடைய எதிர்வினையை ஏசா 58 இல் வாசியுங்கள். இறுதியாக, தேவனுடைய நியாயத்தீர்ப்பால் இஸ்ரவேலர் அசீரியச் சிறையிருப்புக்கு ஆளானார்கள். 2இராஜா 17:1-6. யூதா தேசத்தார், பாபிலோன் தேசத்திற்கு நாடுகடத்தப்பட்டார்கள். 2இராஜா 24,25.

தேவன் தம்முடைய ஜனங்களைத் தண்டித்தாலும், சிறையிருப்பில் அவர்களைத் தனியாக விட்டுவிடவில்லை. அவர்களுக்கு எதிர்காலத்தைக்குறித்த நம்பிக்கையை அளிப்பதற்காக எசேக்கியேல், தானியேல் போன்ற தீர்க்கதரிசிகளை அவர்களிடம் அனுப்பினார்.

**ஏசா 59:1–4; நெகே 9:30 ஆகிய வசனங்களில் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக் கூடிய என்ன செய்தி சொல்லப்பட்டுள்ளது?**

இஸ்ரவேல்-யூதா ராஜ்யங்கள் தங்கள் வரலாறுமுழுவதும் பாவத்தின் விளைவுகளை அனுபவித்தன. தேவனைவிட்டு விலகியதால், அவருடைய பாதுகாப்பை இழந்தன; அவருடைய நியாயத்தீர்ப்பையும் வரவழைத்துக் கொண்டன. ஒடுக்குதலையும் விக்கிரகாராதனையையும் தேவன் பொறுத்துக் கொள்வதில்லை; ஆனால் அவர்கள் பாவம் செய்த முதல்முறையிலேயே அவர்களை அவர் சிறையிருப்புக்கு அனுப்பவில்லை. ஜனங்ளைத் திருத்துவதற்கு மிகவும் பிரயாசப்பட்டார், தம்மிடம் வரும்படி தம் தீர்க்கதரிசிகள்மூலமாக கெஞ்சினார். ஜனங்களோ செவிகொடுக்க மறுத்துவிட்டார்கள். நீண்ட நூற்றாண்டுகளாக, அடுத்தடுத்து தீர்க்கதரிசிகளை அனுப்பி, எச்சரிக்கைக்குமேல் எச்சரிக்கை கொடுத்து, அவர்களைத் திருப்புவதற்கு முயன்றார்.

இயேசுதாமே மத் 23:37 இல் அதை நன்றாகச் சொல்லியிருக்கிறார். அவர்கள் நாடுகடத்தப்பட்ட நிலையில் இருந்தபோதும், தேவன் தம் ஜனங்களை நம்பிக்கையின்றி விட்டுவிடவேயில்லை. தொடர்ச்சியான தோல்விகளுக்கு மத்தியிலும், ‘மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார்’ என்று வாக்குறுதி அளித்தார். ஏசா 59:20.

---

**இஸ்ரவேலர் தேவனை விட்டுத் திரும்பியபோதும் அவர் உண்மையுள்ளவராக இருந்ததுகுறித்துச் சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய அன்பைப்பற்றிய இந்த உண்மையை உங்கள் சொந்த வாழ்க்கையில் எவ்வாறு அனுபவித்திருக்கிறீர்கள்? அவர் இந்த அளவுக்கு நீடிய சாந்தமும் அன்பும் உள்ளவராக இல்லாவிட்டால், நீங்கள் இப்போது எங்கே இருந்திருப்பீர்கள்?**

# காத்திருப்புக் காலத்திற்கான ஒரு தீர்க்கதரிசி

**யோவான் என்ன செய்யும்படி அழைக்கப்பட்டார்? வெளி 1:1-3.**

இயேசுவின் வருகைகுறித்த வாக்குறுதி நிறைவேறுவதற்காக, ஆரம்ப காலக் கிறிஸ்தவர்கள் ஆவலோடு காத்திருந்தார்கள். கிறிஸ்து மேகங்களுக்குள் ஏறிச் சென்றதை அப்போஸ்தலனாகிய யோவான் கண்டிருந்தார்; அவர் ஏறிச் சென்ற விதமாகவே திரும்ப வருவார் என்று தேவதூதன் சொன்னதைக் கேட்டிருந் தார். அப் 1:10,11. இப்போது ஆரம்பக்காலச் சபை நிச்சயமற்ற ஒரு சூழ்நிலையில் இருந்தது. ஆம், இயேசு திரும்பி வருவதாகக் கூறினார். ஆனால் எப்போது?

பத்மு தீவிற்கு யோவான் நாடுகடத்தப்பட்டிருந்தபோது, இயேசுவின் இரண் டாம் வருகையின் வாக்குறுதியைப்பற்றி எழுதினார்: 'இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவ ரைக் காண்பார்கள்' வெளி 1:7. இறுதிக்காலத்திற்கு அடையாளமான சம்பவங் களைப்பற்றிய விரிவான ஒரு வெளிப்பாட்டையும் யோவான் பெற்றார். அந்த வெளிப்பாடுகளில் ஏழு சபைகளுக்கான ஊக்குவிப்பும், எச்சரிக்கைகளும் இருந் தன. வெளி 2,3. நியாயத்தீர்ப்பு, உலகத்தின் முடிவு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, உலகத்தின் மறுசிருஷ்டிப்பு ஆகியவைகுறித்த தரிசனங்களும் இடம் பெற்றிருந்தன. வெளி 14:6-12; வெளி 20; வெளி 14:14-16; வெளி 21; 22.

யோவான் தன்னை, 'உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறு மைக்கும் உங்கள் உடன்பங்காளனும்' என்று அடையாளப்படுத்தினார். வெளி 1:9. காத்திருப்பால் உண்டான வியாகுலமானது பெரும் உபத்திரவமாக இருந் தது; அதோடு, தேவ வார்த்தையை அறிவிப்பதாலும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைப் பெற்றிருப்பதாலும் உபத்திரவம் உண்டாயிருந்தது.

தரிசனத்தைக் காணவும், கண்டதை எழுதவும் யோவானுக்குக் கட்டளை யிடப்பட்டதை வெளிப்படுத்தல் புத்தகம் முழுவதும் பார்க்கலாம். கடைசி அதிகாரத்தில், 'யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந் தேன்' என்று எழுதினார். வெளி 22:8. இறுதிக்காலச் சம்பவங்கள்குறித்த ஒரு தீர்க்கதரிசனச் சாட்சியாக யோவான் இருந்தார்; மேலும் தரிசனத்தில் அவருக்குக் காண்பிக்கப்பட்டதை அன்றைய சபைகளுடன் பகிர்ந்துகொள்ளும் பணியைப் பெற்றிருந்தார். வெளி 22:16. பூமியின் வரலாற்றில் முக்கியமான ஒரு தருணத் தில், இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையை அறிவித்த யோவான் ஸ்நானனைப் போல ஊழியம்செய்தார். யோவான் 1:6-8. யோவான் சாட்சி கொடுத்ததுபோல, நாமும் சாட்சிகொடுக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

நாமும் இயேசுவைப்பற்றிய சாட்சியைப் பெற்றிருக்கவேண்டும். வெளி 19:10. அதாவது தீர்க்கதரிசிகள்மூலமாக அவர் தம்மைப்பற்றிச் சாட்சி கொடுத் திருக்கிறார். யோவானைப்போல நமக்குத் தரிசனங்கள் கிடைக்காமல் போக லாம், ஆனால் நம் வாழ்க்கையில் அவர் செய்கிற கிரியைகளைச் சாட்சியாகப் பகிர்ந்து, நாம் மீட்கப்படுகிற காலத்திற்கான அடையாளங்களை உற்றுநோக்கி, கிறிஸ்துவின் வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருக்கலாம்.

---

**நமக்கு எவ்வளவோ வெளிச்சம் கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு இவ்வளவு அதிகமாகக் கொடுக் கப்பட்டிருப்பதால், நம்மேல் சுமத்தப்பட்டிருக்கிற பொறுப்புகள் என்ன?**

# தீர்க்கதரிசனக் குரல்

தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாக மக்களுடன் எப்பொழுதும் தொடர்புகொண்டுள்ளார். வரலாற்றின் முக்கியமான தருணங்களில் தொடர்புகொண்டார். அப்படியென்றால், இறுதிக்காலத்திலும் தேவன் தமது மக்களுடன் அவ்வாறு பேசுவார் என்று எதிர்பார்ப்பது நியாயமானதுதானே? மில்லரைட் அட்வென்டிஸ்ட்டுகள் 1844, அக்டோபர் 22 அன்று 'மாபெரும் ஏமாற்றத்திற்கு' ஆளானபோது, எலன் ஹார்மனை தீர்க்கதரிசன ஊழியத்திற்கு தேவன் அழைத்தார், ஏமாற்றமடைந்த விசுவாசிகளுக்கு ஒரு செய்தியையும் அவரிடம் கொடுத்தார். நம்பிக்கையில்லாமல் இருந்த அவர்களைத் தேற்றுவதாக அவருடைய முதல் தரிசனம் அமைந்திருந்தது.

அட்வென்டிஸ்ட் வெளியீடுகள் துவங்கப்பட்டதும், ஓய்வுநாளைக் கடைப்பிடித்த அட்வென்டிஸ்ட்டுகள் அதிகாரப்பூர்வமாக ஒரு சபையாக ஒழுங்கமைக்கப்பட்டதும் மற்றொரு முக்கியத் தருணமாகும். அட்வென்டிஸ்ட்டுகளின் வெளியீட்டுப்பணி மூலமாகவும், சுவிசேஷ ஊழியங்கள் மூலமாகவும் 1860களுக்குள் அவர்களது எண்ணிக்கை பல ஆயிரங்களாக உயர்ந்தது. மூன்று தூதர்களின் செய்திகளை இன்னும் திறம்பட அறிவிப்பதற்கு, அவர்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டியிருந்தது. வெளி 14:6–12. இந்தச் சபையை ஒழுங்கமைக்கிற யோசனைக்கு, சிலர் எதிர்ப்பு தெரிவித்தபோதிலும், அந்த நடவடிக்கையை ஊக்குவிப்பதற்கு எலன் ஜி. ஒய்ட்டை தேவன் பயன்படுத்தினார். 1863, மே 21 அன்று, செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபை அதிகாரப்பூர்வமாகத் தோற்றுவிக்கப்பட்டது.

அதே வருடத்தில், தீர்க்கதரிசன வரத்தின் மூலம் விசுவாசிகளிடையே சுகாதாரச் சீர்திருத்தத்தை தேவன் ஊக்குவித்தார். செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகளில் பலர் சிறந்த ஆரோக்கியத்துடன் இல்லை; ஆரோக்கியமான வாழ்க்கை வாழவில்லை. 1863, 1865 ஆம் ஆண்டுகளில் எலன் ஜி. ஒய்ட்டுக்குக் கொடுக்கப்பட்ட விலாவாரியான இரண்டு சுகாதாரத் தரிசனங்களின் மூலம், இந்த நிலைமை மாறியது. செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகள் ஆரோக்கியத்திற்கும், ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் துவங்கினார்கள். 1870கள் முதல் 1890கள் வரை, அட்வென்டிஸ்ட் கல்வி முறையை மேம்படுத்துவதில் எலன் ஜி. ஒய்ட் முக்கியப் பங்காற்றினார். கல்வி அறிவு, நடைமுறை அறிவு, ஆவிக்குரிய வாழ்க்கை உள்ளிட்ட எல்லா அம்சங்களையும் அடக்கிய கல்விபற்றி அவர் அறிவித்த செய்தியானது, படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. 'உண்மையான கல்வி என்பது குறிப்பிட்ட ஒரு பாடத்திட்டத்தைப் படிப்பதைவிட மேலானது. அது இவ்வுலக வாழ்க்கைக்கு ஆயத்தமாவதைவிட மேலானது. அது மனிதனின் ஒட்டுமொத்த அம்சத்தையும் உள்ளடக்கியது; அவன் வாழ்கிறகாலம் முழுவதும் பொருந்தக்கூடியது. இது உடல், மனம் மற்றும் ஆவிக்குரிய ஆற்றல்களின் இணக்கமான வளர்ச்சியாகும்.'

1880 களில், இரட்சிப்பைக்குறித்த செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகளின் இறையியல் கருத்தில், ஒரு சமநிலையைக் கொண்டுவருவதில் முக்கியப் பங்காற்றினார். நியாயப்பிரமாணத்தை அட்வென்டிஸ்ட்டுகள் முக்கியப்படுத்தி வந்த நிலையில், தேவனுடைய கிருபையும், விசுவாசத்தினால் வரும் நீதியும் அதில் மையமாக இருப்பதை வலியுறுத்தினார். 1901 முதல் 1903 வரை, உலகத்திற்கான தனது ஊழியத்தை சபை இன்னும் சிறப்பாக நிறைவேற்றும் பொருட்டு, சபையின் நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைக்க அவர் உதவினார்.

# பிசாசுகளும் மரணமும்: பகுதி 1

தலைநகர் ஹெல்சின்கியிலிருந்து வடக்கே சுமார் 370 மைல் (600 கிலோமீட்டர்) தொலைவில் உள்ள பின்லாந்து நகரமான ராகேவில், லீனாவின் அடுக்குமாடிக் குடியிருப்பில் வேதாகமப் படிப்பு நடந்தது; அவளுடைய நண்பர்களான அன்னேலி மற்றும் டிமோவி உடனிருந்தார்கள். லீனா திடீரென அவர்களிடம், “எனக்கு ஏதோ விபரீதமாகத் தோன்று கிறது, நாம் ஜெபிப்போம்” என்று சொன்னாள். அந்த மூன்று பல்கலைக்கழக மாணவர்களும் முழங்காலில் நின்றனர். அந்தத் தருணத்தில், உயரமான கருப்பு உருவம் ஒன்று வரவேற் பறைக்குள் அத்துமீறி நுழைந்து, அன்னேலியை நோக்கி வேகமாக ஓடியது. அந்தக் கருப்பு உருவம் தன்னைப் பிடிக்க முயன்றபோது, அன்னேலி திகிலில் நிலைகுலைந்து போனாள்.

டிமோவும் லீனாவும் இன்னும் ஊக்கமாக ஜெபித்தனர். அப்போது பிரகாசமான ஓர் உருவம் அறைக்குள் நுழைந்து, அந்தக் கருப்பு உருவத்தைத் துரத்தியடித்தது. அந்த கருப்பு உருவம் வாசலில் நின்று மீண்டும் உள்ளே நுழைய முயன்றது, ஆனால் அது உள்ளே நுழைய முயன்றபோதெல்லாம் அந்தப் பிரகாசமான உருவம் தடுத்தது. சுமார் 10 நிமிடங்களுக்குப் பிறகு, அந்தக் கருப்பு உருவம் அங்கிருந்து வெளியேறியது.

அறையில் மீண்டும் அமைதி திரும்பியது.. பிரகாசமான மற்றும் கருப்பு உருவங்களுக்கு இடையே நடந்த மோதலை லீனா விவரித்தாள். அந்த ஒளியும், இருளும் தன்னைத் தாண்டிச் சென்றபோது, அவற்றின் நிழல்கள் தரையில் தெரிந்ததைமட்டுமே டிமோ பார்த்திருந்தான். அன்னேலிக்கு தான் பார்த்ததைப் பேசுவதற்கு விருப்பமில்லை.

பிறகு, தங்களுக்கு அருகில் இருந்த ஒரு வீட்டில் தற்கொலை நடந்த அதே நேரத்தில் தான் இந்தத் தாக்குதலும் அரங்கேறியதை அந்த மாணவர்கள் அறிந்துகொண்டனர். “அதனால்தான் எனக்கு அந்த விபரீத உணர்வு ஏற்பட்டிருக்கிறது” என்று லீனா கூறினாள்.

இதுவரை பேசாமல் இருந்த அன்னேலி உடனே, முன்பு தான் ஆவி உலகத்துடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், இன்னும் தீய ஆவிகளால் அலைக்கழிக்கப்பட்டு வருவதா கவும் ஒப்புக்கொண்டாள். இருப்பினும், தேவன் மிகவும் வல்லமையுள்ளவர் என்று கூறினாள். அந்தத் தாக்குதலுக்குப் பிறகு படுக்கையில் அவள் தனியாக இருந்தபோது, அந்தப் பிரகாச மான உருவம் அவள் அறைக்குள் நுழைந்து விடியற்காலை வரை படுக்கையில் அமர்ந்திருந் ததைக் கண்டாள். அன்னேலி செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, பிசாசின் அந்தத் தாக்குதல்கள் நின்றன.

வழக்கமாக நன்றாகத் தூங்கும் பழக்கமுள்ள டிமோ, ஒரு நாள் இரவில் இருட்டில் யாரோ தன்னை உற்றுப்பார்ப்பது போன்ற உணர்வுடன் விழித்தெழுந்தான். பின்னர் ஒரு குரலைக் கேட்டான். “ஞானஸ்நானம் எடுக்காதே” என்று அந்தக் குரல் கூறியது. மென்பொருள் பொறியியல் மாணவனான டிமோ, அட்வென்டிஸ்ட் சபையில் ஞானஸ்நானம் பெற ஆயத்தமா கிக் கொண்டிருந்தான். அந்த இருளுக்குள்ளாக உற்று நோக்கினான். அவனால் எதையும் பார்க்க முடியவில்லை, ஆனால் யாரோ ஒரு நபர் அங்கிருப்பதை அவனால் உணர முடிந்தது. அவன் ஜெபித்தான், உடனே அந்த நடமாட்டம் அங்கிருந்து மறைந்தது. மறுநாள், டிமோவிடம் லீனா, கடந்த இரவில் அவனது வீட்டிற்கு அருகில் யாரோ ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறினாள். “எந்த நேரம் என்று உனக்குத் தெரியுமா?” என்று டிமோ கேட் டான். அவன் விழித்தெழுந்த அதே நேரத்தில்தான் அது நடந்திருந்தது.



# கடைசிக்காலத் தீர்க்கதரிசன வெளிப்பாடுகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவேல் 2:28–32; அப் 2:1–21; எபே 4:11–14; வெளி 12:17;19:10; அப் 2:36–42.

**மனன வசனம்:** அதற்குப்பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். யோவேல் 2:28,29.

சில அரசாங்கச் சட்டங்களில், 'காலாவதி விதிமுறை' என்கிற ஒரு சட்டப் பிரிவு இருக்கிறது. இந்த விதிமுறையின்படி குறிப்பிட்ட ஒரு தேதியில் ஒரு சட்டம் தானாகவே காலாவதியாகிவிடும். அரசாங்கங்கள் பல்வேறு காரணங்களுக்காக இத்தகைய சட்டப்பிரிவுகளை உருவாக்கியுள்ளன. உதாரணமாக, நெருக்கடியான காலங்களில் குடிமக்களின் உரிமைகளைக் குறைக்கிற சில சட்டங்களை இந்த விதிமுறைப்படி இயற்றுகின்றன. தற்காலிகமாகப் பறிக்கப்பட்ட உரிமைகளைத் தங்கள் குடிமக்களுக்கு மீண்டும் வழங்குவதற்காக, குறிப்பிட்ட காலம் வரை நீடிக்கிற சட்டங்களை இந்த விதிமுறைபடி இயற்றுகின்றன.

பண்டைய காலங்களில் பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசன வரத்தைக் கொடுத்தபோது, தேவன் அதில் காலாவதி விதிமுறையைச் சேர்த்திருந்தாரா? இயேசுவின் வருகைக்கு முன்பாக, இந்த வரம் செயல்படுவது நின்றுவிடுகிற ஒரு காலம் இருக்கிறதா? கடந்த வாரம், முக்கியமான தருணங்களில் தேவன் தீர்க்கதரிசிகள்மூலமாக தமது மக்களுடன் பேசினதைப் படித்தோம். இந்த வாரம், இறுதிக் காலத்தில் தீர்க்கதரிசன வரத்தின் விசேஷித்த செயல்பாட்டையும், அதன் நிரந்தரத் தன்மையைக்குறித்தும், இயேசுவின் இரண்டாம் வருகை நெருங்கி வரும் வேளையில் எலன் ஜி. ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன ஊழியத்தின் பங்கைக் குறித்தும் ஆராய்வோம்.

*2026, டிசம்பர் 19 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# யோவேலின் வாக்குறுதி

**கடைசி நாட்களில் தாம் என்ன செய்வதாக தேவன் வாக்குறுதி அளிக்கிறார்? யோவேல் 2:28-32.**

---

கிறிஸ்துவுக்கு முன் 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த தீர்க்கதரிசியான யோவேல், எதிர்கால நிகழ்வுகள்குறித்துச் சொல்கிறார். அவை தான் வாழ்ந்த காலத்தில் நடக்க விருந்ததாக சொல்கிறாரா, அல்லது எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் நடக்கப் போவதாகச் சொல்கிறாரா என்று நாம் யோசிக்கலாம்.

தீர்க்கதரிசனங்களை இறையியலாளர்கள் இரண்டு வகைகளாகப் பிரிக் கிறார்கள் - செவ்வியல் தீர்க்கதரிசனம்; அடையாளத் தீர்க்கதரிசனம். செவ்வியல் தீர்க்கதரிசனம் என்பது குறிப்பிட்ட நாடுகள், உண்மையான எண்கள், உண்மை யான பெயர்களைப் பயன்படுத்திக் கூறப்படுவதாகும். உதாரணமாக, எரே 25:1-11. மறுபுறம், அடையாளத் தீர்க்கதரிசனம் என்பது அதிக அடையாள மொழி களையும், காலங்களைக் குறிக்க அடையாள எண்களையும் பயன்படுத்திக் கூறப் படுவது; அதில் ஆகாயமண்டல அடையாளங்களும் பெரும்பாலும் இடம் பெறும். தானி 7. சில நேரங்களில் இந்த இரண்டு வகையான தீர்க்கதரிசனங்களும் சேர்ந்து காணப்படும். உதாரணமாக, மத்தேயு 24.

யோவேல் 2:28-31 எத்தகையத் தீர்க்கதரிசனம்? இந்தப் பகுதி ஓர் அடை யாளத் தீர்க்கதரிசனம். எனவே, யோவேல் தீர்க்கதரிசி வாழ்ந்த காலத்திலோ அவருடைய ஊழியத்தைத் தொடர்ந்து வந்த உடனடி ஆண்டுகளிலோ இது நிறை வேறியிருக்க வாய்ப்பில்லை. அது எதிர்காலத்தில் நிறைவேறப்போகிற ஒரு தீர்க்கதரிசனம். எந்தப் பின்னணியில், எந்தக் காலத்தில் இந்தத் தீர்க்கதரிசன வரம் கொடுக்கப்படுமென்று தேவன் சொல்கிறார்? 'கர்த்தருடைய பெரிதும் பயங் கரமுமான நாள் வருமுன்னே.' யோவேல் 2:31. அந்த நாள் எது? இயேசுவின் முதலாம் வருகையா? அல்லது இரண்டாம் வருகையா? அல்லது இரண்டுமா?

சூரியனிலும் சந்திரனிலும் அடையாளங்கள் தோன்றுமென யோவேல் தீர்க்க தரிசனம் குறிப்பிடுகிறது; இதே கருத்து வேதாகமத்தின் வேறு பல பகுதிகளிலும் காணப்படுகிறது. இறுதிகாலத்தைப்பற்றி இயேசு பிரசங்கித்தபோது, சூரியன், சந்திரன், நட்சத்திரங்களில் தோன்றும் அடையாளங்களைப்பற்றித் தமது சீடர் களிடம் கூறினார். மத் 24:29. இதேபோல், யோவானும் இதே அடையாளங்களை வெளிப்படுத்தலில் குறிப்பிடுகிறார். வெளி 6:12,13. இயேசுவும் யோவானும் நம்முடைய கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு முன்பாக இறுதியாக நிகழப் போகிற ஆகாயமண்டல அடையாளங்களையே குறிப்பிடுகிறார்கள்.

எனவே, இதேபோன்ற அடையாளங்களைச் சுட்டிக்காட்டுகிற யோவே லின் தீர்க்கதரிசனமும், இறுதிக்காலத்தில் நிகழப்போகிற சம்பவத்தையே சுட் டிக்காட்டுகிறது. யோவேல் 2:30,31.

---

**முன்னறிவிக்கப்பட்டபடியே நிறைவேறியுள்ள தீர்க்கதரிசனங்களை எல்லாம் சிந்தித்துப் பாருங் கள். இது, இயேசுவின் இரண்டாம் வருகை உட்பட, இனி நிறைவேறவிருக்கும் தீர்க்கதரிசனங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நாம் தேவனை நம்புவதற்கு ஏன் உதவவேண்டும்?**

# பெந்தெகொஸ்தே

**கிறிஸ்துவின் முதல் வருகையின் பின்னணியில், யோவேலின் தீர்க்கதரிசனத்தை பேதுரு மேற்கோள் காட்டினது ஏன்? அப் 2:1–21. இந்தப் பகுதியில் தீர்க்கதரிசனம் எத்தகைய பங்காற்றுகிறது?**

---

பழைய ஏற்பாட்டிலிருந்து நீளமான ஒரு பகுதி புதிய ஏற்பாட்டின் இந்த வசனங்களில் மேற்கோள் காட்டப்படுகிறது. பேதுருவின் காலத்தில் அந்த அடையாளங்கள் எதுவும் காணப்பட்டனவா? பேதுரு அவ்வாறு பேசியதற்குக் காரணம் என்ன? அந்த அடையாளங்களின் நிறைவேற்றத்தை பேதுரு கண்டிருந்தார். சில நாட்களுக்கு முன்பு இயேசு சிலுவையில் தொங்கியபோது, சூரியன் மூன்று மணி நேரம் இருண்டுபோனது. மாற்கு 15:33.

அதனால்தான் பேதுருவால் நிச்சயத்துடன் பேசமுடிந்தது; ஆனால் அதே நிச்சயம், அதை இன்று கேட்கிற நமக்கு இல்லாமல் இருக்கலாம். யோவேலின் தீர்க்கதரிசனத்தின் முழுமையான நிறைவேற்றத்தை நாம் எதிர்பார்த்திருக்கிறோம். இதைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோல் யோவேல் தீர்க்கதரிசனத்திலேயே உள்ளது. யோவேல் 2:23இல், முன்மாரியையும் பின்மாரியையும் யோவேல் குறிப்பிடுகிறார். இந்தத் தீர்க்கதரிசனத்தின் முதல் நிறைவேற்றம்தான் அப் 2 இல் கொடுக்கப்பட்ட முன்மாரி. இதன் இறுதி நிறைவேற்றம், இறுதிக்காலத்திற்குச் சற்று முன் பின்மாரியாகப் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போது நடக்கும்.

'எதிர்காலத்தை முன்னுரைப்பதே' தீர்க்கதரிசனம் என்று கருதப்படுகிறது. ஆனால் வேதாகமத் தீர்க்கதரிசிகள் மனந்திரும்புமாறும் மக்களை அழைத்தார்கள். பேதுருவும்கூட அங்கே பேசியபோது, கூட்டத்திலிருந்த சிலர் பாவ உணர்வடைந்தார்கள். அப் 2:37.

அதற்குப் பேதுரு சொன்ன பதில் என்ன? அப் 2:38, 39.

தீர்க்கதரிசியான யோவான் ஸ்நானனும் மனந்திரும்பும்படி மக்களை அழைத்தார். அவர் இயேசுவின் முதல் வருகையை அறிவித்தபோதிலும், பாவங்களிலிருந்து மனந்திரும்பும்படியும் மக்களிடம் பிரசங்கித்தார். 'மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம்பண்ணினான்'. மத் 3:2.

இவ்வாறு, யோவேல் 2 ஆம் அதிகாரம் எதிர்காலத்தில் இறுதியாக நிறைவேறப் போவதைப் பேசுகிறது. யோவேலும் பேதுருவும் செய்ததுபோலவே, கடைசிக்காலத் தீர்க்கதரிசிகளும் மக்களை மனந்திரும்பும்படி அழைப்பார்கள், இயேசுவைச் சுட்டிக்காட்டுவார்கள், மேலும் தேவனுடைய கடைசிக்காலச் சபைக்கு வழிகாட்டுதலை வழங்குவார்கள்.

---

**அசாதாரணமான அந்த வெளிப்பாடுகளைக் கண்ட மக்கள், அது ஏதோ இயற்கையான ஒரு நிகழ்வு என்று முதலில் நினைத்தார்கள். அதனால்தான், அங்கிருந்தவர்கள் மதுவால் வெறித்திருந்ததாகக் கருதினார்கள். மது அருந்தினால் திடீரென அந்நிய பாஷைகளில் பேசிவிட முடியுமா? அது பகுத்தறிவற்ற எண்ணம் என்றாலும்கூட, தங்களுக்கு முன்னால் அசாதாரணமான ஒரு நிகழ்வு நடக்கும்போதுகூட, அதற்கு இயற்கையான ஒரு விளக்கத்தைக் கண்டறிய மக்கள் முயற்சிப்பதற்குக் காரணம் என்ன?**

# ஆவியின் வரங்கள்

கிறிஸ்துவின் சபை சிறப்பாகச் செயல்பட, அதன் ஊழியத்திற்கு உதவுவதற்காக, தேவன் அதற்கு வரங்களை அளித்துள்ளார். புதிய ஏற்பாட்டில், ஆவிக்குரிய வரங்களின் பட்டியல்கள் பல உள்ளன.

| ரோமர் 12:6-8 | 1கொரிந்தியர் 12:8-10 | 1கொரிந்தியர் 12:28 | எபே 4:13 |
|---|---|---|---|
| தீர்க்கதரிசனம் | தீர்க்கதரிசனம் உரைத்தல் | தீர்க்கதரிசிகள் | தீர்க்கதரிசிகள் |
| ஊழியம்/சேவை | ஞானத்தைப் போதிக்கும் வசனம் | அப்போஸ்தலர்கள் | அப்போஸ்தலர்கள் |
| போதித்தல் | அறிவை உணர்த்தும் வசனம் | போதகர்கள் | போதகர்கள் |
| புத்திசொல்லுதல் | விசுவாசம் | அற்புதங்களைச் செய்கிறவர்கள் | மேய்ப்பர்கள் |
| ஆளுதல் | குணமாக்கும் வரங்கள் | குணமாக்குகிறவர்கள் | சுவிசேஷகர்கள் |
| உதவிசெய்தல் | அற்புதங்களைச் செய்யும் சக்தி | ஊழியங்கள் | |
| இரக்கஞ்செய்தல் | ஆவிகளைப் பகுத்தறிதல் | ஆளுகைகள் | |
| | பற்பல பாஷைகளைப் பேசுதல் | பலவித பாஷைபேசுகிறவர்கள் | |
| | பாஷைகள் வியாக்கியானம் | | |

**இந்த வரங்களை தேவன் ஏன் தமது சபைக்குக் கொடுக்கிறார்? எபே 4:11–15. சபையைப்பற்றிய தேவனுடைய திட்டங்களை நிறைவேற்ற தீர்க்கதரிசன வரம் எவ்வாறு உதவுகிறது?**

சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும், சபையைக் கட்டி எழுப்புவதற்குமே அனைத்து ஆவிக்குரிய வரங்களும் கொடுக்கப்படுகின்றன. இந்த நான்கு பட்டியல்களிலும் தீர்க்கதரிசன வரம் வகிறது.

**தீர்க்கதரிசிகளைப்பற்றிய பொதுவான சில தன்மைகளைப் பார்ப்போம்:**

1) தீர்க்கதரிசிகளை தேவன் அழைக்கிறார். 1இராஜா 19:16, 19–21; ஏசா 6.
2) தரிசனங்கள், சொப்பனங்கள், கேட்கக்கூடிய சத்தங்கள்மூலமாக தீர்க்கதரிசிகளுடன் தேவன் பேசுகிறார். சில நேரங்களில் எதிர்கால நிகழ்வுகளை வெளிப்படுத்துகிறார்; தற்போதைய நிலவரங்களைப்பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கிறார். தானி 2.
3) தீர்க்கதரிசிகள் பெலவீனமடையலாம்; சுவாசிப்பதைக்கூட நிறுத்தலாம், ஆனால் அவர்கள் புதிய பலத்தினால் நிரப்பப்படவும் செய்யலாம். தானி 10:8–10,18,19.
4) தீர்க்கதரிசிகள் பல்வேறு வழிகளில் தங்கள் செய்திகளைத் தெரிவிக்கிறார்கள்: வாய்மொழியாக, அப் 21:10–12; நடித்துக்காட்டுவதன்மூலமாக, எசே 4; கடிதங்கள்மூலமாக, வெளி 2; 3. சிலர் இலக்கிய உதவியாளர்களைப் பயன்படுத்தினார்கள். எரே 36:1– 4.
5) ஒரு தீர்க்கதரிசியின் செய்தி முந்தைய தீர்க்கதரிசிகளின் செய்திகளுடன் ஒத்துப்போகவேண்டும், ஏனென்றால், தேவன் தமக்குத்தாமே முரணானவர் அல்லர். ஏசா 8:20.
6) ஒரு தீர்க்கதரிசி சொல்கிற கருத்துகளும், அந்தத் தீர்க்கதரிசியின் தனிப்பட்ட வாழ்க்கையின் தாக்கமும், தேவனே அதற்கு ஆதாரமாக இருப்பதற்குச் சான்றாக இருக்கும். மத் 7:15–20.
7) தெய்வீகமானவற்றிற்குப் போலிகளை உருவாக்க, சாத்தான் எப்போதும் முயல்கிறான். இது தீர்க்கதரிசன வரத்திற்கும் பொருந்தும். இறுதிக்காலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றுவார்கள். மத் 24:24; 2பேதுரு 2:1.

# கடைசிக்கால மீதமானவர்கள்

பரலோகத்தில்துவங்கியதிலிருந்துகடைசிநாட்கள்வரைஇருக்கப்போகிற மாபெரும் போராட்டத்தின் வரலாற்றை வெளி 12ஆம் அதிகாரம் காட்டுகிறது.

**'இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சி' என்றால் என்ன? வெளி 12:17; 19:10; வெளி 22:8,9.**

கடைசிக் காலச் சபையை அடையாளம் காட்டுகிற இரண்டு குணாதிசயங் களை வெளி 12:17 குறிப்பிட்டுள்ளது. அந்தச் சபை ஓய்வுநாள் கட்டளை உட்பட பத்துக் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு, அதற்குக்கீழ்ப்படிகிறது; மேலும் 'இயேசு வைக்குறித்தசாட்சியைப்' பெற்றிருக்கிறது. இந்தச் சாட்சி என்ன?

'இயேசுவைக் குறித்த சாட்சி' என்பது, விசுவாசிகள் இயேசுவை அறிக்கை செய்வதும், ஊழியப்பணி மற்றும் சுவிசேஷப் பணிமூலம் அவரை மற்றவர் களுக்கு அறிவிப்பதும் என்று சில வேதாகம மொழிபெயர்ப்புகள் விளக்குகின் றன. உதாரணமாக, வெளி 19:10 இல், 'இயேசுவைப்பற்றின சாட்சி' என்று உள் ளது. அதாவது, சாட்சியின் மையப்பொருளாக இயேசுவைக் காட்டுகிறது. வேறு சில வேதாகமப்பதிப்புகள் இதற்கு வித்தியாசமான அர்த்தத்தைச் சொல்கின்றன. அதாவது, இயேசு தமது சபையைக்குறித்துச் சாட்சிகொடுப்பதாகத் தெரிவிக் கின்றன. சமகால மொழிபெயர்ப்பில் 'இயேசுவின் சாட்சி' என்று உள்ளது. வெளி 19:10. இங்கு இயேசுவைச் சாட்சிகொடுத்தவராகச் சுட்டிக்காட்டுகிறது. உண் மையில், இதற்கான கிரேக்க வார்த்தைக்கு இந்த இரண்டு விதமாகவும் அர்த்தம் கூறமுடியும். அப்படியென்றால், யோவான் எதைக் குறிப்பிடுகிறார்?

சபையை அடையாளப்படுத்துகிற இந்த இரண்டு தன்மைகளையும் ஒப் பிட்டுப் பார்த்தால், அவை எழுதப்பட்டிருக்கும் விதத்தில் ஒரு பெரிய ஒற்றுமை யைக் காணமுடியும். கிரேக்க மொழியில் அது இன்னும் தெளிவாகத் தெரிகிறது. 'தேவனுடைய கற்பனைகள்' எவ்வாறு தேவனிடமிருந்து வருகிறதோ, அதே போல 'இயேசுவைக் குறித்த சாட்சியும்' இயேசுவிடமிருந்தே உருவாகிறது. எனவே, இயேசுவே இங்கே சாட்சிபகிர்கிறார். அவர் உண்மையான சபையை அடையாளம் காட்டுகிறார். அதை எப்படிச் செய்கிறார்? தீர்க்கதரிசன வரத்தின் மூலமாகச் செய்கிறார்.

இதற்கான பதில்கள் வெளி 19:10; வெளி 22:9 இல் தெளிவாக உள்ளன. இங்கு, 'இயேசுவைப் பற்றின சாட்சி' 'தீர்க்கதரிசனத்தின் ஆவியுடன்' அடை யாளப்படுத்தப்படுகிறது. யோவானே ஒரு தீர்க்கதரிசிதான், அவரில் 'இயேசு வைக் குறித்த சாட்சி' வெளிப்படுகிறது. ஒரு தீர்க்கதரிசி, தேவனுடைய மக் களுக்குத் தேவ தூதுவராகச் செயல்பட விசேஷித்த அழைப்பைப் பெற்றவர். அவர்மக்களைஎச்சரிக்கிறார், மனந்திரும்பஅழைக்கிறார், ஊக்கப்படுத்துகிறார், எதிர்காலத்தை வெளிப்படுத்தவும் செய்கிறார்.

இந்தத் தீர்க்கதரிசன வரத்தின்மூலம் தேவன் தமது சபையை அடையாளங் காட்டுகிறார். வெளி 12:17. எனவே, பூமியின் வரலாற்றின் கடைசி நாட்களிலும் தீர்க்கதரிசிகளை தேவன் எழுப்புவார் என்பதை இது காட்டுகிறது.

**'தீர்க்கதரிசன ஆவியின்' செயல்பாட்டிற்கு எலன் ஜி. ஒய்ட் அவர்களின் ஊழியம், மிகச்சிறந்த உதாரணமாக இருப்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது? வெளி 19:10.**

# நவீனகால வெளிப்பாடுகள்

இன்றைய விசுவாசிகள் பலர், பண்டைய வேதாகமக் காலங்களில் தீர்க்கதரிசிகள் இருந்ததை நம்புவார்கள், ஆனால், இன்றும் தீர்க்கதரிசிகள் எழும்புவது சாத்தியம் என்பதை ஏற்றுக்கொள்வார்களா? கடைசி நாட்களில் மகிமையான விதங்களில் தீர்க்கதரிசன வரம் வெளிப்படும் என்று யோவேல் 2:28-31 சொல்வதை நம்பினால், அந்த நம்பிக்கையை எவ்வாறு வெளிப்படுத்துவோம்?

**அப் 2:36-42 இல், பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கித்த செய்தியின் மையக் கருத்து என்ன? பிரசங்கத்தைக் கேட்டவர்களின் எதிர்வினை என்ன?**

கி.பி. 31 ஆம் ஆண்டு பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்ட நிகழ்வானது, பூமியின் கடைசி நாட்களில், இன்னும் மிகப்பெரிய அளவில், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படவிருப்பதை சிறப்பாகச் சித்திரிக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில், இயேசு மேன்மைப்படுத்தப்பட்டார். எங்கும் மனந்திரும்புதல் காணப்பட்டது. தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கான ஆயத்தத்தையும் பெலத்தையும் பெற்ற மக்கள் எழும்பினார்கள். கிறிஸ்துவை மையமாக வைத்து, பேதுரு பேசின செய்திக்கு, பரிசுத்த ஆவியானவர் உயிரூட்டம் கொடுத்தார்; அதனால் 3,000 பேர் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற வழியுண்டானது. பரிசுத்த ஆவியானவர் ஆசீர்வாதமாக ஊற்றப்பட்ட அந்த 'முன்மாரி' விலையேறப்பெற்ற ஒரு விதையை விதைத்தது. அந்த விதை சபையாகும். விசுவாசிகள் ஒரு சரீரமாக இணைந்து, இயேசுவின் அன்பை வெளிப்படுத்தி, பிறருடன் பகிர்ந்தார்கள்; அதே நேரத்தில் அவரது வருகையையும் அறிவித்தார்கள்.

'விலையேறப்பெற்ற அந்த விதையை முளைக்கப்பண்ண' முன்மாரி கொடுக்கப்பட்டதுபோல, 'அறுவடையை முதிரச் செய்ய அதன் முடிவில் "பின்மாரி" கொடுக்கப்படும்.' - எலன் ஜி. ஒய்ட். அதாவது, தீர்க்கதரிசன வரத்தின் நவீன கால வெளிப்பாடுகள், அதாவது பின்மாரியானது, பெந்தெகொஸ்தே நாளில் முன்மாரி எவ்வாறு வெளிப்பட்டதோ, அதைப் போலவே வெளிப்படும்.

கடைசிக் காலத்தில் தீர்க்கதரிசன வரமானது சிறியவர் பெரியவர், ஆண் பெண் என எந்தப் பாகுபாடுமின்றி அருளப்படும். யோவேல் 2:28-31. பரிசுத்த ஆவியானவர் யாரைத் தேர்ந்தெடுக்கிறாரோ, அவர்கள்மூலமாக தேவன் பேசுவார். கடைசிக்காலத்திற்கான ஒரு தூதுவரை பரிசுத்த ஆவியானவர் தேர்ந்தெடுக்கும் போதெல்லாம், அந்தத் தூதுவரின் செய்தி இயேசுவை உயர்த்துவதாகவும், மக்களை மனந்திரும்புதலுக்கு அழைப்பதாகவும், தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்ற மக்களை ஆயத்தப்படுத்துவதாகவும் இருக்கும். இந்த மூன்று குணாதிசயங்களும் எலன் ஜி. ஒய்ட் அவர்களுடைய தீர்க்கதரிசன ஊழியத்தின் முக்கிய அடையாளங்கள். அவர் தனது வாழ்நாள் முழுவதும், தனது பேச்சிலும் எழுத்திலும் இயேசுவையும் வேதவசனங்களையும் உயர்த்தினார். செவந்த்-டே அட்வென்டிஸ்டுகளையும் மற்றவர்களையும் முழு இருதயத்தோடும் மனந்திரும்புமாறு அழைத்தார், மேலும் அழிகிறவர்களுக்காக நடக்கிற தேவனுடைய ஊழியத்தில் அனைவரும் தங்களை இணைத்துக் கொள்ளும்படி வலியுறுத்தினார்.

**எலன் ஜி. ஒய்ட் அவர்களின் ஊழியத்தின்மூலம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த அற்புதமான வரத்தை நீங்கள் எவ்வளவு தூரம் பயன்படுத்தியிருக்கிறீர்கள்?**

# ஊழியமே மையம்

தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படி விசுவாசிகளுக்கு உதவிசெய்யவே ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்படுவதாக எபே 4 இல் பவுல் கூறுகிறார். எலன் ஜி. ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன ஊழியமும் அதே நோக்கமுடையதாக இருந்தது. ஆவியினால் ஏவப்பட்ட அவரது செய்திகள், விசுவாசிகள் தேவனுடன் ஆழமான உறவை வளர்க்க உதவியுள்ளன; மேலும், அந்த அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தூண்டியுள்ளன.

'கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற அனைவரையும்விட, செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகளே உலகிற்கு முன்பாக கிறிஸ்துவை உயர்த்துவதில் முதன்மையானவர்களாக இருக்கவேண்டும். ஓய்வுநாள் சத்தியத்தை அறிவிக்கும்படி மூன்றாம் தூதனுடைய செய்தியில் சொல்லப்பட்டது. இந்தச் சத்தியமும், இந்தச் செய்தியில் அடங்கியுள்ள மற்ற சத்தியங்களும் அறிவிக்கப்படவேண்டும்; ஆனால், அந்தச் செய்தியின் மையமாகிய கிறிஸ்து இயேசுவை விட்டுவிடக் கூடாது. கிறிஸ்துவின் சிலுவையில்தான் கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்தித்து, நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிடுகின்றன. கல்வாரியை நோக்கிப் பார்க்கும்படி பாவி வழிநடத்தப்படவேண்டும்; ஒரு சிறு பிள்ளையைப் போன்ற விசுவாசத்தோடு இரட்சகருடைய புண்ணியங்களை அவன் நம்பி, அவருடைய நீதியை ஏற்றுக்கொண்டு, அவருடைய கிருபையை விசுவாசிக்க வேண்டும்.' மேலும், தேவனுடைய ஊழியத்தில் பங்கேற்கும்படி ஒவ்வொரு விசுவாசியையும் அழைக்குமாறு வலியுறுத்தினார். 'கர்த்தருடைய பணியில், சோம்பேறிகளாக யாரும் இருக்கக்கூடாது. வெவ்வேறு வரமுடையவர்கள், மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக ஊழியத்தில் ஒன்றிணையவேண்டும். இந்த உலகத்தின் சீரழிவிலிருந்து ஆத்துமாக்களைச் சேர்த்து, கிறிஸ்துவின் பரிசுத்தமான இரட்சண்ய அன்பிற்குள் அவர்களைக் கொண்டுவரப் பிரயாசப்படவேண்டும்'. எலன் ஜி. ஒய்ட்டும்கூட 1880களில் ஐரோப்பாவிலும், 1890களில் ஆஸ்திரேலியாவிலும் ஊழியராகப் பணியாற்றினார்.

கடைசிக் காலத்திலுள்ள தேவனுடைய மக்கள் தனிப்பட்ட வகையில் தங்களை அர்ப்பணிக்கவும், ஊழியம்செய்யவும் தேவன் தீர்க்கதரிசன அழைப்பைக் கொடுப்பதால், இவர்கள் மீது சாத்தான் 'கோபமடைகிறான்'. வெளி 12:17. 'நம்மைச் சுற்றிலும் நமக்கு முன்பாகவும் இருக்கிற ஆபத்துகளை கர்த்தர் வெளிப்படுத்தியுள்ளார். உலகைச் சிறைப்படுத்தப்போகிற வஞ்சகங்களைத் தீர்க்கதரிசனத்தின் ஆவியின் மூலமாக அவர் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார். மேலும், "வழி இதுவே, இதிலே நடவுங்கள்" என்று சொல்லியிருக்கிறார், ஏசாயா 30:21. "மாபெரும் போராட்டம்" புத்தகம் சாத்தானின் வஞ்சகங்களை அம்பலப்படுத்துகிறது'.

மக்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணிக்கும்போது சாத்தான் கடுங்கோபமடைகிறான்; மேலும் தேவனுடைய தீர்க்கதரிசனச் சத்தத்தின் நம்பகத்தன்மையைக் குலைக்க எல்லாவற்றையும் செய்கிறான். எலன் ஜி. ஒய்ட் அவர்களின் தீர்க்கதரிசன வரம் 'இன்றைய காலத்திற்குப் பொருந்தாதது' என்று கூறி, அதன் மதிப்பைக் குறைக்க முயல்வதும் அவனது தந்திரங்களில் ஒன்று. நம்முடைய காலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு காலத்தில் அவர் எழுதினார் என்பதே அதற்கு அவர்கள் கூறும் காரணமாகும். எலன் ஜி. ஒய்ட் அவர்களின் எழுத்துகளை இன்றைய காலத்திற்குப் பயனற்றதாக மாற்ற, சாத்தான் பயன்படுத்தும் மிகச்சிறந்த வழி, தற்போதைய தலைமுறையினர் அவருடைய எழுத்துகளைத் வாசிக்கவிடாமல் செய்வதாகும்.

# பிசாசுகளும் மரணமும்: பகுதி 2

இதுவரையிலான கதை: டிமோவும் அவனது நண்பர்களான லீனா, அன்னேலி ஆகியோரும், லீனாவின் குடியிருப்பில் நடந்த ஒரு வேதாகம ஆராய்ச்சியின்போது பயங்கரமான ஓர் அமானுஷ்ய அனுபவத்தை எதிர்கொண்டனர். தான் ஒரு காலத்தில் ஆவி உலகத் தொடர்புகளில் இருந்ததாகவும், இன்னும் அவ்வப்போது பொல்லாத ஆவிகளால் துன்புறுத்தப்படுவதாகவும் அன்னேலி அவர்களிடம் சொன்னாள். ஆனாலும், அவள் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் ஞானஸ்நானம் பெற்றபோது, அந்தப் பிசாசின் தாக்குதல்கள் நின்றன. டிமோ ஒரு பொறியியல் மாணவன், அவனும் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். ஓர் இரவில் அவன் ஒரு விசித்திரமான அமானுஷ்ய உணர்வினால் தூக்கத்திலிருந்து எழுந்தான்; அந்த ஆவி அவனிடம், 'ஞானஸ்நானம் பெறாதே' என்று கூறியது.

இரவு நேரத்தில் அவ்வாறு எச்சரிக்கப்பட்ட டிமோ ஞானஸ்நானம் பெறாமல் இருக்கவில்லை, மேலும் ஓர் அட்வென்டிஸ்ட் போதகராகவும் டிமோ மாறினார். ஆனால், அமானுஷ்ய சக்திகளுடனும் தற்கொலையுடனும் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அத்தோடு நின்றுவிடவில்லை. ஒருநாள், அவரும் பல அட்வென்டிஸ்ட் போதகர்களும் ஸ்வீடனில் நடக்கவிருந்த போதகர்கள் கான்ஃபரன்ஸிற்குச் செல்வதற்கு ஓர் இரவில் படகில் பயணம் செய்தார்கள். அன்று இரவு, டிமோவுக்கு அமைதியில்லை. தூக்கம் வரவில்லை. உடனடியாக ஜெபிக்கவேண்டும்போல உணர்ந்தார். அவர் ஜெபிக்கத் தொடங்கியதுமே, பிசாசின் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டார். அந்த பயங்கரமான சத்தம் விவரிக்க முடியாததாக இருந்தது, ஒரு பைத்தியக்காரன் சிரிப்பதுபோல இருந்தது. ஏதோ கெட்டது நடக்கிறது என்பதை டிமோ உணர்ந்தார், ஆனால் அது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. அவர் இரண்டு மணி நேரம் ஜெபித்தார். காலை உணவின்போது, ஒரு மூத்த போதகர் டிமோவிடம் வந்தார்.

"இரவில் உனக்கு என்ன நடந்தது? உனக்காக ஜெபிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் என்னிடம் சொன்னார்" என்று சொன்னார். அவர் நள்ளிரவில் எழுப்பப்பட்டு, டிமோவிற்காக ஜெபித்திருந்தார். அப்போது மற்றொரு போதகர் காலை உணவுக்காக அங்கு வந்தார். "கடந்த இரவு என்ன நடந்தது தெரியுமா, நான் தூக்கத்திலிருந்து எழுந்து, சற்றே என்னை ஆசுவாசப்படுத்துவதற்கு வெளியே செல்லவேண்டும் என்று உணர்ந்தேன். நான் கப்பலின் தளத்திற்குச் சென்றபோது, அங்கு ஒரு மனிதன் கடலில் குதிக்கத் தயாராக நின்றிருந்ததைப் பார்த்தேன்" என்றார். அந்தப் போதகர் அந்த மனிதனிடம் நயமாகப் பேசி, மீண்டும் கப்பலின் தளத்திற்கு வரவழைத்தார்; பின்னர் தற்கொலை செய்துகொள்ள வேண்டாம் என்று ஒரு மணி நேரம் அவனுக்கு அறிவுரை கூறினார்.

அந்த மூன்று போதகர்களும் தங்களுக்கு உண்டான அந்க அமானுஷ்ய அனுபவங்களின் நேரத்தை ஒப்பிட்டுப் பார்த்தபோது, அந்த மூன்றும் ஒரே நேரத்தில் நடந்திருப்பதை அறிந்துகொண்டனர்.

இப்போது 45 வயதாகும் டிமோ, பின்லாந்தில் உள்ள அட்வென்ட்டிஸ்ட் சபையின் செய்தித் தொடர்பு இயக்குநராக இருக்கிறார். கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையிலான மாபெரும் போராட்டம் மிகவும் உண்மையானது என்பதற்கு, தற்கொலை மற்றும் அமானுஷ்ய சக்திகளுடன் தனக்கு ஏற்பட்ட இந்த மூன்று அனுபவங்களே சாட்சி என்று கருதுகிறார். "இது நம்மைச் சுற்றிலும் நடந்து கொண்டிருக்கிறது. இயேசு ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டார் என்பதே நமக்குள்ள மகிழ்ச்சியான செய்தி. நாம் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இயேசு இன்னும் நம்மைப் பாதுகாக்கிறார். சாத்தானின் சக்திகளால் எதுவும் செய்யமுடியாது."

பாடம் **13** டிசம்பர் 19-25



# தீர்க்கதரிசன வார்த்தையிலிருந்து ஆசீர்வாதங்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 2:2; யோவான் 1:1–5; 2தீமோ 3:16,17; 2தீமோ 4:1–5; ஏசா 40:1–5; யோவான் 17:20–23; 1 கொரி 1:10–13.

**மனன வசனம்:** வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. 2தீமோத்தேயு 3:16,17.

நாம் குருட்டுத்தனமாக விசுவாசிக்கும்படி தேவன் சொல்வதே இல்லை. மாறாக, தாம் இருப்பதற்கான வலுவான சான்றுகளைக் கொடுத்துள்ளார். இயற்கையானது, 6,000 ஆண்டுகாலப் பாவத்திற்குப் பிறகும், தேவன் ஒருவர் இருப்பதைச் சாட்சியிடுகிறது; அவரது நம்பமுடியாத படைப்பாற்றலையும் (ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் புகைப்படங்களைப் பாருங்கள்). அந்தத் தேவனுடைய அன்பையும் சாட்சி பகிர்கிறது.

'அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்' என்று பேதுரு எழுதுகிறார். 2பேதுரு 1:18,19. பேதுருவைப்போல நாம் தேவ சத்தத்தைக் கேட்காமல் இருக்கலாம்; ஆனால் நமக்கும் 'அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம்' இருக்கிறது.

தேவன் தமது தீர்க்கதரிசிகள்மூலமாக நம்மிடம் பேசியுள்ளார். அவர்கள் தங்கள் புத்தகம் வேதாகமத்தில் இடம்பெற்ற தீர்க்கதரிசிகளாக இருக்கலாம்; தங்கள் புத்தகம் வேதாகமத்தில் இடம்பெறாத தீர்க்கதரிசிகளாக இருக்கலாம். மிகமிக ஏராளமான சான்றுகள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அதை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோமா? அநேகர் தயாராக இல்லை என்பதே உண்மை. தேவ கிருபையால், நாமும் அதே தவற்றைச் செய்யாமல் இருப்போமாக.

***2026, டிசம்பர் 26 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# கிறிஸ்துவை தீர்க்கதரிசனம் உயர்த்துகிறது

தேவன் தம் மக்களுடன் தொடர்புகொள்ளவும், அவர்களைத் தம்மோடு தொடர்புகொள்ள வைக்கவும் தீர்க்கதரிசனத்தைப் பயன்படுத்துகிறார். அதனால்தான், வலுசர்ப்பமாகிய சாத்தான் தேவனுடைய சபையாகிய ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, அவளுடைய சந்ததியாகிய மீதிமானவர்களுடனே யுத்தம் பண்ணப் போனான். வெளி 12:17. இந்த ஸ்திரீயின் சந்ததியாகிய மீதமானவர்களின் அடையாளங்கள் என்ன? அவர்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, இயேசுவைப்பற்றின சாட்சியைப் பெற்றிருக்கிறார்கள். இந்தச் சாட்சி 'தீர்க்கதரிசனத்தின் ஆவி' என்று வெளி 19:10 கூறுகிறது.

**பவுல் தன் வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் எதை நோக்கமாகக் கருதினார்? 1கொரி 2:2; கலா 6:14. அந்த நோக்கமே அவரது வாழ்க்கைக்கு மிகப்பெரிய ஊக்கமாக இருந்தது.**

---

அப்போஸ்தர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள அவர்களுடைய சொந்த அனுபவங்கள் உதவின; அதுபோக, பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த தீர்க்கதரிசிகள், நீதிமான்களின் சாட்சியங்கள் உதவின. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் முழுமையான, அடுக்கடுக்கான ஆதாரம் பரவியுள்ளது; பழைய ஏற்பாட்டில் வரவிருந்த ஓர் இரட்சகர்குறித்த ஆதாரமும், புதிய ஏற்பாட்டில் அந்த இரட்சகருக்கான தகுதிகள் அனைத்தும் இயேசுவில் காணப்பட்டதற்கான ஆதாரமும் உள்ளது. விசுவாசிக்கச் சித்தமாக உள்ளவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்கு, இவை அனைத்தும் போதுமானவை. 'தேவ வல்லமையிலும், அவரது குமாரனிலும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளிலும் மனிதர்கள் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள ஒரு நியாயமான வாய்ப்பை வழங்குவதே தேவனுடைய நோக்கமாகும்'. - எலன் ஜி. வைட், *The Spirit of Prophecy, vol. 3, p. 182.*

இரட்சிப்பிற்குரிய விசுவாசம் என்பது அறிவு சார்ந்த விஷயம் அல்ல; அது ஒழுக்கம் சார்ந்த விஷயமாகும். அது இதயம் சம்பந்தப்பட்டதே தவிர, மூளை சம்பந்தப்பட்டது அல்ல. மக்கள் தங்கள் இதயங்களை மூடிக்கொள்ளும்போது, அப்படியே அவர்களது மனமும் மாறிவிடுவதுதான் வருத்தம்.

**இயேசுவை யார் என்று யோவான் 1:1-5 கூறுகிறது?**

---

ஆதிமுதலே இருந்த தேவ வார்த்தையாகிய இயேசு, மாம்சமாகி, நம்மிடையே வாசம் செய்தார் என்றால், தேவன் தமது தீர்க்கதரிசிகளுக்குக் கொடுத்த வார்த்தைகளிலும் செய்திகளிலும் இயேசு அவசியம் இடம்பெற்றிருக்க வேண்டும். இயேசு என்கிற பெயரைக் குறிப்பிடாமல் செய்திகளை அறிவித்த தீர்க்கதரிசிகளும்கூட, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டே பேசினார்கள்.

---

**அண்டசராசரமும் எவ்வளவு பரந்தது என்று சிந்தித்துப் பாருங்கள்! அதைப் படைத்தவராகிய இயேசுதாம் நமக்காக மரித்தார் என்று நினைக்கும்போது, அது உங்களுக்கு எவ்வளவு பெரிய நம்பிக்கையைத் தருகிறது!**

# வேதாகமத்தை தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்துகிறது

பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால், தீர்க்கதரிசன வரத்தின்மூலம் உருவானதுதான் வேதாகமம். அந்த உருவாக்கத்திற்கு தேவன் பயன்படுத்தின செயல்முறையை 2 பேதுரு 1:21 வெளிப்படுத்துகிறது: 'தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்'.

**வேதவசனங்களின் அதிகாரத்தையும் தேவஆவுதலின் பண்பையும் 2தீமோ 3:16, 17 வசனங்கள் எவ்வாறு வலியுறுத்துகின்றன?**

---

வேதாகமம் இல்லையென்றால், இந்தப் பாவ உலகத்தின் ஆபத்துகளைத் தவிர்ப்பதற்கான வழிகளை அறியமுடியாமல், அழிவுக்கு நேராக மனிதர்கள் சென்றிருப்பார்கள். இன்று வேதாகமம் எல்லா இடங்களிலும் இருக்கிறது, பல வடிவங்களிலும் கிடைக்கிறது, ஆனால் முன்பு நிலைமை அப்படி இருக்கவில்லை. உதாரணமாக, இயேசுவின் காலத்தில், பழைய ஏற்பாட்டுச் சுருள்கள் மட்டுமே இருந்தன, ஆசாரியர்களோ ரபிமார்களோமட்டுமே அவற்றை வாசிக்க முடிந்தது. சாதாரண மக்களுக்கு வேதவசனங்களை நேரடியாக வாசிக்கிற வாய்ப்பு பெரும்பாலும் இருக்கவில்லை. அந்த நாட்களில் தேவ வார்த்தை மிகவும் விலைமதிப்பற்றதாக இருந்தது.

**இயேசு தாம் உயிர்த்தெழுந்த பிறகு, நம்பிக்கையிழந்த நிலையிலிருந்த இரண்டு சீடர்களுக்கு தம்முடைய பிரத்தியேக நோக்கத்தை எதை வைத்து விளக்கினார்? லூக்கா 24:27.**

தீர்க்கதரிசிகளிலேயே மிகப்பெரியவராகிய, தாம்மட்டுமே வார்த்தையாக இருக்கிற இயேசு, வேதவசனங்களை உயர்த்திக் காட்டினார். யோவான் 1:1-3; யோவான் 7:38. தீர்க்கதரிசன வரத்தின் மிகவும் அற்புதமான ஆசீர்வாதங்களில் ஒன்று, அது வேதாகமத்தை உறுதிப்படுத்துவதாகும்.

'பரிசுத்த வேதவசனங்களை தேவனுடைய சத்தமாக ஏற்றுக்கொண்டு, அதன் போதனைகளைப் பின்பற்றுகிறவர்கள், தினமும் அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும், தினமும் ஆவிக்குரிய வாஞ்சையையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ள வேண்டும்; இது பரிசுத்த ஆவியின் வரத்தால் உண்மையான ஒவ்வொரு விசுவாசிக்கும் அருளப்படுகிறது' - எலன் ஜி. ஒய்ட், *Signs of the Times, March 8, 1910.* உண்மையான தீர்க்கதரிசன வரம் எப்போதும் வேதவசனங்களையே உயர்த்துகிறது. அது விசுவாசத்திற்கும் செயல்பாட்டிற்குமான ஒரே சட்டமாகிய தேவ வார்த்தையை நோக்கியே ஆண்களையும் பெண்களையும் எப்போதும் வழிநடத்துகிறது.

---

**எம்மாவு செல்கிற வழியில், அந்த இரண்டு சீடர்களுக்கும் தாம் யார் என்பதை இயேசு வெளிப்படுத்துவதற்கு முன்பாக, முதலில் வேதவசனங்களைச் சுட்டிக்காட்டினது ஏன்? தேவவார்த்தை எந்தளவுக்கு நமக்கு அடித்தளமாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றி இது நமக்கு என்ன சொல்கிறது?**

# தேவசத்தியத்தைக் கண்டறிகிற கருவியே தீர்க்கதரிசனம்

உலகத்தில் இன்று நாற்பத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ சபைப் பிரிவுகள் உள்ளனவாம். இயேசு கிறிஸ்துவிடம் தொடங்கிய ஒரு விசுவாசம், இத்தனை வெவ்வேறு விசுவாசக் கோட்பாடுகளாக எவ்வாறு பரவியுள்ளது? வேதவசனங்களுக்குக் காலப்போக்கில் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப் பட்டதே காரணமாக இருக்கலாம். அந்த விளக்கங்கள் அனைத்தும் சரியானதாக இருக்கமுடியாது; ஏனென்றால், பல சந்தர்ப்பங்களில், ஒரு சபை போதிப்பது மற்றொன்றின் போதனைக்கு முரணாக இருக்கிறது.

தேவனுடைய சத்தியத்திலிருந்து மனிதர்களை வழிவிலக்குவதற்கு ஆரம் பத்திலிருந்தே சாத்தான் பயன்படுத்துகிற மிகப்பெரிய வழிகளில் ஒன்று குழப் பம் விளைவிப்பதாகும். ஆதி 2:16,17; 3:1-5. ஆதாம்-ஏவாளிடம் அவன் செய் ததுபோல, மக்களை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக, சத்தியத்தோடு போதுமான அளவு பொய்களையும் கலக்கிறான். வரலாறு நெடு கிலும் தேவ மக்களைத் தவறான வழியில் நடத்தியிருக்கிறான். 2நாளா 36:14-16. இயேசுவையே தவறான வழிக்கு நடத்த முயன்றான். மத் 4:1-11. ஆனால் சாத்தா னின் தூண்டுதல்களை 'எழுதியிருக்கிறதே' என்று சொல்லி இயேசு கச்சிதமாக எதிர்கொண்டார். மத் 4:4.

**தேவனுடைய வார்த்தையைக்குறித்து தீமோத்தேயுவுக்கு, பவுல் கொடுக்கிற முக் கியமான அறிவுரை என்ன? 2தீமோ 4:1-5. வரவிருக்கும் காரியங்களை எதிர் கொள்ள ஆவிக்குரியரீதியில் தீமோத்தேயு ஆயத்தமாக இருக்கவேண்டும் என்ப தில் அவர் ஏன் அவ்வளவு உறுதியாக இருந்தார்?**

ஆண்களும் பெண்களும் தேவ வார்த்தையை நேசிக்காமலும், அதற்குக் கீழ்ப்படியாமலும், தந்திரமாக உருவாக்கப்பட்ட கட்டுக்கதைகளால் தங்கள் செவி களுக்கு இனிமையாகப் பேசுகிற ஆவிக்குரிய போதகர்களைத் தேடிச்செல்லப் போகிற ஒரு காலம் வரவிருந்ததை பவுல் முன்கூட்டியே தீர்க்கதரிசனக் கண் களால் கண்டார். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் தேடுகிற பொய்களையே நம் பும்படிக்கு, தேவன் கொடிய வஞ்சகத்தை அனுப்புகிறார். 2தெச 2:11,12.

ஆனால், ஏற்றுக்கொள்ள மனதுள்ளவர்கள் 'சத்தியத்தை அறிவார்கள்' என்று இயேசு வாக்குறுதி அளித்தார். யோவான் 8:32. சத்தியத்திடமிருந்து பொய் யையும், வெளிச்சத்திடமிருந்து இருளையும் பிரித்தெடுக்க தேவன் பயன்படுத்து கிற வழிதான் தீர்க்கதரிசன வரம்.

வெவ்வேறு சபைப் பிரிவுகள் இருந்தாலும்கூட, ஒரு வகையில் நாம் சத் தியத்தை மிக எளிதாக அறிந்துகொள்ளமுடியும். வேதாகமம் சொல்கிற ஏழாம் நாள் ஓய்வுநாளை நீங்கள் நிராகரிக்கவில்லை என்றால், 99.5 சதவீத தெரிவு களைத் தவிர்த்துவிட்டீர்கள்; ஏனென்றால், பெரும்பாலான சபைகள் நான்காம் கற்பனையைக் கைக்கொள்வதில்லை. மரித்தவர்கள் உடனடியாக பரலோகத்திற் குச் சென்று இயேசுவோடு இருக்கிறார்கள் என்றோ, அவர்கள் இப்போது நரகத் தில் எரிகிறார்கள், நித்தியகாலமும் எரிந்துகொண்டிருப்பார்கள் என்றோ நீங்கள் நம்பப்போவதில்லை என்றால் — அடுத்தது என்ன? மீதமுள்ள 0.5 சதவீத தெரி வுகளில் பெரும்பாலானவற்றை அல்லது அனைத்தையுமே தவிர்த்துவிட்டீர்கள். அப்படியென்றால், செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையைத் தவிர வேறு எங்கு நீங்கள் செல்லமுடியும்?

# தேவமக்களுக்கு தீர்க்கதரிசனம் ஆறுதலளிக்கிறது

**மத்தேயு 11:28,29 இல், இயேசு நம்மிடம் என்ன செய்யச் சொல்கிறார்? தம்மிடம் வருகிற அனைவருக்கும் அவர் என்ன வாக்குறுதி அளிக்கிறார்?**

தேவன் எப்போதும் மனிதர்களின் நல்வாழ்வில் அக்கறைகொண்டவராக இருக்கிறார். ஆதாமையும் ஏவாளையும் படைப்பதற்கு முன்பாக, அவர்களை உற்சாகப்படுத்தவும் மகிழ்விக்கவும் தகுந்த ஒரு வசிப்பிடத்தை அவர்களுக்குத் தயார்செய்தார். ஆதி 1. அவர்களின் வசதிக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்தார். அந்தப் பரிசுத்த தம்பதியர் பாவத்தில் விழுந்த பிறகு, அவர்களைத் தேடிவந்தார், ஆதி 3:9; ஒரு இரட்சகர் வரவிருந்ததைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார், ஆதி 3:15; மேலும் அவர்களின் நிர்வாணத்தை மூடுவதற்கு ஆடைகளைச் செய்தார். ஆதி 3:21. தேவன் தமது சிருஷ்டிகளின் நல்வாழ்வில் எப்போதும் அக்கறையுள்ளவராக இருக்கிறார்.

தீர்க்கதரிசன வரமானது காலங்கள் நெடுகிலும் தேவனுடைய மக்களுக்கு ஆறுதலும் மறுமலர்ச்சியும் கொடுத்து வந்திருக்கிறது; தீர்க்கதரிசன வரத்தின் இந்த ஆசீர்வாதத்தைப் பெரும்பாலும் யாரும் கண்டுகொள்வதே இல்லை.

**துயரத்திலிருந்த தம் மக்களுக்குத் தமது தீர்க்கதரிசிமூலமாக தேவன் என்ன செய்தியைக் கொடுக்கிறார்? ஏசாயா 40:1-5. அந்த நியதியை இன்று நாம் எவ்வாறு நமக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்?**

யூத ஜனங்களைத் தாம் தண்டிக்க வேண்டியிருந்தாலும், அவர்களை முற்றிலுமாகக் கைவிடப்போவதில்லை என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று தேவன் விரும்பினார். நம்பிக்கையற்ற நிலையிலிருந்த தம் மக்களுக்கு ஊக்கமளிக்கிற செய்தியைமட்டும் ஏசாயாவிடம் தேவன் தெரிவிக்கவில்லை. அந்தச் செய்தியை எப்படி அவர்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும் என்றும் ஏசாயாவுக்கு அறிவுறுத்தினார். மிகுந்த கனிவோடும் அன்போடும் அக்கறையோடும் அந்தச் செய்தியை அறிவிக்கும்படி கூறினார். இந்த ஆறுதலின் செய்தி தம் மக்களின் இருதயங்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் தேவன் மிகுந்த அக்கறைகாட்டினார்; அதனால்தான் அதை அறிவிக்கவேண்டிய விதத்தைக் கூறினார். இதுபோன்ற ஆறுதல் செய்திகள் ஏசாயா புத்தகம்முழுவதும் மீண்டும்மீண்டும் கூறப்பட்டுள்ளன. ஏசா 12:1; 49:13; 51:3.

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கவிரும்புகிறவர்கள் கொடிய உபத்திரவத்தை அனுபவிப்பார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரித்தார். 2தீமோ 3:12. வரவிருக்கும் கடினமான காலங்களில், நமக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் கொடுக்கிற வார்த்தைகள் தேவைப்படும். இயேசு நம்மை தம்முடைய வீட்டிற்கு அழைத்துச்செல்ல மீண்டும் வருவதற்குமுன்பாக, தம்முடைய மக்களைத் தேற்றவும் பலப்படுத்தவும் தேவன் பயன்படுத்துகிற ஒரு வழிதான் இந்தத் தீர்க்கதரிசன வரமாகும்.

---

**உங்கள் வாழ்க்கையின் எந்தப் பகுதியில் உங்களுக்கு ஆறுதலும், நம்பிக்கையுமான வார்த்தைகள் தேவைப்படுகிறது? தேவன் நமக்கு ஆறுதல் அளித்தபிறகு, நாம் என்ன செய்யும்படி நமக்குப் பெலனளிக்கிறார்? 2கொரி 1:3,4.**

# சரீரத்தை கிறிஸ்துவுக்குள் தீர்க்கதரிசனம் ஒன்றிணைக்கிறது

**யோவான் 17:20–23; 1கொரி 1:10–13 ஆகிய வசனங்கள் முன்வைக்கிற முக்கிய வேண்டுகோள் என்ன?**

இயேசு சிலுவையில் தொங்கவிருந்த வேளை நெருங்கின சமயத்தில், ஒரே ஓர் ஆசைதான் அவரது இருதயத்தில் மேலோங்கி நின்றது. அவரும் பிதாவும், அன்பிலும் நோக்கத்திலும் செயலிலும் ஒன்றாக இருப்பதுபோல, தம்மைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். உப்புச்சப்பற்ற ஓர் ஒற்றுமை காணப்பட இயேசு ஜெபிக்கவில்லை. அவரது ஜெபம், அவரது வருகைக்குமுன் நிகழவிருந்த வல்லமையான ஒரு தீர்க்கதரிசனமாக இருந்தது. அதாவது, வெவ்வேறு பின்னணிகளையும் இனங்களையும் கண்ணோட்டங்களையும் சேர்ந்த மனிதர்கள் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையின்மூலமாக அவரிலும் பிதாவிலும் ஒன்றுபட ஆசைப்பட்டார். அதனால்தான், கொரிந்துப் பட்டண விசுவாசிகள் அனைவரும் ஏக மனதுள்ளவர்களாக, ஒரே சத்தியத்தைப் பேசவும், தங்களுக்குள் எந்தப் பிரிவினையும் இல்லாமல் இருக்கவும் அப்போஸ்தலனாகிய பவுல் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். 1கொரி 1:10. இந்தத் தீர்க்கதரிசன ஒற்றுமை ஏன் இவ்வளவு முக்கியமானது? விசுவாசிகளின் ஒற்றுமைக்காக இயேசுவும் ஜெபித்தார். யோவான் 17:21.

எல்லா ஆண்களும் பெண்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். ஆனால் அவர்கள் இயேசுவை விசுவாசிக்கவேண்டும்; உலகத்தை இரட்சிக்க தேவன் அவரை அனுப்பினதை நம்பவேண்டும். வெவ்வேறு பின்னணிகளைச் சேர்ந்தவர்கள் இயேசுவைத் தங்களுடைய ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு, ஒருவரையொருவர் சுயநலமில்லாமல் நேசித்து, சேவிக்கும்போது, இயேசு தம் மைப்பற்றி சொன்னதெல்லாம் உண்மை என்பதை உலகம் விசுவாசிக்கும். எனவே இயேசுவின் இந்த ஆசை குறிப்பிட்ட நோக்கமும் வல்லமையும் உடையதாக இருக்கிறது. ஆனால், ஆரம்பத்திலிருந்தே, சில சக்திகள் அந்த ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக இருந்தன. உதாரணமாக, அப் 6:1. அன்றிலிருந்து இன்றுவரை கிறிஸ்தவம் கடுமையாகப் பிரிவடைந்துள்ளது!

இந்த ஒற்றுமை, பரிசுத்த ஆவியானவர் அருளுகிற வரங்களின் கிரியைகளால் உருவாகிறது. 'நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்' விசுவாசிகளைப் பெலப்படுத்தவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்கும் பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் அருளப்படுகிறது. எபே 4:11-15. தேவனுடைய ஜனங்களை ஒற்றுமையுள்ளவர்களாக்குவதற்கு, ஆவியானவரின் முதன்மையான வரங்களில் ஒன்றான தீர்க்கதரிசன வரம் மிகவும் அவசியமானது; எபே 4:13 குறிப்பாக இயேசுவின் இரண்டாம் வருகை நெருங்கியிருப்பதால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படுவதற்கு அது இன்றியமையாதது. அப் 16:31.

**இன்று செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை உலகிலேயே மிகவும் பன்முகத்தன்மை கொண்ட ஒரு புரொட்டஸ்டன்ட் அமைப்பாக இருக்கிறது; இந்தச் சூழலில், மக்கள் இயேசுவை விசுவாசிப்பதற்கு உதவுகிற இந்த ஒற்றுமையை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்? எந்தச் சக்திகள் அந்த ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன?**

# மீண்டும் முயற்சி செய்

சில ஆண்டுகளுக்கு முன்பு, கெல்லாக் நிறுவனம் தனது காலை உணவு தயாரிப்பை மிகவும் கவரக்கூடிய ஒரு வாசகத்தால் விளம்பரப்படுத்தியது. மற்ற நிறுவனத்தின் தயாரிப்புகளைப் பயன்படுத்த ஆரம்பித்த வாடிக்கையாளர்களை மீண்டும் ஈர்ப்பதற்காக, 'மீண்டும் ஒருமுறை, முதல்முறையாக சுவைத்துப் பாருங்கள்' என்று விளம்பரப்படுத்தியது. வேதாகமத்தைப்பற்றியும் எலன் ஜி. ஒய்ட்பற்றியும் கற்றுக்கொள்ள அதிக நேரத்தைச் செலவிட்டு, அவருடைய எழுத்துகளைச் 'சுவைப்பதற்கு' குறைந்த நேரத்தையே செலவிட்ட செவந்த்–டே அட்வென்டிஸ்ட்டுகளுக்கும் இந்த வாசகம் பொருந்துமல்லவா? எலன் ஜி. ஒய்ட்பற்றிய கருத்தரங்குகளில் கலந்துகொள்வதால், அவருடைய வாழ்க்கையையும் ஊழியத்தையும்பற்றிய கருத்துகளைக் கற்றுக்கொள்ளலாம்; ஆனால் நீங்களாகவே அதைச் 'சுவைத்து' பார்க்காதவரை, அவரது தீர்க்கதரிசனச் செய்திகளின் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை உண்மையாக மதிப்பிடவோ அனுபவிக்கவோ முடியாது. யாரெல்லாம் அவருடைய எழுத்துகளை, குறிப்பாக அதன் பின்னணியை மனதில் வைத்து வாசிக்கிறார்களோ, அவர்களால்மட்டுமே தேவன் நமக்குக் கொடுத்திருப்பதை முழுமையாகப் புரிந்து போற்றமுடியும்.

இந்தக் காலாண்டு முழுவதும் நாம் பார்த்தபடி, எலன் ஜி. ஒய்ட் நம்மை வேதாகமச் சத்தியத்தில் நிலைநிறுத்தி, தேவனுடன் நம்மை இணைக்கிறார். அவரது தீர்க்கதரிசனச் செய்திகளை வாசிப்பதில் சில குறிப்பிட்ட ஆசீர்வாதங்கள் உள்ளன.

ரோஜர் டட்லி மற்றும் டெஸ் கம்மிங்ஸ் ஜூனியர் ஆகியோர் நடத்திய ஒரு கணக்கெடுப்பு சில சுவாரசியமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது. எலன் ஜி. ஒய்ட்டின் எழுத்துகளைத் தவறாமல் வாசிப்பவர்கள், அவற்றை வாசிக்காதவர்களைவிட இயேசுவுடன் ஆழமான, நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் இரட்சிப்பைப்பற்றிய அதிக நிச்சயமும், அனுதின குடும்ப ஜெபப்பழக்கமும், மற்றவர்களுக்குச் சாட்சிகூறுகிற ஆசையும் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். 'தீர்க்கமான ஒரு முடிவுக்கு வலுவான ஆதாரமுள்ள ஆராய்ச்சிகள் மிகவும் அரிதானவை. சபை வளர்ச்சிக் கணக்கெடுப்பில், தனிப்பட்ட அணுகுமுறைகள் அல்லது பழக்கவழக்கங்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றையும் பட்டியலிட்டபோது, எலன் ஜி. ஒய்ட்டின் புத்தகங்களைத் தவறாமல் வாசிக்கிற உறுப்பினர், அவற்றை எப்போதாவது வாசிக்கிற அல்லது வாசிக்கவே வாசிக்காத உறுப்பினரைக் காட்டிலும் மேம்பட்ட நிலையில் இருப்பது தெரியவந்தது. எனவே, எலன் ஒய்ட்டின் புத்தகங்களைத் தவறாமல் வாசிப்பது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் சாட்சியிலும் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துகிறது' என்று அந்த இரண்டு ஆராய்ச்சியாளர்களும் எழுதியுள்ளனர்.

இந்தக் காலாண்டில், தேவன் தம் தீர்க்கதரிசிகள் மூலமாகத் தொடர்புகொள்கிறார் என்பதைக் கற்றுக்கொண்டோம். அவர்களுடைய செய்திகள் தேவனுடன் நம்மை இணைக்கின்றன; மேலும், மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும், குறிப்பாக இயேசுவில் காணப்படும் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தோடு தொடர்புடைய விஷயங்களில், ஒரு பரிசுத்தமான, தூய்மைப்படுத்தும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன: 'கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்' சங் 34:8. நம் செயல்கள் பரிசுத்தப்படவும், வாழ்க்கை மாறவும், தனிநபர் சுவிசேஷ ஊழியத்தில் நாம் ஈடுபடவும், மற்றவர்களுக்குச் சேவை செய்கிற வாழ்க்கை வாழவும் அவை நம்மை அழைக்கின்றன.

# தேவனே, நீர் எங்கே இருக்கிறீர்?

**ஹன்னிலி ஆம்பெர்லா**

'நான் என் வாழ்க்கையை இயேசுவுக்குக் கொடுத்துவிட்டேன்' என்று என் உறவினர் அனுப்பியிருந்த கடிதத்தில் வாசித்தேன். அதற்கு என்ன அர்த்தம்? என்று யோசித்தேன். நான் சில நேரங்களில் ஞாயிறு பள்ளிக்குச் சென்றிருக்கிறேன், ஆனால் யாரும் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்குக் கொடுத்ததைப்பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை. தேவனுடன் எனக்கும் அப்படிப்பட்ட ஓர் அனுபவம் கிடைக்கவேண்டும் என்று ஏங்கினேன்.

பல்கலைக்கழகப் படிப்பை முடித்த பிறகு, ஹெல்சின்கிக்குக் குடிபெயர்ந்தேன், அங்கே என் வருங்காலக் கணவரைச் சந்தித்தேன். அவர் தேவனைக் கண்டுகொண்டு, அவரை எனக்கு அறிமுகப்படுத்துவார் என்கிற நம்பிக்கையில், என்னுடன் சபைக்கு வரும்படி அவரை அழைத்தேன். ஆனால் அது பலனளிக்கவில்லை. எங்களுக்குக் குழந்தைகள் பிறந்தார்கள், வாழ்க்கை பரபரப்பானது. நான் விரும்பிய அனைத்தும் என்னிடம் இருந்தன, தேவன்மட்டும் இல்லை. நான் தொடர்ந்து சபைகளுக்குச் சென்று, 'ஆண்டவரே, என்னால் உம்மைக் கண்டறிய முடியவில்லை. தயவுசெய்து நீர் என்னைக் கண்டுபிடியும்' என்று ஜெபித்தேன்.

எங்களுடைய பதின்ம வயது மகள் ஒரு வருடம் ஆஸ்திரேலியாவில் படிக்க முடிவு செய்தாள். எனக்குக் கவலையாக இருந்தது, அவள் தங்குவதற்கு ஒரு நல்ல குடும்பம் கிடைக்க வேண்டும் என்று ஜெபித்தேன். அது நடந்தது! குறுஞ்செய்திமூலம் தொடர்புகொண்டு, அவள் தங்கவிருந்த அந்தக் குடும்பத்தினரைப்பற்றி அறிந்துகொண்டோம். அந்தக் குடும்பத்தின் தகப்பனார் பெயர் கிரெக். நான் தேவனைத் தேடிக்கொண்டிருந்ததை அவரிடம் சொன்னேன். தானும் சிறுவயதில்தான் சபைக்குச் சென்றதாகவும், இப்போது செல்வதில்லை என்றும் சொன்னார், மேலும் தனக்கு மிகவும் பிடித்த 'யுகங்களின் வாஞ்சை' என்கிற புத்தகத்தை வாசிக்கும்படி கூறினார். அதை இணையத்தில் கண்டுபிடித்தேன். அது என் வாழ்க்கையையே மாற்றியது! என் கேள்விகளுக்கான பதில்களைக் கண்டடைந்தேன், தேவனுடன் மிகவும் நெருக்கமான ஓர் உறவைப் பெற்றேன்.

பிறகு ஓர் அட்வென்ட்டிஸ்ட் சபையைக் கண்டுபிடித்துச் செல்லுமாறு கிரேக் என்னை ஊக்கப்படுத்தினார், நானும் கண்டுபிடித்துச் சென்றேன். சபை உறுப்பினர்கள் என் மீது அன்பைப் பொழிந்ததைக் கண்டு நெகிழ்ந்துபோனேன். பல ஆண்டுகளுக்கு முன்பு என் உறவினர் செய்ததுபோலவே, நானும் இயேசுவின்மேல் அன்பு கொண்டேன். அந்தக் கோடை காலத்தில் சபை நடத்தின வேதாகம முகாமிற்குச் சென்றேன்; அங்கே வேதாகமத்தை ஆழமாகக் கற்றுக்கொண்டு, ஆவிக்குரியரீதியில் புத்துணர்ச்சி பெற்றவளாய் திரும்பி வந்தேன்.

முகாமிலிருந்து மகிழ்ச்சியோடு திரும்பி வந்ததும், தேவன்மீது எனக்கு உண்டான அன்பைப்பற்றி என் கணவருடன் பகிர்ந்துகொண்டேன். ஆனால் இந்த முறை, இயேசுவுக்காக ஒரு தீர்மானம் எடுக்கும்படி அவரை வற்புறுத்துவதற்கு எனக்குள் உந்துதல் ஏற்பட்டது. அப்போது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் ஆவிக்குரிய விஷயம்பற்றிய எங்களின் கடைசி உரையாடல் அதுவாகத்தான் இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் ஒரு கார் விபத்தில் இறந்துபோனார்.

அதன் பிறகு, நான் சபையின் அஞ்சல் வழி வேதாகமப் பள்ளியில் பணியாற்றத் தொடங்கினேன்; அங்கே என்னைப்போலவே பல போராட்டங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்கிறேன்.